# ஞான சம்பந்தன்

223ன211,N41
N58·17-8-10
209203

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## உட்பொருள்

பக்கம்


| | | |
|---|---|---|
| 1 | தருமை யாதீனத்தில் ... | 519 |
| 2 | ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வாழ்த்துரை | 523 |
| 3 | ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளுரை | 526 |
| 4 | திரு. கே. காமராஜநாடார் அவர்களுக்கு வரவேற்புரை | 531 |
| 5 | திரு. எம். பக்தவத்ஸலம் அவர்களுக்கு வரவேற்புரை | 534 |
| 6 | 10 ஆவது திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு ... | 545 |
| 7 | புதுமைக்கு... ... | 557 |
| 8 | மகளிர் மாண்பு ... | 562 |
| 9 | வேதாகம சாரமே தேவாரம் ... | 565 |
| 10 | ஸ்ரீ குருஞானசம்பந்தர் விழா ... | 568 |
| 11 | செய்திகள் ... | 570 |
| 12 | மதிப்புரை ... | 577 |
| 13 | எதிர்காலம் ... | 579 |


॥ श्रीः ॥

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य श्रीमच्छंकरभगवत्पाद प्रतिष्ठित श्रीकाञ्ची कामकोटिपीटाधिप जगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः क्रियते नारायणस्मृतिः ।

ஸ்ரீ கௌரீ மாயூர க்ஷேத்திரத்தில் ஸ்ரீ காவேரி மஹாநதி வடகரையில் ஸ்ரீ வள்ளலார்கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு மாயூர க்ஷேத்திரத்தில் உள்ள பக்தகோடிகள் ஒன்று சேர்ந்து ஸ்ரீ தருமபுர ஆதீனத்தின் பூர்ண ஒத்துழைப்போடு சென்ற சில மாதங்களாகக் கோடியர்ச்சனை சிரத்தையுடன் விமரிசையாகவும் எங்கும் நிகரில்லாத முறையில் நடத்திவந்து சென்ற குருவாரம் பூர்த்தியான விவரம் மாயூரத்திலிருந்து அடிக்கடி வரும் சிஷ்யாள் மூலம் அறிந்து மிகவும் சந்தோஷம் அடைகிறோம். மேற்படி கைங்கர்யத்தில் ஈடுபட்ட எல்லோரும் உத்திரோத்திர சிரேயஸ்ஸையும் சிவக்ஞான பேற்றையும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி கிருபையால் அடைந்து மேலும் மேலும் சத்காரியங்களில் ஈடுபடுவார்களாக.

முகாம்:- வில்லிவாக்கம்
விளம்பி௵ ஆனி௴
14௳ ஸ்திரவாரம்

नारायणस्मृतिः ।


உ௯௨௦௩
4 OCT 1958
MADRAS


உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்


மலர் 17 } விளம்பி௵ ஆனி௴ 10—7—58 { இதழ் 8


உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## தருமை யாதீனத்தில்

உள்ள பல்கலைக் கல்லூரிச் சார்பில் சென்னை மாநில முதலமைச்சர் கனம், உயர்திரு. K. காமராஜ நாடார் அவர்களுக்கு நல்வரவேற்பு அளிக்கப்பட்டது. முதல் அமைச்சர் தமக்குரிய சாந்தமான முறையில், ஆலய தரிசனம் புரிந்து கொண்டு மடாலயத்துக்கு வந்தார். தக்க இடங்களில் மிக்க சிறப்புடன், தம்பிரான்சுவாமிகள்மாலையிட்டு வரவேற்றார்கள். ஆதீனத்தின் முகப்பிலுள்ள திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் அமைந்த அரங்கத்தில் அமர்ந்ததும் வரவேற்புரை முதலியன நிகழ்த்தினர். பின்னர், முதலமைச்சர், கல்லூரி மாணக்கர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். புதிய ஆண்டின் தொடக்கத்தில், முதலமைச்சரது நல்வரவைப் பெற்ற நலம், கல்லூரி மாணக்கர்களுக்கு வாய்த்தது பெரிதும்

பாராட்டற்பாலது. மடாலயத்தின் உள்ளே சென்று, குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களைத் தரிசித்து, மாயூரத் துக்குச் சென்றார்கள். வாழ்க முதலமைச்சர்.

## மாயூரத்தில்

வள்ளலார்கோயில் தருமையாதீனத்துக்குச் சொந்த மானது. அங்குள்ள ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வரப்ரசாதத்தால் மிக்க பிரசித்தி வாய்ந்த கடவுள். கோடியர்ச்சனை நிறை விழா, பெருஞ் சிறப்புடையதாய் நான்கு நாளில் நடந்தது. ஒவ்வொருநாளும் வழிபாடும் தோத்திர சாத்திர மாநாடும் நடந்தன. நாலாம்நாள் (27—6—58) சென்னை மாநிலம் அறநிலயங்களின் அமைச்சர் கனம். திரு. எம். பக்தவத்ஸலம் பி. ஏ., பி. எல். அவர்களுக்கு 'நல்லறங்காவலர்' என்னும் பட்டத்தை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வள்ளலார் சந்நிதியில் நல்கியருளினார்கள். அது பற்றிய நிகழ்ச்சிகள் இதில் பின்னர் உள்ளன. அப்பொழுது, 'நல்லறங்காவலர்' நல்லுரை எல்லாரையும் பரவசப்படுத்தியது. 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றவாறு, உலகம் பெறும இன்பம எனக்கும் வாய்த்தது என்ற நயம் அமைந்த கருத்தை அவர் சொற்பொழிவிடையில் வெளியிட்டார். தாம் பெற்ற 'நல்லறங்காவலர்' என்னும் பட்டம் அறங்காக்கும் அனைவர்க்கும் உரியதாய்த், தமக்குக் கிடைத்தது என்று உள்ளமார உரைத்தார்கள். அப்பட்டம் அவர்கட்கு மிக்க பொருத்தம் என்பதும் பிறவும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளிய வாழ்த்துரையால் அறிந்துகொள்ளலாம். அன்றைய வைபவம் யாவர்க்கும் பேரின்பம் விளைத்தது. அது கோடியர்ச்சனை நிறைவிழாவின் 'அந்தம்' (முடிவு) ஆயினும், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சுவாமிக்குத் தங்கக் கவசம் செய்வித்துச் சார்த்த வேண்டும் என்னும் தெய்வசங்கல்பத் திற்கு 'ஆதி' (முதல்) நாளாயிற்று. குருமணியின் 11001 வெண்பொற்காசுகள் முதற் கொடையாக விளங்கிற்று. பலர் நூறும் ஆயிரமுமாகக் கவசத்திற்கு வழங்கினர். அதன் விவரம் பின்னர் வெளிவரும்.



## சந்நிதியில் தங்கக்கட்டி தங்கக்கண்ட தனிக்காட்சி

250 தோலா எடையுள்ள தங்கக்கட்டி, ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியின் திருவடியில் தங்கவைத்தது தருமைத் தக்ஷிணாமூர்த்தியாகிய சொக்கலிங்கம். அக்கட்டி 250 தோலா எடை உடையது ஆயினும் யார்க்கும் எப்பொழுதும் எவ்வாற்றாலும் தோலா எடையுடன் விளங்கியது. குருநாதர் அதைச் சந்நிதியில் வைத்தருளியதும் மக்கள் அதைப்போற்றியதும் அங்கிருந்து தரிசித்த புண்ணியர்களுக்கே கிடைத்த ஒரு பெரும்பாக்கியமாகும். பல யாண்டுகளாக அங்குத் தரிசித்து வருபவர்கள் எல்லார்க்கும் 3—7—58 குருவாரத்தில் சந்நிதியில் தங்கக்கட்டி தங்கக்கண்ட தனிக்காட்சியைப் போல் முன்னும் இல்லை, பின்னும் இராது, என்றும் இராது. இதுபோல இன்னும் எத்தனை நடந்தாலும் இது வேறு அது வேறு என்றுதான் சொல்லப்படும். தங்கக்கட்டி வைத்த நல்ல முகூர்த்தம் அப்பொழுதே தம்பிரான் சுவாமிகள் பலராலும் மற்றைய அன்பர் பலராலும், தங்கக் கவசம் கைங்கர்யத்துக்காகப் பொருள் வழங்கப்பட்டது. குருநாதர் அருளுரை "நல்ல வண்ணம் வாழலாம்" என்னும் பொருள் குறித்த வெளியீடு வழங்கலாயிற்று. இது குருவாரந்தோறும் நிகழ்வதன் முதல் வெளியீடு.

## தங்கக்கவச உண்டி

'சேவிங்ஸ் பேங்க்' கில் சேர்க்கும் பொருள் நாட்டம் எல்லார்க்கும் உண்டு. அழியாத பாங்கி எது என்பது சில ருக்குத்தான் தெரியும். மாணிக்கவாசகர் 'வைத்தநிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி எனும் பித்தவுலகு' என்று இழித்தது இவ்வுலகில் உள்ள சேவிங்ஸ் பேங்க் இருப்பையே. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்குத் தங்கக்கவசம், அதுவே நமக்குப் பேரின்பக் கவசம், நல்ல வாழ்க்கை - நீண்ட வாழ்க்கை - இன்ப வாழ்க்கை - செல்வ வாழ்க்கை எல்லாம் தங்கக் கவச மாயிலங்குவது. 'வைச்ச பொருள் நமக்கு ஆகும் என்று எண்ணி நமச்சிவாய அச்சம் ஒழிந்தேன்'. 'வைத்தபொருள்

நமக்கு ஆம் என்று சொல்லி மனத்து அடைத்துச் சித்தம் ஒருக்கிச் சிவாயநம என்று இருக்கின் அல்லால்....... அத்தன் அருள்பெறல் ஆமோ ?'

" அச்சம் இல்லை நெஞ்சே அரன் நாமங்கள்
நிச்சலும் நினையாய் வினைபோய் அறக்
கச்சமா விடம் உண்டகண்டா என
வைச்சமா நிதி யாவர் மாற்பெறரே "

என்றார் நம் அப்பர். ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியைத் தங்கத்தால் கவசம் செய்தால் நம்மை நாம் பேரின்பத்தால் கவசம் செய்து கொண்டவராவோம். சேவிங்ஸ் பேங்கில் போடும் பொருள் நாணயமாகவோ தாளாகவோதான் கைக்குவரும். அதுவும் வாராமல் போவது உண்டு. 'தங்கக் கவசம்' ஆகிய வைப்புச் செல்வமோ அழியாத இன்ப வடிவில் வருவது உறுதி, உறுதி, உறுதி. அன்பர்கள் இவ் வுண்மையை உள்ளத்திற்கொண்டு, தங்கள் உடைமையில் ஒரு பகுதியை யாவது, இந்த அருள் வைப்பு நிதியில் இட்டு இனிது வாழ்வாராக.


ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் திருவருட்பாப்பாடுங்கால், வழிபடுவோர் அமைதியாயிருந்து கேட்டுப் பயன் பெறல் வேண்டும். தங்கக்கட்டி வைத்த காலத்தில் குருசந்நிதியில் பாடிய நிலை பலரைப் பரவசப்படுத்திய சிறப்பு என்றும் நினைவில் ஒலிக்கும்.

" பூவனூர்ப் புனிதன் திருநாமந் தான்
நாவில் நூறு நூருயிரம் நண்ணினுர்
பாவமாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே " 5-65-1

" போற்றிசைத் துன்னடி பரவ நின்ருய் போற்றி
புண்ணியனே நண்ணலரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான் மேலிருந்தாய் போற்றி
எண்ணுயிர நூறுபெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி " 6-57-10


---

தருமபுர ஆதீனம் வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்குக்
கோடியர்ச்சனை நிறைவிழாவில்



தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம அவர்கள்
சென்னை மாநில அறநிலய அமைச்சர்
கனம், திரு. எம், பக்தவத்ஸலம், B. A., B. L., அவர்களுக்குப்
பொன்னுடை போர்த்து " நல்லறங்காவலர் " என்ற பட்டம் வழங்கி
அருளல்.

தருமபுர ஆதீனம் வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணுமூர்த்திக்கு கோடியர்ச்சனை நிறைவிழா



நல்லறங்காவலர் என்ற பட்டமேற்ற சென்னை மாநில அறநிலைய அமைச்சர்.
கனம். திரு. எம். பக்தவத்ஸலம் B. A., B. L., அவர்களின் நல்லுரை

உ

குருபாதம்

தருமையாதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் வள்ளலார்கோயில்

ஸ்ரீ மேதா தக்ஷிணுமூர்த்தியின் கோடியர்ச்சனை

நிறைவிழாவில்

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

சென்னைமாநில அறநிலைய அமைச்சர்

கனம். திரு. எம். பக்தவத்ஸலம் B. A., B. L.,

அவர்களுக்கு

“ நல்லறங்காவலர் ”

என்னும் பட்டம் அளித்துத் திருவாய் மலர்ந்தருளிய

# வாழ்த்துரை

இன்பத்துள் இன்பம் பேரின்பம். பேரின்பத்தை நாடிய நால்வர்க்கு நல்லறம் உபதேசித்த தென்முகக் கடவுளுக்குச் செய்துவந்த கோடியர்ச்சனை நிறைவிழாநாள் இத்திருநாள். “நல்லறம்” என்று சொல்லப்படுவது முத்திக்குச்சாதனம். இதுவே திருக்குறளில் “இருணீங்கி இன்பம் பயக்கும் மருணீங்கி மாசறு காட்சி யவர்க்கு” என்றதிற்குறித்த நல்லறம் ஆகும். பதி ஞானமே முத்திசாதனம். அப்பதி ஞானத்துக்குச் சாதனமான யோகம், கிரியை, சரியைகளையும் ‘நல்லறம்’ என்கின்றன சைவ நூல்கள்.

“ நல்ல சிவதன்மத்தால் நல்ல சிவ யோகத்தால்
நல்ல சிவ ஞானத்தால் நானழியும் — வல்லதனுல்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணு அரன் ”

என்னும் திருவெண்பாவில், சரியை கிரியை இரண்டையும் 'நல்ல சிவதன்மம்' என்றது திருக்களிற்றுப்படியார். கடவுள் கல்லாலின் கீழ் இருந்து நால்வர்க்கு நல்கிய ஞானயோகத்தை நல்லறம், என்றே திருஞானசம்பந்தர் பாடியருள்கின்றார்

" நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர் கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி அருமறை சொன்னதென்னே
சேலடைந்த தென்கழனிச் சேய்ஞலூர் மேயவனே "

நல்லறத்தைக் காப்பதே நல்லறங்காவல். அக்காவல் புரிய வல்ல அறிஞரே நல்லறங்காவலர் ஆவார். பண்டைய தமிழ் வேந்தர்களில் நல்லறங் காவலராய்ப் பலர் விளங்கினார்கள். அவர்களும், குறுநில மன்னர்களும், பின்பு அரசுபுரிந்தவர்களும் நல்லறங் காவலுக்கு மடாலயங்களையும் தக்கனவாகக்கண்டு ஒப்படைத்தார்கள். அதுமுதல் திருக்கோயில்களை ஏற்று மடாலயங்கள் என்றும் நல்லறங்காத்துவருஞ் சிறப்பை அடைந்தன. காக்கப்படும் அறங்கள் பலவற்றுள் திருக்கோயில் பரிபாலனமே பக்தர்கட்கும் ஞானிகட்கும் பேரின்பச் செல்வத்தைப் பாது காப்பனவாகும்.

" செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரோடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே " (சிவ. போதம் 12)

என்று ஜீவன் முக்தர்களுக்கே ஆலய வழிபாடு அவசியம் என வற்புறுத்துவதால் மற்றவர்க்கு அவ்வழிபாடு அவசியம் என்பது சொல்லவும் வேண்டுமோ? ஆலய பரிபாலனத்தைச் சேவையாக நடத்தும் வாய்ப்பு மடங்களுக்கு உண்டு.

காஞ்சியில் காமாட்சியம்மை முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்த பெருமைக்கு உரியது தொண்டைநன்னாடு,

" வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து "



என்றார் ஔவையார். 'தொண்டைப் பாலார் பதியார் அறத்தோடு சீரும் படைத்தவரே' என்றார் ஒருபாவலர், அத்தொண்டைமண்டலத்துச் சைவவேளாளர் நம் உயர்திரு. எம். பக்தவத்ஸலம் அவர்கள். அதிலும் தெய்வச் சேக்கிழார் மரபினர். தொண்டை மண்டல சதகத்தைப் படித்தால் நல்லறங்காவல் அவர்கட்கு உரியது என்பது விளங்கும். நம் பக்தவத்ஸலர் குலம், குடிப் பிறப்பு, கல்வி, பதவிமுதலியவற்றில் மேன்மைவாய்ந்த புண்ணியர். புண்ணியர்க்கேபுண்ணியக்காவல் உரியதாயிற்று. இவர்களது அறுபதாவதாண்டின் நிறைவு நினைவுக் குறியாகப் பாலாற்றங் கரையிலே ஆற்றூரிலே நல்ல பொழிலிடையிலே உயர்நிலைப் பள்ளி ஒன்று தோன்றியிருப்பது, அவர்கள் 'அறங்காவலர்' என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். சென்னை மாநிலத்தில் எல்லா அறநிலயங்களையும் அவர்களது அமைச்சுரிமைக்கு உட்படுத்தியிருப்பதால், 'நல்லறங்காவலர்' என்னும் பட்டம்பெற அவர்கட்கு உள்ள தகுதியுடன் உரிமையும் வந்து அடைகின்றது. கல்லாலின் கீழ் நல்கிய கடவுளது கோடியர்ச்சனை நிறைவிழா நன்னாளில் இக் குருமூர்த்தி சந்நிதியிலே தருமையாதீன பிரதம குருமூர்த்தியின் வழித்தோன்றலால் நல்லறங்காவலர் என்னும் பட்டம் இச் சைவப் பெரியார்க்கு வழங்குவது ஒரு தனிச்சிறப்பாகும். ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கர் திருவருளால் இந் 'நல்லறங்காவலர்' நீண்ட ஆயுளும் உடலுறுதியும், மற்றைய நலங்கள் அனைத்தும் பெற்று இனிது வாழ்க.

வாழ்க நல்லறம், வாழ்க நல்லறங்காவலர், வாழ்க உலகெலாம்.

27—6—1958.

---

### பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்லப்ப முதலியார் பாடியது.

விட்புலத்தாரை யப்புட்குலம் வென்றதும் வேடர்வலை
யுட்படு தத்தைகள் தத்தை யகன்றது மோரரசன்
பெட்டோடு வந்து வணங்க எலிக்குலம் பேதித்ததும்
நட்புறு மோற்றுமைக் கேயன்றிப் பின்னெவை நாட்டுவதே. 18

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

# அருளுரை

## "நல்ல வண்ணம் வாழலாம்"

நல்ல வண்ணம் வாழ்வதற்குத் தெய்வ வழிபாடு அவசியம். நல்வாழ்வு நோக்கியே உயிர்கள் முயல்கின்றன. இந்த முயற்சியைத் திருஞானசம்பந்த சுவாமிகள் நன்கு உணர்ந்தார்கள். உலகுக்குணர்த்தவும் எண்ணினார்கள். நல்ல வாழ்வு தானே வாழவேண்டும்? 'இங்கே வாருங்கள் ஓர் வழி கூறுகிறேன் என்று அழைக்கின்றார்கள். எல்லோரையும் அழைத்துக்கொண்டு சீகாழித் தலத்துக்கு வருகின்றார்கள். அங்கே தோணியப்பராய் - அம்மையப்பராய் வீற்றிருக்கும் பெருமானைச் சுட்டுகின்றார்கள். பெண்ணில் நல்லவள் அப் பெருமாட்டி; ஆண்களில் பெரியோன் அப்பெருமான் என்று குறிப்புப்பட அருள்கின்றார்கள். கண்ணினால் இத்தோற்றத்தைக் கண்டு வழிபட்டால் மண்ணில் நல்ல வண்ணமே வாழலாம் என்கின்றார்கள். 'சென்று காணுதற்கு வசதியில்லை; அதை விடச் சுலபமாக வழிகூறுங்கள்' என்று யாரேனும் கேட்டுவிடக் கூடுமல்லவா? அதற்கும் அவர்களே வழி கூறிவைத்திருக்கின்றார்கள். ஆம், 'வாழ்வுக்கு வழி; நல்வாழ்வுக்கு நல்வழி.'

---

இஃது (3-7-58) இந்நன்னாளில், ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்குத் தங்கக் கவசம் செய்விக்கவேண்டித் தங்கக் கட்டியைச் சந்நிதியில் வைத்து வழிபட்டு அன்பர்கட்கு வழங்கியது. இனி, குருவாரந் தோறும் எண்ணாயிரம் அருச்சனையும் உண்டியைத் திறக்கும்போது, இத்தகைய அருளுரை வெளியீடு வழங்கலும் நடைபெறும்.



சென்று காணுதற்கு வசதியில்லாவிட்டால், இருந்த இடத்திலிருந்தே இத்திருவருட் காட்சியை எண்ணினாலும் போதும்; நல்லகதி கிடைக்கும்; யாதும் குறையிருக்காது' என்கின்றார்கள். இதைவிடத் தெளிவாக வேறு யார் கூற முடியும்? கவுணியர் பெருந்தகை கூறும் இவ்வழியே செவ்வழி. அவ் வழியைச் செவ்விதின் உரைக்கும் செந்தமிழ்ப்பாடல் இதுதான்:-

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே."

நல்வாழ்வுக்கு வழி இதுதான். இந்த நெறி தலைப்பட்டு வழிபாடியற்றி உய்தலே மனிதப் பிறவி யெடுத்ததன் கடன். இதனை மறந்தால் நமக்கு உய்வில்லை. அரன் பொன்னடியை மலர்கொண்டு போற்றிசைக்கவேண்டும். அரன் நாமத்தை நாக்கைக்கொண்டு நவில வேண்டும். இவை யிரண்டுமின்றி வயிறு வளர்ப்பதே நோக்கமாயிருந்தால் என்ன ஆகும்? காக்கைக்கு இரையாகிக் கழிவதாகும் என்று அப்பரடிகள் உபதேசிக்கின்றார்கள். வாழ வழிதேடும் மாந்தர்க்கு இது ஒரு நல்ல எச்சரிக்கையல்லவா? வயிறு வளர்த்தற்குத்தானா வாழ்க்கை? செல்வம் தேடுவதற்குத்தானா வாழ்க்கை? வாழ்க்கையின் குறிக்கோளை வயிறு வளர்ப்பதிலும் செல்வம் தேடுவதிலும் ஈடுபடுத்துவோமானால் வாழ்வு வறண்டுவிடும்! அநித்தியத்தை நித்தியமாக நினைத்து நினைத்து நித்தியமான மெய்ப்பொருளை மறந்துவிடக்கூடாது. நமது ஆதி பரமாசாரிய சுவாமிகள் இதனை மிக்க சுருக்கமாகவும் தெளிவாகவும் தம்முடைய சிவபோகசாரத்திலே சொல்லியருள்கின்றார்கள்:-

"அநித்தியத்தை நித்தியமென் றுதரிக்கும் பொல்லா
மனித்தருடன் கூடி மருவார்"

வயிற்றுணவையே நினைத்து நினைத்துச் சிவானந்தப் பேரமுதாகிய ஆரா உணவை மறந்துவிடக்கூடாது. அப்படி மறந்துவிடுவோர் ஆக்கைக்கே இரை தேடி அலமந்து, காக்கைக்கே இரையாகவேண்டுவதுதான். அப்பர் பாடலைப்பாருங்கள்:-

" பூக்கைக் கோண்டரன் போன்னடி போற்றிலார்
நாக்கைக் கோண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரை தேடி அலமந்து
காக்கைககே இரையாகிக் கழிவரே "

வழிபாட்டு முறையைக் கையாளாதவர்கள் இறுதியில் என்ன ஆகிருர்கள் என்று இதனேடு விட்டுவைக்கவில்லே சுவாமிகள்.

" பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் சேத்துப்
பிறப்பதற்கே தோழிலாகி இறக்கின்ருரே "

பிறந்து பிறந்து இறக்கவேண்டியவர்கள் அவர்கள். அவர்களுக்குப் பிறவா நேறி இல்லே என்று பேசிவிட்டார்கள். இப்படிக் கழியாமல் வாழ்வு பயன்படவேண்டுமாளுல் ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுவே வழிபாடு. அஞ்சேழுத்துத் தியானம். 'நாக்கைக் கோண்டு அரன் நாமம் நவில்கிலார்' என்று எதிர்மறை முகத்தாற் கூறிய சுவாமிகள் அதனேயே விதிமுகத்தாலும் விளங்க வைத்துளார்கள். 'நாவுக்கு அணிகலனும் ஒன்றுண்டு; அதுதான் மூலமந்திரமாகிய பஞ்சாட்சரம்' என்ற போருளில்,

' நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே '

எனப்பாடியுள்ளார்கள். இதற்குத் தோர்ந்த உவமைகளாக மூன்றினேக்காட்டித் தேளியவைத்துள்ளார்கள், பூவினுக்கு அணிகலம் போன்று போலிவது தாமரை. ஆவினுக்கு அருங்கலம் பஞ்சகவ்யம். ஒரு அரசனுக்கு அருங்கலம் சேங்கோல் முறைமை. என்று கூறிப் பின்னர் நாவினுக் கருங்கலமாவது நமச்சிவாயவே என்று முடித்துள்ளார்கள். அந்தப் பாடல் அமுதைப் பயின்று பருகுக :-

" பூவினுக் கருங்கலம் போங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே "

வழிபடுதற்கே கிடைத்தது இப்பிறவி, இப்பிறவி கிடைத்த நோக்கத்தையே சிலர் மறந்து விடுகிருர்கள். என்ன மாயம்? நமக்குக் கோடுக்கப்பட்டுள்ள தனு, கரண, புவன, போகங்கள்



அனைத்தும் அவன் திருவடி பரவுதற்கே. சிவஞானசித்தியாரில் அருணந்தி சிவம் பின்வருமாறு தேளிவிக்கின்ருர்கள் :-

" மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சோல்ல
இனமலர் கையிற் கோண்டங்கு இச்சித்த தேய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழும் சேயலற மானுல் யார்க்கும்
முனமோரு தேய்வ மேங்கும் சேயற்கு முன்னிலே யாமன்றே "

தனு கரண முதலியன அவன் திருவடி பரவுவதற்கே கோடுக்கப்பட்டுள்ளன என்பதை உணர்ந்தால் அவற்றின் மேல்வைத்த பற்றுத் தோலேயும். அப்பற்றுத் தோலேந்தால்தான் நற்பற்றுத் தோடரும்.

" பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு "

என்ருர் நாயனுர். அக்குறளின் மேய்ம்மை உணர்ந்து ஒழுகுதல் வேண்டும். அடியவர் சேர்க்கை வேண்டும். அதன் வாயிலாக மனமும் வாழ்வும் பண்படவேண்டும். அதனே யளிப்பவர் குருவேயாவர். தேளிவுக்குக் குரு தரிசனம், குரு உபதேசம், குருசிந்தனே தாம் வழிகள் என்பது தமிழாகமமாகிய திருமந்திரம் காட்டும் தண்ணேறியல்லவா? மடங்கள், ஆலயங்கள்; தோத்திரங்கள், சாத்திரங்கள் அனைத்தும் இவ் வழிபாட்டுக்கு உறுதுணை புரிவனவே. சரியை, கிரியை, யோக, ஞானங்களாகிய நான்கு நேறிகளே வழிபாட்டு நேறியில் நம் சமயாசாரியர்கள் மேற்கோண்டோழுகினுர்கள்.

இந்நாளில் கடவுள் நம்பிக்கை குறைந்து வருகிறது என்று எண்ணுகிருர்கள் பலர். இல்லே; முன்னிலும் இப்போது கூடி வருகிறது என்பதே உண்மை. இதனினும் எதிர்காலத்தில் ஈடற்று விளங்கும். பழய காலத்தில் நம் நாட்டின் கடவுட்பண்பும் உயர்வும் மீண்டும் தலேயெடுத்து வருகிறது. மக்கள் அதற்கு ஒத்துழைப்புப் புரிய வேண்டும். கூட்டுவழிபாடு சேய்தல் வேண்டும்; அகமுருகி வழிபட வேண்டும்; அவன் திருமுன் பண்ணியாதரித்து ஆடியும் பாடியும் வழிபடவேண்டும். 'என்ன புண்ணியம் சேய்தனே நேஞ்சமே' என்று வாழ்த்திக் கூத்திட வேண்டும். இத்தகைய வழிபாடோன்றிஞல்தான் நல்லவண்ணம் வாழலாம். இதனே உணர்தல் முன்னேத்

தவத்தான் வருவதாகும். திருமயிலாடுதுறைத் தலத்து வடபால் வள்ளலார்கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மேதா தட்சிணமூர்த்திக்குக் கோடி அர்ச்சனையாக - ' நாமம் நூருயிரம் சொல்லி ' வழிபட்ட சிறப்பு நிகழ்ச்சி இதனையெல்லாம் நன்கு விளக்குவதாகும். இவ்வர்ச்சனையை முன்னின்று நடத்திய அன்பர்கள், நல்லன எல்லாம் பெற்றுத் தென்முகப்பெருமான் திருவருளாலும், செந்தமிழ்ச் சொக்கன் சீரருளாலும் வாழ்க.

உலகியலில் பல்வேறு துறைகளில் ஈடுபட்டிருந்தாலும், அன்புத் துறையில் அன்பர்கள் பலரும் ஒன்றுய்க்கூடி இயற்றிய இப்பணி சீரிது. இதனையொத்த அறப்பணிகள் பலவும் மேன்மேலும் நீடுக! இத்திருத்தலத்துறையும் தென்முகப் பெருமானைப் பொன்னுர் மேனியனைக் கண்டு உய்ந்து போற்றிசைக்கும் புண்ணியம் நிலை நிற்பதாக!

'' வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம். ''

வாழ்க உலகெலாம் !

---

ஞானசம்பந்தம்

[ சந்தாதாரர்களுக்கு ]


புதிய சந்தாதாரர்களாகச் சேர்பவர்கள் புதிய சந்தா என்பதோடு தங்களின் முகவரியையும் தெளிவாக மணியார்டர் கூப்பனில் எழுதவேண்டும். பழைய சந்தாதாரர் புதிய ஆண்டுக்குப் பணம் அனுப்பும்போது பழைய சந்தா என்று குறித்தல் வேண்டும்.

ஏதேனும் விவரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் பதில் எழுதுவதற்குப் போதுமான தபால் பில்லை அனுப்புதல் வேண்டும்.

செயலாளர்

ஞானசம்பந்தம் செயலகம், தருமபுரம், மாயூரம் P.O. தஞ்சாவூர் Dt.

தருமபுர ஆதீனம் வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணமூர்த்திக்குக் கோடியர்ச்சனை நிறைவிழா - முதல் நாள்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் வழிபாடு முடித்து எழுந்தருளல்



சென்னை மாநில முதலமைச்சர் கனம். உயர்திரு. K. காமராஜ நாடார் அவர்களுக்கு வரவேற்பு

தருமபுர ஆதீன மடத்தில்

உ

குருபாதம்

சென்னை மாநில முதல் அமைச்சர்

## கனம். திரு. K. காமராஜ நாடார் அவர்களுக்கு

தருமபுர ஆதீனம், ஆதீனம் தேவஸ்தானங்களின்
பல்கலைக் கல்லூரிச் சார்பில் வாசித்தளித்த

# நல் வரவேற்புரை

தாயகம் போற்றும் நாயகமே வருக,

தாய்த்தொண்டும், தாய்நாட்டுத் தொண்டும் ஒன்றே எனினும் தாய்க்கும் மேலாகத் தாய்நாட்டுக்குத் தொண்டு புரிந்து வரும் பெருந்தகையே! உங்களது தொண்டு மிகச் சிறந்தது என்று யாவரும் போற்றுகின்றனர். நேபாலத்தில் இக்கொள்கையே தலைமையுடையதாய் நிலவுகின்றது என்று அண்மையில் அங்கு எழுந்தருளிவந்த எங்கள் குருமணியால் அறிந்தோம். தாய்போலத் தாயகத்தையும் போற்றும் தொண்டரே உலகம் புகழும் உயர்வுடையவர் ஆவார். அவரே பிறரால் வெல்லற்கரிய வீரரும் ஆவார். இவ்வுண்மைக்கு மெய்யான லக்ஷிய புருஷராக விளங்கும் உங்கள் நல்வரவால் எங்கள் எல்லார் உள்ளங்களும் உவகைப் பெருக்கம் அடைகின்றன. இவ்வாண்டு முதலில் முதலமைச்சரது நல்வருகையை நண்ணிய சிறப்பு எங்கள் கல்லூரியும் அடைகின்றது.

உழைப்பால் உயர்ந்த உத்தமரே வருக, வருக,

பகாரம் மூன்றனுள் ஏதேனும் ஒன்று உடையவரே உலகில் உயர்வுறுவர் என்பர் பலர். உயர்வுக்குப் படிப்போ, பதவியோ, பணமோ வேண்டா; உண்மை உழைப்பே உயர்வுண்டாக்கும் என்று ஒழுகிக் காட்டும் உத்தமர் காமராஜர் என்று உயர்ந்தோர் பலரும் உள்ளமார, நாவாரப் புகழ்கின்றனர். பேறுதற்கருமையான அம் மெய்ப்புகழ் பெற்றும் மிக்க எளிமையை விடாமல் **வாழும் உங்கள் மேன்மை எல்லாராலும் எங்கும் பாராட்டப்**

பெறுகின்றது. அத்தகைய பேறற்கரிய பேறுடைய உங்களது இனிய வருகை எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்றது.

சத்தியமூர்த்திபால் பத்திமிக்கவரே வருக, வருக, வருக.

'மெய்யப்பர்' என்னும் கடவுள் திருப்பெயர் திருமெய்யம் என்னும் தலத்தவர்க்கும் அதைச் சுற்றிய ஊரினர்க்கும் வாய்ப்ப துண்டு. அதையே வடமொழியில் 'சத்தியமூர்த்தி' என்று அழைப்பர். அப்பெயர்கொண்டு விளங்கியவரும் நாவலரும் ஆன ஒருவரைக் குருவாகக்கொண்டு சத்திய பத்தியுடன் ஒழுகி, அதன் பயனாக இக்காலத்தில் மாநிலத்தின் நாயகமணியாகித் திகழ்கின்றீர்கள். தெய்வ பக்தியும், குருபக்தியும், தியாகமும் மிக்க நீங்கள் எல்லாவகையான உயர்ச்சிக்கும் உரியவர் ஆதலில் சிறிதும் வியப்பில்லை. உலகில் பக்தி முதலியவற்றால் உயர்ந்த வர்களே என்றும் உள்ளவர்கள். அதனால் நீங்களும் நீடுழி வாழவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

அருந்தொண்டாற்றும் பெருந்தகையாளரே
வாழ்க, வாழ்க, வாழ்க.

பெரும் பேச்சும் சிறு செயலும் வேண்டாமல், சொற் சுருக்கமும் செயற் பெருக்கமும் வேண்டிக் கடைப்பிடித்து ஒழுகும் உங்களை நாங்கள் நீடுவாழ்க என வாயார வாழ்த்து கின்றோம். உடலுக்குணவும், உயிருக்குணர்வும் அளித்துக் காக்கும் எங்கள் குருநாதரும், வறட்டுப் படிப்பு இருந்தால் மட்டும் போதாது என்று அறிவுறுத்திப், பல்வேறு வகையான உலகியல் அறிவு பெறத்தக்க வழியில் எங்களுக்குக் கல்விச் செல்வத்தை நல்க வைத்திருக்கிறார்கள். 'ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையும் வாய்ச் சொல் வீரமின்றிச் செய்யும் உண்மைத் தொண்டும் மேற்கொள்க' என்று உபதேசித் தருள்வார்கள். அவ்விரண்டுமே அவர்களது அருளொழுக்க மாகக் காண்கின்றோம். இதுவே எங்களுக்குக் கேள்வியாலும் காட்சியாலும் விளையும் பெரும்பயனாகும். அதன் விளைவாக எழுந்தவையே இங்குள்ள இக்கல்லூரி முதலிய பல கல்விக் கூடங்களும். இவ்வாதீனத்தில் கல்வியை நாடிவரும் ஓர் இளம்பிள்ளை 15 ஆண்டுகளில் இலவசமாக முறையே



தொடக்கக்கல்வி, உயர்தரக்கல்வி பெற்றுக் கல்லூரியிற் புலமைக் கலைகளையும் கற்று நல்ல புலவனாகி உலகிற் செல்லு கின்ற வாய்ப்புக் கிடைக்கின்றது. உலகவர்க்கு என்று தோற்றிய இக்கல்லூரி தம்பிரானுவோரும் வித்துவான்களாகி விளங்க உதவுகின்றது. சமயஞானம், உலகியல் அறிவு, கடவுள் வழிபாடு, நல்ல பண்பாடு, நல்லொழுக்கம் முதலிய நலங்கள் அனைத்தும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் அருளால் நாங்கள் பெற்று இன்புறுகின்றோம். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்."

வாழ்க, வாழ்க, வாழ்க.

தருமையாதீனப்
பல்கலைக்கல்லூரி,
23—6—1958.

இங்ஙனம்,
**கல்லூரி மாணாக்கர்கள்.**

---


சிறந்த திங்கள் வெளியீடு → **குமரகுருபரன்**

ஆண்டுச் சந்தா 1—50

இவ் வெளியீடு 8ஆண்டுகளாகத் தொண்டுபுரிகின்றது. சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றினை எளிய நடையில் தெளியக்கொண்டு உலவுகின்றது. தருமையாதீனத்து முனி புங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமர குருபர சுவாமிகளின் திருப்பெயரோடு வெளிவருவதால் அவர்கள் அருளிய நூல்களின் ஆராய்ச்சி விளக்கமும் ஏற்றுத்திகழ்கிறது, ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் ஆணையின் வண்ணம் இவ்விதழ் வெளிவருகிறது. எல்லோரும் பாராட்டி வரும் இவ்விதழை வாங்கிப் பயன் அடைக.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்.
**"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.**

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான

மாயூரம் - குமரக்கட்டளை

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

**ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்குத்**

**தங்கக் கவசம் சார்த்தும் விழாவில்**

சென்னை மாநில அறநிலைய அமைச்சர்

**கனம். உயர்திரு. எம். பக்தவத்ஸலம் B. A., B. L.,**

அவர்களுக்கு வாசித்தளித்த

# நல் வரவேற்புரை

காவிரிக் கரையிலுள்ள 'மயிலாடுதுறை'யென வழங்கும் இத் திருத்தலம் தேவாரப் பாடல் பெற்றது. மாயூரநாதர் இத் திருக்கோயிலில் சிறந்த மூர்த்தி. அம்பிகை அஞ்சோல்நாயகி. இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள குமாரக்கடவுள் மிக்க வரதர்.

கந்தபுராணத்தில் முருகப்பெருமான் சூரசம்ஹாரத்திற்கு எழுந்தருளி வந்த காலத்தில் இங்கு மாயூரத்தில் வந்து எழுந்தருளியிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திருக்கோலத்தில் வில்லும் அம்பும் ஏந்திய நிலையில் யுத்தத் திருக்கோலத்தில் பெருமான் (உற்சவர்) எழுந்தருளிக் காட்சி அளிக்கிறார். இங்குக் கந்தசஷ்டி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அக்காலத்தில் சஷ்டி விரதம் காப்போர் ஏராளமாக வந்து கூடுவர். சம்ஹார தரிசனம் செய்து விரதம் முடிப்பர்.

இத்திருக்கோயில் இரண்டு பிரிவினதாக அமைந்து ஆட்சி செலுத்தப்படுகிறது. அவற்றுள் குமரக்கட்டளை என்பது



தருமை ஆதீனத்திற்குச் சொந்தமானது. மற்றது திருவாவடு துறை ஆதீனத்திற்கு உரியது. இரண்டு பெரிய ஆதீனங்களை இணைத்து நிற்கின்றது இத்திருக்கோயில். ஆண்டுதோறும் இக் குமரக்கட்டளைக்கு வருகின்ற சொற்ப வருமானத்தில் ஓரளவு மீதம் செய்து பெருமானுக்குத் தங்கக் கவசமாகச் சார்த்துவது என்று தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் பற்றினார்கள். அது இன்று நிறைவேய்து கிறது.

இந்துமதத் திருக்கோயிற் பாதுகாப்பில் அக்கரையோடு செயலாற்றி வருகின்ற ஒழுக்கமும், உயர்ந்த பண்பும் உடைய தங்கள் முன்னிலையில் இத்தங்கக் கவசம் சார்த்தும் திருவிழா நடைபெறுவது குறித்து நாங்கள் பெருமைப்படுகிறோம்.

வளர்க நல்லறம். வாழ்க உலகெலாம்.

| | |
|---|---|
| மாயூரம் - குமரக்கட்டளை<br>தேவஸ்தானம்,<br>27—6—58. | ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்<br>ஆணையின் வண்ணம்,<br>முத்துக்குமாரசாமித் தம்பிரான்<br>கட்டளை விசாரணை. |

---

## EXTRACT FROM THE VISITORS BOOK

### ஸ்ரீ வேளூர் தேவஸ்தானம், வைத்தீசுவரன்கோயில்

இன்று தினம் வைத்தீஸ்வரன்கோயில் ஆலயம் சுற்றிப் பார்த்து தரிசனம் செய்யும் பாக்கியம் பெற்றேன்.

கோயில் மூர்த்தங்களை அழகுபெற அமைத்து பழமை பெருமை குன்றாமலும் புதுமை உறவு உருத்தாமலும் புனைந்து மிகவும் அழகாயும் சுத்தமாயும் ஆலயமும் போற்றப்பட்டு வருவது பெருமைபெற்ற விஷயம். இதுவிஷயம் போற்றி எழுதினேன்.

(Sd.) புருஷோத்தமன் M.L.C., சென்னை 5

**3—6—1958.**

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான

மாயூரம் வள்ளலார்கோயில்

**ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி கோடியர்ச்சனை நிறைவிழாவில்**

சென்னை மாநில அறநிலைய அமைச்சர்

**கனம். திரு. எம். பக்தவத்ஸலம் B. A., B. L.,**

அவர்களுக்கு

**மாயூரம் ஸ்ரீமேதாதக்ஷிணாமூர்த்தி கோடியர்ச்சனைக் குழுவினர் அளித்த**

# வரவேற்புரை

நானிலம் போற்றும் நல்லறங்காவல !

தென்காசித் திருக்கோயிலை எழுநிலை மாடங்கள் அமைத்து எழுப்பிய பாண்டியன், தான் எழுப்பிய திருக்கோயிலைப் பாதுகாப்பார்க்குத் தன் முதல் வணக்கத்தைத் தெரிவித்தான். அறக்கட்டளைகள் அமைத்து, கோயிலெழுப்பித் திருப்பணி செய்வோர் அனைவரும் தாமியற்றும் அறச்செயல் என்றும் நின்று நிலவ அவ்வறச் செயல்களைப் பாதுகாப்போர்க்குத் தம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர். அந்நன்றிக் கல்வெட்டுத் தொடர் 'அறங்காப்போர் அடி யிரண்டும் என் முடிமேலன' என்பது.

அறஞ் செய்வதைக்காட்டிலும் அது நல்ல வண்ணம் நிகழத் துணைசெய்து காப்பது சிறந்த தொண்டு. அத்தொண்டை மேற்கொண்டு, திருக்கோயில்கள் மடாலயங்கள் இவைகளைக் கண்ணெனக் காத்துவரும் தங்கட்குத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் 'நல்லறங்காவலர்'' என்ற பட்டமளித்துப் பாராட்டுவதறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம். குடிதழீக்கோலோச்சும் மதியமைச்சர் தன்னால், தன் பரிசனத்தால், பகைவரால், விலங்கால், பிற உயிரினங்களால் விளையும் குற்றந் தீர்த்து அறங்காத்தல் வேண்டுமென்பது இந்நாட்டு அரசியல் விதி எனப் பெரியபுராணம் கூறுகிறது. இவ்விலக்கியத்திற்கு இலக்கணமாக விளங்கும் தங்களை வருக ! வருக ! என வரவேற்கின்றோம்.



வள்ளலார்கோயில் என வழங்கும் வடமாயூரத்தில் தென்முகப்பரமனாக விளங்குகின்றவர் தக்ஷிணாமூர்த்தி. இத் தக்ஷிணாமூர்த்தித் திருவுருவம் யோகாசனத்தில் நந்தியெம்பெருமான்மேல் எழுந்தருளி சிவஞான உபதேசத்தைச் சின்முத்திரையால் காட்டும் திருவுருவமாக அமைந்திருக்கிறது. இதனால் இடபதேவர்க்கருள்புரிந்து கைகாட்டும் வள்ளல் என வழங்கப்படுகின்றான் இறைவன். இந்த குருமூர்த்திக்கு ஒரு லக்ஷார்ச்சனை செய்ய எண்ணினோம் நாங்கள். லக்ஷார்ச்சனைக் கமிட்டியென்ற பெயரில் பலர் கூடித்தீர்மானித்தோம். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களிடம் வந்து தெரிவித்தோம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளம்போல் லக்ஷம் கோடியாக விரிந்தது. கோடி எழுத்தளவில் சிறியது; எண்ணளவில் பெரிதாயிற்றே என அஞ்சினோம். ஆயிரக்கணக்கில் பொருள் தேவையாயிற்றே. அர்ச்சனை முடியப் பல ஆண்டுகளாகுமே, இடையில் பொருட்குறைவால் தடைப்பட்டால் என் செய்வது என்று மனஞ் சோர்ந்தோம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் அருளாசி இருக்க, அஞ்சுவதேன் என எங்களில் பெரியோர் கூறினர். தொடங்கிய ஒன்பதுமாதகாலத்திற்குள் அர்ச்சனை நிறைவுற்றது. இவ் விழாவில் கோடி அர்ச்சனை நிறைவடையத் துணை நின்றவர்கட்கு நன்றியறிதலோடு கூடிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயில் திருப்பணிகளில் கண்ணும் கருத்தும் உடையவர்கள். தங்கள் ஆட்சிக்குட்பட்ட கோயில்களைச் செவ்வனே பரிபாலிப்பவர்கள். திருப்பணிகள், அபிஷேக ஆராதனைகள், அர்ச்சனைகள், திருவிழாக்கள் எல்லாம் தருமைத் திருக்கோயில்களில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதை நாடறியும். அவர்கள் கருணையால் இக் கோடியர்ச்சனை விழா நிறைவுறுகின்றது. இவ் விழாவிற்கு வருகை புரிந்து குருமூர்த்திகளாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் ஆசியையும் தக்ஷிணாமூர்த்தியின் திருவருளையும்பெற வருகின்ற தங்களை வருக ! வருக ! என மீண்டும் மீண்டும் வரவேற்று மகிழ்கின்றோம். வணக்கம்.

இப்படிக்கு,

மாயூரம்.
27—6—58

கோடியர்ச்சனைக் குழுவினர்.

## வைத்தீசுவரன்கோவில்

## தருமபுர ஆதீனம் தேவஸ்தானங்கள் இந்து அனுதாஸ்ரமம்

## புதிய நிர்மாணத்திட்டத் துவக்க விழாவில்

சென்னை மாநில அறநிலைய அமைச்சர்

**கனம். திரு. எம். பக்தவத்ஸலம் B. A., B. L.,**

அவர்களுக்கு வாசித்தளித்த

# நல் வரவேற்புரை

திருவாசகத்திலே சாழல் என்ற ஒரு அருமையான பகுதி இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஒரு பெண் கேள்விகள் கேட்பதாகவும் அதற்கு மற்றவள் மறுமொழி கொடுப்பதாகவும் அமைந்த பொருள் ஆழமுள்ள பகுதி அது. அதில் "தாயுமிலி, தந்தையிலி, தான்" என்று பெருமானைக் குறித்துக் கேட்கப்படுவதாகவும் அதற்கு விடை இருப்பதாகவும் வருகிறது. இவ்விதமாகத் தனக்கென ஒரு தாயும் தந்தையும் இல்லாது தானே உலகுக்குத் தாயாகவும், தந்தையாகவும், துணைவனாகவும் இருந்து அருள் வழங்குகிறான் அப் பெருமான்.


தாய் தந்தையற்ற பன்றிக்குட்டிகளாகிய அஃறிணைப் பொருள்களுக்கும் தானே தாயாக எளிவந்து திருமுலைப்பால் நல்கிக் காத்தான் பெருமான் என்று திருவிளையாடல் சரிதம் ஒன்றும் உண்டல்லவா? ஆண்டவன் அருளாட்சியில் யாரும் அனாதைகள் என்பதில்லை. உயிருக்குயிராகவும் உற்ற துணைவனாகவும் ஆண்டவன் எப்பொழுதும் நம்மைக் கண்ணை இமை காப்பதுபோலக் காத்து வருகிறான். அந்தக் காவல் இல்லையானால் உய்வழி இல்லாது எல்லாம் தடுமாறி மயங்கும். இதற்கும் பல சான்றுகள் இருக்கின்றன.

பழங்காலத்தில் இப்படியான அனுதாஸ்ரமங்கள் எதுவும் தனியாக நடத்தப்பட்டதாகத் தெரியவில்லை. அக்காலங்களில்

தருமபுர ஆதீனம் தேவஸ்தானங்கள் அனுதாஸ்ரமத்தில்
புதிய நிர்மாணத் திட்டத் துவக்க விழா



சென்னை மாநில அறநிலைய அமைச்சர், நல்லறங்காவலர்,
கனம்.திரு. எம். பக்தவத்ஸலம் B.A.,B.L., அவர்கள் வார்தாசேக்கைத்தொடங்கிவைத்தல்



தருமபுர ஆதீனம் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் சமயப்பிரசார மண்டபத் திறப்புவிழா

சென்னை மாநில அறநிலைய அமைச்சர், நல்லறங்காவலர், கனம். திரு எம். பக்தவத்ஸலம் B. A., B. L., அவர்கள் திறப்புவிழா உரை நிகழ்த்துதல்



மக்கள் அந்தந்த சமுகத்தின் நலனே அந்தந்த சமுகத்தினரே காத்துவந்தனர். அதனுல் அந்தந்த சமுகப் பெருமையும் மங்காது, உயர்நிலையில் இருந்துவந்தது. இப்போழுது அந்தப் பிடிப்பு, சமுகக் கட்டுப்பாடு தளர்ந்துவிட்டது. உறவு நெருக்கம் குறைந்துகோண்டேவருகிறது. இதனைப் பயன்படுத்திக்கோண்டு வேளியார் பலரும் நம் குழந்தைகளை எடுத்து வளர்ப்பதாகச் சோல்லி வேறு விதத்தில் பழக்க வழக்கங்களை மாற்றி மதத்தையும் மாற்றிக் கணக்கிட்டுப் பெருமை அடைந்து வருவாராயினர். ஆட்சி வேற்றவர் ஆட்சியாக இருந்தவரை இந்தக் குறைக்கு நிறைவு காண இயலாதிருந்தது. சுதந்திரம் பேற்றேம். ஆனுல் இன்னும் நம்முணர்வு பூரணமாக நமக்குத் திரும்ப வந்துவிடவில்லை. இதுவரை தளர்ந்திருந்த பல சமுகக் கட்டுப்பாடுகள் இன்னும் பழைய நிலையில் வலுப்பெறவில்லை. இந்த நிலைகண்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுளம் கனிந்தது. அதன் விளைவே இந்த ஆசிரமம். இது ஆதீனத் திருக் கோவில்களின் சார்பில் நடத்தப்படுகின்றது. அதிக வருமானம் உள்ள சில திருக்கோவில்கள் இதற்குப் போருளுதவி சேய்கின்றன.

தோடக்கத்தில் 7 பிள்ளைகள் இருந்தார்கள். இப்போழுது 40 பிள்ளைகள் இருக்கிறுர்கள். நடைமுறையில் இவர்களுக்குச் சில ஒழுங்குமுறைகள் திட்டப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவர்கள் அதிகாலையில் எழுவதிலிருந்து இரவு படுக்கைக்குச் சேல்லும்வரை எல்லாம் குறிப்பிட்ட திட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. படிப்புக்கு உள்ளூரிலேயே நாட்டாண்மைக் கழகப் பள்ளிக்கூடங்கள் இருப்பதால் அவற்றில் கல்வி பேறுகிருர்கள். வைத்திய வசதி முதலிய எல்லாம் அமையப் பேற்றிருக்கின்றன. திருக்கோவிலில் சில சிறு தோண்டுகள்கூட இவர்கள் சேய்து வருகிருர்கள். இப்பிள்ளைகள் இங்கிருந்து ஒரு குறிப்பிட்ட வயதில் வேளி உலகில் விடப்படுவார்கள். அப்போழுது வாழ வழிதேடவேண்டிய நிலை ஏற்படும் அல்லவா? அதற்கு ஏதாவது தோழிற்பயிற்சி கோடுக்கவேண்டும் என்று திருவுளக் குறிப்புத் தோன்றியது. அதன்படியே அம்பர் ராட்டைப் பயிற்சி அண்மையில் தோடங்கப்பட்டது. வார்தா சேக்கு, கதர் ஜமக்காளத் தறி இவைகள் இன்று தோடங்கப் படுகின்றன.

நாட்டுத்தொண்டும் மக்கள் தொண்டும் செய்வதையே குறிக்கோளாகக்கொண்ட - தூய உள்ளம் படைத்த தாங்கள் இதனைத் தொடங்கி வைத்து இந்தச் சிறுவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவது சிறப்புடையது. தங்குமிடம் போதியதாக இல்லை. அதனைப் பெரிதாக்கவேண்டியிருக்கிறது. அதற்கும் அடியிட்டுக் கொடுக்கவேண்டும். எல்லாம் வல்ல சொக்கலிங்கப் பெருமான் திருவருள் தங்களுக்கு மேலும் மேலும் நல்லன எல்லாம் தந்து நீடு வாழத்துணைசெய்வதாக.

உலகில் நல்லறங்கள் ஓங்கி உயர்வதாக.

வைத்தீசுவரன்கோவில்,
27—6—58

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின்
அருளாணைப்படி,
சொக்கலிங்கத் தம்பிரான்,
வேளூர் தேவஸ்தானம்
கட்டளை விசாரணை.

---

## EXTRACT FROM THE VISITORS BOOK

**வேளூர் தேவஸ்தானம், வைத்தீசுவரன்கோவில்,**

1-6-58 இன்று நாங்கள் புள்ளிருக்கு வேளூர்ப் பெருமானை வழிபடும்பேறு பெற்றோம். திருத் தருமபுர ஆதீனத்தின் சார்பில் நடைபெற்றுவரும் திருக்கோயில்களில் வழிபாடு சிறந்தமுறையில் நடந்து வருவதனை மக்கள் அறிவார்கள்; ஆயினும் இன்று நாங்கள் அதனை நேரிற் கண்ணாரக் கண்டு வழிபட்டு இறையருள் பெற்றுய்ந்தமைக்கு ஆதீனத்திற்கு நன்றி செலுத்த மிகவும் கடமைப்பட்டுள்ளோம். எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க, ஆதீனம் செய்துவரும் அரும் பெரும் பணிகளை வியந்து வியந்து பாராட்டி மகிழ்கின்றோம்.

ச. சிவகுமாரன்,
ஏற்றுமதி அலுவலர்,
பென்னி அன் கம்பெனி,
சென்னை.

நா. சங்கரன்,
துணையாணையாளர்,
சென்னை நகராண்மைக்கழகம்.
1—6—58.

புலவர், முருகவேள் M. O. L.
திருப்புகழ்த் தொழுவேன், தண்டபாணி, எழும்பூர்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

**சமயப் பிரசார மண்டபத் திறப்புவிழாவில்**

சென்னை மாநில அறநிலைய அமைச்சர்,
கனம். உயர்திரு. எம். பக்தவத்ஸலம் B.A., B.L.,
அவர்களுக்கு வாசித்தளித்த

## நல் வரவேற்புரை

மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றாலும் சிறப்புற்றது புள்ளிருக்கு வேளூர். கடவுட்பற்றுக் குறைந்து வருவதாகப் பேசப்பெறுகின்ற இந்நாளிலுங்கூட இத் திருக்கோவிலுக்கு மக்கள் அளிக்கும் காணிக்கைகளும், வழிபடும் அன்பர்களின் எண்ணிக்கையும் பெருகிக்கொண்டே வருகிறது. மக்கள் தங்கள் பிரார்த்தனைகளைப் பெருமளவில் செலுத்திக்கொள்கிறார்கள். பெண்டிர் திருமாங்கல்யம், கைவளை முதலிய அணிகலன்களையுங்கூட காணிக்கைகளாகச் செலுத்துகின்றனர். உப்பு, மிளகு, வெல்லம் முதலியன மிகப் பெரிய அளவில் குவிக்கப்படுகின்றன. இத்தனைக்கும் காரணம் பெருமான் மக்களுடைய உடல் நோய் தீர்க்கும் உற்ற மருத்துவனாக விளங்குவதுதான். பவரோக வைத்தியநாதர் என்பது இப் பெருமானின் திருநாமம். அதற்கேற்பப் பெருமான் உடற்பிணி, உயிர்ப்பிணி தீர்ப்பவனாக விளங்குகின்றான். அம்பிகை - தையல்நாயகி. சித்தந் தெளியவும் பித்தம் தெளியவும் மருந்து தேடிவருவோர்க்குக் கருணை வழங்கும் தாய். செல்வமுத்துக்குமாரர் என்பது இங்குள்ள முருகக்கடவுளின் பெயர். கலியுகத்திலும் கண்கண்ட கடவுள். இத்தலம் எல்லாவகையாலும் சிறப்புற்று விளங்குகிறது. சித்தாமிர்தம் இத்தலத்திற்குச் சிறந்த தீர்த்தமாகும். குமரகுருபரர் சித்தாமிர்தத்தின் சிறப்பைக் 'குறுந்திவலை ஒன்றே அமையும்'' என்பதால் விளக்குகின்றார். வைத்தியநாதப் பெருமானை நினைந்து கொடுக்கப்பெறுகின்ற மருந்து, முத்துக்

குமரரின் திருவடியில் ஒவ்வொரு இரவு புழுகுகாப்புக் காலத்தில் சார்த்தப்பெறுகின்ற நேற்றிராப்போடி, அவர்க்கு அபிஷேகிக்கப்படும் சந்தனக்குழம்பு ஆகியவை தீராத நோய் களையெல்லாம் தீர்க்கின்ற மருந்துகளாக விளங்குகின்றன. சம்பாதி சடாயுவும், இராம இலக்குமணரும், செவ்வாயும், வேதமும், சூரியனும் இன்னும் பலரும் வழிபட்ட தலம் இவ்வூர். தலவிருக்ஷம் வேம்பு.

இந்த ஆலய நிர்வாகம் வெகு நீண்டகாலமாகத் தருமை யாதீனத்துக்குட்பட்டதாக இருந்து வருகின்றது. இதற்கு இவ்வளவு பெரிய சொத்துக்களும் பிறவும் அவ்வப்போதும் இங்கு ஆட்சியில் ஆதீனப் பிரதிநிதிகளாக அமைந்து விளங்கிய பல பெரும் அருளாளர்களான தம்பிரான்களின் அயரா உழைப்பின் பயனாக - தியாகத்தின் பரிசாகக் கிடைத்தனவே. அவர்களில் மூவர் என்றும் அழியாக் கல்லெழுத்துப் பெற்ற வர்கள். அட்சயலிங்கத் தம்பிரான் சுவாமிகள், முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள், உலகநாதவள்ளல் என வழங்கப்படும் உலகநாதத் தம்பிரான் சுவாமிகள் எனும் மூவரே அவர்கள். இன்றும் அவர்களுடைய சமாதிகளுக்கு நித்திய வழிபாடுகளும் சமாதிகூடிய திருநாட்களில் மகேஸ்வர பூஜை முதலிய சிறப்பு வழிபாடுகளும் ஆலயச் செலவிலேயே நடத்தப்பட்டு வருகின்றன. ஆலயத்தில் இவர்களது திருவுருவங்கள்கூடச் செதுக்கப்பட்டு இன்றும் ஆலய நிர்வா கத்தை நேர் நின்று காண்பதுபோல அமைக்கப்பெற்றுள்ளமை காணலாம்.

இப்பொழுது வரும் வருமானத்தைக் கணக்கிட்டுச் செய்ய வேண்டியவைகளைச் செய்து அதில் கிடைக்கும் மிகுதியில் பொருள் சேர்த்து இவ்வாலய பரம்பரைக் கர்த்தர்களாக விளங்கும் தருமை ஆதீனம் இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தங்கக் கவசங்களாகவும், பொற்பாத்திரங்களாகவும், பல பெருந் திருப்பணிகளாகவும் செய்து மகிழ்கிறார்கள். வெளியில் கோவில் எதிர்ப்புப் பிரசார மும், தெய்வநிந்தனைப் பிரசாரமும் வலுப்படுவதைக் கண்டு. திருவுளம் நைந்தார்கள். மக்கள் உள்ளங்கள் மயங்குவதையும்



கண்டார்கள். ஆலயங்கள் செய்யவேண்டிய கடமையைச் செவ்வனே செய்யாதபடியால் அல்லவா இப்படி மயக்கம் ஏற் படும்படியாயிற்று என்ற குறிப்புத் தோன்றியது திருவுளத்தில். மன ஆறுதலுக்கும், ஆன்ம நிறைவுக்கும் ஏற்பட்ட ஆலயங்கள் அவைகளை அவாவுறும் மக்களுக்குக் கொடுக்க வேண்டாமா? அதுவும் உரிய காலத்தை நழுவவிடின் பின்னர்வரும் விளைவு களுக்கு வருந்திப் பயன் என்ன? ஆகவே இப்பொழுதே அதனைச் செய்யவேண்டும். ஆஸ்திக உணர்வு குன்றினால் - அவன் அருள் குறைந்தால் நாட்டில் தீமைகள் பெருகும்; பண்பாடு குன்றி மக்கள் மக்களாக வாழமுடியாது. அதற்கு இப்பொழுதே பிரசாரம் செய்யவேண்டும் என்ற திருவுளக் குறிப்பும் தோன்றியது. திருக்கோவில் வழிபாடு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம்தான் இந்தத் திருத்தொண்டும்; நித்திய வழிபாடுகள் நிகழ்வதுபோலச் செய்தல் வேண்டும். ஆகவே கோவில் வருமானத்தில் செய்யவேண்டிய அத்தியா வசியமான செலவுகளில் ஒன்றாகவே கருதிச் செய்தல் வேண்டும் என்று திட்டமிட்டது.

ஆலயங்களில் வழிபட வருவோருக்கும், வழிபடும் முறைகள் தெரியவேண்டாமா? இந்த எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்தும் நோக்கத்தோடு இந்த ஆதீன ஸ்தாபனங்கள் எல்லா வற்றிலும் ஆண்டு முழுவதிலும் பல நாட்கள் சமயப் பிரசாரம் நடத்தவும் திட்டம் செய்து நடத்தியும் வருகிறார்கள். அவரவர் மனப்பக்குவத்திற்கு ஏற்ப உருவாகச் சொற்பொழிவுகளாகவும், புராண சரித்திரக் கதாகாலக்ஷேபங்களாகவும், இசை நிகழ்ச்சி களாகவும், திருமுறை மகாநாடுகளாகவும் நடத்தப்படுகின்றன. கோவிலுக்கு வரும் அன்பர்கட்குப் பயன்பட்டாலும் வெளி மேடைப் பிரசாரங்கள் வலுப்பெற்றுவருவதற்கு வெளியிடங் களிலும் இப்பணிகளைச் செய்ய அவாவிற்று அத் திருவுள்ளம். சேரி மக்கள் சீர்திருத்தத்தில் பலரும் இப்பொழுது அந்தந்தக் கட்சிச்சார்பில் அக்கரைகாட்டி அவர்களுடைய உலகியல் ஆசையைத் தூண்டி வருவதை அறிந்து அவர்கள் உலகில் மற்றவர்களுக்கு ஒப்ப வாழவேண்டுமானால் பண்பட்ட மனமும் பழக்கவழக்கங்களும் படிய வேண்டுமே என்று கருதிற்று அத் திருவுள்ளம். அங்கும் சென்று பிரசாரம் செய்க எனப் பணித்தது. இப்படியே எல்லா இடங்களுக்கும் சென்று சென்று

சமயப் பிரசாரம் செய்ய உந்தூர்திகள் அமைத்துக் கொடுத்துச் சேவை செய்யச்செய்து மகிழ்கிறது அத்திருவுள்ளம்.

சென்னை, பலதரப்பட்ட மக்களும் வாழும் இடம். அந்தப் பெருநகரில் செய்யும் பிரசாரங்கள் செய்தித் தாள்களின் வாயிலாக உலகெங்கும் விரைவில் பரவும் நிகழ்ச்சியும் கண்டது. அந்த வாய்ப்பையும் பயன்படுத்திக்கொள்ள அங்கு இத்திருக் கோவில் செலவில் ஒரு வசதியான கட்டிடம் வாங்கி நிலையாகத் தொண்டு செய்யத் திட்டமிட்டு நல்ல பிரசாரம் நடத்த இத்தப் புதிய அமைப்பை உருவாக்கி இருக்கிறது அத்திருவுள்ளம்.

தாங்கள் இதனைத் தொடங்கி வைத்துச் சமய நிலயங்களின் சிறப்புத் தொண்டான இதை நிலைபெறச் செய்யவேண்டும். இப் பெரும்பணி செய்ய வந்திருக்கும் தங்களை வருக, வருக என வரவேற்கிறோம். வாழ்க, வாழ்க என வாழ்த்துகிறோம்.

திருவருள் வெல்க, வாழ்க !

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
திருவருளாணையின் வண்ணம்,

வேளூர் தேவஸ்தானம், 27—6—1958.

சொக்கலிங்கத் தம்பிரான்,
கட்டளை விசாரணை.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

### Velur Sri Vaithinathaswami Devasthanam
### Vaithiswarankoil

This is the most sublime ideal Adhinam which is doing sincere service to radiate spiritual knowledge in S. India. It can offord to build up a Siddhanta University at Vaithisvarankoil. If this is done there is a possibility of uniting the East & the West in the Siddhanta.

(Sd.) Yogi Suddhananda Barathi.
Yoga Samaj, Madras.
26—5—58

தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மகோற்சவம்

# 10-ஆவது
# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

(மலர் 17, இதழ் 7, பக்கம் 511 இன் தொடர்ச்சி)

### நான்காம் நாள் - சுந்தரர் திருநாள்

1—6—53 அன்று திரு. நல். முருகேச முதலியார் அவர்கள் "ஆரூரர் தோழமை" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றியதன் சுருக்கம்.

குருபூஜைத் தத்துவத்தைச் சாத்திரங்கள் நன்கு விளக்குகின்றன. திருமந்திரத்தில் 'குருமடதரிசனம்' என்று ஒரு அதிகாரம் கூறப்பட்டுள்ளது. குருவைத் தரிசித்தாலே ஞானமுண்டாகிறது. குருவேறல்ல, மடம் வேறல்ல - அதனால் குருமடதரிசனம் சிறந்தது. திருக்கயிலாய பரம்பரையில் தொடர்பாக வந்த் சாந்நித்தியம் நீடிக்கிறது. குருமட தரிசனம் - குரு தரிசனம் - குருவின் அருள் எனக்கொள்ளக் கிடக்கிறது. இப்போதுள்ள குருமகாசந்நிதானம் அவர்களாட்சியிலே ஓர் அற்புதமென்ன வென்றால் நம்மக்கள் தொடர்புபெற்ற அருள் ஆட்சியாக இருப்பது. மக்கள் தொடர்பற்ற சமயமோ கொள்கையோ பயன்படாது. தொடர்பு நெருங்குகிறபோது சமயம் வளரும் - சிறக்கும் எனலாம். தோழமை என்ற தத்துவம் குருமகான்களிடத்தில் இருக்குமானால் நாம் நல்ல செயல் உள்ளவர்களாக விளங்குவோம்.

'ஆரூரன் தோழமை' - அருணகிரியார் திருப்புகழில் ஆண்ட சொற்றொடர். 'ஆதரம் பயில் ஆரூரன் தோழமை.' ஆதரம் - ஆசை என்பது பொருள். பெரிய புராணத்தில் இறைவனே 'தோழமையாக உனக்கு 'நம்மைத் தந்தனம்' என்று ஆரூரருக்கு அருளினார். ஒருவர் நலத்தை இருவர் பயில்வது நட்பு - தோழமை. ஒருவர் குறையை மற்றொருவர் நிறைவு செய்தல். சாரணரவிந்தமலர் சார்தல் என்ற முறையில் தோழமை பெறுதலைச் சுந்தரரின் முதல்பாடலிலே காணலாம்.

'எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை' என்றார். தொல்காப்பியர் கூற்றினை மூன்று பாகுபாடாக்கி 'ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே' 'தாஎன் கிளவி ஒப்போன் கூற்றே' 'கொடுஎன் கிளவி உயர்ந்தோன் கூற்றே' என்று கூறிச் சென்றனர். இறைவன் 'தோழமையாகத் தந்தனம்' என்று ஒப்போன் கூற்றால் கூறியது அறியத்தக்கது. தோழமையின் இலக்கணம் அடியார் என்னசெய்தாலும் பொறுக்கும் தன்மை. தோழமை - ஆன்மா முதல்வனைப்பரவி வணங்கி, பிறப்பு இறப்பு இன்றி உடனாய் அடங்கிநின்று உணரும் அடக்கம்.

தான் செய்த வினைப்பயனைத் தான் நன்றாக அனுபவித்த பின்னரே பேறு கிடைக்கிறது. சுந்தரரும் தாம் செய்த வினைப் பயனை முதலில் நுகர்ந்துதான் பேரின்பப் பேறடைந்தார். அவர் சென்றது யோகமார்க்கம். திருமந்திரம் யோகத்தினை விரித் துரைக்கிறது.

சைவ சமயக் கருத்துக்களை ஆராய வேறு பிரமாணங்களைத் தேடத் தேவையில்லை. அவை திருமுறையிலேயே அடங்கி யுள்ளன. ஆரூரர் தோழமையை நன்றாகத் தேவாரத்தினால் அறிகிறோம்.

ஆரூரர்பால் தோழமையால் இறைவன் செய்தவற்றை நோக்க இது நேர்மையா என்ற ஐயம் எழலாம். நேர்மையே என "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்ற பாடல் அக்கருத்தை அறிவிக்கிறது. வினைப்பயனால் பரவையை மணந்தார் சுந்தரர். இறைவன் பரவையைத் தந்து சுந்தரரை ஆட்கொண்டார். அறம் பொருள் இன்பம் உலகியலுக்குத் தேவை என அறிவிக்கச் சங்கிலியாரை மணந்தார். 'சங்கிலியோடு புணர்ப்பித்த தத்துவனே' என்று கூறுகிறார். இது சிற்றின்பமா? பேரின்பமா? இது பேரின்பத்தை அருள்பாலிக்கும் செயலா? என்றால்

"சார்ந்தனர் சார்ந்தனர் சங்கிலி தடமுலைத்தோள்
ஆர்ந்தனர் ஆர்ந்தனர் ஆமாத்தூர் ஐயனருளதே"

என்ற பாடலால் பெற்ற சிற்றின்பத்தால் பேரின்பநிலை கண்டார் சுந்தரர் என உணரலாகும். திருவொற்றியூர் விட்டுப்போனவுடன் கண் மறைதல் தான் செய்த தீவினையால். 'சங்கிலிக்காக என் கண்கொண்டபண்ப' என்று பாடுகிறார் சுந்தரர். இறைவன்



நடுநிலையாளன். கண் செய்த குற்றத்திற்காகக் கண்ணையே மறைத்தான். இவ்வாறு இறைவன் தன்னைச் செய்தது சரியே என்றுணர்ந்த ஆரூரர் 'பண்ப' என்று இறைவனை விளிக்கிறார்.

இன்னும் 'பிழையுளன பொறுத்திடுவீர்' - வைதாரையும் அங்கு வாழவைக்கும் பண்பு இங்கே புலனாகும். 'மகத்திற் புக்கதோர் சனி எனக்கு ஆனாய்' முகத்தில் கண்ணிழந்து எங்ஙனம் வாழ்வேன்' என்று கூறுகிறார். சிந்தனை உள்ளத்தி லிருந்து வரும் உண்மை நினைவு. உண்மை நினைவு யோக மார்க்க நிலை. பத்தியால், பயத்தால், மனத்தன்மை வளருகிறது. நட்பு சிறக்கிறது. திருமுருகன் பூண்டியில் இறைவன் பொருளைக் கவர, சுந்தரர் 'எத்துக்கு இங்கு இருந்தீர்' என்று இறைவனை வினவுகிறார். "நட்புக்கு இலக்கணம் யாதெனில் கோட்பின்றி ஒல்லும் வாயெல்லாம் செயல்" என்ற கருத்தை இங்குக் காணலாம். பெரியபுராணம் தேவாரப் பொருளை விரித்துக் காட்டுகிறது; விளக்கமாகத் தருகிறது. பெற்ற சிற்றின்பத்தால் பேரின்பத்தின் உயர்தன்மையை உணர்வதைச் சிவப்போகசாரம் செப்புகிறது; பத்திமையும் அடிமையும் இருந்தால் இறைவனின் பாதங்களில் சரணாகதி தானே வந்து விடும்.

திரு. ச. சிவகுமாரன் M. A. சென்னை. "சரணார விந்தங்கள் சார்தல்" என்பதுபற்றிச்சொற்பொழிவாற்றியதன் சுருக்கம்.

'சரணார விந்தங்கள் சார்தல்' என்ற தலைப்பிலே பேசுமாறு பணிக்கப்பெற்றேன். சரணம் என்பது பாதம், அரவிந்தம் - தாமரை. சரணாரவிந்தம் - பாததாமரை; சார்கின்ற இடம் சரணாரவிந்தமாயிற்று. சரணாரவிந்தம் என்பது இங்குத் தாமரை போன்ற மென்மையும் குளிர்ச்சியும் வாய்ந்த ஆண்டவன் திருவடிகளைக் குறிக்கும். சார்தலாவது - 'எல்லாம் அவன் செயல்' 'என்னால் ஆவது ஒன்றுமில்லை' என்னும் மனோ பாவத்தைப்பெற்று அவன் அடிகளைச் சார்தல். அத்தகைய அடிசார்ந்த பெருமக்கள் சொல்லிலே நீதிகளும் ஆழ்ந்த கருத் துக்களும் உள்ளடங்கி நிற்கும். மனிதன் எவ்வளவோ நினைக் கிறான்; ஆனால் கடவுள் அவற்றைத் தவிர்க்கிறார் என்பது பண்டைப் பழமொழி. Man Proposes God disposes ஆனால்

இன்று அது காலப்போக்கில், Man proposes woman dis-poses என்றும், Man Proposes maney disposes என்றும் மாறிவிட்டது ஒரு விந்தையே.

முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார். என்னுடைய முயற்சியால் எல்லாம் ஆகும் என்று எண்ணுவோர் பலர். முயற்சி உடையோர் சிலரே. முயற்சி இருக்கவேண்டும் அது அவசியமே யாயினும் பலருடைய பெருக்கத்தையோ சுருக்கத்தையோ நாம் கணிக்க முடியாது. சிலப்பதிகாரம் சிறந்த மூன்று உண்மைகளைக் கூறிச் சென்றது. பின்வந்த கம்பநாடனும் தன் காவியத்தில் அக்கருத்துக்களைக் காட்டுகிறான். சிலம்பில் பாண்டியன் - 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும்' என்பதற்குக் காட்டாக விளங்குகிறான். இங்கே இராவணனை அந்நிலையில் காண்கிறோம். அங்கே கண்ணகி - உயர்சால் பத்தினியாகக் காண்கிறோம். இங்குச் சீதை அவ்வாறு சித்தரிக்கப்படுகிறாள். சீதை சிறையிருப்பானேன். கற்பின் ஆற்றலால் கண்ணகி போல இலங்கையை எரித்திருக்கலாமே என்றால் சீதை பெண்களின் துயர வடிவமாகக் கூறப்படுகிறாள். woman of Sorrows சத்தியமும் தர்மமும் நிலைநிற்க வேண்டுமென்பதற்குத் தான் சீதை சிறையிருந்தாள்.

மூன்றாவது கருத்தான 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பதனைச் சேக்கிழார் வேறெந்தச் சமயத்திற்கும் இல்லாத ஒரு தன்மை சைவத்தில் இருப்பதைக் கூறவந்த இடத்திலே கூறுகிறார். இன்று 'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே என்ற கொள்கை பரவிவிட்டது. ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது இவ்வொத்த கருத்து மனப்பான்மையால், பொருள் உடையாரும் இலாருமாகக் காட்சியளிக்கிறார்கள். இதனால் ஆண்டவன் இல்லை' என்ற முடிவுக்கு வந்து விடுகின்றார்கள் ஆராய்ந்து பார்க்கும் மனநிலை யற்றவர்கள். ஆண்டவனிடத்தில் தோன்றி உலகில் நன்மையோ தீமையோ செய்துபின் ஆண்டானிடம் சென்று உயிர் அவன் இடத்தோடையில் இருந்துவருவதாகக் கூறும் சிறித்து சமயம். ஆனால் நல்வினை தீவினை செய்த உயிர் அதன் பயனால் பிறவி எடுத்துப்பின் தான் செய்த வினைக்கேற்பப் பயனை நுகர்ந்து இப்படியே பல பிறவிகளுக்குப் பின் ஆண்டவன் திருவருள் பெறுவதாகக் கூறுகிறது சைவ சமயம். அதனைக் கூறவந்த சேக்கிழார்



"செய்வினையும் செய்வானும் அதன் பயனும்
சேர்ப்பானும் மெய்வகையான் நான்காகும் விதித்த பொருள்"

என்றார். சேர்ப்பானே - இறைவன், நமக்குத் தெரிந்தமட்டில் நல்வினை செய்து வருவோம். நன்மை தீமை ஏற்படுமானால் அவன் அடிகளைச் சரண் அடைவோம். விதிவலிது ஆதலின் ஆங்கு ஆறுதல்கிடைக்கும். இராமன் பட்டாபிஷேகம் பூணுதற்கு தந்தையின் வேண்டுகோளால் ஆயத்தமானான். ஆனால் ஓர் நாவசைவிலே புரண்டது அவன் வரலாறு. அந்நிலையிலும் 'மகிழ்ச்சி' என்னும் மனநிலை மாறாத இராமன் தன் தாயைக் காணச் செல்லுகிறான். கம்பர் தம் சொல்லோவியத்தில் அக்காட்சியைக் கம்பசித்திரமாகக் காட்டுகின்றார்.

"குழைக்கின்ற கவரியின்றிக் கொற்றவெண் குடையுமின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம் பின் இரங்கி ஏக
மழைக்குன்ற மனையான் மௌலி கவித்தனன் வருமென்றெண்ணித்
தழைக்கின்ற உள்ளத் தன்னாள் முன்னொரு தமியன் சென்றான்"

இதனைப்போலவே சேக்கிழார் கண்ணப்பர் வரலாற்றில், கண்ணப்பன் செல்லும் காட்சியினை, அன்பு முன்செல்ல, நாணம் பின்னே தொடர்ந்துவரச் செல்லுகிறான் எனத் தீட்டிக் காட்டுகிறார். ஞானசம்பந்தர் - கலைஞானம் கைவரப்பெற்ற ஞானச் செல்வக் குழந்தை, உபநயம் செய்தற்கு ஏற்றுக்கொண்டதேன், திருமணத்திற்கிசைந்ததேன் என்று வினாவொன்று எழுகிறது அவர் வரலாற்றில். மக்களுக்கு நெறிபுகட்டும் வல்லவர் ஞான சம்பந்தர், உலகப்போக்கிலே சென்று வழிகாட்ட எண்ணியே அவ்வாறு செய்தார். அதனால் நம்முயற்சியால் அனைத்தும் நடவா 'அவன் செயலே' என்று நாம் அறிகிறோம். பூசும் நீறுபோல உள்ளம் புனிதம் உறவேண்டும். அந்த உள்ளத்திலே இறைவனை நம்பிச்செய்து இறைவன் திருவடிக் கமலங்களை என்றும் நினைக்கும் மனப்பான்மை வேண்டும். மனித உள்ளம் ஒன்றனை நன்றாகப் பற்றும்வரை பற்றி இருக்கும் மற்றொன்றைக் கைவிடுவதில்லை. அதனால் இறைவன் திருவடியைப்பற்ற, மற்றொரு சிற்றின்ப நெறியிலே பற்றிநிற்கும் மனிதன் சிறிது சிறிதாக அதனைவிட்டுப் பற்றற்றான் அடிகளைப் பற்ற வேண்டும். அதனை,

" பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு "

என்று கூறுகிருர் வள்ளுவர். மனிதன் அறவழியில் ஈட்டிய பொருளை அறவழியில் செலவிடவேண்டும். அறவழியால் இறைவன் சரணுரவிந்தங்களில் அடைக்கலம் புகவேண்டும். அறியாமை விலகவிலக அங்கே இறைவன்தன்மை ஒளிருகிறது.

" தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றலரிது "

தாள் - சரணுர விந்தங்கள். சரணுர விந்தங்களை வணங்குவோர்க்குத்தான் மனக்கவலையை மாற்ற முடியும். திருவடிகளில் அடைக்கலம் புகுந்தால் அவை உயிருக்கு அளிக்கும் அடைக்கலச் சிறப்புத்தான் எத்தகையது?

வாலியின் வரலாற்றில் வாலி இறக்கும் நேரம் அங்கு இராமனை ஒரு கையிலும், தன் மகன் அங்கதனை மற்ருெரு கையிலும் பிடித்துக்கொண்டு பேசுகிருன். வாலியின் கரங்கள் பாற்கடலில் அமுதினைக் கடைந்து பிறருக்கீந்து தான் உண்ணுத தன்மையின. 'அவன் விருந்து புறத்ததாத் தானுண்டல்' என்பதன் விளக்கமாக விளங்குகிறது அவன் தன்மை. அவன் இறக்கும்போது இராமனிடம் அடைக்கலந்தந்த அங்கதன் பின்னுளில் இராவண யுத்தத்தில் புண்ணுற்று வீழ்ந்து கிடக்கிருன். அடைக்கலப் பொருளைக் காப்பாற்றுவதில் இராமன் மறக்கவில்லை. பின் தன் பட்டாபிஷேகத்தின்போதும் அங்கதனை மறக்கவில்லை இராமன். அடைக்கலச் சிறப்பு இங்கே சிறக்கக் கூறப்பட்டுள்ளது.

" விடைக்குலங்களின் நடுவன் ஓர் விடைக்கிடந் தென்ன
கடைக்கண்தீயுக அங்கதக் களிற்றினைக் கண்டான்
படைக்கலங்களைச் சுமக்கின்ற பரதனை பழிபார்த்து
அடைக்கலப் பொருளைக் காட்டவா எனறழுதான் "

என்கிருர் கம்பர்.

சரணுர விந்தங்களிலே அடைக்கலம் பெற்ருல், ஆகும் தன்மையினை 'வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுதும் அருள்வோய்' என்ற பாடல் விளம்புகின்றது.



[stamp]

பிரார்த்தனையால் அனைத்தையும் சாதிக்கமுடியுமென்ற மனப்பான்மை பயனில்லாதது. பொருளுணர்ந்து ஓதும் தன்மைதான் வேண்டும். அறிவால் சிவனை எட்டிப்பிடிக்க முடியாது. அன்பால்தான் உணர முடியும். அன்புக்குள் அறிவு அடங்கி விடுகிறது. சுந்தரர் திருமணத்திலே தடை ஏற்பட்டது. சுந்தரர் இறைவன் அருள்போலும் என்றே எண்ணினுர். 'அவனருளே கண்ணுகக் காணின் அல்லால்' என்ற தன்மையினை அவர் நன்கறிந்தவர். 'அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாம் குன்றே யனையாய் என்னை யாட்கொண்டபோதே கொண்டிலையோ' என்று பாடுகிருர்.

குமரகுருபரர், " உடல் பொருள் ஆவியினைக் கொண்டோய், இன்றோர் இடையூருண்டோ எண்டோள் முக்கண் எம்மானே " என்று கூறுகிருர்.

மணிவாசகர், " நன்றே செய்வாய், பிழை செய்வாய் நானே இதற்கு நாயகனே " என்று பாடுகின்ருர். இத்தன்மையில்தான் கல் மனதில் திருவடித் தாமரை முளைக்கும். 'திணியான மனோ சிலை மீது அணியார் அரவிந்தம் அரும்புமதே' என்று பாடுகிருர் அருணகிரிநாதர். சரணுரவிந்தங்களிலே அடைக்கலம் புகுந்தால் திருவருட் சித்ததால் அருள்பாலித்து அடியவர்களுக்கு அருள்செய்கின்றன அத்திருவடிகள்.

திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் (சொற்பொழிவின் சுருக்கம்,) " திருநாவலூரர் திருப்பாட்டு "

'திருநாவலூரர் திருப்பாட்டு' என்னும் அரும்பொருள் பற்றிப் பேசுமாறு பணித்தார்கள். குருமகாசந்நிதானம் அவர்களின் கட்டளையைச் சிரமேற்கொண்டு பேசத் துவங்குகின்றேன். திருநாவலூரர் பாடல்களை எடுத்துக்கொண்டால் அவர் பாடலிலே பல படியான கருத்துக்கள், அற்புதச் செயல்கள், தமிழ்ப்பற்று, நகைசசுவை, இயற்கை வருணனை, இறைவன் சிறப்பு இவை விளங்கும். இக்காலக் கம்பர் எனப் புகழ்பெற்ற சிவப்பிரகாசர் நான்மணி மாலையில் வினு விடையாகச் சில செய்திகளைக் கூறுகிருர்.

திருமுதுகுன்றத்தில் இறைவன்பால் பெற்ற பொன்னை மணி முத்தாற்றில் இட்டுத் திருவாரூர் கமலாலயத்தில் எடுத்தது எவ்வாறு? 'செங்கல்லைப் பொன்னுக்கியது எவ்வாறு' இவைகளை எவ்வாறு செய்தீர், திருப்பவள வாய் திறந்து அருள்வீர்! என்று கேட்கிறார். பொருளின் சிறப்புத்தான் என்னே, துறவியாகிய சிவப்பிரகாசர் கல்லைப் பொன்னுக்கியது எவ்வாறு என்று வினவுகின்றார். பொருளின்மேல் விருப்பம் விட்டார் யார்? 'மன்னரும் முனிவரும் முன்னுவ பொன்னினுரும்' என்பது முதுரையன்றோ "அருளிலார்க்கு அவ்வுலகமில்லை பொருளிலார்க்குஇவ்வுலகமில்லாகி யாங்கு" என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. 'வடிவிலா வையத்து மன்னிய மூன்றனுள் நடுவணது எய்நார் இருநலையும் எய்நார்' என்றதற்கேற்ப பரவையின் கணவர், முத்து, மணி, முடி கந்தூரி கமழ் சாந்தம் பணித்தருளவேண்டும் என்று கேட்கிறார். வேண்டாமை அங்கே சொல்லவில்லை.

பங்குனி உத்திரத்திருநாள் வந்தது. அடியார்க்கு அருட் கொடையினைப் பரவை வழங்கப் பொன்வேண்டிப் புகலூர் பெருமானிடம் சென்றார். உளமுருகிப் பாடினார்; அருள்பெருத காரணத்தால் செங்கல்லைத் தலைக்கு உயரமாக வைத்துக் கொண்டு துயின்றார். இறைவனருளால் கல் பொன்னாக மாறிக் காட்சி தந்தது. இந்த அதிசயத்தை எல்லோரும் பார்த்தார்கள். ஆண்டவனிடத்தே பொன்னையும் பொருளையும் பிறவற்றையும் பெறலாகும் என்று தொடங்கி பாடுகிறார்.

'தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
சார்கினும் தொண்டர்தருகிலார்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
பொய்மையாளரைப் பாடாதே எந்தைப்
புகலூர் பாடுமின் புலவீர்காள்
அம்மையே சிவலோக மாள்வதற்கு
யாதும் ஐயுறவில்லையே"

என்பது அப்பாடல். இறைவன் புகழை - பொருள்சேர்புகழை - மெய்ப்புகழைப் பாருங்கள் புலவீர்காள! பொய்ம்மையாளரைப் பாடாதீர், என்று புலவர்களை விளித்துக் கூறுகிறார் சுந்தரர். அப்படிப் பாடினுல் நம் வாழ்வுக்குத் தேவையான பொருள்களை உணவு, உடை முதலியவைகளை இறைவன் தருகின்றான்.



இப்படியாக அப்பதிகம் பத்துபாடலும் புலவர்களை விளித்துப் பாடப்பட்டதுதான். 'செல்வன் கழலேத்தும் இன்பம்,' தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவானைத் தத்துவனை ... ... ... ... ... ... ... ... ... புண்ணியரே' பொன்னியற் பொருளும் தருவானை' ... ... ... ... ... ... ... அருளானை மறக்கலுமாமே' என்றெல்லாம் பாடுகிறார். எக் கோலங்கொண்டாலும் எப்பணியைச் செய்தாலும் சங்கரன் தாள் நினைத்தலேவேண்டும். திருமுறை ஓதுவார்க்கு எல்லா வித நன்மையும் உண்டு. ஏனெனில் அவர்கள், 'எல்லாம் அவன் அருள்' என்ற நம்பிக்கையில் உறுதி உள்ளவர்கள். முதல்வினவிற்கு இவ்வாறு விடைகிடைக்கிறது.

இரண்டாவது வினு. ஆற்றிலிட்டுக் குளத்தில் தேடிய செய்தி பற்றியது. திருவாரூர் கமலாலயத்தின் வடகீழ்ப்பகுதியிலே பரவையுடன் பொன்கொளச்சென்றார் சுந்தரர். இறைவனை ஏத்தி; அன்று மணிமுத்தாற்றில் புகவிட்ட பொன்னை, இவண் தந்தருள்க எனப்பாடினார். பொன் செய்த மேனியினீர்' என்பது அப்பதிகம். 'பரவையாரே அடியார் தொண்டு செய்பவர் ஆதலின் அவள் வாடாதே தந்தருளும்.' என்று கூறியே பாடினார். இறைவன் அருள் கிடைக்கவில்லை. பொன்னும் காணவில்லை. பின்னும் 'ஏத்தாதிருந்தறியேன்' என்னும் பாடல் பாடப் பொன்கிடைத்தது. அங்கு தம்மைக் கொடியேன், என்று கூறிக்கொள்கிறார் சுந்தரர். பொன்னின் மாற்றுக்குறைய மீண்டும் இறைவனை வழிபட்டுப்பாடி மாற்றுக் குறையாப் பொன்னைப் பெறுகிறார். 'மாற்றுரைத்த பிள்ளையார் கோயில்' என்றுகூட இன்றும் வழங்கி வருவதனை நாம் அறிவோம். இறைவன் பொருள்சேர் புகழைப்பாடுவார் பசி தீர்வார், பரவுவார் திருவடைவார் என்பது நன்கு விளங்குகின்றது.

திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், சொற்பொழிவுச் சுருக்கம். "வன்றேண்டர் வாய்மை"

இறைவனின் சரணாரவிந்தங்களைச் சாரும் பெருமக்களே அடியவர்கள், இறைவனின் அடிமைகள்; அடி என்றதன் அடிப்படையில் அமைந்ததே அச்சொல். அடிசார்ந்து அடியவனாகி, அடிமையைத் தோழமையாக மாற்றி அனுபவித்த அனுபவம்

வன்றொண்டர் வாய்மை என்று சுருக்கமாகக் கூறலாம். சுந்தரர் தம் முதல் பாடலை இறைவனைத் தாம் அழைத்த 'பித்தா' என்ற சொற்றொடரால் தொடங்கினார். வன்றொண்டர் என்னும் பேயர் இறைவன் அளித்த பெயர். 'வன்றொண்டன் என்றொரு வாழ்வு தந்தாய்' என்று பாடுகிறார். சுந்தரர் பதிகத்தில், 'ஆனாய் உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே' என்ற வோரு பாடலடி வருகிறது. ஆனாய் என்பதற்கு - இடபத்தை உடையவனே என்று சைவ நெறியில் போருள் கூறுவர்; ஆனால் இலக்கண முறை மாறுதலில் அச்சொல்லை உவமை ஆகுபெயராகக்கோண்டு ஆனை ஒத்தவன் என்று போருள் கூறலாம். (ஆனாய்—' ஆனை ஒத்தவனே ,)

சைவத்திருமுறை, ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தம் இரண்டும் கருத்து ஒற்றுமை உடையவை. பிரபந்தத்திற்கு அருமையான நுணுக்கமான உரை எழுதியிருக்கிறார்கள். அந்த நுணுக்கத்தைப் பின்பற்றித் திருமுறைகளை நோக்கும்போது பல நுண்கருத்துக்கள் புலனாகின்றன. சரணாரவிந்தம் அடைந்தவர்க்கு - கள்ளங்கபடமின்றி அருள்வெள்ளத்தில் மிதந்து ஒளி பெற்ற புலத்துறை முற்றிய கடவுளைக் கண்ட துறவுப் பெருமக்களுக்கு, - திருவடியின் இன்பம் பெற்ற பெருமக்களுக்கு திருவடிகளே துன்ப நீக்கப்புணை என்பது நன்கு தெரியும். யானையை வருத்தும் பாகன் அதன் மத்தகத்தே ஏறிச்செல்ல யானை தன் கால்களை வளைத்து - வழிசெய்கிறது. காலோடு சேர்த்துக் கழுத்துவரை ஏறுவதற்கு வழிசெய்கிறது. அது போலததான் இறைவன் திருவடிகளில் சரணம் புகுந்தவர்களுக்கு இறைவன் சிரத்தின்மேல் வைத்து அருள் செய்கிறான். சந்திரன் கொடியவன். நோயால் பீடிக்கப்பட்டுத் தன் கலை எல்லாம் இழந்து சிவபெருமானின் திருவடிகளிலே அடைக்கலம் புகுகின்றான். இறைவன் அவனைத் தம் முடிமேல் வைத்து அருள்செய்கிறார். இக்கருத்தை ஆனாய் என்ற சொல்லில் அனுபவிக்கச் செய்கிறார்கள். சிறந்த கருத்துக்களைச் சித்தாந்தத்திலே சேர்த்து அனுபவிக்கும் கடமை நமக்கு வேண்டும். சேக்கிழார் சுந்தரரைப் பற்றிக் கூறுங்கால் 'பயில்யோக பரம்பரையில் பயில்வதானார்' என்று கூறுகிறார். அதற்கு விளக்கம் எங்கேனும் விளக்கிக் கூறினாரா? யோக பரம்பரை என்பதன் விளக்கம் இருக்கிறதா? சேக்கிழார்



அருள்வழிநின்று அன்புடன் கூறுபவர் சிறந்த அனுபவத்தைத் தான் கூறியிருக்க வேண்டும். ஆசாரியனிடத்தில் இரு தன்மைகள் உண்டு. ஒன்று இருந்துகாட்டல், மற்றொன்று சொல்லிக்காட்டல். அனுபவ ஞானிகள் குருஞானசம்பந்தர் போன்றோர்க்கு இருந்து காட்டுவார்கள். தக்ஷிணாமூர்த்திப் பெருமான் - இருந்து காட்டும் இறைவன். சொல்லிக் காட்டுதல், நடந்து காட்டுதல் என்ற இரண்டுண்டு - சொல்லிக் காட்டுகின்ற ஆசிரியனே தான் சொல்லுகின்றபடி நடந்து காட்டவேண்டும். அவனே ஆசாரியன். பயில்யோக பரம்பரையிலே பயின்று காட்டுபவன். திருமந்திரம் யோகமார்க்கத்தை விரித்துரைக்கிறது. பிராணாயாமம் முதலானவற்றின் விளக்கங்கள் அங்கே விரித்துரைக்கப்படுகின்றன. திருமூலர் சொல்லிவைத்த முறையுடன் சேக்கிழார் கூறிய கருத்தையும் திருநாவலூரர்பெருமானின் அனுபவ வாழ்வில் காண்கிறோம். நாடி பிங்கலநாடி, இடைநாடி என இரண்டு - இவை யோகத்தில் மூச்சை நிறுத்திப் பிரிக்கின்ற தன்மையை விளக்க வந்தன. சுந்தரர் பரவையாருடன் கூடி வாழ்ந்தகாலம் பெரிது. சங்கிலியாருடன் வாழ்ந்த காலம் சிறிது. 'இருநாடி இறுக்கி' என வரும் திருமூலர் பாடல் யோகத்தில் மூச்சை இறுக்கி விடுகின்ற யோகத்துவத்தை விளக்குகிறது. அதுபோலச் சுந்தரர் பரவையார், சங்கிலியாரை இரு நாடிகளாக போகத்தில் யோகம் பயின்றார். போகமே யோகமாக இருக்கின்றது என்பது காமநூல் துணிவு.

நம்பியாரூரரைத் திருவாரூரில் மக்கள் வரவேற்றார்கள். வரவேற்பில் ஆணவம் இன்றித் தோழமை புலப்படக் கூறுதல் நோக்கத்தக்கது. 'கரையும் கடலும் மலையும்' என்ற பதிகத்தில் சுந்தரர் தன் குறைகளைக் கூறி இறைவனை வேண்டுகின்றார். சமய ஒழுக்கமுள்ளவன் தன் குறைகளைச் சொல்லித் தன்னைத் திருத்திக்கொள்வது வழக்கம். ஆணவம் என்பது சுந்தரரிடத்தில் ஒடுங்கிவிட்டது. இங்கு இறைவன் முன் சுந்தரர் வாய்மையுடன் இருந்த தன்மை புலனாகிறது. வாய்மையைப் பரிசோதிக்க இறைவன் எண்ணியதுபோல் நிகழ்ந்தது சங்கிலியார் திருமணம். சங்கிலியாருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுமுன் மகிழ மரத்தடியில் இரு என்று இறைவனைச் சுந்தரர் வேண்டியதும், பின் இறைவனருளால் மகிழமரத்தினடியிலேயே சபதம் செய்ய நேர்ந்ததும் அனைவரும் அறிந்ததே.

வாய்மைக்கு அஞ்சினார் சுந்தரர். உண்மைக்கு அழிவில்லை, 'உண்மை நிலைபெற்றே தீரும்', வாய்மையில் தவறியவர்க்கு வந்தவினை - கண்மறைந்தது - இன்னும் பல இன்னல்கள். இதனால் சுந்தரர் தோழமையில் வாய்மைக்கு அஞ்சி நடந்தார். வாய்மையின் இலக்கணம் வகுக்க வந்த வள்ளுவர்,

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமையிலாத சொலல்."

என்று கூறுகின்றார். தீமையிலாது சொல்லுதலே வாய்மை, அவ்வாய்மையில் இயைந்த சுந்தரர் வாழ்வினைக் கண்டோம். சிவநெறியில் சிறக்கும் வாழ்வுக்கு வாய்மை முழுதும் பயன் படுகிறது.

(தொடரும்)

---

## EXTRACT FROM THE VISITER'S BOOK

The Velur Sri Vaithinathaswami Devasthanam
Vaithiswarankoil

I had the privilege of worshipping at this sacred shrine this morning for a couple of hours. I had archanas performed at most of the important sannadhis. The temple is refreshingly clean and well attended to by the staff. The Trustee of the temple richly deserves the appreciation of the public for the manner in which the temple has been improved, the deities have been embellished and the services in the temple are properly and regularly performed. I trust that the Dharmapuram Pandarasannadhi will get the necessary support from the public and the authorities to continue the noble work he has been doing so far.

(Sd.) A. V. Visvanatha Sastri, Madras.
6—6—58.

**(True copy)**

கடிதம் 12.

# புதுமைக்கு....

செஞ்சொற்கொண்டல்,
**வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனார்**
தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

(மலர் 17, இதழ் 6, பக்கம் 439 இன் தொடர்ச்சி)

அன்புள்ள தம்பி புதுமை,

வாழ்த்துக்கள். தற்கால எழுத்துலகு பற்றிய என் கருத்துக்கள் உன் மனத்தில் ஒளியைத் தூண்டியிருத்தல் குறித்துத் தொடக்கத்திலேயே வாழ்த்திவிடுகிறேன் உன்னை. 'எழுத்துலகு பற்றிய விளக்கம் தந்த தாங்கள் கலையுலகு பற்றியும் விளக்கி யெழுதி எதிர்காலக் கலையுலகின் ஆக்கம் தருவீர்கள் எழுதப்போகும் கடிதத்தில் என்று எதிர்பார்க்கிறேன்' என்ற சொற்றொடரோடு உன் விடைக்கடிதம் முடிந்திருந்தது. உன் வேண்டுகோளை நிறைவேற்றிவைப்பதில் மிக்க விருப்பம் கொண்டவன்தானே உன் அண்ணன்! கலையுலகுபற்றிய செய்தி வாளின் மேல் நடப்பது போன்றது. கூரிய வாளின் மேல் நடக்க முயன்றால் எவ்வளவு விழிப்புணர்ச்சியும், அச்சமும் தேவையோ, அவ்வண்ணமே கலை பற்றிய செய்தி விளக்கம் (விமரிசனம்) செய்யுங்காலும் தேவை. மிக்க பொறுப்புணர்ச்சி யோடு கலையை அணுகவேண்டும்.

தம்பி! கலை, உணர்ச்சிப்பொருள். உள்ளத்தின் அடியில், உணர்ச்சியே வடிவாய் ஒளிவிடுவது கலை அதன் பருமையும் நுண்மையும் வெளியீட்டின் பின்னேயே விளைகின்றன என்பது என் கருத்து. கலை வெளியீட்டால் கலைஞன் தன் அடிமனத்து உணர்ச்சிக்குப் புறவடிவம் கொடுக்கிறான்; வரிவடிவம் அமைக்கிறான். எழுத்துக்கு ஒலிவடிவமும் வரிவடிவமும் அமைதல் அதுபோலத்தான். இதனால்தான் கலை நிலைக்கிறது; காலம் ஓடினாலும் தான் ஓடாமல் நிலைபெறுகிறது. 'உலகு மாறினாலும் தான்மட்டும் நிலைபேறாய் ஒளிர்கின்றது எல்லாம் சென்றுவிடுகின்றன. கலை மட்டும் நம்மோடு தங்கிவிடுகிறது' என்று

ஆங்கிலப் பேராசிரியன் ஓதுவது இவ்வடிப்படையில்தான். எவ்வளவு மெய்யான வார்த்தைகள் இவை! தமிழ்நாட்டில் எத்தனையோ பாணர்கள் (பண் இசைப்போர் பாணர் ; பண் பாண் என நீண்ட சொல்) வாழ்ந்தனர். அவர்கள் இக்காலை இல்லை. இருப்பினும் அவர்கள் விட்டுச் சென்ற பண் செல்வங்கள் இன்றும் என்றும் சுடர்விட்டு ஒளிர்கின்றன. இதுதான் கலையின் அழியாத்தன்மை. மாமன்னர் பலரும் தாம் வாழ்ந்த காலத்தில், சித்திரசிற்பக் கலைக்கூடங்களாய்க் கட்டிய திருக்கோவில்களை நிறுவினர் ; அவர்கள் மாய்ந்தும் அக் கலைச்சின்னங்கள் அழியாத நிறுவனங்களாய் இன்றும் நின்று இலங்குதல் நீ அறிந்த ஒன்றுதானே! நம்நாட்டு வரலாறு, வாழ்வியல், பொருளாதாரக் குழப்பங்கள் எவ்வளவோ நிகழ்ந்துவிட்டன. ஆனால் கலையோ அத்தமிழ்வீறுடன் இன்றும் நின்று நிலவுகிறது. இதை நோக்க Austin Dobson என்ற அப் பேராசிரியன் ஓதிய,

" All Passes, Art alone
Enduring stays to us "

என்ற வரிகள் எவ்வளவு மெய்யானவை என்பதை நீ உணரலாகும்.

காலம் ஓடிக்கொண்டே யிருக்கிறது. என்ன வேகம்! என்ன வேகம்! நினைத்துப் பார்க்கவே முடியவில்லை அதன் ஓட்டத்தை. இந்தக் கணம் அடுத்த கணத்தில் இறந்த காலமாகிறது. புதிய கணம் விளைகிறது. வாழ்நாள் தேய்கிறது. 'நாள் உயிரை ஈரும் வாள்' என்று சுருக்கமாகச் சொல்லிக் காலத்தின் அருமையைப் புலப்படுத்தினர் திருவள்ளுவர். விரையும் காலத்தைக் கடவுளாகவே போற்றினர் திருநாவுக் கரசர். 'நேருநிலையாய் இன்றாகி நாளையாகி' நின்றான் இறைவன் என்பது அவ்வருளாளர் திருமொழி. நிலையற்ற பொருள், நிலையுற்ற பொருள் இரண்டும் இறைவடிவாகக்கண்ட பெரியாரன்றே அவர்! காலம் ஓடினாலும், காலத்துக்கு உட்பட்டேமும் கலையோ அதனைவென்று நீண்டு நிலைத்து நிற்கிறது. Long follow.

" Art is long and time is fleeting "

என்பது முற்றிலும் உண்மையே யல்லவா ?



இவையெல்லாம் ஏன் எழுதுகிறேன் என்று கூடச் சிலர் நினைக்கலாம். கலை புனிதமானது, கடவுளோடு ஒத்தது என்று விளங்கிக் கொள்வதற்காக எழுதுகிறேன். கடவுளுக்கும் அழிவில்லை ; கலைக்கும் அழிவில்லை. கடவுளுக்கும் தோற்ற மில்லை ; கலைக்கும் தோற்றமில்லை. கலைக்குத் தோற்றமில்லை என்று எப்படிக் கூறவியலும் என்று இப்போது ஓர் வினாக் குறியை நீ போடலாம். தம்பி! உள்ளமுழுதும் பரவி, ஓங்கி, உணர்ச்சி 'வடிவாய் நிற்கும்' அதற்குத் தோற்றம் எப்படி வரையறுக்க வியலும் ? கலையை வறண்ட கண்ணோடு பார்த்து விளக்குபவன் (விமர்சிப்பவன்) மனிதத் தன்மைக்கே மாறு பட்டவன். கடவுளையும் கலையையும் வேறுபட்டு எண்ணுபவன் கசடன். ஏன் எனில் கடவுட்டன்மையும் கலைத்தன்மையும் சமம். கடவுளை உள்ளத்து அடைக்கும் அடியவனும் கலையை உருவாக்கும் கலைஞனும் வேறல்லர். இருவர்க்கும் உலகைப் பற்றிய கவலை இல்லை. 'எங்கு எழில் என் ஞாயிறு ?' என்ற பரம ஞானியின் நிலையும் நினைப்பும் கலைஞன் நிலையும் நினைப்பும் ஒன்றே. உலகை அவர்களிடத்து மறைக்கச் செய்தவை எவை ? அடியவனிடத்தில் கடவுள் வெறி, கலைஞ னிடத்தில் கலைவெறி, கடவுள் வெறி ஏறியவன் உலகத்தார் போக்கைப்பற்றிக் கவலைப்படுவதேயில்லை ; பூதலத்தில் உன் அடியான் என்று ஏசப்பட்டேன் ; ஆயினும் என் ? ஆசைப் பட்டேன் ; ஆட்பட்டேன் என்று இறைவனை நினைத்து இதய முருகிப் பாடினர் மணிவாசகர். கலைஞனும் உலகத்தார் விமர் சனம் பற்றி உள்ளுவதே இல்லை. கலையோடு கலையாகக் கலைஞன் கலந்து ஒன்றாய்ப் 'பேதமற' நிற்கின்றான். அடியவன் கடவுளோடு கடவுளாக ஒன்றாய்ப் 'பின்னமற' நிற்கின்றான். ஆகவே கலையின் புனிதத் தன்மை, தெய்வீக நிலை ஒருவாறு உணரலாம்.

தம்பி! இனித் தற்கால உலகுக்கு வா. கலையைக் கடவுணர்ச்சியாகக் கருதுவோர் எத்தனைபேர் ? கடவு ளன்பை யொத்த கலையன்பு கொண்ட கலைஞர்கள் வாழ் கிறார்களா நம் நாட்டில் ? சிலரை விலக்கிவிட்டு எடையிட்டால் எல்லோரும் இந்த நிலைக்கு விலக்கல்லர். கலையைப் பொழுது போக்காகக் கொண்டோர் பலர் ; வாழவசதியும் வாய்ப்பும் இல்லாததனால் கலைத்துறையை அணுகினோர் பலர். கலையைப் பொருள் தேடுவதற்காகக் கைக்கொண்டோர் பலர். பிறர்

தம்மை மதிப்பதற்காகவும், அம்மதிப்பே செம்மை சான்ற தென்ற எண்ணத்திற்காகவும் கலையில் ஈடுபட்டோர் பலர். 'கலை கலை என்று தாம் அடிக்கடிக் கூறுவதாலும், அப்புனித' மான சொல்லைப் பன்முறையும் உருவேற்றுவதாலும் தம்மைப் பிறர் சிறந்த கலைஞர் என்று பாராட்டட்டுமே என்ற பரந்த நோக்கினால் கலைஞர் ஆனோர் பலர். எப்படிக் கவிதை உருவோ, இலக்கணமோ, கோப்போ அறியாதவர் தம்மைக் கவிஞர் என்று இக்காலத்திற் கூறிக்கொள்கின்றனரோ, அவ் வண்ணமே கலையின் மதிப்பறியாதவரும், இழிவான ஒழுக்கம் உடையவரும், கலைக்குப் பல்லாயிரம் கல் தொலைவிலே நிற்க வேண்டியவரும் கலைஞர் என்று கூறப்படும் இழிநிலை உலகில் இன்று காணலாகிறது. புனிதமான கலை புல்லர் கைப்பட்டுப் பொருள் சேர்க்கும் சாதனமாக எண்ணப் படுவதா? கடவுட் டன்மை வாய்ந்த கலை, ஒழுக்கமில்லாதார் வாழ்வில் கூடித் தவறான நோக்கம் கற்பிக்கும் சின்னமாகக் கருதப்படுவதா? தம்பி! புதுமை! நீ உள்ளபடியே வேண்டிக்கொண்டதால் என் அடிமனத்து உணர்ச்சிகளை இங்கே வெளியிட நேர்ந்தது. உனக்குத் தெரியும்; நான் பெரும்பாலாரோடு கலந்து பழகுவ தில்லை; உன்னோடு மட்டுந்தான் நெஞ்சு கலந்து பழகு கின்றேன் என்று. ஏனெனில் பெரும்பாலோர் நெஞ்சிலே பித்தம் அளவுக்கு மீறிப் பெருக்கெடுப்பதையே நான் காண்கிறேன் தம்பி. 'மனத்துக்கண் மாசிலாத' அறவோனாக உன்னை நான் மதிக்கின்றேன். உன்னைச் சார்ந்தார் பலருக்கு அவ்வற மனம் இல்லையேனில் நீ என்ன செய்வாய் தம்பி!

நாடகம், ஓவியம், இசை, சிற்பம், முதலிய கலைகளின் தற்கால நிலைபற்றிய எனது தனிப்பட்ட விமரிசனந்தான் நான் இப்போது கூறியது. இக்கலைகளை மக்கள் மனப்பண்பாடு வளரவும் பெருகவும் ஏற்ற இலக்கியங்களாகப் போற்ற வேண்டும்; பேண வேண்டும். நாடகக்கலையில் ஈடுபடுவோர்க்கு ஒரு வேண்டுகோள்: நாடகம் கருத்தைப் பரப்புதற்கோர் நிறைவான கலைக்கருவி. அங்கே வாழ்வு வளம் பெறுதற்கும், சிந்தனை சிறப்பதற்கும், அகக்கண் திறப்பதற்குமான கருத் துக்கள் கமழவேண்டும். ஒருசார் கட்சிக் கொள்கைகளையே உருவேற்றிப் பரப்ப நாடகக்கலையைப் பயன்படுத்தினால் அது வெறுக்கத் தக்கது. ஒதுக்கத் தக்கது. நான் முன்னேயே சொல்லியிருக்கிறேன். 'கலைஞன் தாய் அனையான்' என்று.



மன்பதைக் குழந்தை உடலும் உள்ளமும் உரம்பெற வேண்டு மாயின் கலைஞனின் தூய கலைமருந்துதான் வேண்டும். அஃது இன்றேல் குழந்தை உடல் வளத்தோடு இருக்கமுடியுமா? நாடகக்கலைக்குக் கூறிய அனைத்தும் ஏனைய கலைகளுக்குப் பொருந்தும். இவ்வண்ணமாக மட்டும் கலை வளர்ந்தால், நிலைபெற்றால் இந்நாட்டு மக்கள் நிலை எப்படி யிருக்கும்? கண்ணை மூடி நின்று இதோ ஒருகணம் சிந்திக்கிறேன். ஆகா! அதுவல்லவோ நாடு! பண்பாடு வளர்ந்த பழம்பெருநாடு! சங்ககாலத் தாய்த்திருநாடு!

என் சிந்தனையிலே திருக்காட்சி வழங்கும் அந்தத் திருநாடு இந்த நூற்றாண்டிலோ, வருகிற நூற்றாண்டுகளிலோ தலை யெடுக்குமா? தூய கலை துலங்கும் நாடாக, உலக அரங்கில் கலைப்பெருமை சான்ற கவின்நிறை நாடாக அது விளங்குமா? தம்பி! புதுமை! கலையும், கலைஞரும் இரண்டற்ற நிலையிற் கலந்து வையம் வாழ வழி பிறக்குமா? சொல், தம்பி, சொல்! இதற்கு விடை உடன்பாட்டு வகையில் இருக்குமா? அன்றி எதிர்மறை யாகிவிடுமா? உன் கையில்தான் இருக்கிறது இவ்வொப்பற்ற பொறுப்பு. பொறுப்புணர்ச்சியும் விழிப்புணர்ச்சி யும் கொண்டு கலை விரோதிகளோடு போராடு! போராடு! வெற்றிபெறு! 'புதியதோர் உலகுசெய்'. இந்தக் கிழவனின் இன்பக்கனவை நனவாக்கு!

உனது

பழமை

---

### பன்மொழி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்லப்ப முதலியார் பாடியது.

விண்ணைப் பெறுவர்நற் புண்ணியஞ் செய்பவர் வித்தகமாங்
கண்ணைப் பெறுவர்நற் கல்வியைக் கற்றவர் காசினிமே
லெண்ணைப் பெறுவர்நன் மார்க்கத் திருப்பவ ரென்றுமுடற்
புண்ணைப் பெறுவர் பரத்தையர் போகம் புசிப்பவரே.

# மகளிர் மாண்பு

சித்தாந்தச்செல்வர் :
திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தனுர்
திருவண்ணமலை

(மலர் 17, இதழ் 5, பக்கம் 363 இன் தொடர்ச்சி)

## நட்பும் - பொதுமகளிரும் :

தூண்டப்படாத விளக்கின் ஒளியும், போது மகளிரின் நட்பும் நிகர்த்தது. விளக்கில் நெய் யிருக்கின்றவரையில் ஒளி விட்டு எரிகின்றது. நெய் வற்றியக்கால் விளக்கு நிற்கின்றது. விசை யிருக்கின்ற வரையில் மின்விளக்கு ஒளியைக் கால் கின்றது. நீர்த்தேக்கத்தில் நீர் குறைந்துபடுமாயின், விசையும் தானுகக் குறைகின்றது. விளக்கும் ஒளி கோடுக்க மறுக் கின்றது பொதுமகளிரும் ஒருவன் கையில் செல்வம் இருக்கின்றவரையிலே, ஆடல், பாடல் நிகழ்த்திப் பெருமையுடன் வாழ்வதுபோல் நடிப்பார்கள். போருள் வற்றியக்கால், முன்பின் அறியாதவர்களைக் காண்பதுபோல ஒதுங்கி நிற்பார்கள். இந் நட்பால் ஒருவர்பால் உள்ள செல்வம் இலகுவில் சென்றுவிடும் என்பதறிக. போது மாதர்களுக்கு வஞ்சித்தற்குரிய அணி கலன்கள் மூன்று. 1. வெற்றழகு. 2. பசப்புச் சொற்கள். 3. அறிவற்ற செயல்கள். இம்மூன்றுடையார் பொருளாளனைத் தழுவுதல், அறிவற்ற காமம் தலைக்கு உந்தப்பட்டு உயிரைப் போக்கும் மாறுபட்ட மனம்பூண்ட பேய் பற்றிப்பிடித்தல் போலாம்.

பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல். (குறள் 912 - போருள்)

விளக்கொளியும் வேசையர் நட்பு மிரண்டுந்
துளக்கற நாடின் வேறல்ல — விளக்கொளியு
நெய்யற்ற கண்ணே யறுமே யவரையுங்
கையற்ற கண்ணே யறும். (நாலடியார்)

ஆயும் அறிவின ரல்லார்க் கணங் கென்ப
மாய மகளிர் முயக்கு. (குறள். 918 - போருள்)



## மகளிரும் - பெருமையும்

ஒரு முறைதவருத, வல்வழக்குரைக்காத வெற்றுச்சொற்கள் கொண்டு வீண் விளையாட்டு புரியாத அறிஞனும், ஒரு நிறையுடைய பெண்ணும் நிகர். நல்லன தீயன பாகுபாடுசெய்து, நன்மையை நன்மையே யென்றும், தீயவையைத் தீயவையே என்றும் ஆணித்தரமாக அறையும் தன்மை ஒரு முறைதவருத அறிஞனிடம் உண்டு. அங்ஙனமே ஒரு நிறையுடைய பெண்ணும் தான் கருத்தில்கொண்ட தலைவனையன்றிப், பின் ஒருவனைக் கனவிலும் நினையாத பேற்றியளாவள் எவளோ அவளே ஒருசிறந்த தலைவியாவாள். ஆதலான் ஒரு நிறையுடைய பெண்ணும், ஒரு முறைதவருத அறிஞனும் நிகர் என்பது தேற்றம்.

ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.

(குறள். 974 - போருள்)

காரிகை கற்றுக் கவிதை பாடாது, இயற்கையுள்ளத்து இயல்பாய்த் தோன்றிய, தேனெனத் தித்திக்கும் அரிய பாடல் களில் முகிழ்க்கும், தெளிந்தூறும் கருத்துக்களும், ஒரு மங்கையின் மனத்தினின்றும் பொங்கி எழுகின்ற உவகையின் சின்னமான புன்முறுவலின் முகத்தோற்றமும் இயையும். கவிஞனின் அரிய கருத்துக்கள் மனதிற்குக் கவலைபோக்கும் நல்மருந்தான ஒரு விருந்து. நல்லாளின் மின்னலன்னப் புன்னகையும் உள்ளத்திற்கு ஒரு உவகை ஊற்று. நூற் போருள்களை நுட்ப அறிவால், ஆயுந்தோறும் ஆயுந்தோறும், புதிதுபுதிதாகக் கருத்துக்கள் தோன்றும். நூலியற்றியவனை விட அந்நூலினைப் பயில்பவன் காணும் போருள்கள் சில பல நேரங்களில் உயர்ந்து விடுகின்றன; எனலாம். காரணம் நூலாசிரியன் பெயரில்கொண்ட பற்றேயாகும். கருத்தைக் கவரும் கலையழகும், கண்ணைக் கவரும் கவின்சுவையும் கோண்ட அழகிய அணிகளைப் பூண்ட பெண்ணைக்கண்டு புதிதாக இன்பம் அனுபவிக்கும்போது, களவுப் புணர்ச்சியில் முன் அனுபவித்த இன்பம் இன்பமாகத் தோற்ருமற் போயிற்று என்ற கருத்தை வான்புகழ் கோண்ட வள்ளுவர் வாயிலாக அறியலாம்.

அறிதோறறியாமை கண்டற்றுற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு. (குறள். 1110 - காமம்)

புணர்ந்தாற் புணருந் தோறும் யோகம் பின்னும் புதிதாம்.

(திருக்கோவையார்)

நல்லாருடன் கூடி வாழ்கின்ற வாழ்க்கையே இல்லறம். அவ்வில்லறம் சிறப்பது எதனுல்? பிறர்க்கு அளித்து உவக்கும் தன்மை அவ்வறமே அளிக்கின்றது. கைதவம் நிறைந்த முனிவர்களையும், வறியவர், எளியவர், வாழ வகையற்றோர் இவர்களுக்கு வேண்டுவன புரிந்து, தானும் தன் இல்லக் கிழத்தியும் வாழ்கின்ற ஒரு இல்லறமான நல்லறம், காட்டிற்குள் சென்று, பர்ணசாலைகள் அமைத்து, கால்களை முடக்கி, கைகளை நீட்டி, கண்களை மூடி, பசியுடன் அமர்ந்து, காற்றை ஒரு நிலைப்படுத்தி, பன்னூறு ஆண்டுகள் தவமியற்றும் சிரேட்டன் வாழ்க்கையைவிடச் சிறந்தது.

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்சமும்
மெல்லியல் பொறையும், நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்,

(தொ. பொரு. கற்பு. 11,)

ஆற்றினொழுக்கி யறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரினேன்மை யுடைத்து. (குறள் 48 - அறம்)

மேற்கண்ட திருக்குறள் கருத்திற்குத் தஞ்சை வாணன் கோவைச் செய்யுளொன்று அரண்செய்வது காண்மின்! நம் பைங்கொடியன்னுள், நாவலர், மிடியர், பிணியாளர் முதலானோர் வேதனை நீங்கத் தருமங்கள் செய்தலால் இல்லறமே சாலச் சிறநதது. மகளிர்க்கு மாண்புற அமைந்தது இல்லறமே. அவ்வறத்தில் தோன்றும் இடர்கள் பலவற்றையும் போக்கி எதிர்த்து வரும் தீமைக்குரிய சொற்களை நீக்கிச் சிறக்க வாழ்பவளே பெண்ணுவள்!

சினவேய் சுளியுங்களிற்றண்ணல் வாணன்தேன் மாறையில்நம்
மனவேய் அகல் அல்குல் வல்லி அன்னுள் மறையோர் முதலாம்
சனவேதனை கெடத் தானங்கள் ஈதலில் சாலவும் நன்
றெனவே நடக்கின்றதால் அன்னே! நாள்தோறும் இல்லறமே.

(தஞ். வாணன் கோவை - 873)

# வேதாகம சாரமே தேவாரம்

## திருநீறு வாழ்வது ஸ்ரீ ஞானசம்பந்தரால்

## சிவக்கவிமணியின் அறிவுரை

### மதுரையில் பாராட்டு விழா

சைவவான் பயிர் தழைக்க அவதாரம் செய்தருளிய - நாளும் இன்னிசையால் தமிழும், சைவமும் பரப்பிய திருஞான சம்பந்தப் பெருமானின் திருநட்சத்திரத்தை 3—6—58 செவ்வாய்க்கிழமை யன்று . பன்னிரு திருமுறை மன்றத்தார் வெகு சிறப்புடன் கொண்டாடினர். காலையில் மன்ற அன்பர்கள் நான்கு ஆடி வீதிகளிலும் திருமுறைப் பாராயணம் செய்து வழிபாடு நிகழ்த்தி னர். இரவு தெற்காடிவீதியில் அமைந்திருந்த காவணத்தில் விழா நடைபெற்றது. விழா தொடங்குவதற்குமுன் வழிபாடுகள் நிகழ்ந்தன. அவ்விழாவில் சென்னை மாகாணத் தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் தமிழ்வளர்ச்சிக்குச் செய்த தொண்டைப் பாராட்டிக் கேடயம் பெற்ற கோவை பெரிய புராண விரிவுரை ஆசிரியர் ஸ்ரீமத். சம்பந்தசரணுலய சுவாமிகளுக்குப் (சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார்) பாராட்டும் நடைபெற்றது.

விழாவிற்குத் தலைமை வகித்த மன்றத் தலைவர் 'சிவதர்ம பாஸ்கர' சிவஸ்ரீ ம. க. சுந்தரேசபட்டர் திருஞான சம்பந்தப் பெருமானின் தேவாரப் பெருமையினை மதுரையின் நீரும், நெருப்பும், நிலமும் அறியும் என்றும், சைவ ஸ்தாபனம் செய்த இம்மதுரையில் பன்னிரு திருமுறைகளைப் பரப்பும் சிறந்த நோக்கங்கொண்ட நம் மன்றத்தில், அச்சம்பந்தப்பெருமான் திருநாளிலேயே சம்பந்த சரணுலயருக்குப் பாராட்டு அமைவது சிறப்பென்றும், அவர்கள் செய்துள்ள தொண்டு அளவிடற்கரிய தென்றும், அவர்களுக்கு எல்லா நலன்களும் பெருகப் பிரார்த்திப் பதாகவும் கூறினர்.

பின்னர் மன்றப் பொருளாளர் ஸ்ரீ எஸ். எஸ். சுப்பையாப் பிள்ளை ஸ்ரீமத் சம்பந்தசரணுலய சுவாமிகளை வரவேற்றுப் பாராட்டுப்பா வாசித்தளித்தார். சிவஸ்ரீ பட்டர், அடிகளுக்குக் காவிநிறப் பட்டாடை போர்த்தினர். "இல்லக விளக்கது இருள் கெடுப்பது, சொல்லக விளக்கது சோதியுள்ளது, பல்லகவிளக்கது

பலருங் காண்பது, நல்லக விளக்கது நமச்சிவாயவே " என்ற அப்பர்பெருமானின் பாடல் அமைந்த மின்சார விளக்கை ஸ்ரீமத் சுவாமிகள் ஏற்றிவைத்தார்கள்.

பின்னர் '*தினமணி*' பொறுப்பாசிரியர் ஸ்ரீ வே. சந்தானம் பாராட்டிப் பேசுகையில் எழுத்தாளர்களுடைய அருமை பெருமைகள் எழுத்தாளர்களே அறியமுடியுமென்றும், தெய்விக நூலாகிய பெரியபுராணத்திற்கு அடிகளார் செய்த உரை மிகச் சிறந்ததென்றும், அதனைச் சைவசமயக்கலைக் களஞ்சியம் என்று கூறலாமென்றும், பன்னிரு திருமுறைகளைப் பயிலாதார் அதன் அருமைகளை அறியாதவர்களென்றும், தேவாரத்தின் சிறப்பையுணர்ந்து ஓதாதவன் தமிழன் அல்லனென்றும், பன்னிரு திருமுறை மன்றத்தார் செய்யும்பணிகளில் யாவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் கூறினர்.

பசுமலை மீனாட்சிக் குடியிருப்பு காலனி மேலாளர் ஸ்ரீ கீ. இராமலிங்கம் எம். ஏ., பேசுகையில் அடிகளார் திருமுறைகளை ஓதி ஓதி உள்ளம் உருகிக் கனிந்த நிலையில் வாழ்பவர்கள் என்றும், அவர் செய்தருளிய பெரியபுராணப் பேருரை அருளாற்றல் கொண்ட சிறந்த நூலென்றும் கூறினர்.

தருமை ஆதீனத் திருக்கூட்டத்து அடியவரும், சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்துக் கட்டளை விசாரணையுமாகிய ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் பேசுகையில் சம்பந்தப்பெருமான் அவதாரம் செய்த தலத்தில் பணியாற்றும் அடியேன் அவர் சைவ ஸ்தாபனம் செய்த மதுரையில் அவர் திருவடிகளையே ஆலயமாகக்கொண்ட ஸ்ரீமத் சுவாமிகள் அவர்களுக்கு நடக்கும் பாராட்டு விழாவில் கலந்துகொள்வது மிகப் பொருத்தம் என்றும், அவர்கள் பல்லாண்டு நலமுடன் வாழ்ந்து நாட்டிற்கு நல்லறங்கள் பல இயற்றப் பிரார்த்திப்போமாக என்றும் கூறினர்.

அடுத்து ஸ்ரீமத் சம்பந்த் சரணாலய சுவாமிகள் தனக்கு அளிக்கப்பட்ட பாராட்டைக் குறித்துப் பேசுகையில் அவையெல்லாம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரருக்கே சமர்ப்பணம் என்று கூறி " புதிய செந்தமிழ்ப் பழமறைமொழிந்த பூசுரனர் " என்ற தலைப்பில் திருஞான சம்பந்தப் பெருமானைப்பற்றிப் பேசுகையில், பழமையான வேதங்களின் பொருளைப் புதுமையான முறையில் செந்தமிழில் விளக்கிச்சைவம் பரப்ப வந்தவரே சம்பந்தப் பெருமான் என்றும், அவர் மதுரையில் சைவ ஸ்தாபனம் செய்தமையால்தான் இன்று திருநீறு விளங்குகிறதென்றும், சமண சமயத்தை அழிப்பது சைவத்தின் நோக்கமல்லவென்றும், சமணர்கள் வரம்பு மீறியதால், அவர்களை வாதில் வென்று சமயத்தை நிலை நாட்டியது சம்பந்தப் பெருமானின் அருட்செயல் என்றும், வேத சிவாகமங்களைப் போற்றாதார் சைவர்கள் அல்லரென்றும், வேத சிவாகமங்களின் மேலெழுந்ததே சைவம் என்றும், வேதசாரமே தேவாரம் முதலிய திருமுறைகளென்றும், சைவ விளக்கம் செய்த பெருமானின் திருநாளில் 'இல்லக விளக்கது' என்ற அப்பர் பெருமானின் பாடலைக் காட்டும் விளக்கைத் திறந்து வைப்பது பொருத்தமாகும் என்றும், நல்லக விளக்காக வேண்டுமானால் நமச்சிவாய மந்திரத்தைத் தியானிக்க வேண்டும் என்றும், இவ்விழாவிற்கு ஏற்பாடு செய்த பன்னிரு திருமுறை மன்றத்தார் பணிகள் சிறப்பனவாக என்றும் கூறினர்.

பின்னர் தலைவர் தம் முடிவுரையில், இவ்விழாவில் தருமை ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகள் கலந்து கொள்வதும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் நூல் நிலயத்தைக் கொண்ட மன்றம், அவர்கள் ஆதரவுகொண்ட பெரிய புராண விரிவுரை ஆசிரியருக்குப் பாராட்டு நடத்துவதும் பொருத்தமுடையன என்றும் "இல்லக விளக்கை" அமைத்துக் கொடுத்து உதவிய அவனியாபுரம் ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய பிள்ளையின் தொண்டு மிகச் சிறந்ததென்றும், மன்றப் பொருளாளர் ஸ்ரீ எஸ். எஸ். சுப்பையாப் பிள்ளையின் ஆர்வத்தால் இவ்விழா நடைபெற்றதாகவும் கூறினர்.

—தினமணி, (மதுரை) 5—6—58.

---

## பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்லப்ப முதலியார் பாடியது

சேற்றுக் கலையும் வராகக் குலங்கள் சிறியதென்றற்
காற்றுக் கலையும் புழுக்கமுள் ளாருடல் கைப்பின்மகப்
பேற்றுக் கலையும் பெருதவர் நெஞ்சம் பெரும்புவியிற்
சோற்றுக் கலையு மழுக்கா றுடையவன் சுற்றமுமே. 20

## பன்னிரு திருமுறை மன்றத்தில்

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் விழா

ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்து மதுரையில் பொற்றாமரைத் தீர்த்தத்தில் கண்ணுக்கினிய பொருளாக ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானைக் கரத்தில் அடைந்து திருவாரூரில் ஞானப்பிரகாசர் பால் உபதேசம் பெற்றுத் தருமையில் திருக்கைலாய பரம்பரை திருமடம் கண்ட ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜையை முன்னிட்டு, தருமை ஆதீனம் 25வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் கட்டளைப்படி மதுரையில் சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டர், அந்தணர்கள், ஏழைகள் முதலியோருக்கு அன்னம்பாலிப்பு நடைபெறச் செய்தார். மாகேசுவர பூஜையை ஸ்ரீ எம். ஆர். யாழ்கீதசுந்தரம் பிள்ளை நடத்தினார்.

அக்குருபூஜை விழாவை மதுரைப் பன்னிரு திருமுறை மன்றத்தார் 7—6—58 சனிக்கிழமையன்று சிறப்புறக் கொண்டாடினர். விழாவிற்கு மன்றத் தலைவர் "சிவதர்ம பாஸ்கர" சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டர் தலைமைவகித்துப் பேசுகையில் "திருமுறைகள் ஓதாய்" என்று சிவபோக சாரத்தில் கூறி அருளிய ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானின் திருநாளைப் பன்னிரு திருமுறை மன்றத்தார் கொண்டாடுவது மிகப் பொருத்தம் என்றார். திருமுறைப் பாராயணமும் வழிபாடும் நிகழ்ந்தன. ஸ்ரீ நடேசய்யரும் சிவஸ்ரீ முத்துசுப்பாப்பட்டரும் ஆச்சார்யர்களின் பெருமையை விளக்கினர். மன்றத் துணைத் தலைவர் ஸ்ரீ எஸ். தருமலிங்க முதலியார், சொக்கநாத வெண்பாவைப் பற்றிப் பேசுகையில், மிக எளிய - ஆனால் உள்ளத்தை ஈர்க்கும் சக்திவாய்ந்த நூல் அதுவென்றும், அதில், மிகச் சிறந்த கருத்துக்கள் காணப்படுகின்றனவென்றும், அதனை ஓதி அதன் வழி நிற்றல் நலம் தரும் என்றும், தருமை ஆதீன மகாசந்நிதானம் திருமுறைகளைப் பரப்பப் பல பணிகள் புரிந்து வருகிறார்களென்றும் கூறினர்.

பின்னர் மயிலம் தமிழ்க் கல்லூரி மாணவர் ஸ்ரீ ந. சீ. சுந்தரராமன் "சிவபோகசாரம்" என்ற தலைப்பில் பேசுகையில், சைவ சித்தாந்த சாத்திரங்களின் உள்ளிடைப் பொருட்களை மிகத் தெளிவாகவும் சுருக்கியும் கூறுவதால் இந்நூல் சித்தாந்த சாத்திரங்களின் சாரமாகுமென்றும் 'குருவே சிவம்' என்று திருமூலர் சொன்ன கருத்தைச் சிறந்த முறையில் குருஞான சம்பந்தப் பெருமான் விளக்கிச்சென்றுள்ளார் என்றும் கூறினர்.

திருப்புகழ் ஸ்ரீ தியாகராஜ அய்யர் 'சிவபோகசார'த்தையும் திருப்புகழையும் ஒப்பிட்டுப் பல கருத்துக்களை நயம்படக் கூறினர்.

தலைவர் தம் முடிவுரையில் தருமை ஆதீனத்தின்பணிகளைப் பாராட்டினர். மன்றச் செயலாளர் ஸ்ரீ என். எஸ். சீனிவாசம் பிள்ளை நன்றிகூற வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது.

—தினமணி, (மதுரை) 10—6—58.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

### Velur Sri Vaithinathaswami Devasthanam Vaithiswarankoil

இன்றையதினம் மனமார தரிசிக்கும் பாக்யம் ஆண்டவன் இன்று அருளினர். கோயில் மகிமையும் ஆண்டவன் அருள்புரியும் வகையும் தேவாரங்களில் பாடக் கேட்டிருக்கிறோம். இங்கே வந்து தரிசித்தால் தேவாரங்களும் ஆண்டவன் அருளும் உருக்கொண்டு காட்சியருள்வது விளங்கும். இவ்வகை ஸான்னியத்தின்மகிமையைக் காப்பாற்றிவரும் பக்தர்கள் அனுபவிக்கும்படி விடாமுயற்சி செய்து கைகூட்டும் கட்டளைத் தம்பிரான் அவர்கள் மேல் விசாரணையின் புகழ் சொல்லாமலே விளங்கும். ஆண்டவன் கருணை வாழ்க! தம்பிரான் லோகத்துக்குச் செய்யும் பேருதவி வாழ்க! வாழ்த்துவது அன்றி வேறு கைம்மாறு இல்லைபோலும்.

(ஒப்பம்) டி. எம். கிருஷ்ணசாமி அய்யர்.

31—5—58


# செய்திகள்

## சென்னை மாநில அறநிலைய அமைச்சர்க்குப் பட்டமளிப்பு

அன்று வெள்ளிக்கிழமை. 27—6—58 அன்றையதேதி மாலை மணி ஐந்தரை. மாயூரம் மாயூரநாதசுவாமி ஆலயத்தின் முன்பு ஒரே கூட்டம். குமரக்கட்டளை தேவஸ்தானம் நம் தருமையாதீனத் திருக்கோயிலல்லவா ? இப்போது அருளாட்சி புரிந்துவரும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தம் அருளாட்சிக்குட்பட்ட ஆலயங்களிலெல்லாம் அவ்வப்போது புரிந்துவரும் அறச்செயல்களில் ஒன்றாக ஓர் அறத்தை அன்று நிறைவேற்ற இருந்தார்கள்; ஆம். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்குத் தங்கக் கவசம் சார்த்த ஏற்பாடு. அதுவும் சென்னைமாநில அறநிலைய அமைச்சரும், சீரிய அரசியல் வாதியும், சைவசீலருமாகிய கனம். திரு. எம். பக்தவத்சலம் பி. ஏ., பி. எல்., அவர்களை வரவழைத்து, அவர்கள் முன்னிலையில் கவசத்தைச் சார்த்தத் திருவுளம் கொண்டிருந்தார்கள். அன்பர்கள் அகமும் முகமும் மலரக் குறிப்பிட்ட நேரத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் கோயிலுக்கு எழுந்தருளிச் சந்நிதிதோறும் வழிபட்டார்கள். அறநிலைய அமைச்சர் அவர்கள் வந்ததும் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்குக் கவசம் சார்த்தப்பட்டது. ஒரே கூட்டம். என்றும் இளையானாகிய குமரப்பெருமான் தங்கக் கவசத்தோடு இணையற்ற திருக்காட்சி வழங்கினான். அமைச்சர் அவர்களும் அகமுருக வழிபட்டார்கள்.

அன்று மாலையே அடுத்த நிகழ்ச்சி வள்ளலார்கோயிலில். ஸ்ரீ மேதா தட்சிணாமூர்த்திக்குச் சென்ற 13—10—57ல் துவங்கப்பட்ட கோடி அர்ச்சனை 26—6—58ல் முடிவு பெறுகின்றமையின், அதனை ஒட்டி, ஓர் தோத்திர சாத்திர மாநாடும் 24—6—58 முதல் 27—6—58 வரை ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. இம் மாநாட்டின் சிறப்பு நிகழ்ச்சிகளாக, குருவருளால் இரண்டு அமைந்திருந்தன. பல்லாண்டுகளாக அரசியல் தொண்டு செய்து வருபவரும், சைவசீலரும், சேக்கிழார் மரபில் வந்த செம்மலுமான அறநிலைய அமைச்சர், கனம். திரு. எம். பக்தவத்சலம் அவர்களுக்கு அன்று " நல்லறங்காவலர் " என்ற பட்டத்தை

தருமபுர ஆதீனம் மாயூரம் - குமாரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில்
ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்குத் தங்கக்கவசம் சாத்தும் விழா



தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடன் சென்னை மாநில அறநிலைய அமைச்சர், கனம். திரு. எம். பக்தவத்சலம் B.A., B.L., அவர்கள்

தருமபுர ஆதீனம், வள்ளலார்கோயில்
ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்குக் கோடியர்ச்சனை நிறைவிழாவில்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திரு. T. S. தியாகராஜ அய்யர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்து "சிவார்ச்சனைச் செல்வர்" என்ற பட்டம் வழங்கியருளல்.



ஸ்ரீகுருமூர்த்தியின் அருள் திருமுன் வழங்கியருளும் சிறப்பு நிகழ்ச்சி. இதற்கு முன்பே மாநாட்டுத் தொடக்கநாளில், கோடி அர்ச்சனைக் குழுவில் பொறுப்பு வகித்து வெற்றிகரமாக நடத்தி முடித்தவரும், மாயூரம் செய்தியாளரும், சிறந்த பக்தருமாகிய திருவாளர். டி. எஸ். தியாகராசஐயர் அவர்களுக்குச் "சிவார்ச்சனைச் செல்வர்" என்ற பட்டம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தால் வழங்கியருளப்பட்டிருந்தது.

சரியாக எட்டுமணிக்கெல்லாம் கனம். அமைச்சர் அவர்கள் வள்ளலார்கோயிலுக்கு வந்துவிட்டார்கள். ஸ்ரீ வள்ளலார்க்குச் சந்தனக் காப்பு அலங்காரம். ஆணும் பெண்ணுமாக நல்ல கூட்டம். வைதிகமும் லௌகிகமும் இணைந்த தோற்றமாக அக்கூட்டம் காட்சியளித்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் குருமூர்த்தி திருமுன் தியான நிலையில் இருந்து வழிபட்டார்கள். ஆதீன ஓதுவாமூர்த்திகள் தட்சிணாமூர்த்தி திருவருட்பாவினை உருகி உருகிப் பாடிக்கொண்டிருந்தார்கள். வந்திருந்த அன்பர் அனைவர்க்கும் குருப்ரசாதம் வழங்கப்பெற்றது.

கனம் அமைச்சரவர்கள் தம் குழுவினரோடு வழிபட்டனர். உடன் திரு. சர்க்கரை சேர்வை, திரு. ஆராவமுத அய்யங்கார், திரு. R. K. S. பிள்ளை, திரு. டாக்டர் சீனிவாசன், திரு. G. சுந்தரேசம் பிள்ளை, திரு. தியாகராஜ அய்யர் உள்ளிட்ட பெருமக்கள் வந்திருந்தனர். வழிபாட்டுக்குப்பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 'நல்லறங்காவலர்' என்ற பட்டம் பொறிக்கப்பெற்ற பொற்பதக்கத்தைக் கனம் அமைச்சரவர்களுக்கு வழங்கியருளினார்கள். பிறகு கோடி அர்ச்சனை நிறைவு நினைவாக உலக நல்வாழ்வுக்காக ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் நிறுவியிருந்த கல்வெட்டொன்றைக் கனம் அமைச்சரவர்கள் திறந்துவைத்தார்கள்.

மாநாட்டு மன்றம் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. ஓதுவாமூர்த்திகள், மெய்யன்பர் கூட்டம், பொதுமக்கள் எல்லாரும் எதிர்நோக்கியிருந்தனர். தொடக்கத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அருளாசியாகத் திருவாய் மலர்ந்தருளினார்கள். அதன் ஒருபகுதி பின்வருமாறு:-

**"அன்பர்களே! இன்று ஒரு வாய்ப்பான நாள். கல்லால் நிழற்கீழ்ச் சனகாதியர்க்கு அறம் உரைத்த பெருமான் அருள்**

வெள்ளத்தில் திளைத்து நிற்கிறோம் நாம். உலகின் அறங்காவல ராய்த் திகழும் அப்பெருமானின் திருவடித்துணையால், குருஞான சம்பந்தம் கூட்ட நம் அமைச்சரவர்கள் நல்லறங் காவலர் ஆகிறார். கனம். திரு. அமைச்சரவர்கள் அறத்தால் விரும்பப் பட்டவர்கள். அறமும் தொண்டும் இவர்களைத் தேடிவந்தன. இதுதான் இவர்கள் சிறப்பு. உலகில் பலரும் அறத்தையும் தொண்டையும் தாம் தேடி ஓடுகிறார்கள். அவ்விரண்டும் தாம் தேடாமலேயே தம்மைத் தேடிவரும் பெருமை உடையவர்கள். 'சாரும் தவத்துச் சங்கிலி' என்றார்கள் சேக்கிழார் சுவாமிகள். தவத்தைச் சங்கிலியார் சாரவில்லையாம். தவம் சங்கிலியாரை விரும்பிச் சார்ந்ததாம். என்னே ஏற்றம்! அன்பர்களே! இவ் வண்ணம் சிறந்த நம் அமைச்சர் அவர்கள் தெய்வச் சேக்கிழார் வழிவந்த குடிப்பிறப்புடையவர்கள். இவர்களுடைய அற நெஞ்சுக்கு ஏற்ப இவர்கள் அறநிலையக் காவல் அமைச்சராக வந்து பணிபுரிந்து விளங்குதல் நம் தெய்வத்தமிழகத்துக்கே ஓர் ஏற்றமாகும். இவர்களுக்கு நல்லறங்காவலர் என்ற பட்டமே மிகப் பொருந்துவதாகும். சேக்கிழார் சுவாமிகள்,

"மாநிலங்காவலனாவான் மன்னுயிர் காக்குங் காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைவரால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் அஞ்சுந்தீர்த்து அறங்காப்பானல்லனோ."

என்றார்கள். அறங்காவலன் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று இலக்கணம் வகுத்துள்ளார்கள். தன்னாலும், தன் பரி வாரத்தாலும், பகைவராலும், திருடராலும் ஏனை விலங்கு களாலும் தீமை வராதவாறு காத்து வரவேண்டும் என்று விளக்கி யிருக்கிறார்கள். அறந்தான் வெற்றிக்கு அடிப்படை. மாண்ட - 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்பது புறநானூறு. அறவடிவாய் அரசன் விளங்கவேண்டும். அறம் பிழையாத அரசே நாட்டைக் காக்க ஏற்றது. நம் ஆலயங்களில் இவ்வறத் தின் தத்துவத்தை விளக்கிக்காட்டவே நந்தியெம்பெருமானை நம் முன்னோர் அமைத்துள்ளனர். நல்லறம் காவலனாக நம் இறைவனை வணங்குகின்றோம். அவனது நல்லருளால் இப் பட்டத்தை நம் அமைச்சரவர்களுக்கு நாம் வழங்குகிறோம்.'

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் பட்டமளித்துத் திருவாய் மலர்ந்தருளிய வாழ்த்துரை அச்சிட்டுத் தனியே அன்பர்களுக்கு



வழங்கப் பெற்றது. பிறகு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருவாய்மலர்ந்தருளிய வாழ்த்துரையை வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாசித்தார்கள். குமரக் கட்டளை சார்பில் ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமி களால் ஒரு வரவேற்புரையும், கோடி அர்ச்சனைக் குழுவினரின் சார்பில் திருவாளர் டி. எஸ். தியாகராசஐயர் அவர்களால் ஒரு வரவேற்புரையும் பின்பு வழங்கப்பெற்றது. பிறகு திருவாளர் இராமநாதஐயர் அவர்கள் ஸ்ரீ மேதா தட்சிணாமூர்த்திக்குத் தங்கக் கவசத் திட்டமொன்று அன்பர்களால் அமைக்கப்பட்டிருப்பதை யும், அதற்கென்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ரூ. 11001 வழங்கத் திருவுளங்கொண்டிருப்பதையும் வெளியிட்டு ஏனைய அன்பர்களின் நன்கொடைகளையும் கூறினார். பிறகு கனம் அமைச்சரவர்கள் பேசுகையில் பின்வருமாறு கூறினார்:-

அன்பர்களே! இன்று நடந்த மிகப் புண்ணியகரமான வைபவத்தில் கலந்துகொள்ளக்கூடியபாக்யம் எனக்குக் கிடைத் தது. இதன்பொருட்டுக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று மாலை குமரக்கட்டளையில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்குத் தங்கக் கவசம் சார்த்தப்பெற்ற வைபவம் நடைபெற்றது. அதிலும் கலந்துகொள்ளக்கூடியவாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கோடி அர்ச்சனைப் பூர்த்தி விழாவினையும் காண நேர்ந்தது. இப்போதே அடுத்த திட்டமாகத் தங்கக் கவசம் அமைத்தலை மேற்கொண்டிருப்பது மிக்க சிரிய பணியாகும். ஆழ்ந்த பக்தி யையும் இது நன்கு காட்டுகிறது. வாயினால் பேசுவதுமட்டு மின்றிச் செயலில் காட்டவும் தொடங்கி இதற்குள் மற்றொரு கைங்கரியத்தில் ஈடுபட்டமை மகிழ்ச்சிக்குரியது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் அருள் கூர்ந்து பத்தாயிரரூபாய் கொடுத் தருள இசைந்துள்ளார்கள். அதில் ஒரு பகுதியும் அளித்து விட்டார்கள். நீங்களும் பலபேர் அக்கறையோடு - உற்சாகத் தோடு - பக்தியோடு முன்வந்து பொருள் உதவி புரிந்துள்ளீர்கள். இந்த அரியவாய்ப்பை நான் ஓர் பாக்கியமென்றே மீண்டும் கருது கிறேன். இதனையெல்லாம் பார்க்கும்போது எனக்கொரு நம் பிக்கை, புதிய சக்தி உண்டாகிறது.

எனக்கு இன்று "நல்லறங்காவலர்" என்ற பெயரிட்டதாக அறிவிக்கப்பட்டது. எனக்கென்று ஒரு தனி பட்டமோ, பெயரோ

நான் ஏற்கத் தயங்கியபோதிலும், குருமூர்த்தியருளால் குருமகா சந்நிதானத்தில் வழங்கப்பட்ட இதனை ஏற்கத் தயங்கேன். ஆனால் இது எனக்குமட்டுமல்ல. இங்குள்ள எல்லோர்க்கும் உரியது. அறத்தைக் காக்கும் எல்லோர்க்கும் உரியது. நீங்களெல்லோரும் அறங்காவலர்கள்; நல்லறங்காவலர்கள். ஆண்டவனே அறத்தைக் காவல் புரிவோனாக விளங்குகின்றான். அறத்தைக் காக்கத் தனி மனிதனால் மட்டும் முடியாது; மக்கள் எல்லோரும் அறத்தைக் காக்கவேண்டும்.

ஒரு பேரறிஞர் கூறினார் :- 'உடலில் உயிர் தங்கியிருப்பதற்கு இரத்த ஓட்டம் எப்படி இன்றியமையாத தேவையோ, சமுதாய நல்வாழ்வுக்கு அறம் அதைப்போலவே தேவை' என்று. சமுதாயம் நல்வாழ்வு வாழவேண்டும். அறத்தை நன்கு காவல் புரியவேண்டும். என்னைவிட நீங்கள்தான் அப்பணியில் பெருகிநிற்கிறீர்கள். லட்சார்ச்சனை, கோடி அர்ச்சனை, ஸ்ரீ தட்சிணாமூர்த்திக்குத் தங்கக் கவசம் இப்படிப் பல்லாற்றானும் காத்துவருகிறீர்கள். நீங்களே நல்லறங்காவலர்களாக விளங்குகிறீர்கள். இவற்றைக் காணும்போது எனக்கோர் ஆற்றல், நம்பிக்கை, புதிய சக்தி தோன்றுகிறது.

நம்முடைய பெரியோர்கள் அறங்காக்க வழியும் சொல்லி வைத்துள்ளார்கள். நல்வாழ்வுக்காக - அறவழியைப் பின்பற்ற வேண்டுவதற்காக மகத்தான ஆலயங்களைக் கட்டிவைத்திருக்கிறார்கள். சொல்வார்கள் ஒரு பழமொழி. "கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையார்க்கு உடைப்பதுபோல" என்று. பிள்ளையார்க்கு உடைப்பது நல்லதுதான். ஆனால் கடைத் தேங்காய் ஆயிற்றே. அறத்திற்கு மாறாக - நீதிக்கு மாறாக நாம் வேறு எவ்விதத்திலும் நடத்தலாகாது. அதுவே நம் முன்னோர் வகுத்த பண்பு ; காட்டிய வழி. ஆலயங்களே அதற்குத் துணை. நாமும் நம்முடைய சந்ததிகளும் வாழ்வதற்கேற்ற ஸ்தாபனங்கள், போக்கிஷங்கள் ஆலயங்கள். ஆலயங்களைப் பாதுகாப்பதே அறம். அறத்தை நாம் அனைவரும் - இங்குள்ள நல்லறங்காவலர் அனைவரும் காப்போம். உயர்ந்த இன்பகரமான இந்த அரிய வாய்ப்பை எனக்கு வழங்கியமைக்காக ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கும், பக்தர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்."



நிறைவில், வித்வான் ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகளவர்கள் நன்றியுரை கூறப் பட்டமளிப்புவிழா முடிவுற்றது. விழா நிகழ்ச்சிக்குப்பின் கனம் அமைச்சரவர்கள் வைத்தீசுவரன் கோவிலுக்குத் தம் குழுவினருடன் புறப்பட்டுச் சென்றார்கள். அநாதாசிரமத்தில் புதிதாகத் துவக்கப்பெற்றிருந்த வார்தா செக்கையும், கதர் ஜமக்காளத் தறியையும் துவக்கிவைத்தார். பிரசங்க மண்டபமும் திருக்கோவிலில் திறந்துவைக்கப்பெற்றது. கனம் அமைச்சரவர்கள் சுவாமிதரிசனத்துக்குப்பின் சென்னைக்குப் பயணமானார்கள். ஸ்ரீ வைத்யநாதசுவாமிக்குப் பஞ்சமுகார்ச்சனை, ஸ்ரீ தையல்நாயகிக்கு நவசக்தி அர்ச்சனை, ஸ்ரீ செல்வமுத்துக்குமாரருக்கு ஷண்முகார்ச்சனை முதலியன ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தன.

## தருமைக்கு முதல் அமைச்சர் வருகை

சென்னை மாநில முதல் அமைச்சர். கனம். திரு. K. காமராஜ நாடார் அவர்கள் தருமபுர ஆதீனத்திற்கு 23—6—58 அன்று வந்து ஸ்ரீ துர்க்காம்பிகையை வழிபட்டு, திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் கல்வி நிலயங்களது வரவேற்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். ஆதீனப் பல்கலைக் கல்லூரியில் வரவேற்பிதழ் ஒன்றும் வாசித்தளிக்கப்பெற்றது. பின்னர் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானையும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களையும் தரிசித்தார்கள்.

## 'செஞ்சொற்கொண்டல்' சொ. சிங்காரவேலனார்

மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக சுவாமிகள் அவர்கள் தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியப்பணிநிலையில் விளங்கி வருகின்ற வித்துவான், திரு. சொ சிங்காரவேலனார் அவர்களுக்குச் 'செஞ்சொற்கொண்டல்' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தருளியிருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம். சிங்காரவேலனார் தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரியில் பயின்று முதல் வகுப்பில் மாகாண முதல்வராகத் தேர்வெய்தி, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து ஆயிரருபாய்ப் பரிசு பெற்றவர். செஞ்சொற்கொண்டல் வாழ்க.

## பல்கலைக் கல்லூரி மாணவர்களின் தேர்ச்சி

தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரியில் வித்துவான் வகுப்பில் பயின்று இவ்வாண்டு (1958 மார்ச்சு) சென்னைப் பல்கலைக் கழகத் தேர்விற்குச் சென்ற மாணவர்களின் தேர்ச்சி விளக்கம்:- இடைநிலை.(Prelimanariy) 26 க்கு-25(இரண்டாம் வகுப்பில் 9 மாணவர்கள்) நிறைநிலை (Final) 25 க்கு - 25 (முதல் வகுப்பில் இருவர். இரண்டாம் வகுப்பில் பதின்மூருவர்).

## தருமபுர ஆதீனக் கல்வி நிலயங்களின் கழகத் தொடக்க விழா

3—7—58 வியாழக்கிழமை மாலை 4 மணி அளவில் ஆதீனப் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகம், ஆதீன உயர் பள்ளி ஸ்ரீ வாகீசர் மாணவர் கழகம் இவைகளின் தொடக்க விழா தருமபுர ஆதீனம், சென்னை சமயப் பிரசார நிலையக் கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சிரிய தலைமையில் மிக்க சிறப்போடு நிகழ்ந்தது.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகத்தின் சார்பில் கல்லூரி பிரின்ஸிபால், முதுபெரும்புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், ஸ்ரீ வாகீசர் மாணவர் கழகத்தின் சார்பில் உயர்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. கை. முருகையாப் பிள்ளை பி. ஏ , எல். டி., அவர்களும் வரவேற்புரை கூறினார்கள். ஸ்ரீமத். சுவாமிகள் அவர்கள் தமது தொடக்கவுரையில் :- கழகங்களின் பெயர்கள், சைவத்தை நிலைநிறுத்திய இரு பெருங் குணக் குன்றுகளின் பெயர்களாக அமைந்துள்ளன. அவை கழகங்களின் வளர்ச்சியின் நல்வித்தாக அமைந்துவிட்டன. இவை பல ஆண்டுகளாக சீரும் சிறப்பும் பெற்று, நல்ல செய்திகளை, மாணவர்களுக்கு அறிஞர்கள் மூலம் போதித்துவந்துள்ளன' என்று கூறி, கழகங்களின் பெயராக அமைந்துள்ள இருபெருங் குரவர்களின் வரலாற்றையும் சுருங்கக் கூறி முடித்தார்கள். நன்றி நவின்றபின், கடவுள் வாழ்த்தோடு விழா இனிது நிறைவுற்றது.

## மதிப்புரை

### சங்கற்பநிராகரணம் – சார்புக் கட்டுரை

### ( திருவாவடுதுறை ஆதீன வெளியீடு )

திருவாவடுதுறை ஆதீனம் 21 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் கட்டளையிட்டருளியபடி ஆதீன வித்துவான், கடலூர். திரு. தே. ஆ. ஸ்ரீநிவாசன் வெளியிட்டது. ஆனித் திருமஞ்சன விழா மலர். பக்கங்கள் 275,

உமாபதி சிவாசாரியார் ஓதியருளிய எட்டு நூல்களில் இது இறுதியாக அமைந்துள்ள நூல். இதனை ஆசிரியர் கி. பி. 1313ல் இயற்றியருளினர். இதன்கண் புறச்சமய அகச்சமயக் கோட்பாடுகள் மறுக்கப்பட்டுச் சைவ வாதியார் சங்கற்பம் காட்டி மறுத்தும் சித்தாந்தம் செய்கின்றனர் இவ்வாசிரியர். இந்நூல் பற்றிய ஓர் சிற்றாராய்ச்சி உரையாசிரியரால் முதற்கண் சேர்க்கப்பெற்றுள்ளது. ஆதீன வித்துவான் கடலூர். திருவாளர். தியாகராச தேசிகரவர்கள் எழுதிய அணிந்துரை யொன்றும் நூலை அணி செய்கின்றது. இனிமையும் தெளிவும் வாய்ந்த பொழிப்புரையும் விளக்கமும் இணைக்கப்பட்டுள்ளன. திருவாவடுதுறை யாதீனத்தின் சாத்திர தோத்திர வெளியீடுகள் நாடறிந்தவை. இப்போது அருளாட்சி புரிந்துவரும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது வள்ளன்மையால் தமிழுலகு திங்கள் தோறும் சிரிய தமிழ்ச் சாத்திர நூல்களைப் பெற்றுக்கொண்டே வருகின்றது. தமிழுலகும் சைவ உலகும் செய்த தவப்பயனாய் இவ்வெளியீடுகள் அனைவரும் பெற்றுப் பயனெய்த வேண்டி இலவசமாகவே வெளியிடப்பெறுகின்றன. தெளிவான இக்கட்டுரை ஐயம் கண்டவிடத்து நீக்கி அழகுறச்செல்கிறது. கண்ணுக்கினிய கட்டுக்கோப்பும். எழுத்துக்களும். அன்பருலகு பெற்றுப் பயின்று சைவசித்தாந்தப் பெருநெறியை உணர்ந்து உய்யவேண்டுகிறோம்,

### விநாயகர் வழிபாட்டு நூல்

ஆசிரியர் :- தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி, வித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் - கச்சி ஏகம்பர் நூற்பதிப்புக் கழக வெளியீடு. விலை ரூ. 1—25, பக்கங்கள் 124.

இந் நூலாசிரியர் சைவசீலரும், பழுத்த தமிழ்ப் புலவரும் ஆகிய பெரியார் இதன்கண் தமக்கேயமைந்த அழகிய தனித் தமிழ் நடையில் திருமுறைத் தோத்திரசாத்திரக் கருத்துக்களை விளக்கி விநாயகர் பற்றிய விளக்கங்களை நவின்றுள்ளார். சித்தாந்த ஞானபானு - திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்களும். சென்னை மாநில அறநிலைய ஆணையாளர் திரு. A. உத்தண்டராமப் பிள்ளை அவர்களும் அளித்துள்ள அணிந்துரைகள் உள்ளன. திருமுறைகளிலிருந்து அரிதின்முயன்று மறைமொழிகள், செய்கை, கருத்து, ஆகியவற்றைத் தேர்ந்தெழுதியுள்ளார். வடமொழி மறைமொழிகளுக் கேற்ற தெளிந்த தமிழ் மொழிபெயர்ப்பும் உள்ளது. பன்னிருதிருமுறைகளிலிருநதும், சிறப்புக்களிலிருந்தும் வாழ்த்துக்கள் இனிது தொகுக்கப் பெற்றுள்ளன. 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவதற்காக' அவற்றிற்குரிய பொருள் விளக்கங்களும் நூலின் முடிவில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. தமிழிலேதான் வழிபடுவோம் என்று முற்படும் தமிழ்ப் பற்றுடையார்க்கும் பிறர்க்கும் தக்க துணையாகும் இந்நூல். அன்பருலகு பெற்றுப் பயனுறுக.

சோ. சிங்காரவேலனார்.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

### வேளூர் தேவஸ்தானம், வைத்தீசுவரன்கோயில்

தருமையாதீனத்தின் அருளாட்சியில் அமைந்த திருக்கோயில்களெல்லாம் சீரும் சிறப்பும் வாய்ந்து விளங்குகின்றன. அவற்றுள் புள்ளிருக்கு வேளூர் என்று தேவாரத்திற் புகழப்பெற்ற வைத்தீசுவரன்கோயில் தனிப்பெருமை சான்றது. தீராநோய் தீர்த்தருள வல்லான் இவ்வேளூரில் உள்ளான் என்று ஆன்றோர்கள் அறிந்து போற்றினார்கள். இத்தகைய அருமையான திருப்பதியை அடியேன் இன்று வழிபடும் பேறு பெற்றேன். பல்லாயிரக் கணக்கான அடியார்க்கு அகப்பிணியும் புறப்பிணியும் போக்கி அருளும் திருக்கோயிலைப் புரந்தருளும் தருமை ஆதீனம் பல்லாண்டு தழைத்து வாழ்க.

(ஒப்பம்) ரா. பி. சேதுப்பிள்ளை,

(ஒப்பம்) S. நடராஜ நாடார், 30-5-58.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிரம்மஸ்ரீ கே. முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(விளம்பிஞு ஆடிமீ 1உ முதல் 32உ முடிய)

(16—7—58 முதல் 16—8—58 முடிய)

தக்ஷிணாயன - பொதுப்பலன் :- கடகரவி தக்ஷிணாயன புண்ணியகாலம் உதயாதி நாழிகை 27-24க்கு சூர்யன் கடக ராசியில் பிரவேசம். தனுர் லக்னத்தில் சூர்யன் தக்ஷிணாயனப் பிரவேசம் ஏற்படுவதால் சத்திய விருத்தியும், தான்ய விருத்தியும் ஏற்பட்டு, உலகம் சுபிக்ஷம் அடையும். மத்தியில் ஈதி பாதைகளால் தொந்தரவுகள் ஏற்படும்.

**1.** மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி 1, 2 பாதங்கள் மிச்ர பலனைத் தரும். வியாதியும், கடன் தொல்லையும், ஏற்படும். 3, 4 பாதங்களுக்கு, விவசாயம் ஓங்கும். உத்தியோக லாபம் கிடைக்கும். பரணி 1, 2 பாதங்கள் சுப சந்தோஷத்தைத்தரும். இடம் மாறுதல் ஏற்படும். தொழில் ஓங்கும். பரணி 3, 4 பாதங்கள், அசுபத்தையும், விரோதத்தையும் உண்டுபண்ணும். நினைத்த காரியம் தடைப்படும். அபவாதம் உண்டாகும். கார்த்திகை முதல் பாதம், ருண, ரோக, சத்ருபாதைகளைக் கொடுக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

**2.** விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் தூரப்பிரயாணத்தையும், நூதன தொழில்களையும், சந்தோஷத்தையும் தரும் ரோகிணி 4 பாதங்களும் ஆரோக்கியக் குறைவையும் வீண் செலவுகளையும் தரும். மிருகசீரிஷம் 1 2 பாதங்கள் பந்துமித்திரர் விரோதத்தையும், நல்லோர், பெரியோர் வருத்தத்தையும் உண்டுபண்ணும். நஷ்டத்தையும் தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள், அசுபமாகும். வீண்கஷ்ட முண்டாகும். மனம் கலங்கும். திருவாதிரை நான்கு பாதங்களும் தொந்திரவைக் கொடுக்கும். கலகமும், கவலையும் உண்டு பண்ணும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் ஆரோக்கியத்தைத் தரும். கடன் நீங்கும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். வியவகாரம் ஜயிக்கும். தெய்வ பலம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் நாலாம் பாதம் வித்யாபிவிருத்தியாகும். உலகப் பிரசித்தியைத் தரும். நஷ்ட தனம் கிடைக்கும். பூசம் நான்கு பாதங்களும் லோகாபவாதங்களையும், வீண் செலவுகளையும் சத்துருக்களுடைய உபாதைகளையும் தந்து கிலேசம் உண்டு பண்ணும். ஆயில்யம் நான்கு பாதங்களும் அதிகப் பிரயாசைகளைத்தந்து லாபத்தைத் தரும். குடும்பம் ஓங்கும், காரியங்கள் தாமதமாய் நடைபெறும். நஷ்டமான பொருள் வரத்து ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி ஒன்பது பாதங்களும் சுபத்தைத்தரும். உத்தியோகத்தில் மாறுதலையும், லாபத்தையும் தரும். பெரியோர் மேலோர் அன்புகிட்டும். தொழில், வியவஸாயம், வியாபாரம் செய்பவர்கள் ஓங்குவார்கள். சந்தோஷமுண்டாகும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் உத்தியோகலாபத்தையும் நன் மதிப்பையும் தரும். கடன் நீங்கி சுகமுண்டாகும். ஹஸ்தம் நான்கு பாதங்களும் உலகப் பிரசித்தியான காரியங்களை நடத்திக் கொடுத்து, எங்கும் நிறைந்த கீர்த்தியை உண்டுபண்ணும். வியவகாரம் ஜயிக்கும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். நஷ்டமான பொருள்கள் வந்து சேரும். சித்திரை 1, 2 பாதங்கள் சுபமேயாகும். ஆனால் மனம் சாந்தியடையாமல்,



அஞ்சிய அகங்காரம் முதலிய துர்குணங்களை உண்டுபண்ணும். குடும்பம் ஓங்கும். கடன் நீங்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் மிசிரபலனைத் தரும். சதா அலைச்சல் உண்டுபண்ணும். ஒரு காரியமும் நடைபெறாது. சுவாதி நான்கு பாதங்களும் உலகப் பிரசித்தியை உண்டு பண்ணும். தெய்வீகமான சக்தி பிரகாசிக்கும். மேலோர் பெரியோர் அன்புகிட்டும். தொழில் ஓங்கும். வியவகாரம் ஜயிக்கும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் தூரப் பிரயாணத்தையும் தொழில் நஷ்டங்களையும் அவமானத்தையும், பயத்தையும் உண்டுபண்ணும். திங்கள், புதன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் நாலாம் பாதம் சுபமிராது. சதா கவலைகளையே உண்டுபண்ணும். அனுஷம் நான்கு பாதங்களும், தொழில் ஏற்றம், வியவசாயப் பெருக்கு, விஜயம், ஆரோக்கியம், பந்து மித்திராளுடைய சேர்க்கை முதலிய சுபங்களைத் தந்து, சந்தோஷம் உண்டுபண்ணும். கேட்டை நான்கு பாதங்களும் இடம் மாறி சுபம் உண்டுபண்ணும். குடும்பம் ஓங்கும். நூதன உத்தியோக லாபம் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் மிசிரமாய் நடக்கும். காரியங்கள் தவக்கமாகும். மனம் சரியில்லாமல் தடுமாறும். பூராடம் நான்கு பாதங்களும் சுபத்தைத்தரும். உத்தியோக லாபம் ஏற்படும். வியவசாயம் ஓங்கும். தெய்வ பலம் பிரகாசிக்கும். அடிக்கடி பந்துமித்திராளுடைய சேர்க்கையும், சாதுக்களுடைய சமாகமமும், கீர்த்திபத்திரமும் கிடைக்கச் செய்யும். உத்திராடம் முதல் பாதம் ஆரோக்கியத்தைத் தந்து குடும்ப சுகத்தைத்தரும். கடன் நீங்கி சுகவாழ்வு ஏற்படும். நூதன வஸ்திராபரணச் சேர்க்கைகளும், நூதன வாகன லாபமும் கிடைக்கச் செய்யும். வெள்ளி, சனி சுபமாகும்.

**10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$**

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் பதவியில் மாறுதலைத் தரும். மனம் துக்கமடையும். திருவோணம் நான்கு பாதங்களும், சுபசந்தோஷங்களையும், ஆரோக்கியத்தையும் உத்தியோக மதிப்பையும், குடும்ப சுகத்தையும் தரும். அவிட்டம் 1, 2 பாதங்கள் மேல் பதவியைத் தரும். சபாபூஜ்யத்துவம் ஏற்படும். குடும்பத் தொல்லை அதிகமாகும். எவ்வளவு சுகம் ஏற்பட்டாலும் சதா மனக்குறையாகவே இருக்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

**11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$**

அவிட்டம் 3, 4 பாதங்கள் நூதனத் தொழில் மூலம் இடம் மாறச் செய்யும். மேல் பதவி கிடைக்கும். சதயம் நான்கு பாதங்களும் சுபசந்தோஷங்களையும் எங்கும் நிறைந்த கீர்த்தியையும் தரும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் இல்லற சுகபோகங்களைத் தந்து ஆரோக்கியத்தையும் லாபத்தையும் தரும். புதன், சனி சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.**

பூரட்டாதி, நான்காம் பாதம் அசுப பலனைத்தரும். நஷ்ட கஷ்டங்கள் உண்டாகும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும் மேலோர் பெரியோர் நேசத்தைத் தந்து உயர் பதவிகளையும் தரும். ரேவதி நான்கு பாதங்களும் உத்தியோக லாபத்தையும் நன்மதிப்பையும் குடும்ப சுகத்தையும் தரும். ஆரோக்கியமுண்டாகும். தெய்வ பலம் ஏற்படும். சாந்தியாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு :- தக்ஷிணாயனப் பிரவேச காலபலத்தால், உலகம் சுபிக்ஷமடைய ஹேதுவாகும். மத்தியில், ஈதிபாதைகளால் சாகுபடிக்குக் குந்தகம் உண்டாகும. தர்மமும், பக்தியும் உள்ள இடங்கள் தனியாக ஒரு சோபை ஏற்பட்டு, சந்தோஷத்தை உண்டாக்கும் சுபம்.

# கடிதம்

R. Kandaswami Mooppanar B.A., B.L.,
Kumbakonam 26—6—1958

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திவ்ய பொற்பாத கமலங்களில் அடியேன் கந்தசாமி அநேக நமஸ்காரம் செய்து எழுதியது. அவ்விடம் ஆசீர்வாத பலத்தால் இவ்விடம் யாவரும் க்ஷேமம்.

நாளை நமது சென்னைமாநில அமைச்சர் ஸ்ரீமான் பக்தவத்சலம் அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் "நல்லறம் காவலர்" என்னும் பட்டம் வழங்குவதாக அவ்விடம் ஆணையின்படி அனுப்பப்பெற்ற அழைப்பிதழால் தெரியவருகிறது.

சென்னை மாநில மந்திரி குழாத்தில் ஸ்ரீமான் பக்தவத்சலம் அவர்கள் வயதிலும், அனுபவத்திலும் முதிர்ந்தவர். அறிவிலும், படிப்பிலும் பக்தியிலும் சாலச் சிறந்தவர். அவர் ஆலயம் அறநிலையங்கள் பாதுகாப்பு அமைச்சராக இருப்பது மிகவும் பொருத்தமே.

பொதுவாக ஆலயம் அறநிலையங்களை நல்லமுறையில் பாதுகாக்க அரசாங்கத்தாரின் ஆணையர்களும், நிர்வாக அதிகாரிகளும் தேவையாயினும் மாதவர் நோன்பும் மடவார் கற்பும் காவலன் காவலின்றி தன் காவலால் காக்கப்படுவது போன்று, சிலரின் காவலில் ஆலயங்களும் அறச்சாலைகளும் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டு வருவது என்பது தெரிந்த விஷயமே. முக்கியமாகத் தமிழ் மடங்களில், குறிப்பாக நமது தருமை மடத்தாரால் பரிபாலிக்கப்பட்டு வரும் தேவாலயங்கள், கலாசாலைகள், அறச்சாலைகள் யாவரும் வியக்கும் வண்ணம் வெகு திறமையுடன் விதிவழி நடத்தப்படுகின்றன என்பது உண்மை. எடுத்துக்காட்டாக வேளூர் தேவஸ்தானமும் திருக்கடவூர் தேவஸ்தானமும் கண்டார் களிக்கும் வண்ணம் உயர்ந்த முறையில் திருப்பணிகள் நடத்தப்பட்டும், உள்துறை, வெளித்துறைகள் விதிவழாது கண்காணிக்கப்பட்டும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் இரு கண்மணிகளாகத் திகழ்கின்றன. பல இடங்களில் நிர்வாகிகளால் நன்மைக்குப் பதில் இடையூறு ஏற்படுவதைப் பார்க்கிறோம். ஆகவே திறமையுடன் பாதுகாக்கப்பட்டுவரும் அறநிலையங்களில் 'நிர்வாக அதிகாரிகள்' புகுத்தாது இருப்பதே அறநிலையப் பாதுகாப்பு ஆகும். தன்னால் தன் பரிசனத்தால் இடையூறின்றிக் காப்பதன்றோ காவலரின் கடமையாகும். நமது தேவாலய நிர்வாகத்தை ஸ்ரீமான் பக்தவத்சலம் அவர்கள் நன்கு அறிந்தவர்கள். ஸ்ரீமான் பக்தவத்சலம் அவர்களுக்குப் பட்டம் வழங்கும் விழா சிறப்புடன் நடப்பதாக.

இப்படிக்கு அடியேன்

கந்தசாமி

GNANASAMBANDAM Regd. No. M. 44[illegible]

உ
சிவமயம்

# தருமபுர ஆதீன வெளியீடுகள்

தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. திருவாசகம் | ரூ. | 2—00 |
| தபால் செலவு | ரூ. | 1—00 |
| 2. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் | | |
| முதல் திருமுறை (ராப்பர்) | ரூ. | 3—50 |
| தபால் செலவு | ரூ. | 1—33 |
| இரண்டாந் திருமுறை (காலிகோ) | ரூ. | 5—00 |
| தபால் செலவு | ரூ. | 1—54 |
| மூன்றாந் திருமுறை (காலிகோ) | ரூ. | 5—75 |
| தபால் செலவு | ரூ. | 1—57 |
| 3. திருநாவுக்கரசு நாயனர் தேவாரம் | | |
| நாலாந் திருமுறை (காலிகோ) | ரூ. | 8—00 |
| தபால் செலவு | ரூ. | 1—57 |

கிடைக்குமிடங்கள் :—

1. காஷியர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.
2. டிரஷரர், ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம்,
   வைத்தீசுவரன்கோயில்,
3. காஷியர், ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம்,
   சீகாழி, தஞ்சாவூர் ஜில்லா.
4. காஷியர் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம்,
   திருபுவனம். (திருவிடைமருதூர்).
5. காஷியர், ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானம்,
   திருப்பனந்தாள், கும்பகோணம் வழி.
6. காஷியர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானம்,
   திருக்கடவூர், தஞ்சாவூர் ஜில்லா.
7. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலயம்,
   41, உஸ்மான்ரோடு, தியாகராயநகர், சென்னை-17.
8. தருமபுரம் மடம் காரியம்,
   வீரராகவபுரம், திருநெல்வேலி சந்திப்பு, திருநெல்வேலி.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the



குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

17 ] விளம்பி ஆண்டு ஆடித்திங்கள் 10—8—58 [ இதழ் 9

மாயூரம் வள்ளலார்கோயிலில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்கு



தங்கக்கவசம் செய்யத் தங்கக்கட்டியை,
தருமையாதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்,
திரு. A. R. C. சுந்தரம் செட்டியார் அவர்களிடம் அளித்தருளல்.

ஆசிரியர்:- வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## உட்பொருள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | மாணவர்கள் ... | 583 |
| 2 | ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளுரை | 587 |
| 3 | நல்லறங்காவல் ... | 600 |
| 4 | 10 ஆவது திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு ... | 604 |
| 5 | சிற்றிலக்கியம் ... | 615 |
| 6 | வாயுறை வாழ்த்து ... | 622 |
| 7 | புதுமைக்கு... ... | 626 |
| 8 | தமிழிணைப் போற்றுவாய் ... | 630 |
| 9 | இலக்கியமும் சிவனும் ... | 631 |
| 10 | சிவாகமும் சிவாலயமும் ... | 634 |
| 11 | செய்திகள் ... | 638 |
| 12 | எதிர்காலம் ... | 647 |


---

### விநாயக சதுர்த்தி, நவராத்திரி, ஸ்கந்தசஷ்டி.


சிவாகம வித்துவான், திரு. எஸ். சுவாமிநாத சிவாசாரியர்,
தலைமை ஆசிரியர், வேத சிவாகம பாடசாலை, தருமபுரம், மாயூரம்.


பாத்ரபத சுக்ல சதுர்த்தியில் விநாயகரைப் பூஜிக்கவேண்டும். பாத்திரபதம் என்பது சாந்திரமானப் புரட்டாசி மாதம். ஒரு மாதத்தில் இரண்டு திதி வந்தால், இரண்டாவதில்தான் செய்யவேண்டும். ஆலயங்களுக்குச் சாந்திரமானம் கூடாதுஎன்பது இல்லை. விநாயக சதுர்த்தி, நவராத்திரி, ஸ்கந்தசஷ்டி இவைகள் சாந்திரமானத்தில்தான் செய்யவேண்டும். மற்றும் நவராத்திரி ஸ்கந்தசஷ்டி இவைகளுக்கு ஆரம்பம் முக்கியமாகும். ஆச்விஜ சுக்ல ப்ரதமையில் நவராத்திரி உத்ஸவம் ஆரம்பிக்க வேண்டும். துலா மாதத்தில் சுக்லப்ரதமையில் ஸ்கந்தசஷ்டி உத்ஸவம் ஆரம்பிக்க வேண்டும். இவைகளுக்கு ஆரம்பம் முக்கியம். ஆதலால் இவ்வாண்டில் விநாயகசதுர்த்தி ஆவணி மாதம் 31உ (16-9-58) செவ்வாய்க்கிழமையும், நவராத்திரி ஆரம்பம் புரட்டாசி மாதம் 27உ (13—10—58) திங்கட்கிழமையிலும், ஸ்கந்தசஷ்டி உத்ஸவ ஆரம்பமானது ஐப்பசி மாதம் 26உ (11—11—58) செவ்வாய்க்கிழமையிலும் செய்யவேண்டும். ஆதலால் ஆஸ்திகர்களனைவரும் விதிவிகிதமான காலங்களில் ஷ விரதங்களைச் செய்வது நலம்.


14 OCT 1958
MADRAS


உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்


மலர் 17 } விளம்பி௵ ஆடி௴ 10—8—58 { இதழ் 9


உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிங் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலர்ல வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## மாணவர்கள்

நம் நாட்டுச் சான்றோர் பலர் தம் நூல்களில், அவையின் இலக்கணத்தை எழுதியிருக்கின்றனர். அவையின் அமைப்பு அவ்வாறே இருந்தால், நாட்டிற்கு எல்லா வகையிலும் நலமே விளையும். அத்தகைய அவையே 'பேரவை' ஆகும். அப் பேரவையின் உறுப்பினரே மேலோர் எனப்பெறுவர். மேன்மையுற்ற பண்புகளும் ஒழுக்கங்களும் வழுவாதவர்களே மேலோர்கள். மேன்மைக்கு அடிப்படையானவை எவை? 1. குடிப்பிறப்பு. 2. கல்வி. 3. நல்லொழுக்கம். 4. வாய்மை. 5. தூய்மை. 6. நடுநிலைமை 7. அழுக்காறில்லாமை. 8. அவா இன்மை என்னும் எட்டும் அவற்றை ஒட்டும் பிறவும் ஆம். இதனை, நம் நாட்டில் முன் இருந்து

இப்போது சில பாடல்களே கிடைப்பன எனப் பெயரளவில் அறியப்பட்ட ‘ஆசிரியமாலை’ என்னும் நூலின் ஒரு பாடல் இனிது கூறுகின்றது. குடிப்பிறப்பே உடை. கல்வியே சூடும் மாலை. நல்லொழுக்கமே அணியும் பூண். வாய்மையே வாய்க்கொள்ளும் உணவு. தூய்மையே இன்பப் பாயல் ஆகும். நடுநிலையே இனிது வாழும் பெருமாடம். அழுக்காறும் அவா இல்லாமையும், அப் பெரிய மாடத்தில் வாழும் நிலைக்கு இன்றியமையாத அளவில்லாத செல்வங்கள். இவற்றைக் கொண்டிருப்பவரே மேலோர். அம் மேலோர் கூட்டமே பேரவையாகும். ஆயின், பிற்காலப் பேரவைக்குரிய மேலோர் இக்காலத்து மாணவர்களே. கல்வி நிலயங்களில் முற்குறித்த எட்டுப் பொருள்களுள் எவற்றை மாணவர்கள் அடையச் செய்யலாம்? குடிப்பிறப்பு மட்டும் அடைவித்தற்கு இயலாது. மற்றை ஏழினையும் மாணவர்களுக்குக் கல்வி நிலயங்கள் தக்க ஆசிரியர்களைக் கொண்டிருந்தால் அடைவிக்கலாம். ஆசிரியர்களைப்போல, மாணவர்களும் தக்கவர்களாக இருத்தல் வேண்டும்.

மாணவர்களுக்குத் தமிழிலக்கண நூல்களும் சாஸ்திரங்களும், இலக்கணம் வகுத்துத் தக்க உவமைகளைக் காட்டியிருக்கின்றன, இவர் இவர் மாணவர் ஆகலாம். இவர் இவர் மாணவர் ஆதல் கூடாது என வரையறை செய்துள்ளன. இவ்வாறே ஆசிரியர்க்கும் உண்டு

மாணவராவாரிடம் பலபல தகுதித்தாள்களை எதிர் பார்க்கின்றன கல்விநிலயங்கள். அச்செயல் புதிதன்று. ‘மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வன் அடுநோய்ப் பிணியாளன் ஆருச் சினத்தன் தடுமாறு நெஞ்சத்தவன் உள்ளிட்டு எண்மர் நெடுநூலைக் கற்கலாதார்’ என்னும் பழைய கொள்கைக்கும் புதிய செயலுக்கும் சிறிதும் வேறுபாடே இல்லை. அதனால், மாணுக்கர் ஆகாதவர் என்று முன்னோர் குறித்த இனத்தை இப் பின்னோரும் வரவேற்கவில்லை என்று தெரிகின்றது.



கடைமாணுக்கர் செயலுக்குப் பொத்தற் குடத்தில் நீர் கொள்ளல், பன்னாடையில் வடிக்கட்டுதல், எருமைகள் நீரைக் கலக்கி யுட்கொள்ளுதல், ஆடு தழை மேய்தல் முதலியவற்றை உவமிப்பர். அத்தகையோர் பேரவைக்குரிய மேலோராகிவிட்டால், நாடு நலம் பெறுமோ? பெருதன்றே? அதனால், எதிர்காலத்தின் பேரவைக்கு மேலோர் ஆதற்கு உரிய இக்காலத்து மாணவர்களை மேலோராக்கும் வகையில் கல்வி நிலயங்களெல்லாம், முயன்று உழைத்தல் அவசியம் ஆகும். சென்னை மாநிலத்தைக் குறித்து, அம் முயற்சியைக் கொள்ளும் கல்வி நிலயங்கள், பிறகலைகளுடன் தாய் மொழியான செந்தமிழையும் அதற்குப் பெருந்துணையாயுள்ள வடமொழியையும் கற்பித்துவரின், மாணவர்கள் மேலோர் ஆவதில் அருமை இல்லை.

‘குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு நாளும்
வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையின்
காதலின் பத்துத் தூங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை அவா அ வின்மையென
இருபெரு நிதியமு மொருதா மீட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை
யுடன்மரீஇ யிருக்கை யொருநாட் பெறுமெனின்
பெறுகதில் லம்ம யாமே வரன்முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் போதிந்து
நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பஇம்
மலர்தலை யுலகத்துக் கோட்கும் பிறப்பே’

(ஆசிரியமாலை.)

## சுதந்திரதின விழா

**15—8—'58**

சுதந்திரதினம் நம் இந்தியாவின் விடுதலை நாளை நினைவூட்டி, மகிழ்விக்கும் நல்ல நாள். ஆண்டுதோறும் வழக்கம் போலக் கொண்டாடி இன்புறுதல் நம் எல்லோருடைய கடனாகும். அன்று முழுதும், நம்மை அடிமைத்தளையின் நீக்கிய ஆண்டவன் திருவருளையும், காந்தியடிகளையும் அவர்க்கு முன்னர் விடுதலைக்கு உழைத்த பெரியோர்களையும் நினைந்து வாழ்த்தக் கடவோம். வாழ்க பாரதகண்டம். வாழ்க உலகெலாம்.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

Of all days that I had come to this ancient temple to worship the presiding deities herein today is indeed a Red Letter Day in my life! I decided this morning, to pay a visit to this temple this evening, in the course of my official stay at Sirkali. Accordingly I came and had the rare and heartful darsan of Devi Balambikai in "Santhanakappu" (a sight for the Gods to see), Lord Vaithiswarar and Lord Selva Muthukumaran, the day being the First Adi Friday! I feel indeed highly blessed! I am thankful to the temple authorities and Archakas for their kindness and courtesy.

K. Rajagopalan,
District Magistrate of Tanjore,
18—7—58.

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

## அருளுரை - 2 (10—7—58)

## "குருவருள்"

உயிர்கள் பாசத்தொடர்புள்ளவை. பாசவீடு பெற வேண்டுமாயின் குருவருள் வேண்டும். குருவின் உபதேசமே பாசக் கட்டுண்ட உயிர் நோய்க்கு நன்மருந்து. ஐம்புல வேடரின் அயர்ந்து வளரும் உயிரைக் குருவாகி வந்து ஆட்கொள்கின்றான் இறைவன்.

மெய்கண்ட தேவநாயனார்,

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அந்நியம் இன்மையின் அரன் கழல்செலுமே"

என்ற இப்பேருண்மையை எடுத்து விளக்கியருளியுள்ளார். குருவருள் திறத்தைச் சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவாசாரியார் அருளியுள்ள திறம் சுருங்கியது; பொருளால் விரிந்தது.

அவன் ஒரு அரசனின் மகன். வேட்டைக்குச் சென்றபோது இளமையிலேயே அவ் வேந்தன் மகன் வேடர் கைப்பட்டு விட்டான். அவர்களோ ஐந்துபேர். வேடர் கூட்டத்திலேயே வளர்ந்து பெரியவனாகியும்விட்டான். அவ்வரச குமாரனுக்குத் தான் வேடர்குடிப் பிறந்தவனென்றே நினைப்பு. வேந்தன் மகன் தான் என்ற உண்மை அவனுக்கு எப்படி விளங்கமுடியும்? அரசன் ஓர்நாள் பரிவாரத்தோடும் கானகம் சென்று தன் பிள்ளையைக் கண்டு கொள்கிறான். 'நீ என் மகன்; வேடர் மகன் அல்லை' என்று உண்மை அறிவுறுத்தி அழைத்துச் செல்கின்றான். உண்மை உணர்ந்த அம்மகனும் பெருமை

பேற்று அரசனாகிறான். இதுபோலத்தான் குருவருள் திறம் கூடுகிறது என்று அருணந்திசிவமும் அருளியுள்ளார். உயிர் என்ன ஆகிறது? ஐம்புல வேடர் சுழலிற்பட்டுத் தடுமாறுகின்றது. உண்மையான துணைவன் யார் என்றறியும் ஆராய்ச்சி ஞானம் அதற்கு இல்லை. மயக்கம்; அதனால் மலியும் துயரம்; இத்தகைய உயிரை ஆளுதற்கு இறைவன் அருட்குருவாகி வருகின்றான்; ஐம்புல வேடரிடமிருந்து அவ்வான்ம அரசிளங் குமரனைப் பிரிக்கின்றான்; மலமகற்றுகின்றான்; தானாக்குகின்றான்; தன் மலரடிக்கீழ் வைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலரச் செய்கின்றான். இச்சித்தியார் விருத்தத்தை இனிப் பல முறையும் படித்து இத்திறத்தை உணருங்கள் :-

" மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகனீ என்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணுமாபோல்
துன்னியஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறுந் தொல்லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரின் நீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன் "

குருவருளால் விளையும் இன்பம் கூறுந் தன்மை உடையதன்று, பேச்சற்று நிற்கும் பேரின்பம் அது. அவ்வின்ப அநுபவத்தை, தருமையாதீன ஆதி பரமாசாரிய சுவாமிகள் ஒரு வரியிலே குறித்தருளினார்கள்,

" நின்றுயிர்ப்பறவே
தருகாயம் இன்றியோரானந்தமெங்கும் தலைப்பட்டதே "

என்பது அவ்வின்ப அநுபவத் தெளிமொழியாகும். தம் குருநாதராகிய கமலை ஞானப்பிரகாசரிடத்தில் அப் பெருமான் பூண்டொழுகிய பக்தியை ஆரே அறிய வல்லவர்? கிடந்தாலும், கிடந்தே எழுந்து படர்ந்தாலும், பசியோடு பிணி அடர்ந்தாலும், அந்த அந்தகனார் தொடர்ந்தாலும் குருநாமமே கூறி உய்வேன் என்று கூறியருளும் அப் பெருமானாரின் உள்ள உறுதி உலகினும் பெரிதாம் அல்லவா?

அருவும் உருவும் அருவுருவும் அல்லா ஒருவனே உயிர்க்குயிராய் ஓங்கிக் கமலை ஞானப்பிரகாசனென வந்து அமலபதம் தந்து எனை ஆண்டான்' என்று தம்மை ஆட்கொண்டருளிய திறத்தை அகமுருகிப் பாடுகின்றார்கள். குருமூர்த்தியைக்கண்ட



மாத்திரத்திலேயே, 'கண்டேன் இப் பாசங் கழிந்தேன்; அமுதை முகந்து உண்டேன்; சுகானந்தத் துள்ளிருந்தேன்' என்று அருளுகின்றார்கள். மருளுதயம் மாற்றும் குருநாதன் இருளுதயம் நீக்கும் இரவி போல்வான் என்று புகழ்ந்து மகிழ்கின்றார்கள். 'தேடும் திரவியமும், சிற்றறிவும், பற்றுதலும், கூடும் போய் என்று அருளிற் கூட்டிய' குருவருள் திறத்தை எண்ணி எண்ணி மகிழ்கின்றார்கள். 'தேசு செறிகமலைச் செங்கமலப் பொற்பாதன், பேசு தமிழ் ஞானப்பிரகாசன் பாசவினை வாட்டினான்; மீட்டும் நான் வாராவகை அருளைக் காட்டினான்; கூட்டினான் காண்' — என்னுந் திருப்பாடலிலே வாட்டினான்; காட்டினான்; கூட்டினான் என்ற மூன்றே சொற்களால் குருமூர்த்தியின் பரோபகாரத்தால் விளைந்த ஆன்ம லாபத்தை அருளியுள்ளார்கள்.

இத்தகைய குருவருள் இல்லை யென்றால், சித்தம் ஒருவழிப் படாது; நிலைபெறாது. 'ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும், பெருகுதவம் சித்தியெலாம் பெற்றும், குருவருளால் வைத்தபடி இருக்க மாட்டாத மாந்தர்க்குச் சித்த சலனம் ஆம் தினம்' என்றும் அருளியுள்ளார்கள். குருவருளின் துணை இன்றேல் மனம் ஒருவழிப்படவும் வழி இல்லை என்பதனையும் ஈண்டு உணரலாகும். பிறவிக் கடலில் விழுந்து பேதுறும் உயிரைத் தெளிவித்துத் திருவடி இன்பம் கூட்டுவது குருவருள். இதனாலேயே சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப் பரமாசாரியராகிய அகத்திய முனிவரும்.

" குருவருள் வெண்ணீறெழுத் தஞ்சும் கோயில்
அரனுருவ மென்றலை மேலாக்கும் - திருவடியும்
சிட்டான அர்ச்சனையும் தொண்டும் சிவாலயற்கென்று "

எட்டாகப் பிரித்து, அதனுள் குருவருளையே முதற்கண் மொழிந்துள்ளனர்.

" தோடுகூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேருளாகும் "

என்ற விளக்கமும் ஈண்டறிதற்குரியது. தேவார ஆசிரியர் மூவரும் குருவருள் கைகூடப்பெற்று ஓதியருளிய பதிகங்களாகிய இம்மூன்றும் இன்றும் தம்மை அன்போடும் ஓதுவார்க்குக் குருவருள் கூட்டும் என்பது உறுதி. வாழ்க உலகெலாம்!

## அருளுரை - 3 (17—7—58)

# வேண்ணீறு

" பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயான் மறைபோலும் காணேடீ "

என்பது திருச்சாழல். சிவபிரான் வெண்ணீருடிய விகிர்தனுய் விளங்குகின்ருன். வெண்ணீறு உடல் நோய்களை அகற்று வதோடு உயிர்நோயாகிய பிறவியையும் ஒட்டுகிறது. பாண்டி யனுக்குற்ற வெப்பு நோயை 'ஆலவாய் அண்ணல் நீரே, மன்னுமந்திரமுமாகி மருந்துமாய்த் தீர்ப்பீரேன்று' ஓதித் திருஞானசம்பந்த சுவாமிகள் தீர்த்தருளிய திருப்பதிகம் 'மந்திர மாவது நீறு' என்பதாகும். இதன்கண் திருநீற்றின் தத்து வங்களை எடுத்து விளக்கியருளியுள்ளார்கள். " அருநோய்கள் கேட வெண்ணீறணியாராகில் " என்ற அப்பர் அருள்மொழி யும் திருவெண்ணீற்றின் பயனை விளக்குவதாகும். திருக் கூட்டச்சிறப்பைப் பாடவந்த சேக்கிழாரடிகள், 'பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்' என்றருளியுள்ளார்கள். திருஞானசம்பந்த சுவாமிகள் திருநீறுபற்றித் தரும் விளக்கங்கள் நம் உள்ளங் கோள்ளுதற்குரியவாம்:

" திருநீறு மந்திரமாகவும், தந்திரமாகவும், சுந்தரமாகவும் வர்னவர் மேலதாகவும், துதிக்கப்படுவதாகவும் உள்ளது. சமயத்திலும் வேதத்திலும் உள்ளது. வெவ்விய துயரம் தீர்க் கின்றது. அறிவை விளேக்கின்றது. புன்மை தவிர்க்கின்றது. ஓதத்தகுவதும், உண்மையிலுள்ளதுமாயது. முத்தி, பத்தி, சித்தி மூன்றும் தருவது. சத்தியமாவது. தக்கோர் புகழ்வது. பரவ இனியது திருநீறிட்டாரைக் காணவும் இனிது. ஏனெனில் அது தனியோரு கவினைத் தருவது. பேணி அணிவோர்க்குப் பேருமை கோடுப்பது. குற்றம் கேடுப்பதும், மதியைத்தரு வதும் சிறப்பீவதும் திருநீறே யாகும்.

பூச இனியதும் புண்ணியமாவதும் திருநீற்றுச் சிறப்பு, பேசவும் இனியது. பேரிய தவத்தோர்க்கும் அவா அறுக்கும் பேற்றி உடையது. உலக ஈருவதும் இதுவே. தேசங்களால் புகழப்படும் தேசு உடையது திருநீறே. அவலம் வருத்தம் அறுப்பதும், அருத்தமாவதும் திருநீறு. வானமளித்தற்குப்



பொருத்தமாவதும் புண்ணியர் பூசுவதும் திருநீறே. முப்புரம் எரிசெய்ததும், இம்மை மறுமை இரண்டுக்கும் சிறப் புறுவதும், செல்வமாவதும், துயில் தடுத்து விழிப்பை வழங் குவதும், தூய்மை உடையதும் திருநீறேயாகும். இராவணன் மேலணியப்படுவதும், எண்ணத்தகுவதும், எல்லோராலும் எடுத்தேத்தத்தக்கதும், உலகினியல்பாவதும், தத்துவமா வதும் திருநீறே. மாலும் அயனும் அறியாத வண்ணம் உள்ளது திருநீறு. தேவர்களால் பூசப்படுவது. பிறவித் துயர் நீக்கி இன்பம் தருவது. பலர் கண் திகைப்பிப்பதும், கருத வினியதும் திருநீறே. எட்டுத்திக்குகளின் உள்ளாரும் ஏத்தும் தகையது இவ்வினிய திருநீறேயாகும். இந்தத் திருநீற்றுப் பதிகத்தின் பாடல்கள் பத்தையும் வல்லவர் நல்லவராவார். "

சிவபிரான் திருநாவுக்கரசுப் பெருமானைச் சூலகோடுத்துத் தடுத்தாட்கோண்டபோது திலகவதியார் திருநீறளித்தார்கள். 'பேருவாழ்வு வந்தது' எனப் பணிந்து ஏற்ற அப்பர் சுவாமிகள் அணிந்தார்கள். இக்குறிப்பைப் பேரிய புராணத்தே சேக்கிழா ரடிகள் 'திருவாளன் திருநீறு' என்று தோடங்கும் திருப் பாடலில் உணர்த்தியுள்ளார்கள். 'சென்றடையாத திருவுடையா' ஞகிய சிவபிரானைத் 'திருவாளன்' என்றும், அவனது அருள் நீற்றைத் 'திருவாளன் திருநீறு' என்றும் குறித்துள்ள அருமைப்பாடு இதயம் கோள்ளற்குரியதாகும். அந்தப்பாடல் வருமாறு :-

" திருவாளன் திருநீறு திலகவதியாரளிப்பப்
பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார் பணிந்தேற்றங்கு
உருவார அணிந்து தமக் குற்றவிடத் துய்யு நெறி
தருவாராய்த் தம்முன்பு வந்தார்பின் தாம் வந்தார் "

இத்துணைச் சிறப்புவாய்ந்த திருநீற்றின் பேருமையைத் திருவாசகத்தே மணிவாசகப் பேருமானும் அருளியுள்ளார்கள். நேற்றியிலே திருநீறிலாதவரைக் கண்டால் அஞ்சுகின்றேன் என்ற கருத்துடைய,

" வெண்ணீறணிகிலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே "

எனும் பகுதியை நன்கு உணர்ந்து தேளியலாம். ஔவையாரும் " நீறில்லா நேற்றிபாழ் " என்று இடித்துரைத்துள்ளமை எல்லோரும் அறிந்ததோன்றே.

மணி, மந்திர, ஔஷதங்களால் நோய்தீர்ப்பது முறை. உடல் நோயையும், உயிர் நோயையும் ஒழிக்க இம்முறையில் உருத்திராக்கம், திருவைந்தெழுத்து, திருநீறு என்னும்மூன்றும் அமைந்துள்ளன. பூசவும் புசிக்கவும் மருந்தாவது திருநீறே யாகும். இதனை உணராதார் திருநீறிலாத நெற்றியோடு திகழ்தல் பெரும்பழியாமன்றோ ? பிருகஜ்ஜாபாலோபநிடதத்தில் " திருநீறில்லாத நெற்றியைச் சுடு-சிவாலயமில்லாத சிற்றூரைக் கொளுத்து " என்ற பொருள்பட,

" திக் பஸ்ம ரஹிதம் பாலம், திக் க்ராமம் அசிவாலயம் "

என்று கூறப்பட்டுள்ளமையையும் இங்கு ஓர்க. உலகை வெறுத்து வீட்டுலகமே குறிக்கோளாய் நிற்கும் துறவு அறம் கொண்டோர்க்கும் திருநீறு தள்ளொணாத் தகைமை உடையது. பரிவிராஜகோபநிடதமும், சந்நியாசோபநிடதமும் " பஸ்மோத் தூளனம் பரமஹம்ஸஸ்ய " என்று கூறுகின்றன. யாக்கை நிலையாமையை அடிக்கடி நினைவுறுத்திக்கொள்ளும் பொருட்டும் உயிர்க்குறுதியைத் தேடிக்கொள்ளும் பொருட்டும் திருநீறணிதல் வேண்டும் என்பது உபநிடதங்களின் முடிவாகும். "பஸ்மாங் தம் சரீரம் " அல்லவா ?

" யதிகளுக்கு ஞானமும், வானப் பிரஸ்தர்களுக்கு வைராக்கியமும் தருவது திருநீறே " என்றும், " எவர்கள் பஸ்மதாரணத்தை விட்டுக் கர்மத்தை அநுஷ்டிக்கின்றார்களோ, அவர்களுக்குக் கோடிப்பிறப்பெடுத்தாலும் சம்சாரபந்தத்தி லிருந்து விடுதலை கிட்டாது " என்றும், ஜாபாலோபநிடதம் கூறுகின்றது. " பஸ்ம தாரணம் செய்வதனாலேயே மோட்சம் உண்டாகிறது ; சிவசாயுஜ்யமும் அடையப்படுகின்றது; அவன் மீளத்திரும்புவதில்லை ; மீளத் திரும்புவதில்லை " என்று பிருகஜ்ஜாபாலோப நிடதம் கூறுகின்றது.

" பஸ்ம தாரணா தேவ முக்திர் பவதி
சிவ சாயுஜ்யம் அவாப்நோதி
ந ஸ புநராவர்ததே — ந ஸ புநராவர்ததே "

என்பது அப்பகுதியாகும்.

எல்லாக் கன்மங்களுக்கும் இன்றியமையாததாக இருத் தலின் வேதத்தில் கன்மகாண்டம், ஞான காண்டம் எனு மிரண்டிலும் திருநீறு புகழப்பட்டிருக்கின்றது. நூற்றெட்டு உபநிடதங்களில் திருநீற்றின் அருமை பதினைந்து உபநிட தங்களிற் பேசப்படுகின்றது. ' பூதி ' என்ற பெயர் திருநீற்றுக்கு



வழங்கப்படுவதன் காரணம் பிருகஜ் ஜாபாலோபநிடதத்தில் பேசப்பட்டிருக்கிறது. திருநீற்றுக்குரிய ஐந்து பெயர்களுள் ' பூதி ' என்பது, ஐசுவரியத்துக்குக் காரணமாதலால் வழங்கப் படுவதாயிற்று.

" ஐசுவரிய காரணாத் பூதி : "

என்பது அவ்வுபநிடத வாக்காகும்.

சிவபிரான் தன் திருமேனியில் திருநீறணிந்து திருக்காட்சி வழங்குகின்றான். " மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் " என்றும், " பூசுவதும் வெண்ணீறு " என்றும், " பொடிநாறு மேனியர் பூதிப்பையர் புலித் தோலர் " என்றும், " சிவனவன் திரள் தோள் மேல் நீறு நின்றது கண்டனையா யினும் நெக்கிலை " என்றும் நமது ஆசாரிய மூர்த்திகள் திருமுறைகளில் அருளியிருக்கின்றார்கள். ஜாபாலோபநிட தத்தில் இவற்றையொட்டிய கருத்தோன்றைக் காணலாம். " இத்திருநீறே விஷ்ணுவுக்கும் சங்கரர்க்கும் ஞானத்தைப் புகட்டியது ; பிரமஹத்தி முதலிய பாவங்களைப் போக்க வல்லது ; மிக்க ஐசுவரியத்தைக் கொடுக்கக்கூடியதென்றே (துரீய) சிவனது மார்பில் அணியப்பெற்றது " என்ற பொருள் புலப்படும் வண்ணம்,

" ஏத தேவ ஹரி சங்கரயோர் ஜ்ஞான ப்ரதம்
ப்ரஹ்மஹத்யாதி பாப நாசகம், மஹாவிபூதிதம் இதி
சிவவக்ஷஸி ஸ்திதம் "

என்ற வரிகள் அமைந்துள்ளன. இதனையே திருமந்திரத்திலும் திருமூல தேவநாயனார், " கங்காளன் பூசும் கவசத்திருநீறு " என்ற பாட்டில் அருளியுள்ளார்கள்.

வேதங்களாலும், உபநிடதங்களாலும், திருமுறைகளாலும் பல்காலும் எடுத்தேத்தப்பெற்ற திருநீற்றைச் சைவர் அனை வரும் எப்போதும் அணிந்து உய்யவேண்டும். பூதி சாதனம் என்று புகழப்பெறும் இத்திருநீறே நமக்கு வீடுபேறு தரவல்ல தென்ற நம்பிக்கை மனத்தே வேரூன்றவேண்டும். அதுவே ஞான நெறிக்குச் சாதனமாக நின்று நம்மை வாழ்விக்கும் என்பது நம்முடைய ஆசாரியப் பெருமக்களின் அநுபவம்.

" பேசப்பட்டேன் நின்னடியாரிற் றிருநீறே
பூசப்பட்டேன் பூதலராலுன் னடியானென்று
ஏசப்பட்டேன் இனிப்படுகின்ற தமையாதால்
ஆசைப்பட்டேன் ஆட்பட்டேனுன் னடியேனே." —திருவாசகம்.

அருளுரை - 4 (24—7—58)

# திருவைந்தெழுத்து

## ( நமச்சிவாயப்பழம் )

எப்போழுதும் உள்ளது; எல்லாம் அறிவது; எல்லாம் செய்யவல்லது; இன்பமே உருவாய் இருப்பது ஒன்றே கடவுள் ஆகும். அக் கடவுளை அடைய வழி தேடிக்கோண்டிருக்கும் அன்பர்களுக்கு, அடைந்தவர்கள் காட்டிவைத்த வழிகள் பல. அவற்றுள், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் வழிகளைச் சைவாகமங்கள் வகுத்தன. கிரியையும் கருமமும் வினையும் ஒன்றே. கருமம், உலக கருமம், வைதிக கருமம், அத்தியான்மிக கருமம், அதிமார்க்க கருமம், மாந்திர கருமம் என்று ஐந்து வகைப்படும். அவற்றுள் ஒன்றின் ஒன்று மேலானது. எல்லாவற்றிலும் மாந்திரமே சிறந்தது. மந்திர சம்பந்தம் உடையது மாந்திரம். மந்திரங்கள் சமயங்களுக்கும் தேய்வங் களுக்கும் தக்கவாறு வேறுபடுகின்றன. மாந்திரம் சுத்த மந்திரங்களைக் கணித்தல் முதலிய ஞானுப்பியாச விசேஷங் களால் உண்டாவது. சாந்தியதீதகலையில் உள்ள புவன போகங்களைக் கோடுப்பது. அதனால், அது சுத்தகர்மம் ஆகும்.

அம்மந்திரங்களுக்கெல்லாம் பிரணவமே மூலகாரணம் ஆக உளது. நாதகலை, விந்துகலை, அகாரகலை, உகாரகலை, மகாரகலை என ஐந்து கலையும் ஒன்று சேர்ந்ததுதான் பிரணவம். பிரணவரூபமான வாக்குக்களிலிருந்து எல்லா எழுத்தும் சோல்லும் மந்திரங்களும் தோன்றுகின்றன. அதனால் சப்த ப்ரபஞ்சம் எல்லாவற்றிற்கும் மூலகாரணம் பிரணவமே. அகாரகலை அகங்காரத்தையும், உகாரகலை புத்தியையும், மகார கலை மனத்தையும், விந்துகலை சித்தத்தையும், நாதகலை ஆன்மாவையும் தோழிற்படுத்துகின்றன. இவ்வுண்மையை நாள்தோறும் காலை பகல் மாலை நள்ளிரவு ஆகிய நாலு வேளையிலும் ஒய்ந்திருந்து உற்றுணர்வதே அடிப்படையான கடவுள் வழிபாடு. நாலு வேளையிலும் அவ்வழிபாடு செய்ய முடியாவிட்டால், ஒருவேளை இருவேளையிலாவது செய்யலாம்



அல்லவா? அந்த ஐங்கலையும் அஜபாமந்திரமாய்ப் பரிணமித்துப் பிராணவாயுவை அடக்கியும் விட்டும் நின்று உணர்த்தும். அதனால், நினைப்பும் மறப்பும் மாறிமாறி நிகழும். அஜபையே பன்னிருகலைப் பிராசாதம் ஆகின்றது. சூக்கும பஞ்சாக்ஷரம் தூல பஞ்சாக்ஷரம், அசபை, பிராசாதமந்திரம் எல்லாம் வேறல்ல. எல்லாம் ஒன்றேயாகும். அதனால் பஞ்சாக்ஷர மந்திரம் மூலமந்திரம் எனப்படும். சைவத்தமிழ் அதை ஐந்தெழுத்து என்றும் திருவைந்தெழுத்து என்றும் வழங்குகிறது. அது ஸ்தூலம் சூக்ஷமம் காரணம் என மூவகைப்படும். சிவவழிபாடு செய்வோர் தம் (அறிவின்) பக்குவத்துக்குத் தக்கவாறு அம் மூவகையுள் ஒன்று குருவால் உபதேசிக்கப்பெறுவர். ஸ்தூல பஞ்சாக்ஷரம் 'நமச்சிவாய வாழ்க' என்ற திருவாசகத்தில் உள்ளதே. இதைத் திருமூலர் திருமந்திரம்,

> 'ஒன்று கண்டீர் உலகுக்கோரு தேய்வமும்
> ஒன்று கண்டீர் உலகுக்குயிர் ஆவதும்
> ஒன்று கண்டீர் இனி நமச்சிவாயப்பழம்
> தின்று கண்டேற்கிது தித்தித்தவாறே.'

எனத் திருவருட்கனியாக்கித் தித்தித்தது என்றது.

'நானேயோ தவஞ்செய்தேன், சிவாயநம எனப்பெற்றேன்' 'சித்தம் ஒருக்கிச் சிவாயநம என்று இருக்கின் அல்லால் அத்தன், அருள் பெறலாமோ அறிவிலாப் பேதை நெஞ்சே' என மணிவாசகரும் அப்பரும் குறித்ததால் சூக்கும பஞ்சாக்கரத்தை யும் அறியலாம். அது பெறுதற்கரியது. அதை உபதேசிக்கப் பேற்றுச் சாதித்தவரே திருவருள் அடைவர் என்றார் திருநாவுக் கரசர்.

> 'விண்ணினார் பணிந்தேத்த வியப்புறும்
> மண்ணினார் மறவாது சிவாய என்று
> எண்ணினார்க்கு இடமா எழில் வானகம்
> பண்ணினார் அவர் பாலைத் துறையரே.'

என்னும் திருக்குறுந்தோகையுள் காரண பஞ்சாக்கரத்தையும் வைத்து வாகீசப் பெருந்தகை உபதேசித்தருளினார்.

'சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே' —திருமந்திரம் 2667

என்றதில், ஐந்தெழுத்துள் இரண்டே கொண்டு வீடுபெறும் பக்குவம் ஞானிகளுக்கே உண்டு. 'சிகாரம்' ஆகிய ஓரெழுத்தைக் கணித்து வருதலை ஜீவன் முக்தர்க்கு விதித்திருக்கின்றது சிவாகமம். அதையும் திருநாவுக்கரசு நாயனுர், திருவெறும்பியூர் (உய்யக்கோண்டான்) திருத்தாண்டகத்திலே சுட்டியருளினுர்.

'கார்முகிலாய்ப் பொழிவானைப் பொழிந்தமுந்நீர்
கரப்பானைக் கடிய நடைவிடையோன்றேறி
ஊர்பலவும் திரிவானை ஊராதாக
ஒற்றியூர் உடையானுய் முற்றும் ஆண்டு
**பேரெழுத்தோன்றுடையானைப்** பிரமனேடு
மாலவனும் இந்திரனும் மந்திரத்தால் ஏத்தும்
சீரேறும்பியூர் மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.'

இதில், 'பேரேழுத்தோன்று' என்ற பேரியதோர் அருமறையை (இரகசியத்தை)ப் பக்குவ ஞானிகளுக்கு உபதேசித்தருளினுர் தாண்டகச்சதுரர்.

நமச்சிவாயப்பழம் ஏனைய பழ (மந்திர) ங்களைப்போலத் தோற்றமும் (ஆதியும்) அழிவும் (அந்தமும்) இல்லாத ஞானப் பழம். சிவப்பிரகாசத்தில், உமாபதிதேவநாயனுர், "பந்தம் எல்லாம் போக்கிவிட்டாலும் உலகில் உழலும் அளவும் வினைப் பயன் கூடாமல் ஒழியாது. வினையால் தாக்குண்ணுமல், ஜீவன் முக்திநிலையைப் போற்றிக்கோள்ளப் பஞ்சாக்கரமந்திரமே சிறந்த துணையாயிருந்து உதவும். அதனைத் துணையாகக்கோண்டு ஜபம் செய்துவந்தால், மும்மலவாதனை நீங்கி வேதனை இல்லாமல், பேரின்பம் பெற்று இனிது வாழலாம்" என்று உபதேசித்தருளினுர்.

'பந்தமா னவை அறுத்துப் பவுதிகம் உழலும் எல்லைச்
சந்தியா தொழியா திங்குத் தன்மைபோல் வினையும் சாரும்
அந்தம்ஆ திகள் இல்லாத அஞ்செழுத் தருளி ஞலே
வந்தவா றுரைசெய் வாரை வாதியா பேதி யாவே.'



இதில் அந்தம் ஆதிகள் இல்லாத அஞ்சேழுத்து என்று நமச்சிவாயப்பழத்தின் சிறப்பைக் கூறிய உண்மையை உற்றுணர்தல் வேண்டும்.

இத்திருவைந்தெழுத்தே இவ் வள்ளலார் திருமுன் அக்கு மாலை கொண்டு அங்கையில் நூறுநூறுயிரம் நண்ணி எண்ணிக் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதி நன்னெறி ஒழுகி எல்லாத் தீங்கையும் நீங்கி வல்வினை சிந்தி வாழ்வெலாம் நந்தி (வளர்ந்து) நாவினுக்கு அருங்கலம் ஆகிய நமச்சிவாயப் பழமெனச் சுவைக்கத்தக்கது. அதுவே உயிர்க்கு நற்றுணை. அதுவே வாழ்வில் நல்லக விளக்கு. 'நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க'


சிறந்த திங்கள் வெளியீடு → குமரகுருபரன்

ஆண்டுச் சந்தா 1 — 50

இவ் வெளியீடு 8ஆண்டுகளாகத் தொண்டுபுரிகின்றது. சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றினை எளிய நடையில் தெளியக்கொண்டு உலவுகின்றது. தருமையாதீனத்து முனி புங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமர குருபர சுவாமிகளின் திருப்பெயரோடு வெளிவருவதால் அவர்கள் அருளிய நூல்களின் ஆராய்ச்சி விளக்கமும் ஏற்றுத்திகழ்கிறது. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் ஆணையின்வண்ணம் இவ்விதழ் வெளிவருகிறது. எல்லோரும் பாராட்டி வரும் இவ்விதழை வாங்கிப் பயன் அடைக.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமாரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,
"குமாரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

அருளுரை - 5 (31—7—58)

# கோயில்

கோயில்கள் பக்திச் செல்வத்தையும், கலைச்செல்வத்தையும் பேணிவரும் அறநிலையங்கள். கோயில்கள் இல்லையேல் இன்று நாம் காணுமளவுக்குக்கூடச் சமய வளர்ச்சியையும் கலை வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, சமூகப்பண்பாட்டு வளர்ச்சிகளையும் காணல் இயலாது. பல தரப்பட்ட மக்களும் கோயிலை அண்டிப் பிழைத்து வருதல் கண்கூடு. நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடுகளில் சீரிய ஒழுங்கு முறைகள் கையாளப்பட்டு வந்தமையும் கல்வெட்டுகளால் அறியலாம். இத்தகைய கோயில்கள் நம் தென்னாட்டில்தான் அதிகம். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'. என்ற பழமொழியையும் உருவாக்கிவிட்ட பெருமை நம் நாட்டுக்கே உரியதாகும்.

வாழ்வில் அலுத்துச் சலுத்துப்போன நெஞ்சுக்கு ஆறுதலை அளிக்கும் அமைதி நிலையமாகக் கோயில் இலங்குகின்றது. சிவபெருமானும், உமைஅம்மையும் தந்தையும் தாயுமாக இருந்து நம் முறையீட்டுக்குச் செவிசாய்க்கும் அருள்நெறி கோயிலில் தானே ? 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்' ஆனாலும் கோயிலில் திருவுருவத் திருமேனி கொண்டு உயிர்களை ஆட்கொள்ள எழுந்தருளியிருக்கின்றான் இறைவன். வழிபாட்டு நிலையில் மிக்க பழமைவாய்ந்த நம்நாட்டில் எங்கெங்கும் கோயில்கள், விண்ணையளாவிய கோபுரங்கள். தொலைவி லிருந்து கோபுரங்களைக் காணும்போதே நமக்குச் சிவநினைவு உண்டாகிறது. கோபுரத்தைத் தூல இலிங்கமாக வழிபடும் நெறியும் நம் நெறியாகும். இதனாலன்றோ 'திருக்கோயில் இல்லாத திருவில் ஊர்' என்று நம் ஆசாரியப் பெருமக்கள் பழிப்பாராயினர்! கோயில் என்ற சொல் எல்லாக் கோயில் களையும் குறிக்கும் குறியீட்டுச் சொல்லாயினும் அது சிறப்பாகச் சிதம்பரத்தைக் குறிக்கும் அதுவே நமக்கு உயிர்த்தலமாக இருத்தலின். நடராசப் பெருமான் ஆட்டமின்றேல் உலக இயக்கம் ஏது ? கோயில் வழிபாடுமுதல் சண்டேசர் வழிபாடு வரை உள்ள அனைத்து வழிபாடும் ஆழ்ந்த பொருள் நோக்கம் அமைந்தனவேயாகும். தத்துவங்களையும் உணர்ந்து வழி படுவார் 'மனிதரில் தலையான மனிதர்' என்று கூறலாகும்.

திருஞானசம்பந்த சுவாமிகள் கோயிற்றிறங்களை இரண்டாந் திருமுறையில் 'ஆரூர் தில்லை' எனத் தொடங்கும் இந்தளப் பண்ணிலும், திருநாவுக்கரசு சுவாமிகள் ஆறுந் திருமுறையில் 'தில்லைச் சிற்றம்பலமும்' எனத் தொடங்கும் திருத்தாண்டகங் களிலும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஏழாந் திருமுறையில் பழம்பஞ்சுரப் பண்ணில் 'காட்டூர்க்கடலே' எனத் தொடங்கும் பதிகத்திலும் அருளியுள்ளார்கள். எக்கோயிலிற் சென்றாலும் 'கயிலாயநாதனையே காணலாமே' என்று ஆளுடைய அரசு அறிவிக்கின்றார்கள். 'சிவன் சேவடி விட்டுப் பிரியாப் பெரும் பேறு பெறுவர்' என்று ஆளுடைய பிள்ளை திருக்கடைக்காப்பு அருள்கின்றது. "செம்மாந்திருந்து திருவாய் திறப்பார் சிவ லோகத்தாரே" என்று ஆளுடைய நம்பிகள் அறிவிக்கின்றார்கள்.

எல்லாம் வல்ல சிவபெருமான் உயிர்களை உய்யக்கொண்டரு ளும் பொருட்டுத் திருவுருவத் திருமேனியோடு திகழ்ந்தருளும் கோயில்களுக்கு நாள்தோறும் அன்பர்கள் சென்று வழிபட்டு நல்லன எல்லாம் பெற்று இருமைப்பயனும் எய்துவராக!

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

I had an opportunity of getting the blessings of Lord Vythiswara and Lord Subramania which I had to my heart' content. Arrangements for humble prarthanas have been made to every one satisfactorily. Temple premises is kept clean and tidy. It is realy a pleasure to visit this temple.

(Sd.) R. Rajaram,
Research Officer,
N. F. C. P. Kumbakonam,
Camp (Sirkali). 18-7-58.

# நல்லறங்காவல்


திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

பிரின்ஸிபால், தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரி.


மக்கட்கு உறுதிப்பொருள் நான்கே. அறம், பொருள், இன்பம், வீடு என்பனவே அவை. அறம் எது? செய்ய வேண்டும் என்று உண்மை நூல்களில் வரையறுத்தது அறம். அவ்வாறு வரையறுத்ததைச் செய்வதும் மறுத்ததைச் செய்யாமையும் அறம் (நல்வினை) ஆகும். (அறம் மறம் ஆகிய இரண்டும் செய்யும் செய்கையால் நல்வினை தீவினை என்னும் பெயர்பெறும். பக்குவத்தால் புண்ணியம் பாவம் எனப்படும். பயன்படும்போது இன்பம் (சுகம்) துன்பம் (துக்கம்) எனப்படும். படவே இன்பத்துக்குப் புண்ணியமும், அதற்கு நல்வினையும் காரணம் ஆதல் விளங்கும்.)

அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றில், இம்மை மறுமை வீடு மூன்றும் பயப்பது அறமே. இம்மையையும் மறுமையையும் உதவும் பொருள். இம்மையை மட்டும் ஈவது இன்பம். ‘சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்துவழிப்படூஉம்’ ஆதலின் அறம் இன்றேல் பொருளும் இன்பமும் கிடைக்க மாட்டா.

மக்களால் காக்கத்தக்கது அறம் ஒன்றே. (பொருளைக் காத்தலும் இன்பத்தைக் காத்தலும் வேண்டாதன அல்ல, பொருளும் இன்பமும் நிலையாதன) அறமே நிலையுடையது. (நிலையாதவற்றை நிறுத்தவேண்டிக் காப்பது வீண் செயலாகும்) நிலைப்பதைக் காப்பதே பயனுடைய செயல். (பயன் என்ன?) உயிர்கட்கு இம்மையின்பம் மறுமைநலம் வீடுபேறு எல்லாம் அறத்தால் வரும் பயன். அதனால் அறங்காவலே மக்களது மேலான கடமையாகும். ஆகவேதான், இந்தியப் பெருமக்கள் இப் புண்ணிய பூமியில் அறங்காவலைக் குறித்து வற்புறுத்தினார்கள். ‘அறன் வலியுறுத்தல்’ என்றது போலப் பொருள் வலியுறுத்தல் இன்பம் வலியுறுத்தல் என்று கூறவில்லை.



நல்லநெறியில் தேடப்பட்ட பெருஞ்செல்வம் அறத்தையும் இன்பத்தையும் அடைவிக்கும் துணையாம் என்ற கருத்தை அடக்கி,

‘ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு’ (760)

என்றார் திருவள்ளுவர். ‘ஒண்பொருள்’ என்றதற்குப் பரிமேலழகர் உரைத்த நுண்பொருளை நோக்குங்கள்.

‘நெறியான்வரும் பொருள் பயன் கொடுத்து அல்லது போகாத பொருள்’ என்றுரைத்தார் அவர்.

‘திறன் அறிந்து தீதுஇன்றி வந்த பொருள்
அறன்ஈனும் இன்பமும் ஈனும்’

பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருள், என்றதாலேயே பொருளின் இயல்பு விளங்குகின்றது. ‘அருளொடும் அன்பொடும் வாராப்பொருள் ஆக்கம்’ கொள்ளத்தக்கது அன்று, (தள்ளத்தக்கதே.) அதனால், அறங்காத்தல் ஒன்றே கொள்ளற்பாலது. அறம் எனப்படுவன அனைத்தையும் அளவிட்டுக் கூறுதல் எளிதன்று. திருக்குறள் அறத்துப்பாலில் அடங்கியவற்றை நோக்கின் அறத்தின் வகையை ஓரளவுணர்தல் கூடும்.

(1) உயிர்கட்குச் செய்யும் அறம் (2) நல்லோர்க்குச் செய்யும் அறம் (3) கடவுளர்க்குச் செய்யும் அறம் (4) முனிவர்களுக்குச் செய்யும் அறம் (5) மெய்ப்பொருளை அடையச் செய்யும் அறங்கள் (முதலாகப்) பல (இருக்கின்றன). அவற்றுள் நல்லறம் எது?) உயிர்கள் இன்புற உலகில் நீதி வழுவாமல் செய்யும் நன்மைகளும்’ அருள்நெறியில் பேரின்பம் பெறச் செய்யும் நன்மைகளும் ‘நல்லறம் ஆகும்’

(சைவத்தில், சரியை கிரியை யோகம் ஞானம் என்று நான்கு வழி உண்டு) சரியையையும் கிரியையையும் சிவதர்மம் என்று ஒன்றாக்கிச் சொல்லுவார்கள் சைவ சித்தாந்திகள். அதுவே ‘நல்லறம்’ என்று ‘திருக்களிற்றுப்படியார்’ (என்னும் உண்மைநூல்) உணர்த்துகின்றது.

" நல்ல சிவதன்மத்தால் நல்ல சிவயோகத்தால்
நல்ல சிவஞானத்தால் நான் அழியும் - வல்லதனுல்
ஆரேனும் அன்பு செயின் அங்கே தலைப்படும் காண்
ஆரேனும் காணு அரன் " (15)

அப்பர்சுவாமிகளும், 'ஆரேனும் தன் அடியார்க்கு அன்பன்' என்றும், 'ஆரேனும் தன்னடைந்தார் தம்மையெல்லாம் ஆட்கோள்ளவல்ல எம் ஈசனுர்' என்றும் அருளினர்கள். தோத்திரமும் சாத்திரமும் வேறுபடாத சிறப்பை இங்கும் அறியலாம்.

நல்லறமாகிய சிவதன்மம் 'மேல்வினை' 'வல்வினை' என்றும் இருவகைப்படும், சுண்டேசுரர், சிறுத்தோண்டர், அரிவாட்டாயர், கண்ணப்பர் முதலியோர் வல்வினையைச் செய்தவர்கள்.

'நான்' என்பது அழியவேண்டின், நல்லறம் புரிதல் வேண்டும். அதனுல்தான், 'நல்ல சிவதன்மத்தால் நான் அழியும்' என்றுர் உய்யவந்த தேவநாயனுர்.

அறத்துறைகள் அடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும் மற்றையெல்லாம் செய்தும் சென்றுல் சைவத்திறத்து அடைவர், அடைந்து அச் சைவத்திறத்தில் சரியை கிரியா யோகம் சேலுத்துவர், சேலுத்தியபின் ஞானம் பேறுவர், ஞானத்தால் சிவனடியைச் சேர்வர். இங்கே சரியையும் கிரியையுமாகிய சிவநல்லறத்தின் உயர்வு ஓர் அளவு புலப்படும்.

வேதவாக்கியம் எல்லாம் சிவவாக்கியம். அச் சிவனது சொற்படி நடப்பவர் வாழும் உலகம் தேவருலகம், அச் சொற்படி நடவாதவரை வைக்கும் சிறைக்களம் நரகலோகம்.

" அருளினுல் உரைத்த நூலின் வழிவாராது அதன்மம் செய்யின்
இருள் உலாம் நிரயத் துன்பத்து இட்டு இரும்பாவம் தீர்ப்பன் "

என்னும் தருமையாதீனத்துச் சிவஞான சித்திநேறியிலே,

" ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சிலம்
வழுக்கிலாத் தவம்தானங்கள் வந்தித்தல் வழங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவோடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனுல் இரங்குவான் பணியறங்கள் "



என்று நல்லறங்களைத் தோகுத்துக் கூறியிருத்தலை உணரலாம். இழுக்கிலா அறம் - நல்லறம்.

" மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சோல்ல
இனமலர் கையிற்கோண்டு அங்கு இச்சித்த தேய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றி வாழும் சேயல் அறம் ஆனுல் யார்க்கும்
முனம் ஒரு தேய்வம் எங்கும் சேயற்கு முன்னிலையாம் அன்றே"

என்பதில் நல்லறம் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது.

" காண்பவன் சிவனே ஆனுல் அவன் அடிக்கு அன்பு செய்கை
மாண்பறம். அரன்தன்பாதம் மறந்துசெய் அறங்கள் எல்லாம்
வீண்சேயல் இறைவன் சோன்னவிதி அறம் ".

திருவருளை மறந்து செய்வன எல்லாம் அறமானுலும் அறம் அல்ல, வீண் செயலே என்று அருணந்திதேவ நாயனுர் விளக்கியருளினுர்.

கல்லால நிழலிலே சனகாதி நால்வர்க்கும் கடவுள் நல்கியதும் இந் நல்லறமே. அதைத் திருஞானசம்பந்தர்,

" நூலடைந்த கோள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர் கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நிழல்மேவி அருமறை சோன்னதேன்னே
சேலடைந்த தேன்கழனிச் சேய்ஞலூர் மேயவனே "(1,48,1)

என்று பாடியருளியதால் அறியலாம். இவற்றுல், பசு புண்ணியத்தால் உயர்ந்தவற்றையும், பதி புண்ணியத்தையும், சரியை கிரியைகளையும் பதியுபதேசப் பொருளையும் 'நல்லறம்' என்றதை நோக்கினேம்.

சமயம், சமயத்தை வளர்க்கும் திருக்கோயில்கள், சமய நேறிகளை நூல்வழியாலும் உபதேச மார்க்கத்தாலும் காத்து வரும் திருமடங்கள், சமய நூல்கள், சமயசாரியர்கள் வழிபாடு, தோண்டர்க்குத் தோண்டு முதலிய நல்லறங்களை எல்லாம் காப்பதே நல்லறங்காவலாகும்.

### தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மகோற்சவம்

### 10-ஆவது

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

(மலர் 17, இதழ் 8, பக்கம் 556 இன் தொடர்ச்சி)

## ஐந்தாம் திருநாள் - மாணிக்கவாசகர் திருநாள்

2—6—58 அன்று திரு. T. புருஷோத்தமன் அவர்கள் M. L. C. (சென்னை) "தொண்டின் பெருமை" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றியதன் சுருக்கம்.

அரசியல் தொண்டினைப் பற்றியாவது, தெய்வத் தொண்டினைப் பற்றியாவது பேசவேண்டும். நான் ஆதீனத்தையும், அதைச்சார்ந்த 27 கோயில்களையும் காணவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்த விழாவில் கலந்துகொண்டேன். ஆதீனக் கோயில்களில் தம்பிரான்களை வைத்துச் சிறந்த முறையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்றாடக் கடமைகளை நடத்தி வருவதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அரசாங்கத்தாரால் கோயில்களில் வைக்கப்பட்ட எக்ஸிகூட்டிவ் ஆபீஸர்கள் கோயில்களிலிருந்து, அரசியல் தொண்டென்று, தினசரித் தொழிலை வழக்கம்போல் செய்கின்றனர். அம்முறையிலின்றி ஆதீனங்கள் சிறந்தமுறையில் தொண்டாற்றுகின்றன. ஆலயங்கள் நன்முறையில் நடத்தப்பெறல் வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆலயப்பாதுகாப்புச் சங்கம் நடத்தி வருகிறோம்'. (அதன் முக்கிய கருத்து என்னவென்றால்) நம் நாட்டில் நம் ஆலயங்களில்தாம் சிறந்த பொக்கிஷங்கள் இருக்கின்றன என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். பொதுவாகக் கோயில்களில் கலைகளுக்கு நல்ல பாதுகாப்பு அளித்து அவை நல்ல முறையில் வளரப் பாடுபட்டிருக்கிறார்கள். திருக்கடவூர் கோபுரம் புதுப்பிக்கப்பெற்று வெகு அழகாக விளங்குகிறது. பழைய ஆகம முறையில் எப்படி ஆலயங்களிருக்க வேண்டுமோ அதனை மாற்றாமல் நல்லமுறையில்



ஆதீனத்தார் நடத்தி வருகின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவன் நான். மற்ற இடங்களிலோ எப்படி எப்படியோ நடந்து வருகின்றது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீரங்கம் கோயிலைப் புதுப்பிக்க அரசாங்கத்தார் முனைந்தனர். அப்போது கோபுரத்தில் இருக்கும் ரங்கநாதருக்குக் கவசம் செய்தனர். சரியாய் இல்லாததனால் ரங்கநாதர் சிரசைக் கொஞ்சம் தட்டி வெட்டிச் சரிபடுத்திப் போட முயன்றனர். இந்நிலை எனக்குத் தெரிந்தது. சட்டசபையில் இதுபற்றி விவாதம் எழுந்தது. பிறகு நல்ல முறையில் வேறு ஒரு கவசம் செய்து ஸ்ரீ ரங்கநாதருக்குப் போடுதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கும்பகோணத்தின் அருகாமையிலிருக்கும் சுவாமிமலைக்கோயிலைச் சுற்றிக்கொண்டு வரும்போது, என்னுடன் சுற்றிக் காண்பிக்க வந்தவர், ஓரிடத்தைச் சுட்டி, இதுதான் பரமசிவனுக்கு முருகன் உபதேசித்த இடம் என்று காட்டினர். முன்பு அங்கு இருந்த உருவம் சுப்பிரமணியர் குருவாக இருக்க பரமசிவன் நின்றுகொண்டு உபதேசம் கேட்டல்போன்று இருந்ததாம். அரசியலார் அதைச் சரியானதன்று என்று இடித்து விட்டு, ' சிவபெருமானின் மடியில் சுப்பிரமணியர் இருந்துகொண்டு உபதேசிப்பதாக அமைத்தார்கள் என்று கூறினார் அவர். அதை ஆராய்ச்சி செய்வதற்கு யாருக்கு உரிமையிருக்கிறது. அதனைக் கட்டினவர்கள் என்ன கருத்தில் அவ்விதம் அமைத்தார்களோ ? அதை ஆராய்ந்து காணுமுன் இடித்துச் சிதைத்துக் கட்டுவது தவறல்லவா ! இவற்றை நோக்கச் சைவ அன்பர்களுக்கு உணர்ச்சியில்லை என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் கூடி நமது ஆலயங்கள் எப்படி எப்படி நடந்தால் நன்றாக இருக்கும் என்று யோசித்திருந்தால் இப்படியெல்லாம் நடைபெறாது. தொண்டு செய்யும் மனப்பான்மையில் உள்ளோர் அனைவரும் காலப்போக்கு இப்படி இருக்கிறது என்று நினைக்காமல் நல்ல சமய உணர்ச்சியோடு பாடுபட வேண்டுமென்றுதான் கூறுகிறேன். அரசாங்கத்தார் சமயத் தொண்டில் ஈடுபடக்கூடாது என்று கூறி ரேடியோவில் சமயப் பாடல்களைப் போடாதவாறு செய்து விட்டார்கள். அதற்குக் கிளர்ச்சி செய்ததன் பயனாக இன்று காலை மாலைகளில் நாம் தேவாரம் முதலான பாடல்களை ரேடியோவில் கேட்கமுடிகிறது. நவீன காலத்தில் நவீனப் பண்களால் தேவாரங்களைப் பாடாமல் பழைய முறையில் வகுக்கப்பெற்ற பண்களிலே பாடுதலே முறையாகவும் சிறப்பாகவும் இருக்கும்.

அரசாங்கத்தில் என்ன வேலை செய்கிறார்கள் என்று கவனித்து மடங்களுக்கு 'சூப்பர்வைசிங்' கட்டுப்பாடு ஏற்பாடு செய்துவருவது எங்களுக்குத் தெரியும். அரசாங்கம் மடங்களை அவ்வாறு செய்வது அவ்வளவு சரியல்ல. பணமில்லாத மற்ற கோயில்களுக்கும் பொருளுதவிசெய்து அவற்றையும் சீர்திருத்த வேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். சொத்து இல்லாத திருக்கோயில்களில் திருத்தங்கள்செய்ய அரசாங்கம் ஒதுக்கிய பணம் 10000 ரூபாய். பொதுமக்கள் உதவி பாதி. இது குறைவான தொகையாகும். ஆதலின் ஆலயப் பாதுகாப்புச் சங்கத்தால் இயன்ற அளவு உதவிசெய்கிறோம். அரசியல் தொண்டோ, சமயத்தொண்டோ தொண்டினால் பெருமை அடையவேண்டுமென்றெண்ணிப் பெருமைக்காகத் தொண்டுசெய்வது நன்றன்று. பயனை எதிர் நோக்கிச்செய்வது தெய்வீகத் தொண்டன்று. சமூகத்தொண்டை நாம் செய்கிறோம். இறைவன் பார்த்துப் பரிசளிப்பது அவன் இஷ்டம் என்றெண்ணித் தொண்டுசெய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் பொது ஊழியத்தில் நல்ல காரியங்களைச் செய்ய முடியும். எந்தத் தொண்டிலும் பெருமையடையவேண்டுமானால் பயனைக் கருதாமல் செய்யவேண்டும். ஜவஹர்லால் நேருகூட 'பாரத் சேவக் சமாஜ்' என்றவொன்றினைப் பொதுத் தொண்டிற் காக, ஏற்படுத்தியுள்ளமை நோக்கத்தக்கது.

நாம் 'நடப்பது நடந்தேதீரும்; நடவாதது நடவாது' என்று எண்ணியே தொண்டுசெய்தல் நன்றாகும். காரணமின்றி நாம் உலகில் பிறக்கவில்லை. ஏதோ காரணம் இருக்கவேண்டும். அக்காரணம், பிறவி எடுத்ததன் நோக்கம் ஒரு தொண்டு செய்ய வேண்டுமென்று இருந்தால் - அதன்படி செய்வோமானால் அதுவே தெய்வீகத் தொண்டாகும். அப்பொழுது தொண்டின் பெருமை நம்மைச் சாரும்.

திரு. நா. சங்கரனார், M. A., L. T., அவர்கள் (துணை ஆணையாளர், நகராண்மை மன்றம், சென்னை.) "சைவமுந் தமிழும்" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றியதன் சுருக்கம்.

இன்றைய விழா, வாதவூர்ப்பெருமான் மணிவாசகப் பெருந் தகையாரின் திருவிழா. மக்களுக்கு உபதேசித்த பெருந்தகை



மணிவாசகரே. சைவம் தழைக்க, தமிழ் தழைக்கப் பாடியவர் களில் மணிவாசகரும் ஒருவர். இந்த உலகில் சமயம் எந்த எந்த வகையில் இருந்தது என்பதனை நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம். சைவம் : இறைவனுக்கே சைவன் என்ற பெயருண்டு. 'சைவா போற்றி' சைவ, சைவா என வருவதை இறைவன் விளிப்பெயராக இருப்பதனைக் காணலாம். இறைவ னுக்கே சைவன் என்று பெயரிருக்குமானால் சைவத்தின் பெருமை அளவிடற்பாலதோ! சைவத்தின் தன்மை என்ன? அன்பு. அன்பின் அடிப்படையில் வந்தது சமயம். சமயத்தை ஆக்கிய சான்றோர் மனிதவாழ்க்கை எவ்வாறு அமையவேண்டும் என்ற முறையை வகுத்தனர். இன்றுள்ளது சமயச் சார்பற்ற அரசியல். சைவந் தழைக்க, தமிழ் தழைக்க ஆயிரமாண்டு களுக்கு முன்னே அரசர் முதலானோர் தொண்டாற்றினர். நால்வர் முதலான நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமிழினுக்குச் செய்த தொண்டினைப்பார்த்தால் சைவமும், தமிழும் தழைக்க அவர்கள் பாடுபட்ட வரலாறு நமக்குப் புலனாகும். அமிழ்தினும் இனியதாக, உலகிலே சிறந்த, தொன்மையான இலக்கண இலக்கிய வரம்பிலே சிறந்து நிற்கும் செவ்விய மொழி தமிழே. உண்மையிலேயே 'பெருமை கொள்வாய் தமிழா! என்று பாடப் படுகின்ற பாடலைக் கேட்டுப் பெருமைகொள்ளத்தான் வேண்டும். அன்பின் அடிப்படையில் தோன்றியது சைவம். சைவமே மற்ற எல்லாச் சமயங்களுக்கும் மேலானதுஎன்று கூறிவிடலாம். தமிழ்மொழியின் சார்பில் மதச்சார்பற்ற முறையில் யோசித்தால், ஒன்று புலனாகும். தமிழின்றிச் சைவமில்லை, சைவமின்றித் தமிழ் இல்லை' என்ற வொன்றைத்தான் அங்கே காணநேரிடும். சங்ககாலத்தில், தமிழ்ச் சங்கத்தில் இறைவன் வீற்றிருந்து தமிழ் வளர்த்ததை அறியும்போது தமிழில் சைவ ஒளி வீசுவதைக் காணலாம். இன்று அரசியல் அலுவல்களனைத் தையும் தமிழில் நடத்தவேண்டுமென்று அரசாங்கத்தார் எண்ணு கின்றனர் என்று கூறும்போது, தீந்தமிழ்த்தாய் - வெற்றியாக், அரசோச்சும் சிறந்த நிலை வருங்காலத்தில் உண்டு எனக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சைவத்தில் நான்கு பிரிவுண்டு. ஒவ்வொன்றும் நான்கு நான்காகப் பிரி வுற்றுப் பதினாறு ஆகின்றன. ஞானநெறியிலே நின்று வாழவேண்டும். தமிழ் மொழிக்கு ஆலய வழிபாட்டிலே

முதலிடம் தரல்வேண்டும். தமிழில் உள்ள தோத்திரப் பாடல்கள் கோயில்களில் எந்த நேரத்தில் பாடப்படுகின்றன. சிவ புராணமோ மற்ற பாடல்களோ எப்பொழுது பாடப்படுகின்றன. அவைகளுக்கு ஆலயத்தில் முதலிடம் உண்டா என்றுதான் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. அன்பின் அடிப்படையிலே- சைவ நற்சமயம் வளரவேண்டுமானுல் தமிழ் ஆலய வழிபாட்டு மொழியாக மாறவேண்டும். நான் திருவேண்காடு சென்றபோது அங்கு அருச்சகர் தமிழிலேயே சில பாடல்களை ஓதியமை என் மனத்திற்கு இன்பம் ஊட்டுவதாக இருந்தது. தமிழ்மொழி ஒருவகையில், சைவத்தோடே, சமயத்தோடேயே வளரு கின்றது. வைணவத்திற்கும் தமிழுக்கும் நிறைந்த தொடர்பு உண்டு. மக்கள் சைவ சமய நெறியில் உண்மையாக ஈடுபடு தற்குப் பெரியோர்கள் பாடிவைத்த பாடல்களைப் பாடவேண்டும் - படித்துணரவேண்டும். பாடப்படுவதுதான் பாட்டு. அப்பாட்டு மக்கள் உள்ளத்திலே இறை உணர்வை உண்டாக்கும். இன்று தமிழுக்கு ஏற்றம் உண்டாய்விட்டது; ஏற்றம் உண்டாகித் தீரவேண்டும். சுமார் எட்டு ஆண்டுகளுக்குமுன் தமிழிலே சொற்பொழிவு செய்வோரும் ஆங்கிலத்தில் சில வார்த்தைகளைச் சொன்னுல்தான் மதிப்பு இருந்தது. ஆனுல் இன்று, நன்ருக ஆங்கிலத்திலேயே பேசவல்ல ஒருவர்கூட சில தமிழ்ச் சொற்களின் தொடர்களைப் பேச விழைகின்றனர்.

இங்கு ஆதீனத்தார் அவர்கள் தமிழ்க்கல்லூரி மூலமாக நற்றமிழ் ஆசிரியர்களை உண்டாக்கி, சைவமும், தமிழும் தழைக்க, அவர்களை நாடெங்கும் அனுப்பி எங்கும் சைவத்தமிழ் மணத்தினைப் பரப்புகின்றனர். தமிழ் மணமும் சிவமணமும் கமழ வேண்டுமானுல் வழிபாட்டுமுறைகளோடு தமிழ் மண ஒளிவீசவேண்டும். ஞானமணியான முருகன் ஈசனுடன் பேசியது தமிழில். ' ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே ' என்ருர் அருணகிரியார். ஆலயங்களில் பூஜைசெய்யும் ஆசார்ய நன்மக்கள் வேதம் கற்று அதன்படிச் செய்தாலும், அதனுடன் தமிழையும் கற்கத்தான் வேண்டும்; தமிழில் ஓதுதல் வேண்டும் என்ற கட்டாயம் என்று ஏற்படுகிறதோ அந்நாள்தான் நன்னுள். இடைக்காலத்தில் தமிழ்மொழி தாழ்நிலையுற்றதென்ருலும் இன்று ஆதீனங்களும் பொதுமக்களும் நல்ல முறையிலே தமிழின் ஆக்கத்திற்குத் தொண்டாற்றி வருகின்றமை மகிழற்குரியது.



திரு. கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் (சென்னை.) " மண்சுமந்த மாண்பு " என்பது பற்றிச் சொற் பொழிவாற்றியதன் சுருக்கம்.

மணிவாசகர் திருநாளில் " மண்சுமந்த மாண்பைப் " பற்றிப் பேச ஆணை பெற்றேன். மணிவாசகர் சைவசமய குரவர் நால்வரில் ஒருவர். ஞானமார்க்கம் காட்டிய நல்லறிஞர். மணிவாசகர் சைவத் தலைவரில் ஒருவராக இருக்க அவரைச் சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் கூருதது ஏன் ? பெரியபுராணம் பாடாததேன் ? இதனை ஆதாரமாகக்கொண்டு மணிவாசகர் மூவருக்கும் பிற்பட்டவர் எனக் கால ஆராய்ச்சி முடிவுகூறுவர். சேக்கிழார் பாடாததற்குக் காரணம் திருத்தொண்டர் திருவந்தாதியில் பாடப்பெறவில்லை என்பதும் திருவந்தாதியில் பாடப் பெருத காரணம் சுந்தரர் தொகைநூலில் மாணிக்கவாசகரைப் பற்றிய குறிப்பு இல்லாமையே என்பதும் அறியற்பாலது. சரியை கிரியை யோக ஞானத்தை 16 வகையாகப் பிரித்தார்கள். அவற்றுள் இன்னும் உட்பிரிவுகளாக்கி நோக்கின் 64 பிரிவுகளாகும். அவை 63 நாயன்மார்களையும், அறுபத்து நான்காமவராக மணிவாசகரையும் குறிப்பனவாகக் கொள்ளலாம். மணிவாசகரின் பெருமை, அவர் பாடிய திருக்கோவையார், திருவாசகத்திலே விளங்குகிறது. திருவிளையாடலில் நான்கு திருவிளையாடல்களைக் கூறுகிருர் பரஞ்சோதி முனிவர். ' மண்சுமந்த படலம் ' ஒன்று. மாணிக்கவாசகர் அமாத்தியப் பிராமண வகுப்பினர் எனவும், மூன்ரும் நூற்ருண்டினரேனவும் இவர் பொருட்டு இறைவன் மண் சுமந்தார் எனவும் அறிவோம்.

அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சராக அமைந்தார் மாணிக்கவாசகர். நிலைத்த பொருள் நிலையாத பொருள் எனப் படுகின்ற பொருள்களின் உண்மையினை உணர்ந்தவர். அரிமர்த்தனன் குதிரை வாங்கிவரச் சொன்ன பொருளினை இறைவனுக்குரிய திருப்பணியிலே உளங்கொண்ட மணிவாசகர் அப்பணிக்கே செலவிட்டுவிட்டார். மணிவாசகருக்கு மன்னன் பிறநாட்டின்மேல் போர் தொடுக்க எண்ணுவது பிடிக்கவில்லை. மக்களின் அழிவும் போரின் கொடுமையும் கூடாது என்று எண்ணும் மனப்பண்பு அவருக்கு இருந்தது. 1800 ஆண்டுகளுக்கு முன்னே இருந்த மாணிக்கவாசகப் பெருந்தகையின்

கொள்கை இன்று நாம் பேசுகின்ற பஞ்சசீலக் கொள்கை யாயிருந்தது. இரண்டாவதாக இறைவன் திருப்பணி-அதாவது அரசன் அளித்த பொருள் அனைவருக்கும் பயன்படவேண்டும் என்ற எண்ணத்தால் கோயில் எடுத்தனர். ஆதி சைவனுய் இறைவனே வந்து குருவாக உபதேசிக்க சமயாசாரிய மூர்த்தி யாக மாறிவிட்டார். திருப்பெருந்துறை ஆவுடையார் கோயிலில் இறைவன் மணிவாசகருக்கு உபதேசிக்க எண்ணித் தென்முகப் பெருமானுக எதிர்நோக்கி இருந்தார். "மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்றபடி 'மூர்த்தி, தலம், தீர்த்தம்' முறை யாய்த் தொடங்கிய மாணிக்கவாசகருக்கு இறைவன் குருவாகத் தோன்றி அருளினன். மணிவாசகப் பெருந்தகையும் இறை வனை உணர்ந்து அடிகளிலே வீழ்ந்து வணங்கினுர்; 'மணி வாசகர்' என்று இறைவனுல் பெயர் பெற்றுர்.

மன்னனுக்குத் தெரிந்தது; மணிவாசகர் குதிரை வாங்க வில்லை, இறைவன் திருப்பணியிலே ஈடுபட்டுவிட்டார் என்பது. சினந்தான்; அவரைக் கொணர ஏவினுன் தன் ஏவலரை. ஏவலர் சென்று சொல்ல, மணிவாசகர், 'தாம் பின்னே வருவதாக ஓலை அனுப்பினுர். தம் கட்டளையை மதிக்கவில்லை மாணிக்க வாசகர் என்றெண்ணினுன் மன்னன். குதிரை அல்லது பணம் வேண்டும் என்று அரசன் முடிவு தந்தான். இறைவன் அருள் மணிவாசகருக்கு நிறைந்திருந்தது. இறைவன் தானே குதிரை வலவனுக அரசன்வக்கு வந்தார். குதிரைகளின் பலவகை அழகுகளையும், இலக்கணங்களையும் விரித்தார். நரியைப் பரியாக்கித் தந்தார். மறுநாள் அவை நரியாகமாறி ஓடிவிட்டன.

வையையாற்றில் வெள்ளம் கரை புரண்டது. வெள்ளத்தைத் தடுக்க அரசன் எண்ணினுன் வீட்டுக்கொரு வீரன் அணை போட வந்தாகவேண்டும் என்று ஆணையிட்டான் நாட்டு மக்களுக்கு. வந்தி என்பாள் ஓர் கிழவி; துணையற்றவள். பிட்டு விற்று உயிர்வாழும் ஏழை. அவளுக்கு என்று அளந்து கொடுக்கப்பட்ட பகுதியை யார் அடைப்பார்கள். திக்கற்றவர் களுக்குத் தெய்வமே துணை அல்லவா? அவள் இறைவனை வேண்டினுள். ஆண்டவனிடம் தெரிவித்துக்கொண்டால் குறை நிவர்த்தியாகும் என்ற எண்ணம் அவள் நெஞ்சிலே மேலோங்கி



நின்றது. இறைவன் வந்திக்கு அருள்செய்ய ஓர் ஆளாக வந்தான். வந்திக்கிழவி தந்த பிட்டினை உண்டான். தென்ன வனுய், உலகாண்ட திரு ஆலவாய்ப் பெருமான் ஓர் ஏழை தரும் பிட்டினைப்பிட்டுண்டான். இதனை அழகாகப் பாடுகிருர் பரஞ் சோதி முனிவர். ஆளாக வந்த இறைவன் கரைக்கு அணை போடச் சென்றதும் அங்குப் பாண்டியனுல் பிரம்படி பட்டதும் நாடறிந்த வரலாறு. அவர் மேல் அடித்த அடி பாண்டியன் மேல் பட்டதாம்; எந்த உயிர்மேலும் பட்டதாம். இது எங்கும் இறைவன் நிறைந்திருக்கும் தன்மையை நமக்குணர்த்து கிறது. இறுதியில் ஒரு கூடை மண்ணைத் தம் தலையிற் சுமந்து கரையிற் கொட்ட எங்கும் வெள்ளம் தடைப்பட்ட விந்தையினை நாம் அறிவோம். இத்திருவிளையாடல் யார்பொருட்டு நிகழ்ந்த தென்ருல் மணிவாசகர் பொருட்டு இறைவன் நிகழ்த்தியதாகத் தான் தெரிகிறது. இதனையறிந்த மன்னவன் அவர் காலில் வீழ்ந்து வணங்கினுன். 'பண்சுமந்த பாடல் பரிசு' என்ற பாடலில் மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத் துண்டு என்று கூறப்படுகிறது. 'நரியைப் பரியாக்கி' என்று நாவுக்கரசர் பாடுதலின் மணிவாசகர் அவருக்கு முந்தி இருந்தார் என அறியலாகும்.

தருமை யாதீனப் புலவர், வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் (திருவையாறு) "திருக் கோவையார்" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றியதன் சுருக்கம்.

திருவாசகத்தை அருளிய பெருந்தகையார் அருளியதுதான் திருக்கோவையார். பரம்பொருளே மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையாரை எழுதிய பெருமான். 8-ஆம் திருமுறையில் உள்ளது திருக்கோவையாரும் திருவாசகமும். ஞானப்பகுதி, சரியைப்பகுதிகளை விளக்குகின்றன. ஞானமார்க்கம், சகமார்க்கம் சற்புத்திரமார்க்கம் என்பவைகளில் சன்மார்க்கத்திற்கு அப்பாற் பட்டது சகமார்க்கநெறி. சகமார்க்கமே யோகமார்க்கம். அதற்கு மேலானது ஞானமார்க்கம். 'எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே' என்ப்பாடுகிருர் மாணிக்கவாசகர். மெய்ஞ்ஞானத் துறையை விளக்குவனவே மணிவாசகரின் நூல்கள். கோவைத் திருவாசகத்தைச் சொல்லும்போது "சிறைவான்

புனற்றில்லைச் சிற்றம்பலத்து மேன் சிந்தையுள்ளும்'' என்ற பாடலில் '' ஒண்டீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ '' என்று தமிழின் பெருமை பேசப்படுகிறது. தமிழ் ' ஒண்தீந் தமிழ் ' தமிழ் என்ருல் இனிமை என்று பொருள். அடைச் சிறப்பு அதன் சிறப்பை அதிகரிக்கிறது. தமிழிலக்கியம் அகம் என்றும் புறம் என்றும் பேசப்பெறும். அகத்துறை, புறத்துறை எனத்துறையமைத்தார்கள் தமிழர்கள். துறை என்பது வாழ்க்கை நெறியைத்தான் குறிக்கிறது. சிற்றின்பம் பேரின்பம் என்ற பாகுபாடுடையது அகத்துறை. தலைவனும் தலைவியும் அதில் பேசப்படுகின்றனர். பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் கொண்ட தன்மையை விளக்க ஒழுக்கவகையிலே நிறைந்த தலைவனும் அவ்வகையிலே சிறந்த தலைவியும் அகத்துறை களிலே அழகுறப் பேசப்படுகின்றனர். கோவைகள் அரசன் பெயரால் - சிறு தலைவர்கள் பெயரால் எழுதப்படுகின்றன. ஆனல் திருக்கோவையார் - தலைவன், அரசன் பெயரால் கூறப் படவில்லை. திரு. கோ. ஆர் என்ற மூன்று சொற்களாகப் பிரித்து அதன் பொருள் கூறப்படும். அன்றியும், திரு - கோவை - ஆர் என்று பிரித்து திரு - மோட்சம் - பேரின்பம் - அதைக் கூறுகின்ற கோவை என்று பொருள் கூறி ஆர் சிறப்பு விகுதி என்றும் கூறலாம். கோத்தல்தான் கோவை. இதில் தலைவன் தலைவியர் அகவொழுக்கத்தைக் களவு கற்பு என்று கோத்து வைத்தனர். நான்கு நிலனும் ஐவகை ஒழுக் கமும் பயிலப்பாடினர். கைக்கிளை முதலாக உள்ள எழுதிணை யுள் நடுவணதாகிய ஐந்திணையைக் கூறுவது கோவை நூல். தலைவனும் தலைவியும்.

'' மக்களோடு மகிழ்ந்து மனையறங்காத்து
மிக்க காம வேட்கை தீர்ந்துழி
……………தம்பதி நீங்கித் துறவறம் காப்பார்கள் ''

என்று கூறுகிறது தொல்காப்பியம். துன்பத்தைப் போக்கி இன்பத்தைப் பெறுவது அன்பால். அன்பு வாழ்வைக்கூறு வதே அகத்துறை. அகம் என்பதற்கு, இன்பம், உள் என்று பொருள் வழங்குகிறது. ஆண்டவனைக் காணுதற்கு அகம் வேண்டும். ஆண்டவன் எழுத்தின் வடிவாய் இருந்து நாதாந்த மாய் நடிக்கும் நம்பன்.



'' ஈதலறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள்………
காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்
இம்மூன்றும் விட்டார் பரமனுக்கு வீடு ''

என்று அழகாக எடுத்துரைக்கிருர் ஔவை மூதாட்டி. தலைவன் தலைவியராக வாழ்ந்து இறுதியில் அறம்பொருள் இன்பத்தை விட்டார் பரமனுக்கு வீடாவர் என்று அழகாகக் கூறுகிருர். திருச்சிற்றம்பலத்தில் ஆடுகின்ற இறைவனைப் பாடுதலின் அப்பெயரால் திருச்சிற்றம்பலக் கோவை எனவும் வழங்கும்.

திருக்கோவையார் 25 வகைப்பிரிவினதாய 400 பாடல் ளுடன் இலங்குகிறது. அதன் பெருமையை ;

'' ஆரணங்கா ணென்பார் அந்தணர் போகியர் ஆகமத்தின்
காரணங்காணென்பர் காமுகர் காமநன்னூலதென்பர்
ஏரணங்கா ணென்ப ரெண்ணரெழுத் தென்பரின் புலவோர்
சீரணங்காகிய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே ''

என்று பாடப்படும் பாடலால் உணரலாம். சிற்றம்பலம் சிதம்பரம் என வழங்குகிறது. அன்று அதற்கு வழங்கிய பெயர் தில்லை என்பதாகும். கோயில் என்ருல் அது தில்லைக் கோயிலைத்தான் குறிக்கும். நோக்கரிய நோக்காய்நுணுக்கரிய நுண்ணுணர்வாய் அறிவினுக்கறிவாய் அப்பாலுக்கப்பாலாய்' இருக்கும் இறைவனை - பரம்பொருளை விளக்கும் தன்மை யுடையது கோவையார். முதற் பாடல், '' திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லை '' என்பது நான்கு திணையும் ஐவகை ஒழுக்கமும் இப்பாடலிலே குறிக்கப் பட்டுள்ளன. நூல் அமைப்பில் இது நாடக முறையில் அமைந்தது. தலைவியைத் தலைவன் காணுகின்ற காட்சியே முதற்பாடல். கோவையில் கிளவித்தலைவன், பாட்டுடைத் தலைவன் என இருவர் பாராட்டப்படுவர். இறைவனையே தலைவனகக் கொண்ட இந்நூல் அவன் புகழைப் பலபடியாகக் கூறுகிறது, ' வருங்குன்ற மனையான் ' எனப் பேசுகிறது.

தேர்வண்டு குறைதரு கொன்றையான் சிற்றம்பலத்தைப் பாடுகின்ற கோவையார் பலவாறு இறைவனைப் பாடுதலைப் பார்க்கலாம்.

" சிந்தாமணி தெண்கடலமிர்தந் தில்லையானருளால்
வந்தாலிகழப் படுமே மான் விழி மயிலே
யந்தாமரை யன்னமே நின்னை யானகன்ருற்றுவனே "

என்று பாடுகிருன் தலைவன். காமத்தால் துன்புறுகின்ற தலைவன் கடலை விளித்து வருந்திப்பாடுகின்ற பாடல் மிக அழகாக அமைந்தது. அழிவேண்முரசோன் மன்மதன். ஏ ! கடலே நீ இவ்விதம் இரைந்து இரைந்து வருத்தும் கொடுமையால் அன்று மன்மதனை இழந்தாய், திருமகளை அமுதத்தை இழந்தாய், மதியினை இழந்தாய் என்று கூறுகின்ருன். தலைவன் பண்பு சிறப்பாகக் கூறப்படுகிறது கோவையில். இல்லறச் சிறப்பால் இறைவன் திருவருளைக் காட்டுவது திருக்கோவையார்.

மதுரவாய் மொழிக் குழல்மொழி அம்மையும் ஆண்டவனும் பேரின்ப முத்திதரும் பரம்பொருள். வாழ்த்துதற்கு உரியவன் இறைவன்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Velur Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கட்டளைப் பிரகாரம் இன்று ஸ்ரீ வைத்தியநாதசுவாமி, தையல்நாயகி, செல்வமுத்துக்குமரர் அருமையான தரிசனம் கிடைக்கப்பெற்ருேம். தருமபுரம் ஆதீனம் தேவஸ்தானம் என்ருலே போதுமானது. திருக்கோவிலும் அதைச் சுற்றியும் எங்கும் சுத்தமும் நிர்வாகத்திறமையும், கட்டளைத் தம்பிரான் ஸ்ரீ சுவாமிகள் அவர்கள் அன்பும், ஆர்வமும், கடவுள் பக்தியும் தேவஸ்தானம் சிப்பந்திகள் தம்தம் கடமை யுணர்ச்சியும் எழுதும் தரமன்று. இன்று தரிசனம் என்றும் மறக்கற்பாலது.

குமரகுருபரன் (பி. ஏ., பி. எல்.)
வக்கீல்,
ஸ்ரீவைகுண்டம், 22-7-58.

# சிற்றிலக்கியம் 1

திரு. மது. ச. விமலானந்தம் எம். ஏ.,
தமிழ்த்துறை, சரபோஜி அரசர் கல்லூரி, தஞ்சை.

காதல் என்றதும் இற்றைநாளில் மக்கள் மனத்தில் ஒருவித கசப்பும் வெறுப்பும் தோன்றுவதைக் காண்கின்ருேம். காதல் என்பது என்ன? கள்ளமில் உள்ளத்தில் தோன்றும் அன்பு உணர்ச்சியே அன்புமுதிர்ச்சியே காதல்; உணர்வும் அறிவும் ஒன்றிய நிலையே காதல் எனலாம். தாய், தந்தை, தங்கைபால் உண்டாகும் அன்பு ஒருவகைக்காதல். தனது மக்களிடத்து உண்டாகும் அன்புநிலை ஒருவகைக் காதல். மனைவிபால் தோன்றும் பற்று வேறு ஒருவகைக் காதல். இங்ஙனம் அனைத்திற்கும் அடிப்படை அன்பே. அந்த அன்புநிலையிலே சிற்சில வேறுபாடு. அவ்வளவே வேறுபாடு உண்டு ஆனல் வேற்றுமையில்லை எனினும் ஆணும் பெண்ணும் எதிர்ப்பட்டு இன்னதென்று எடுத்தியம்ப இயலாத ஓர் இன்ப நிலை எய்துகின்றனர். இந்நிலையையே நாம் பெரிதும் காதல் எனக் கொள்கின்ருேம்.

இவ்வன்பு பிறவிதோறும் தொடர்ந்து வரும் என்பது பண்டுதொட்டு பெரியோர்கள் கொண்டுள்ள நம்பிக்கை. இவ்வாறு வரும் அன்பே நல்லூழின் காரணமாகத் தலைவனையும் தலைவியையும் கூட்டுவித்து ஒன்றுபடுத்துகின்றது என்பர். இதனைச் சங்கப் பாடல்கள் செம்மையாக விளக்குதல் காண்க.

முன்பின் அறியாத தலைவனும் தலைவியும் எதிர்ப்படுகின்றனர். ஊழ்வினை காரணமாக அவர்களையுமறியாதே அன்பு கொள்கின்றனர். நீண்டநாள் பழகியவரிடத்தும் உண்டாகாத தலையாய நிலையாய தனியன்பு உண்டாகின்றது. இப்பரந்த உலகில் எத்தனையோ எழிலரசிகளைக் காண்கின்ருேம். ஆனல் இவள்மாட்டு இத்தகைய அன்பு தோன்றக் காரணம்யாது? என வியக்கின்ருன் தலைவன். என்னுடைய தாயும் நின்னுடைய தாயும் என்ன உறவுடையார்? ஒருறவுமிலரே! என் தந்தையும் நின்தந்தையும் எவ்வகையிலேனும் நட்போ, உறவோ

உடையரோ என்றல் அதுவுமில்லை. அட அதுதான் போகட்டும், நாமாவது முன்பின் பழக்கமுடையோமா அதனல் அன்புண்டா யிற்று என்று கூற அதுவுமில்லையே! இங்ஙனமாக, செம்மை யான நிலத்தின்கண் பெய்தநீர் அந்நிலத்தோடு ஒன்றி இயைவது போல் நம்மிருவரது அன்புடை நெஞ்சமும் ஒன்றினதே, இஃதென்னே! என்கிறன் தலைவன்.

" யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே. (குறுந். 40.)

இவ்வுவமையினைக் கடந்து ஒப்பில் கபிலன் ஓர் உவமை யைத் தீட்டுகின்றன். எங்கோ ஒரு தடாகத்தில் தாமரைப் பூக்கின்றது. எங்கோ ஒரு காட்டில் சந்தன மரம் வளர்கின்றது. இயற்கையின் விந்தையால் இவ்விரண்டும் ஒருங்கு சேர்கின்ற தாம். இரண்டின் தாதையும் ஒருங்குசேர்த்து ஒரு தேன்கூட்டைச் சந்தன மரத்தில் கட்டுகின்றதாம். இவ்வாறுதான் இயல்பிலேயே தலைவனும் தலைவியும் ஒன்றிய உள்ளத்தினராகின்றனராம்.

" தாமரைத் தண்தா(து) ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போல " (நற்றிணை 1)

தலைவன் தலைவியரிடையே மறைந்திருந்த காதல் தக்க பருவத்து ஞாயிற்றைக்கண்ட தாமரை போன்று மலர்கின்றது. ஊழால் கூட்டப்பட்டார் எதிர்ப்படுங்காலை வெளிப்படுகின்றது. கண்டதும் காதல்கொண்டு, பண்டைய மனவுறுதியும், எத்தகைய துன்பத்தையும் தாங்கி இன்பம் காணும் வித்தக வலிமையும் பெறுகின்றனர். என்னே காதலின் சக்தி! இந்நிலையைக் கன்னித் தமிழுக்குக் கலைக்கோயில் கட்டிய கம்பன் அழகாக சித்தரிக்கின்றன் பாருங்கள்,

மிதிலைமாநகர் வீதிதனில் கோசிகமாமுனி முன்செல்ல, இளவல் இலக்குவன் பின் தொடர இலக்கிய நாயகன் இராமன் வருகின்றன். அழகின் எல்லை அன்பின் உருவமான சீதை கன்னிமாடத்து உப்பரிகைமீது நிற்கின்றள். ஒருவரை யொருவர்



கண்டுவிட்டனர்..........நிகழ்ந்ததுதான் என்ன? அண்ணலும் நோக்கினன், அவளும் நோக்கினள். கண்ணோடு கண்ணினைக் கவ்வின. ஒன்றையொன்று உண்ணவும் நிலைபெருது உணர்வும் ஒன்றினவாம்.

" எண்ணரு நலத்தினள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணினை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெருது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள் "
(பால. மிதிலை - 35)

இத்தகைய காதல் வாழ்வின் காட்சியினையும் மாட்சியினை யும் வகுத்தும், தொகுத்தும் துறைபல அமைத்தும் அகப்பொரு ளென நெறிப்படுத்தினர் பண்டைத் தமிழர். அங்ஙனம் அமைந் தனவே தற்போது நமக்குக் கிடைக்கும் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் ஏனைய பிறவும். இக்காதலின்பம் புறத்தே இஃதென எடுத்துரைக்க இயலாது அகத்தே நுகர்ந்து இன்ப மடைவதொரு பொருளாதலின் இதனை அகப்பொருளென்றனர். மணவினைக்கு முற்பட்ட ஒழுக்கத்தினைக் களவு என்றும், மணவினைக்குப் பிற்றைஞான்று நிகழும் ஒழுக்கத்தினைக் கற்பு என்றும் இருவகைப் படுத்துவர்.

களவொழுக்கமாவது அடுப்பாரும் கொடுப்பாருமின்றித் தலைவனும் தலைவியும் தாமே அன்புற்றுப் பிறரறியாது மறைந் தொழுகுவதாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே பிற்காலத்துக் காதல் சிற்றிலக்கியங்கள் தோன்றலாயின. சங்கப் பாடல்கள் யாவும் காதல் வாழ்வு நிகழ்ச்சிகளை - சில வற்றைக் கூறும் சிறியதொரு சொல்லோவியமேயெலாம் ஆனல் காதல் பிரபந்தங்களோ ஆதி முதல் அந்தமீறுகக்கூறும் சிறு காப்பியமாகும். "இங்ஙனம் அகப்பொருளை அடிப்படையாகக் கொண்டு காதல் சிற்றிலக்கியங்கள் காதல் என்ற தலைப்பிலேயே தோன்றிய சிறப்பு தமிழ்மொழிக்கே உரிய ஒன்றாகும்."

இங்ஙனம் தோன்றிய காதல்சிற்றிலக்கியங்கள் சில தெய்வங்கள்மீதும், சில குறுநில மன்னர்கள்மீதும், சில சான்றோர்கள் பற்றியும் பாடப்பெற்றனவாக அமைந்துள்ளன. தெய்வங்கள்மீது பாடப்பெற்றனவாக "திருமலைக் கருப்பன்

காதல்'' 'பழனிக்காதல்'' என்பனவாகும். இராசவல்லிபுரத்துவள்ளல் முத்துசாமிப்பிள்ளைபற்றி அழகிய சொக்கநாதப்பிள்ளை செய்த "முத்துசாமியாப்பிள்ளைக்காதல்,'' கொங்குநாட்டுப் பழையகோட்டைப் பெருநிலக்கிழாரான நல்லதம்பிசர்க்கரை மன்ருடியார்மீது வீரபத்திரக்கவிராயர் பாடிய "மன்ருடியார் காதல்'' பொரையார் வைரவநாடாரைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டு சரவணப்பெருமாள் கவிராயர் கட்டிய "வைரவநாடார் காதல்'; பெரியசாமி சேர்வை செட்டிநாடு தந்த செந்தமிழ்ச் செல்வர் - தமிழ்ப் பெருவள்ளல் - பெத்தாச்சி செட்டியார்மீது பாடிய 'கர்த்திரச மஞ்சரி' இதுவன்றி 'முத்து இருளப்பப் பிள்ளைக்காதல்', 'கன்னிவாடி ஜமீந்தார் காதல்' ஆகியன வள்ளல்கள் மீதும், பெரியார்கள் மீதும் பாடப்பட்டனவாகும்.

காதல் இலக்கியங்கள் பலதோன்றி இருப்பினும் இதுபற்றிய இலக்கணம் ஏதும் எந்நூலிலும் கூறப்படவில்லை. சிற்றிலக்கியங்களின் இலக்கணம் கூறும், பன்னிரு பாட்டியல், பிரபந்தத்திகை, நவநீத பாட்டியல், வச்சணந்திமாலை, இலக்கண விளக்கப்பாட்டியல், முதலியனவாம். இவை ஒன்றிலேனும் காதற்பிரபந்தம்பற்றிப் பேசப்படவில்லை. எனவே நாம் காதல் என்ற பெயரமைதியினின்றே இதனது இயல்பையும் ஏற்றத்தையும் அறியவேண்டியவர்களாயுள்ளோம். பிற்காலப் புலவர்கள் கடவுளர்மீதும், பெரியார்கள்மீதும், பாடிய பலவகைப்பட்ட சிற்றிலக்கியங்களை 96 வகையாகப் பாகுபாடு செய்தனர். ஆனல் இற்றைநாளில் நூற்றுக்கும் மேற்பட்டனவாகப் பிரபந்தங்கள் தோன்றியுள்ளமை கண்கூடு. இலக்கியங்கள் காலப்போக்கில் இலக்கண வரம்பைக் கடந்து தோன்றுவதும், பிற்கால இலக்கண ஆசிரியர் இவ்விலக்கியங்கட்குப் புதுவதாக இலக்கணம் அமைப்பதும் வளருமொழி அனைத்திற்கும் உரிய ஒன்றாகும். ஒல்காப்புகழ் தொல்காப்பியரும் புதுவதாகத் தோன்றும் இலக்கியங்களைத் தழுவிக்கொள்ள 'விருந்து' என்ற வகையினைக் கூறியுள்ளமை அறியத்தக்கது. அம்முறையிலே இலக்கண எல்லையைக் கடந்து தோன்றியனவற்றில் காதல் சிற்றிலக்கியமும் ஒன்றாகும். கவிஞர்தம் கற்பனைக்குக் கங்கு கரையுண்டோ?

காதல் இலக்கியங்கள் தோன்றிய காலம் இன்னதென்று அறுதியிட்டு உறுதி கூறுதற்குச் சான்றேதுமில்லை. எனினும்



இலக்கிய வரலாற்றை ஆராயுங்காலத்து, 17, 18ம் நூற்றாண்டுகளிலே இந்நூலியற்றுவதில் புலவர் பெருமக்கள் நாட்டம் செலுத்தினர் எனக் கூறலாம். காதல் இலக்கியங்களில் காலத்தால் பழமையானது. 'கூளப்ப நாயக்கன் காதலே' 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே எழுந்ததாகும்.

இதனையாத்தவர் 'சுப்பிரதீபக்கவிராயர்'. மதுரை மாவட்டத்துத் திருமங்கலம் என்ற ஊரினர். பரஞ்சோதி முனிவரின் மாணவர் என்று கூறுவர்.

"கோமுனிவர் கொண்டாடும் கூடற் பரஞ்சோதி
மாமுனிவர் செம்பொன் மலர்ப்பாதம் நான்மறவேன்''

என்ற அடிகளைச் சான்ருகக் காட்டுவர். கூளப்ப நாயக்கனே பாட்டுடைத் தலைவன். மதுரை மாவட்டத்து நிலக்கோட்டையை ஆட்சி செய்தவன். இதனைக் கவிராயரே.

"கற்கோட்டை என்றவர் மேல் கண்சிவந்து
கண்டவர் செம்பொற் கோட்டை என்னபுகழும் நிலக்கோட்
டையினுன்

என்று பாடுகின்ருர். இந்நூலினுள் இவன் நாகம கூளப்பன், பெரிய நாகேந்திரன், பெரிய நாகன் என்ற பெயர்களிலே அழைக்கப் பெறுகின்ருன். இவன் திருமலை நாய்க்கனின் மைத்துனன் என்பர். இந்நூல் இரண்டிரண்டு அடிகளையுடைய 374 கண்ணிகளைக் கொண்டிலங்குவதாகும்.

காதற் பிரபந்தங்களிலே முதன்மையும் தொன்மையும், எளியதும் இனியதுமாயது கூளப்ப நாயக்கன் காதலே. இதனைத் தழுவியே ஏனைய புலவர்களும் காதலிலக்கியம் செய்தனரேன்ருல் இதனது அருமையையும் பெருமையையும் என்னென்பது? காதலிலக்கியங்களின் கதையமைப்பைக் காண்பதற்குக் கூளப்ப நாயக்கன் காதலே சிறந்த எடுத்துக்காட்டாகும். இனி கதையமைப்பைக் காண்போம்.

பாட்டுடைத் தலைவன் பரிவாரங்கள் புடைசூழ வேட்டைமேற் செல்கின்ருன். நிமித்தங் கூறுவான் நடுவழியிற் கண்டு, காவலனுக்கு முழுவேட்டை கிடைப்பதோடு கன்னி வேட்டையும்

கிட்டுமெனக் கூறுகின்றான். காட்டைக் கலைத்து வேட்டையாடுகின்றனர். அகப்படாத விலங்கும் அகப்படுகின்றது. ஆனால் மானொன்று மட்டும் தப்பியோடுகின்றது. மானைத் தொடர்ந்தான் மன்னன். மானைத்தொடர்ந்தான் என்றதும் இராமன் தொடர்ந்த மான் போன்றா? என்று மருள வேண்டா. அம்மான் அறிவரிய பெம்மானைச் சிறையிருந்த செல்வியிடமிருந்து பிரித்தது. ஆனால் இம்மானோ கோதையொருத்திபால் கூட்டுவித்தது. மானைக் கொன்று மலர்ச்சோலையிலே இளைப்பாறுகின்றான் மன்னன்.

மலர் கொய்துவந்த தன் தோழியரைப் பிரிந்து வந்தாள் ஒரு பாவை நல்லாள். காவலனும் கண்டுவிட்டான். மாதோ? மடமயிலோ? அன்றி தேவமாதோ? என்று ஐயுற்றான், எனினும் கண்ணிமைத்தலாலும் கால்நிலந்தோய்தலாலும் மண்ணக மடந்தையே என மனந்தேறினான். பாவையோடு பேச வேண்டுமென்ற ஆசை! ஆவலோடு ஊரேது? பேரேது? என வினவுகின்றான். பாவை நல்லாள் பதிலுரைத்தாளில்லை. வார்த்தையொன்று பேசலாகாதோ என்றுகொஞ்சினான். மிஞ்சினாள் தலைவி. எனவே கன்னியின் கட்டழகைப் பாராட்டிக் காந்தர்வ மணத்திற்கு இசையச்செய்கின்றான் காவலன்.

இதற்குள் வேங்கைநகர் வேந்தனைப் பிரிந்த வீரர்கள் தேடி வந்தனர். அரசனை அழைத்துக்கொண்டு அணிநகர் சேர்ந்தனர். தலைவனைப் பிரிந்த தலைவி அழுதாள், விழுந்தாள், எழுந்தாள். என்செய்வது? மன்னனைப் பிரிந்த மயக்கத்தால் மூர்ச்சையுற்று விழுந்தாள். அதற்குள் தலைவியைப்பிரிந்த தோழியரும் வருகின்றனர். நங்கையின் நிலைகண்டு நடுங்கினர். தூக்கமோ? அல்லது துணைவியரைப் பிரிந்த ஏக்கமோ? என்று ஆற்றுகின்றனர். குறிப்பு சிலவற்றால் தலைவனைப் பிரிந்தமையே தக்க காரணமெனத் தெளிந்தனர். பெற்ற தாயும் உற்றதறிந்து ஓடோடி வருகின்றாள். உவகையடைகின்றாள். அதுசமயம் மங்கையை மணம்பேசத் தூதுவனை அனுப்புகின்றான் அரசன். சேய்க்கு வரும் சிறப்பறிந்து சிந்தை மகிழ்கின்றாள் தாய். மகளைத் தேரிலேற்றி தலைவனிடம் அனுப்பிவிட்டு அகமகிழ்கிறாள். மங்கையை மணந்து மக்களைப்பெற்று மாண்போடு மனைவினை நிகழ்த்துகின்றான் மன்னன். கதையும் முடிந்தது காப்பியமும்



“ பெஞ்சை நகர்வாழி பெரிய நாகேந்திர துரை
கஞ்சமலர் மாது கருணை பெற்று வாழியவே!”

என்ற வாழ்த்தோடு முடிகின்றது.

கதையமைப்பு கண்டோம், இனி கவிநயம் காண்போம். கவிச்சுவையும் கவிதையழகும் பெற்றிலங்குவன காதற் பிரபந்தங்கள். தெள்ளுதமிழிலே துள்ளுநடையிலே அமைந்து, உவமை நயமும் ஒப்புமையாக்கமும் நிறைந்து விளங்குவன. நயங்காணும் முறையினை நான்கெனக் கூறுவர் வடமொழியாளர். பொருட்செறிவுகண்டு திராக்ஷா பாகம், க்ஷீரபாகம், இக்ஷுபாகம், நாரிகேளபாகம் என்ற நால்வகையே. திராட்சைக் கனிகள்போல் எளிதில் சுவைத்து இன்பம் நுகரப்படுவது திராட்சாபாகம். இதனைத் திராக்ஷாபாகம் என்பர். சில தோலையுரித்து சுவைக்கத் தக்க வாழைக்கனி போன்றன. சில பலாக்கனிபோன்று சுளையைப் பிய்த்து, நரம்பினை நீக்கிச் சுவைப்பதுபோன்றன. மட்டையை உரித்து, ஓட்டையுடைத்து பருப்பை எடுத்துக் கடித்துச் சுவைத்தாலன்றி சுவைகாண இயலாததே மாங்கனி போன்றன சில கண்ணிகள். இவை நான்கிற்கும் நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்கி இன்பம் தருவன இக்காதற் பிரபந்தங்களாகும். கண்ணிசில கண்டு களிப்பெய்துவோம்.

(தொடரும்.)

ஞானசம்பந்தம்

[ சந்தாதாரர்களுக்கு ]

புதிய சந்தாதாரர்களாகச் சேர்பவர்கள் புதிய சந்தா என்பதோடு தங்களின் முகவரியையும் தெளிவாக மணி யார்டர் கூப்பனில் எழுதவேண்டும். பழைய சந்தாதாரர் புதிய ஆண்டுக்குப் பணம் அனுப்பும்போது பழைய சந்தா என்று குறித்தல் வேண்டும்.

ஏதேனும் விவரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் பதில் எழுதுவதற்குப் போதுமான தபால் பில்லை அனுப்புதல் வேண்டும்.

செயலாளர்

ஞானசம்பந்தம் செயலகம், தருமபுரம், மாயூரம் P.O. தஞ்சாவூர் Dt.

# வாயுறை வாழ்த்து

சித்தாந்தச்செல்வர், திரு. அ. நா. ப. திருஞானசம்பந்தனார்
திருவண்ணாமலை.

உலகப் புலவரான திருவள்ளுவர் இயற்றியருளிய நூலுக்கு வாயுறை வாழ்த்து என்ற ஒரு பெயரும் உண்டு. அவருடைய நூலுக்கு இடப்பட்ட பெயர்கள் பத்தாகும். அவையாவன :— (1) திருக்குறள் (2) முப்பால் (3) உத்தரவேதம் (4) தெய்வநூல் (5) திருவள்ளுவர் (6) பொய்யாமொழி (7) வாயுறை வாழ்த்து (8) தமிழ் மறை (9) பொதுமறை (10) திருவள்ளுவப் பயன். இந்நூல் கடைச்சங்க காலத்தில் தோன்றியதாகும். தமிழகத்தில் தோன்றிய நூல்கள் எண்ணில. அவற்றுள் தலையாய இடம் உலகில் பெற்று விளங்குவது திருக்குறளே யாகும். வள்ளுவரின் பின் வந்தோர் அனைவரும் வரையாமல் அவருடைய குறளையும், கருத்துக்களையும் எடுத்தாண்டுள்ளனர். புலவர்களுக் கெல்லாம் பெரும் புலவர் திலகமாக விளங்கியவர் திருவள்ளுவரே. வள்ளுவரின் புலமையை வாய்விட்டு உரைக்க இயலுங்கொல்? அவர் வடநூல்களிலும், தென்னூல்களிலும் தேர்ந்த புலமை பெற்றவர் என்பது அவர்தம் நடைச்செறிவும் கருத்தழகும், பொருளழகும் விளக்கிக் காட்டுகின்றன.

## வள்ளுவரும் - புலமையும்

எது புலமை? பன்னூல் அறிவும், தொன்னூல் தெளிவும் கொண்டு விளங்குவதே புலமை எனப்படும். பொருள் விளங்காமல் வெறும் பாடல்களை மட்டில் மனனம் செய்து வைப்பது புலமையல்ல. நுண்ணறிவு பெருக வேண்டுமெனின் இற்றைநாளில் புற்றினின்றும் ஈசல்கள் கிளம்புவது போலத் தோன்றும் புத்தகங்களைப் படிப்பதால் புலமை பெருகாது. உயர்ந்த நூல்களைக் கற்றலால் பெருகும். தொன்மையான நூல்களை இயற்றியவர்கள் மேலெழுந்த வாரியாகத் தாங்கள் கண்டதை எழுதிவைத்துவிடவில்லை. அவர்கள் பலநூல்களை ஆய்ந்து தேர்ந்து தெளிந்து, பின் நூல் எழுதப் புகுந்தனர். அதனால் அவர்கள் நூல்களில் உயிர்நாடியான கருத்துக்களும், பொருளழகும் நிறைந்த சிறப்பு வழிகளும் உள்ளன.



## வள்ளுவரும் - நூலறிவும்

வள்ளுவரின் புலமை தெய்விகத்தன்மை வாய்ந்ததுதான்! எனினும் அவர் நூல்களைக் கல்லாமல் திருக்குறள் எழுதவில்லை. இற்றை நாளில் நூல் எழுதுகின்றவர்கள் ஈங்கொன்றும் ஆங்கொன்றுமாகக் கருத்துக்களை எடுத்துவைத்துக்கொண்டு புது மெருகிட்டு எழுதிவிட்டுத் தங்களைவிடப் பெரிய நூலாசிரியர் இல்லை என்று எண்ணி விடுகின்றனர். இது பண்டு இல்லை. உள்ளதை உள்ளவாறு ஒப்புக்கொள்கின்றவன் என்றும் வாழ்க்கையில் சிறப்பான். பிறர் எழுதிய கருத்துக்களை எடுத்துத் திரித்துத் தங்கள் சொந்தக் கருத்தாக்கி வெளியிட்டுக்கொள்வர் சிலர். வள்ளுவர் வாய்மையின் சின்னமாக விளங்கியவராதலால் அவர் தம் தெள்ளிய கருத்துக்களைப் பல நூல்களை ஆய்ந்து கேட்பார்ப்பிணிக்கக் கேளாரும் வேட்பச் சுருக்கிவிளக்கிப் பாடியுள்ளார். தாம் பல நூல்களைக் கண்டாய்ந்தவர் என்பதை வாய்மை என்னும் அதிகாரத்தில் ஓர் குறள் மூலமே விளக்குகின்றார்.

இருக்கும் பொருள் ஒன்றாக இருக்கும். காணும் பொருள் வேறாக இருக்கும். காரணம் பன்னூல் அறிவு இல்லாமையே யாகும். சிறந்த மெய்நூல்களைப் பார்ப்போர்க்கே உண்மை புலனாகும். வள்ளுவப் பெருந்தகையாளர் புகல்வதாவது மெய்நூல்களிற் பார்க்கும்போது வாய்மையினும் உயர்வாகிய அறனாக வேறு இல்லை என்பது அறியத்தகுந்தது. மெய்நூல்களாவன எவை? ஐய உணர்வும் திரிபு உணர்வும் நீங்கிய, இறைவன் திருவருட் பேற்றிற்கு உரியராய், அவர்களுடைய திருவாயினின்றும் முகிழ்த்தவையேயாகும்.

> " யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
> வாய்மையின் நல்ல பிற " (குறள் 300 அறம்)

## எது வாய்மை?

உள்ளதை இலதுபோலக் காட்டி, இல்லாததை இருக்கின்றது என்று நிலைநாட்டுவது வாய்மையாகுமா? ஒருக்காலுமாகாது! சொற்றிறமையால் சதுரங்கட்டிப் பேசுவது நீண்ட நாட்கள் நிலைக்காது. மெய்ப்பொருளுக்கு என்றும் அழிவு நேராது. ஆனால் அது உலகில் நிலைத்த இடம் பெறும் என்பதில் ஐயமும்

உண்டாமோ? பொய்ப்பொருள்கள் அந்நேரத்தில் முகிழ்த்து அனைவரையும் இன்பத்தில் ஆழ்த்துவது போல் தோன்றும். அணைகின்ற நேரத்தில் விளக்கின் ஒளி மிகுந்திருக்கும். அது போலப் பொய்ப்பொருளின் உண்மை நிலைக்கும் என்பதாம். நல்ல சொற்கள் வாய்மையின் தோற்றுவாய். மெய்யென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென வினவுங்காலத்து மற்ற உயிர்களுக்கு யாதொரு தீங்கும் நேராமல் சொல்லுதலே என்ற விடை வரும்.

" வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல் " (குறள் 291 அறம்)

### வாய்மையும் - சொல்லும்

சொல்லும் சொற்கள் பெரும்பாலும் பயன் உடையன வாகவே விளங்கவேண்டும். தாங்கள் எண்ணிய செயலை இனிதே முடிப்பதற்காகப் பேசப்படும் சொற்கள் சிறிதும் பயன் படா தொழியும் என்பது திண்ணம். மறத்தை வளர்ப்பதும் சொல்லே! அறத்தை வளர்ப்பதும் சொல்லே! வீணுகச் சொற்களைப் பேசுதல் அறத்தின்பாற் படாது. சொல்லே நன்மையும் பயக்கின்றது. தீமையும் பயக்கின்றது. நற்சொற்கள் விளம்பலே அறம் எனின் அதைவிட வேறு உலகில் சிறந்தவை எவை? எப்பொழுது பார்த்தாலும் பொய் சொல்லாதிருத்த லாகிய அறத்தை ஒருவன் செய்வானேயானுல் அவன் மற்றைய அறங்கள் நிகழ்த்தல் வேண்டாம் என்பது பெரு நாவலரின் தேர்ந்த உண்மை.

" பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று " (குறள் 297. அறம்)

### வாய்மையும் - அறமும்

ஆயிரக் கணக்கில் அன்ன சத்திரங்கள் அமைத்தலும், எண்ண முடியாத கோவில்களைக் கட்டுதலும், பெருவகையால் அறம் என்றே போற்றப்படுகின்றது. ஆனுல் சிறந்த அறம் எது? மனத்துக்கண் மாசு இலாமையேயாகும். மாசு நிறைகின்ற உள்ளத்தே நல்லெண்ணங்கள் நிலவ வழியில்லை. தூய்மை யற்ற இடத்தில் நாம் வாழ விரும்புவதில்லை. அங்ஙனமே மாசு நிறைந்த இடத்திலே இறைவனும் எழுந்தருள விரும்பான்.



அறத்தால் வருவதன்றே இன்பம்? இன்பம் விழையாதார் உலகில் உண்டோ? துன்பத்தைப் போக்கி இன்பத்தைப் பெறுவதற்கே அனைவரும் விரும்புவர். துன்பத்தில் உழல்கின்றவர்களின் துன்பம் துடைத்து இன்பத்தில் எளிய மக்களைச் சிறக்க வைப்பதற்கே அறப் புரட்சியைத் தோற்றுவித்தனர் மேலை நாட்டில். மார்க்ஸ், லெனின், டால்ஸ்டாய், ருசோ போன்ற அறப்புரட்சியாளர்கள் எழுந்தது எதனுல்? உண்ண உணவற்றுக் கிடக்கின்ற பொழுது அறம் எங்கிருந்து நிலைக்கும்? வாய்மை ஓங்குமா? சொல் சிறக்குமா? உலகில் வாழும் மக்களின் எண்ணிக்கையில், அற்றவர்களே அதிகம். அவர்களுக்கு ஆவன செய்தலே அறம் என்று கண்டனர் மேதக்க அறிஞர்கள். அவ்வறத்தைச் சிறக்கச் செய்தால் வாய்மையும் அதன் வழித் தோன்றும் அறமும் ஒளிரும் என்பதைக் கண்டனர் அறச் செல்வர்கள். அண்மையில் வாழ்ந்த பெற்றியாளரான பாரதியாரும் அறத்தின் தன்மையை எங்கே கண்டார்? பிற உயிர்கள் உண்ண உணவின்றி வாட, ஒரு தனித்த கூட்டம் மட்டில் நாட்டில் உண்டு உயிரை வளர்ப்பதைக் கண்ட அவருக்கு மனம் சொல்லொணுத் துயரில் ஆழ்ந்தது. அதன் விளைவினுல்தான் பின் வரும் கருத்து அவருக்கு எழுந்தது.

" தனி ஒருவனுக்கு உணவிலை எனில்
சகத்தினை அழித்திடுவோம் " (பாரதியார்)

தமிழகத்தில் அறப் புரட்சியைத் தோற்றுவிக்க எழுந்த பெருநாவலரும், அறத்தின் தன்மையை யோர்ந்து பேசியது காண்மின்! இந்தப் பெரிய உலகத்தைத் தோற்றுவித்தவன், இதனிடத்து வாழ்வோர்க்கு முயற்சியான் வரும் பயன்களைக் கொண்டு உயிர் வாழ்தலைப் படைத்தலோடு, இரந்தும் உயிர் வாழ்தலைப் படைத்தானுயின் அக்கொடிய மாபாவியும் இரந்து உயிர் வாழ்கின்றவரைப் போல எல்லாவிடத்தும் சென்று துன்பப்பட்டுக் கெடுவானுக என்றருளினுர் பெருநாவலர். உணவு வேண்டும் உயிர்வாழ; உயிர் சிறக்க வாய்மை வேண்டும்; வாய்மை பெருகின் அறம் மலிந்தோங்கும்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (குறள் 1062 - பொருள்)

(தொடரும்)

கடிதம் 13.

# புதுமைக்கு....

செஞ்சோற்கோண்டல்,
வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனர்
தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

அன்புள்ள புதுமை,

உன் கடிதம் கிடைத்தது. கலையுலகு பற்றிய என் கண்ணீர் உன் நெஞ்சிலும் பெருக்கெடுத்திருக்கிறது. நாம் இப்போது ஒரு நிலைக்கு வந்துவிட்டிருக்கிறோம். என் சிந்தனை உன் சிந்தனை. என் எண்ணம் உன் எண்ணம். என் வாழ்வு உன் வாழ்வு. என் தாழ்வு உன் தாழ்வு. என் சிறுமை உன் சிறுமை. என் பெருமை உன் பெருமை. இப்படி நம்மில் ஒற்றுமை உதிக்கத் தொடங்கிவிட்டது. இந்நிலையே நான் எதிர்பார்த்தது ஆகும். ஆனால் போர் வெறிபற்றி நான் என்ன கூறியும் உன் செவியில் ஏறவில்லை போலும். வீண் பொருமையும், போட்டியும், புகைச்சலுமே இக்கெட்ட மன நிலையை இன்றைய வல்லரசுகள் கையாளுவதற்குக் காரணம். நீ நிச்சயம் உணர்ந்திருப்பாயென்றே நம்புகிறேன். வல்லமையை விரிவாக்க விரிவாக்க வன்மையிலேயே நாட்டம் வளர்ந்து நன்மையிலே நாட்டம் குறைந்துவிட்டது. அமைதியான சூழ்நிலை அருகிவிட்டது. தவறு நாட்டத்தின்மேல். மனம் திருந்திஞல் வழி உண்டு. இல்லையேல் மூன்ருவது உலகப் போரையும் மூட்டிவிட்டவன் என் இளையவன் என்ற வசைச் சொல்லை உலகு உனக்கு வழங்கிவிடத் தயங்காது. என் பின்னவனுக்கு அன்னதொரு பழி வரலாகாதென்றே நினைக்கின்றேன். அதனைத் தடுக்க வழி உண்டோ என்று உன் கடிதத்தைக் கண்ட பின்னிருந்து என் உள்ளம் ஓடுகிறது. உலவுகிறது. சிந்தனைச் சிறகு கட்டிப் பறக்கிறது.

இப்போது அமைதிக்கு ஊறு விளைக்கவேண்டும் என்றெண்ணுகிறவர்கள் நாட்டில் அமைதி பற்றிய ஆசிரியன்மார் கருத்துக்கள் இல்லாமல் இல்லை. அவை மறக்கப்பட்டுவிட்டன. 'எங்கே அமைதியில்லையோ அங்கெல்லாம் அமைதிநிலவட்டும்'



என்றும்,[1] 'அமைதியை ஆக்குபவர்களே வாழ்த்துக்குரியவர்கள்',[2] என்றும் விவிலிய வேதம் கூறும் நன்மொழி விளைந்த திசை தான். அத்திசை நாடுகள்தாம் இன்று மெய்த்திசைவிட்டுப் பொய்த்திசை நாடுகின்றன. 'இறைவனை இன்புறுத்தும் செயல் அமைதியைத் தவிரப் பிறிதோன்றில்லை. இறைவன் கட்டளையை அமைதிநிலையில் இருந்து அதற்கென உழைத்து ஆற்று வோரே இறைவன் திருவுள்ளத்தை இன்புறுத்துவோர்'[3] என்று விளம்பிய வேர்ட்ஸ்வோர்த் வாழ்ந்த நாட்டில்தான் - தன் வாய் மொழியால் வாழ்வித்த நாட்டில்தான் இந்நிலை. காரணம் கேட்டால் கூறிவிடுவார்கள். 'காலம் மாறிப் போயிற்று. அவையனைத்தும் ஏட்டளவில் சுவை பயப்பனவே யன்றி வாழ்வுக்குப் பொருந்தாதன' என்று. போரும் பூசலும் பொருந்தாதன என்று புவிக்கு அறிவுரை வழங்கிய பூமியில்தான் இன்று போர்முரசு ; பயங்கர முரசு ! எவ்வளவு முரண்பாடு !

"யாரோடும் பகை கொண்டிலன் என்றபின்
போரோடுங்கும் புகழொடுங்காது"

என்று பாவலன் கம்பன் பாடிய உலக அறிவுரை எல்லோர் மனங்களிலும் எதிரொலிக்க வேண்டும். அப்போதுதான் மெய்யான வாழ்வு - உள்ள மோத்த வாழ்வு உதிக்கும். உலகு நிலைக்கும். போர் தொலையும். போர்வெறி - மண்ணுசை மாண்டழியும்.

பழய காலத்திலும் போர் இல்லாமல் இல்லை. அப்போரை வில்லேருழவர்கள் விரும்பினும் சொல்லேருழவர்கள் தடுத்து ஆட்கொண்டார்கள். போர் வெறியைப் புரவலரிடமிருந்து மாற்றி அமைதியைப் பரப்ப அறிவு படைத்தோர் ஆற்றிய அறச்செயல்களைச் சங்க நூல்களிற் காணலாம். கோவூர்கிழார் முதலிய கவிஞர்கள் அவ்வக்காலை இருபெருமன்னரிடைத் தோன்றிய பூசல்களைத் தம் உரையால் தடுத்து நிறுத்தினர்.

---

[1] 'Peace, peace, where there is no peace'

[2] 'Blessed are the peace makers' - New Testament.

[3] 'God for His service needth not proud work of human skill ;
They please Him best who labour most in peace to do his will" - wordsworth, (The poet's Dream

கோடிக்கணக்கான உயிர்களைக் காத்தனர். அந்தப் பண்பாட்டில் தான் இன்றும் இந்தியத்துணைக் கண்டம் இலங்குகின்றது என்பது பெருமைப்படத்தக்கதொன்றே.

தம்பி ! மனத்துக்கு இருநிலை உண்டு. வெறிநிலை என்றும் பற்றுநிலை என்றும். பற்றுடைய மனத்தால் நாட்டுக்குத் தீமை இல்லை. வெறி உடைய மனத்தால் நாட்டுக்குத் தீமை உண்டு. பற்றுடைய மனம் பண்பு வரையறைக்கு உட்பட்டேயிருக்கும். வெறி உடைய மனமோ பண்பு நலங்களை உணருந்தன்மையை இழந்துவிடும். முன்னது வேண்டத்தக்கது. பின்னது வெறுக்கத்தக்கது புதிய உலகு இதனை எண்ணவேண்டும். வெறிகொண்ட மனம் தானே வெந்து தணிந்தாலன்றி வழியில்லை. அதனை ஓரளவு திருத்த முற்படலாமே யன்றி முற்றும் திருத்திவிடுதல் என்பது முயற்கொம்பே- கள்ளுண்டு வெறியேறிய ஒருவனைத் திருத்தமுடியுமா ? என்ற கேள்விக்கு விடைதர முற்பட்டார் திருவள்ளுவர். காரணம் காட்டி அவனைத் திருத்தல் என்பது இயலாதது என்றார். தண்ணீருக்குள் விழுந்துவிட்டான் ஒருவன். அவனை விளக்குக்கொண்டு நீர்க்குள் தேட முற்பட்டால் எப்படியோ அப்படித்தான் அதுவும் என்று உவமை முகத்தான் விளக்கினார், ஏனெனில் வெறி உடைய மனமன்றோ அது ! அதனைத் திருத்த முற்பட்டால் ஆகாது என்பதனை எவ்வளவு சின்னஞ்சிறிய-பொருளாற் பெரிய உவமையொன்றால் விளக்கிவிட்டதுபார் குறள். அதனை இங்கு உனக்கு நினைவூட்டுகிறேன்.

"களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத் துரீஇ யற்று."

வல்லரசு மனநிலை இவ்வண்ணமே இருக்கிறது. இது திருந்தினால்தான உலகுவாழும் என்று உரைக்கவும் வேண்டுமா ?

நான் இப்போது ஒரு முக்கியமான செய்தியை உனக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னும் ஒரு சில திங்கள் என்னிடமிருந்து கடிதம் ஏதும் எதிர்பார்க்காதே. ஏனெனில் உன் போக்கில் என் கடிதங்களால் உண்டாகும் வளர்ச்சியும், வனப்பும், ஆக்கமும், ஊக்கமும் செயற்படுவதைக்கண்ட பிறகுதான் - உனக்கு விருப்பமிருந்தால் மீண்டும் எழுதத் தொடங்குவேன். அதுவரைக்கும் என் சிந்தனையெல்லாம் உன்



எதிர்காலம் குறித்துத்தான். நெஞ்சில் தூய்மையும், நினைவில் வாய்மையும், பணியில் தாய்மையும் குழைந்த அன்பு வாழ்வாக - அறவாழ்வாக - அருள் வாழ்வாக உன் எதிர்காலம் துலங்குக என்று வாழ்த்துகிறேன். மாடலன் சேரன் செங்குட்டுவனுக்குக் கூறிய அறவுரை கேட்டவுடனேயே வளர்ந்து, செழித்துத் தழைத்து விளைந்து பயன்தந்தது என்று பாடுகிறது சிலப்பதிகாரம். நான் அவ்வளவு விரைவில் என்மொழி உனக்குப் பயன்பட்டுவிடவேண்டும் என்று எண்ணமாட்டேன். ஏனெனில் நான் உன்னிடம் கண்மூடித் தனமாகப் பின்பற்றும் முறையிருந்தால் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்பது இத்தனைநாளும் பழகிய உனக்குத் தெரியும். நான் கூறியவற்றை - அவ்வப்போது சொல்லி வந்திருப்பதுபோல் சிந்தித்து முடிவுக்கு வந்தால்தான் மகிழ்வேன். அப்படி முடிவுக்கு வந்துவிட்டால் உன் போக்கில் மாற்றம் நிச்சயம் இருக்கும் என்று நினைக்கின்றேன். வாழ்வு, திருமணம், தமிழ்ப்பண்பு, தமிழ்க்கலை, திருக்குறள் வாழ்வியல் உண்மைகள், உலகநிலையில் நம் நாட்டின் பங்கு - நிலை, அருள் அற உணர்வு வாழ்வின் அடிப்படையாதல். பண்பாட்டு வளர்ச்சி என்ற பல பொருள் குறித்து அவ்வப்போது நான் என் இதயத்தை வெளிப்படுத்தியிருக்கிறேன் உனக்கு. இவையனைத்தும் உனக்கென்றே ஒளிவுமறைவின்றி ஓய்வு நேரத்தில் என்றால் சிந்தித்தெழுதப்பட்டவை என்பதும் உனக்குத் தெரியும்.

என் கடிதங்களை உன் நண்பர் சிலர் - குறிப்பாக நண்பர் புரட்சியும், நண்பர் மறுமலர்ச்சியும் அவ்வப்போது படித்து வந்ததாகவும், முதலில் அவர்கள் என் கருத்தோடு முரணினாலும் முடிவில் ஒத்துவந்ததாகவும் நீ எழுதியிருந்ததை ஊன்றி நோக்கியதில் இப்போது எனக்கு ஒன்று தோன்றுகிறது. 'பண்பாடு' என்பது என்னதான் சீரிதாயினும், கொடுக்கும் முறையில் குறைநேராதவாறு கொடுத்தல் வேண்டும் என்பது. நான் ஓரளவு பெருமிதமும் அடைகிறேன் ! 'அவரவர் பண்பறிந்து ஆற்றி, நன்றாற்றலில் தவறு நேராவகை' எழுதினேன் என்ற நினைப்பில். இனி உன் வாழ்வுபற்றிய ஆராய்ச்சி - சிந்தனையே எனக்கு. வாழ்த்துக்கள். விடைபெறட்டுமா?

உனது அண்ணன்

பழமை.

# தமிழினைப் போற்றுவாய்

திரு. இரா. நடராஜன், பி. ஏ. (ஆனர்ஸ்)
ஆராய்ச்சி மாணவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

இராகம் - கரகரப்பிரியா — தாளம் - ஆதி

முதல்நிலை

1. தமிழினைப் போற்றிடுவாய் — மனமே
அமிழ்தினின் மேலாம் இன்பம் அளிக்கும்

இடைநிலை

2. கன்னலின் தேனின் கனிகளின் நல்ல
இன்பம் சேர்க்கும் இலக்கியம் கொண்ட (தமிழினை)

இறுதிநிலை

3. அண்ணல் வள்ளுவன் அருந்தமிழ் ஔவை
தண்டமிழ் வேந்தர் இளங்கோ கம்பன்
பண்பார் செல்வன் பாரதி முதலோர்
தண்ணிய அருளோடும் தங்கி வளர்த்த (தமிழினை)

4. ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியமும்
நல்லோர் பயிலும் நன்னூல் முதலா
எல்லோர்க்கும் இனிய திருக்குறள் முதலோடும்
புல்லறி வகற்றிடும் பைந்தமிழ் அன்னையாம் (தமிழினை)

5. பலரும் போற்றிடும் பத்துப் பாட்டும்
புலவரும் விரும்பும் பதினெண் கீழ்க்கணக்கும்
சிலப்பதி காரமும் சிந்தா மணியும்
நலஞ்சேர் பெரிய புராணமும் நல்கிய (தமிழினை)

# இலக்கியமும் சிவனும்

தஞ்சைவாணன் திரு. துரை. சிவவாசகம்
Senier Inspector of C. S.

இலக்கியம் என்பது யாது என்று முற்றிலும் விளக்கிக் கூறிவிடுதல் முடியாததாகும். எனினும், இப்போது பட்டத்திலுள்ள தருமைக் குருமணியவர்கள் இலக்கியத்திற்குத் தந்துள்ள விளக்கம் இனிமை பயப்பதாய் இருக்கிறது. இதை அவர்கள் 1951-ம் ஆண்டு, சூன்திங்கள் 15-ம் நாள் திருவாய்மலர்ந்தருளினார்கள் என்று 10—12—57 நாட்குறிப்புள்ள 'ஞானசம்பந்தம்' இதழின் 35-வது பக்கம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. அது வருமாறு :-

"காவியம் காலக்கண்ணாடி; மக்கள் வாழ்க்கையைக் கணந்தோறும் உயர்த்தும் கவிந்தச்சன் வகுத்துத் தந்த கால ஏணி; பழமையான நாகரிகத்தை - பண்பாட்டை - வீரத்தை - விளக்கத்தையெல்லாம் இக்கால மக்களும் இனிவரும் சந்ததியாரும் பின்பற்றச் செய்யும் சட்டபுத்தகம்; செவி வழியாக - கண்வழியாகப் புகுந்து கருத்தைக் கதுவி நிற்கும் சுவை அமுதக்குவியல், இத்தகைய வளர்ச்சியே மனித சமுதாய வளர்ச்சி." தருமைக் குருமணியவர்கள் தந்தருளிய இந்த விளக்கம் கண்டு இன்புறத்தக்கது. இந்த விளக்கத்தின் இனிமையும் உண்மையும் என்னைக்கவர்ந்ததால் என் உள்ளத்து எழுந்த ஒருகவி இங்கே தரப்பட்டுள்ளது :

"ஆடியது முகங்காட்டி யழகுகாட்டும்;
ஆங்கதுவா யிலக்கியந்தன் காலங்காட்டும்;
கோடியது பலவாக நலங்க டோய்த்துக்
கொளுவுகவித் தச்சன்செய் ஏணிஈதும்
தேடியது தரவல்ல சித்தர் போலாம்;
சிறப்பான பண்பாட்டைச் செப்பாமன்றி
நீடியது நல்கமுத நிறையு மாகும்;
நிலையிதுவாய் மனிதவளம் நெருந்தானே"

### இலக்கியம்

இந்தப்பாடல் தருமைக் குருமணியவர்கள் தந்தருளிய கருத்தையடக்கி நிற்கிறது. இருப்பினும், பாடல் வழிப் பொருளும் பகர்தல் நலம் :

கண், மூக்கு, கன்னம் என அங்கங்கள் பலவும் காட்டி அவற்றைக்கொண்ட முகத்தின் அழகையும் பார்ப்போர் பலகால் பார்த்துப் பார்த்து இன்புறும் வண்ணம் காட்டும் இயல்பு கண்ணாடிக்கு உண்டு. அதுபோல, இலக்கியம் தானெழுந்த காலத்தின் கருத்து, நாகரிகம், காட்சி, பண்பெனும் பல பலவாம் அங்கங்களைக் கொண்டு கற்போர் கற்குந்தோறும் களிப்பு உண்டாக்குவது. சிந்தனை நலங்கள் பலவற்றில் தோய்த்துத் தோய்த்துண்டாக்கிய கவிகளை, வாசகங்களை ஏணிப்படிக் கம்புகளாக அறைந்து, கொடுமைகள் கோணல்கள் நீங்கிச் சமுதாயம் உயர்வடைய வேண்டிக் கவிஞரும் தச்சன் செய்யும் ஏணியே இலக்கியமாகும். இது மனிதர்க்கு எட்டாத பலவற்றை ஈட்டித்தரவல்ல சித்தர்போல ஏடுகள்தோறும் புதுமைகள் கொண்டு பொலிவது. பல உண்மைகளையும் நன்மைகளையும் உலகம் உணர்ந்து பின்பற்றுமாறு சிறப்பான பண்புள்ளவர்கள் செறித்துப் பொறித்து வைக்கும் செப்பேடு இதுவாகும். இத்துடன் நீடிய வாழ்வளிக்கவல்ல புத்தமுதம் நிறைந்த பண்டாகாரமாவதும் இது. இதனடியாகவே மனித சமுதாயத்தின் வளர்ச்சி இருக்கும். இது பாடலின் பொருள். இதைத் தருமைக் குருமணியவர்கள் முன்பே இனிமையுடன் உரைத்தருளி இருக்கிறார்கள். இத்துடன் இதே பாடல் சிலேடைப் பொருள்கொண்டு தில்லையில் ஆடிடும் செம்பொருளையும் குறித்து நிற்கிறது. இலக்கியத்தைக்காட்டும் ஒரு பாடல் இருள் நீக்கியாம் திருக்கூத்தனையும் காட்டுவதாக அமைந்திருப்பது கண்டு இன்புறத் தக்கது. அதனையும் காண்போம்.

### சிவன்

அது ஆடி முகங்காட்டி அழகு காட்டும்; எல்லையில்லாப் பரம்பொருளாய்த் தில்லையில் நின்று தினம் ஆடிடும் செம்பொருளாம் அது அகத்தின் எழுச்சிகளுக்கு ஏற்ப முகத்தின்



தோற்றங்களை மாற்றிமாற்றி ஆடல் அழகுகளை அடுக்கடுக்காய்க் காட்டும். ஆங்கதுவாய் இலக்கியம் தன் காலங்காட்டும்; அதேபோன்று, அழகுக்குரிய இலக்கணத்திற்கு இலக்கியமாகவும், எண்ணரிய மக்கள் கண்களுக்குப் பொருந்திய இலக்காகவும் இருக்கின்ற தன் திருப்பாதமும் காட்டும். கோடியது பலவாக நலங்கள் தோய்த்துக் கொளுவு கவித்தச்சன் (கவித்து + அச்சன்) செய் ஏணீது. உலகில் நேர்மையற்ற, வளைவுற்ற, தடம்புரண்ட தன்மையுற்ற பலவும் ஒழுங்காகி நல்வழிப்படும்படிக்கு நலம்பல தோய்த்து உணர்ச்சி கேளவத் தேள்ளு தமிழால் யாத்த கவித்தன்மையையுடைய உலகத் தந்தையாம். இதுவே உயர்ச்சியின் எல்லையாகியசெம்பொருளாம். தேடியது தரவல்ல சித்தர்போலாம்; வேண்டிய பொருளை விருடியில் தரவல்ல சித்தர் வடிவில் இது திரியக்கூடியது மாகும். சிறப்பான பண்பாட்டைச் செப்பாம்; சிறப்புள்ள பண்புள்ள பலரும் சென்றடைகின்ற செம்பொருளாம். அன்றி நீடியது நல்கமுத நிறையுமாகும்; அன்றியும் இது மக்களுக்கு வாழ்வளிக்கவல்ல வளமுள்ள அமுதம் நிறைந்த பண்டாகாமுமாகும். நிலையிதுவாய் மனிதவளம் நேருந்தானே; இத்தகைய செம்பொருளை ஆதாரமாகக்கொண்டே மனித சமுதாயத்தின் வளர்ச்சி அமைவதாகும். இது இந்தப்பாடலின் சிலேடைப் பொருள். பாடலை மீண்டும் படித்து இந்தப்பொருளும் அதனுள் இருப்பது கண்டுகொள்க. இலக்கியமும் சிவனும் இவ்வாறு ஒன்றுனது கண்டு இன்புறுக.

---

## பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்லப்ப முதலியார் பாடியது

திசையிற் பெரியது சீரார் வடதிசை செப்புகின்ற
நசையிற் பெரியது நாடும் பொருணசை நானிலத்தி
லிசையிற் பெரியது திருவிளங்குங் கொடை யென்றுமரு
வசையிற் பெரியது பிச்சைநல் காதெதிர் வைவதுவே. 21

# சிவாகமும் சிவாலயமும்

ஆகமவித்துவான், திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்
தலைமை ஆசிரியர். வேதசிவாகமபாடசாலை, தருமபுரம்.

(மலர் 17. இதழ் 5, பக்கம் 367 இன் தொடர்ச்சி)

பீடம் என்பது லிங்கத்தின் அடிபாகத்திலிருக்கும் ஆவுடையார்:- காப்பக்கிரஹத்தை மூன்றுபங்கு செய்து, மூன்றில் ஒருபங்கு பீடத்தின் விஸ்தாரமிருக்க வேண்டும்.

காரணுகமம்

लिङ्ग मानेनहर्म्यंस्यात् लिङ्गमानेनपीटिका ।

லிங்கத்தின் அளவிருல், ஆலயம், யாவும் செய்யவேண்டும். பீடமானது, எண்கோண வடிவமாகவாவது அல்லது நாற்கோண வடிவமாகவாவது விருத்த வடிவமாகவாவது விளங்கும்.

लिङ्ग नाह समपीटविस्तरं विस्तरस्य शरवेदतुंगकम् ।
विस्वतार्ध समगोमुखांतकं गोमुखान्तसमकण्टनाहकम् ।

இலிங்கத்தின் சுற்றளவிற்குச் சமமாக பீடத்தின் விஸ்தாரம் இருக்கவேண்டும். விஸ்தார அளவை ஐந்துபாகம் செய்து நான்கு பாகம் பீடத்தின் உயரமிருக்கவேண்டும். அந்த விஸ்தார அளவிற்குச் சமமாக கோமுகத்தினளவு இருக்கவேண்டும். கோமுகத்தின் அளவு பீடத்தினுடைய கழுத்தின் அளவு இருக்க வேண்டும் என்று தந்திரஸாரம் என்ற நூல் கூறுகிறது. பீடம் இறைவனுடைய யோகசக்தி ஆகும்.

காரணுகமம்

योगं भोगं च वीरं च त्रिविधं शक्तिरुच्यते ।
लिङ्गाकारविशेषेण शिवतत्वं प्रकीर्त्तितं ।
तदधः शक्तितत्वं च योगपर्यायवाचकः ।

சிவபெருமானுக்கு யோக சக்தி, போக சக்தி, வீரசக்தி என்று மூன்று சக்திகள் கூறப்படுகிறது. அதனுள் பீடம் யோகசக்தியாகும்.

உத்தரகாரணுகமம்

योगं पीटसमायुकतं भोग वाम समन्वितं ।
वीरं स्वतंत्र मित्युक्तं शक्तित्रयमिहोच्यते ॥
मूललिङ्ग समीपेतु वामभागेऽर्धमण्टपे ।
आसनं स्थानकं प्रोक्तं द्विविधं भोगशक्तिका ।

யோக சக்தியானது பீடத்துடன் சேர்ந்து நிற்கும்-போகசக்தியோவெனில் மூலலிங்கத்தின் சமீபத்தில் அர்த்தமண்டபத்தின் இடது பாகத்தில் இருக்கும். வீரசக்தி சுதந்திர சக்தி எனப்படும்.

வாதுளாகமம்

नादं लिङ्गमितिज्ञेयं विन्दुःपीठमितिस्मृतं ।

நாதம் லிங்கமாகவும் பிந்து சத்தியாகவும் விளங்குகிறது.

வருணபத்ததி

ज्ञानशक्त्यात्मके लिङ्गे क्रियाशक्तेस्समर्पणम्
पीटस्य विधिनायोगः प्रतिष्ठासाच कथ्यते ।

ஞானசக்திமயமான லிங்கத்தில் கிரியா சக்திமயமான பீடத்தைச் சேர்ப்பது பிரதிஷ்டை எனப்பெயர். லிங்கம் பீடம் இரண்டையும் இடையராமல் சேர்த்து பந்தனம் செய்யும் திரவியத்திற்கு அஷ்டபந்தன (மருந்து) திரவியம் எனப்பெயர்.

சுக்கான் - குங்கிலியம், கொம்பரக்கு, காவி, வெள்ளை மெழுகு செம்பஞ்சு வெண்ணெ ஜாதி லிங்கம் இவைகள் எட்டு திரவியங்கள் அஷ்டபந்தன மருந்தில் சேர்க்கும் திரவியங்களாகும். இவைகள் முறையாக அனந்தன், வாசுகி, தக்ஷகன் கார்கோடகன், பத்மன், மஹாபத்மம், சங்கபாலன், குளிகன் என்ற எட்டு நாகங்களும் அந்த திரவியங்களுக்குரிய தேவதைகள்.

त्रिभागं शर्करा चूर्णं द्विभागं कुन्दरिप्पकम् ।
भागैकं लाक्षयायुक्तं कापायं च त्रिभागकम् ॥
मधुच्छिष्टं त्रिदं च तथा कापायतूलकम् ॥
नवनीतं त्रिपादं च हिंगुलं पादमेव च ।

இந்த எட்டுத் திரவியங்களை அளவோடு சேர்க்கவேண்டும். அதாவது சுக்கான் மூன்று பங்கு, குங்குலியம் இரண்டுபங்கு

கோம்பரக்கு, செம்பஞ்சு முக்கால் பங்கு, வெண்ணை முக்கால் பங்கு, உலாந்தா லிங்கம் கால் பங்கு, என்ற இம்முறைப்படி சேர்த்து இடித்துப் பந்தனம் செய்யவேண்டும்.

இம்மருந்தின் முறை-பக்குவம் என்றும், அபக்குவம் என்றும் இரண்டு. இவ்வெட்டு திரவியங்களையும் இடித்து வஸ்திரகாயம் செய்து அளவுப்படி சேர்த்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி பக்குவமாக எடுத்துச் சாத்துவதற்குப் பக்குவம் என்று பெயர். உரலில் போட்டு லேகியமாகும் வரையில் அவைகளைச் சேர்த்து இடித்து சாத்துதல் அபக்குவம்.

अपक्वं दैविकं प्रोक्तं पक्वं चैवतु मानुषम् ।

அபக்குவம் என்ற மருந்து தைவிகம், பக்குவம், மானுஷம் என்று ஸஹஸ்ராகமம் கூறுகிறது. மற்றும் செம்பஞ்சு, கோம்பரக்கு, குங்கிலியம், வெள்ளைமெழுகு, பூங்காவி, வெண்ணை, சுக்கான், லிங்கம், இவைகள் முறையே பிருமன், விஷ்ணு, ருத்ரன், மகேச்வரன், சதாசிவன், பிந்து, நாதம், ஸகளாகளம் என்ற தைவீக வடிவமுடையது என்று ஷட்ஸஹஸ்ரிகை கூறுகிறது.

அஷ்டபந்தனம் போன்று பஞ்சபந்தனம், திருபந்தனம் என்ற பேதமும் காணப்படுகிறது. அஷ்டபந்தனமில்லாவிடில் பூஜை, நைவேத்யம், பலி நித்யோத்ஸவம், நமஸ்காரம், பிரதக்ஷிணம், நர்த்தனம், வாத்யகோஷம் நித்யம் நைமித்திகம் யாவும் பயனற்றது.

अष्टबंधन हीनेतु राजाराष्ट्रं च नश्यति
तस्मात् सर्वप्रयत्नेन कारयेदष्टबंधनम् ।

அஷ்டபந்தனமில்லாவிடில் அரசனும் ராஜ்யமும் நாசமடையும் ஆதலால், மிகுந்த முயற்சியால் அஷ்டபந்தனம் செய்ய வேண்டும். இவ்வாறு அஷ்டபந்தனம் செய்து ஸ்தாபனம் செய்யப்பட்ட லிங்கத்தில் தத்வாதீதனாக விளங்கும் சிவ பெருமான் தத்துவ வடிவமாக விளங்குகிறார்.

நிஷ்களரூபமாக இலிங்கத்தில் தோன்றும் இறைவன் தியானம் பூஜை செய்வதின் பொருட்டு சகளமாக ஆகிறார். ஆயினும் கண்ணாடியில் தோன்றும் பிரதி பிம்பம் போலும், வானத்தில் தோன்றும் இந்திர தனுசு போலும் உறைந்த நெய் போலும் விளங்குகிறார்.



மாமிஸம் ரத்தம் முதலிய யாவும் இவருடைய சரீரத்தில் கிடையாது. கற்பனையினால் அவ்வாறு அமைத்து பூஜையில் தியானம் செய்யப்படுகிறது.

सदाशिवः षडध्वात्मा तस्यप्राणः शिवः स्मृतः ।

சதாசிவன் ஆறு அத்வாக்களின் வடிவமுடையவன். அதாவது சாந்தியதீதகலை தலையாகவும் சாந்திகலை முகமாகவும், வித்யாகலை மார்பாகவும், பிரதிஷ்டாகலை முழங்கால் பிரதேசமாகவும், நிவிருத்திகலை பாதமாகவும் விளங்குகிறது. இது காலாத்வா என்று பெயர். அனுச்ருதை முதலிய இருநூற்றி இருபத்திநான்கு புவனமும் இறைவனுடைய உரோமக் கூட்டங்களாக விளங்குகிறது. இது புவனாத்வா.

அகாரம், முதல் க்ஷகாரமீராகவுள்ள ஐம்பத்தோர் அக்ஷரங்களும் தோலாகவிளங்குகிறது. இது வர்ணாத்வா. ஈசானம் முதலிய சம்ஹிதாமந்திரங்கள் பதினொன்றும், இரத்தமாக விளங்குகிறது இது மந்திராத்வா. ஓம் வியோம வியாபி. என்றது முதல் எண்பத்தோரு பதங்களும் மாமிச தாதுவாக விளங்குகிறது. இது பதாத்வா. பிரதிவி முதல். சிவத்துவ மீருகவுள்ள முப்பத்தி ஆறு தத்துவங்களும், எலும்பு, மஜ்ஜை, சுக்லம் முதலிய தாதுப் பொருள்களாக விளங்குகிறது. இது தத்வாத்தா.

இவ்வாறு கலா புவன, வர்ண பத மந்திர தத்துவங்களான ஆறு அத்வாவின் வடிவமுள்ளவராகத் தியானித்து லிங்கம் என்ற பாவனையை நீக்கி. ஐந்து திருமுகங்கள் பத்துகைகளுடன் கூடிய சதாசிவமூர்த்தியைத் தியானித்தும் பூசிக்கவேண்டும்.

ஸ்படிகம் போன்ற வர்ணமுடைய ஈசானம் என்ற பெயர் உள்ளது மேல்முகம், பொன் வர்ணமுடைய தத்புருஷம் என்ற பெயருள்ளது கிழக்குமுகம், கருத்தவர்ணமுடைய அகோரம் என்றமுகம் தெற்கிலுள்ளது. சிவப்பான வர்ணமுடைய வாம தேவம் என்று பெயருள்ளது வடக்குமுகம். வெண்மையான வர்ணமுடைய ஸத்யோஜாதம் என்று பெயருள்ளது மேற்கு முகம். ஸத்யோ ஜாதம் முதல் ஈசானம் வரையில் விளங்கும் ஐந்து திருமுகங்களும் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபாவம், அனுக்ரஹம் என்ற ஐந்தொழிலைச்செய்யும் காரியமுடையது.

# செய்திகள்

## ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது இராமேசுவர வழிபாடு

அண்மையில் நேபாள யாத்திரைக்கு எழுந்தருளி பஞ்ச முகப் பரப்பிரமத்தைப் பரவி வந்த ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இந்தத் திங்களில் இராமேச்சுரம் சென்று இராமநாதப் பெருமானை வழிபட்டு எல்லோரையும் உய்யக் கொண்டருள வேண்டும் என்ற பெருங்கருணை கொண்டார்கள். 17—7—58 அன்று இரவு தருமையை விட்டு எழுந்தருளினார்கள்.

ஆனைக்காவின் அண்ணலை 18—7—58 அன்று காலை வழிபட்டார்கள். ஆதீன தேவஸ்தானங்களுள் ஒன்றான உய்யக் கொண்டான் திருமலை வழிபாடும் அருணகிரிநாதரோடு தொடர்புடைய குமாரவயலூர் வழிபாடும் அன்று காலையிலேயே முடித்துக்கொண்டார்கள். அன்று மாலை திருப்பரங்குன்றம் சென்று வழிபடத் திருவுள்ளம். ஆதீன மெய்யன்பரும், சிவதரும பாஸ்கரருமாகிய சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டரவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைச் சம்பிரதாயப்படி வரவேற்றார்கள். திருவாளர் நாராயண செட்டியார் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை வரவேற்று வணங்கினார்கள். சிவஸ்ரீ பட்டர் அவர்கள் கொலுவமைத்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்களை உரிய முறைப்படி வரவேற்று வரவேற்புரையும் வழங்கினார்கள். திருவாளர் நாராயண செட்டியார் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை வரவேற்கும் பெரும் புண்ணியப் பேறடைந்தமைக்கு மகிழ்ந்து பேசினார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய வாழ்த்துரையின் சுருக்கம் வருமாறு :-

"பாண்டியநாடு நன்றி மறவாத நாடு பாண்டிய நாட்டில் கூன்பாண்டியன் காலத்தில் சமணம் மிகுந்தது. சைவம் குறைந்தது. குலச்சிறையாரும், மங்கையர்க் கரசியாரும் வேண்டிக்கொண்டதற்கிணங்கத் திருஞானசம்பந்தரைச் சோழ நாடு உதவியது. 'நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும்' உய்ந்தனர். அந்த நன்றியை மறவாத



பாண்டியநாடு சீவில்லிபுத்தூரிலிருந்து குருஞானசம்பந்தரைச் சோழநாட்டுக்கு உதவியது. கொண்டும் கொடுத்தும் தொண்டு புரியும் திறம் இது. பண்டாரமும் மணிக்கோவையில் திருஞான சம்பந்தரும் குருஞானசம்பந்தரும் வேறல்லர் என்று குமரகுருபர சுவாமிகளும் பாடியருளியுள்ளார்கள். செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் பக்தியும், தொண்டும், நன்றி மறவாத தன்மையும் அன்றுபோல் இன்றும் என்றும் நிலைபெறும்." என்று திருவாய் மலர்ந்தருளியபின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில், சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டரவர்களுக்கும் திருவாளர் நாராயண செட்டியார் அவர்களுக்கும் பொன்னுடைகள் போர்த்துச் சிறப்பித்தருளினார்கள். பின்பு திருப்பதிகச் சிந்தனைகளோடு திருப்பரங்குன்றம் வழிபாடு முடிந்தது. சொக்கலிங்கப் பெருமானையும், மீனாட்சி அம்மையையும் அர்த்தயாம வழிபாடு புரிய அதன்பின் எழுந்தருளினார்கள். 'எல்லார்க்கும் முன்னே தோன்றி முளைத்தானாகிய' பெருமானுக்கும், 'அத்தன் மனத்து எழுதிய உயிரோவியமாகிய' அம்மைக்கும் அர்ச்சனைகளும் நிகழ்ந்தன.

வழிபாட்டுக்குப்பின் அன்றிரவே இராமேசுவர யாத்திரையைத் துவங்கி யருளினார்கள். சொக்கநாதனை வழிபட்டபின் இராமநாதனை வழிபடவேண்டும் என்று அருளுள்ளம் விரைந்தது.

19—7—58 காலையில் இராமேச்சுவரம் புகைவண்டி நிலயத்திலேயே ஸ்ரீ காசிமடம் ஏஜண்ட் திருவாளர் சுப்பராயன் அவர்களும், இராமேசுவரம் தேவஸ்தானத்தினரும் சீரிய வரவேற்பு உபசாரம் நடத்தினர். ஸ்ரீ காசிமடத்துக்குரிய இராமேசுவரம் மடத்தில் ஸ்ரீ காசிமடம், இளவரசு, வித்துவான். ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைப் பூர்ணகும்ப மரியாதைகளோடு வரவேற்றுப் பூஜை செய்தார்கள். ஸ்ரீ காசிமடத்தில் கொலுவும் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. பூஜை செய்து ஸ்ரீலஸ்ரீ இளவரசு சுவாமிகள் பிரசாதம் பெற்றுக் கொண்டார்கள். பிரமுகர்கள் அறிமுகம் செய்யப்பட்டனர். மாகேசுவர பூஜை அன்று ஸ்ரீ காசிமடத்தில் மிக்க சிறப்போடு நிகழ்ந்தது.

அன்று மாலை கந்தமாதன தரிசனம். அங்கு திருவடி தரிசனம் செய்யப்பெற்றது. அது வீரபாகு தேவர் பாதம், இராமர் பாதம், அநுமான் பாதம் என்று பலவாறாகக் கூறப்படும்.

அதனை அங்குள்ள பூசகர் ஒருவர் சக்திபீடம் என்றும் ஸ்ரீசக்கரம் என்றும் கருதுகின்றார். உயர்ந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள அவ்வாலயத்தினின்றும் பார்த்தால் இராமேசுவரம் தீவு முழுமையும் தெரிகிறது.

கந்தமாதனபர்வத தரிசனம்முடிந்து மீண்டபிறகு, மாலையில் அக்னி தீர்த்தம் முதலிய பதினெட்டுத் தீர்த்தமாடினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் இராமநாதப்பெருமானுக்குப் பன்னீராலும், கங்கா தீர்த்தத்தாலும் அபிஷேகம் செய்விக்கப் பெற்றது. பர்வதவர்த்தனி அம்பாளுக்கும் அவ்வண்ணமே. அபிஷேக ஆராதனைக்குப்பின்னர் இரவே தனுஷ்கோடிக்கு எழுந்தருளினார்கள்.

மறுநாள் 20—7—58 காலையில் தனுஷ்கோடி நீராடல். ஸ்ரீ காசிமடம் உபசரிப்பிலேயே இதுவரை அனைத்தும் ஏற்பாடா யிருந்தன. ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகளின் குருபக்தி சொல்லுந்தரத்ததன்று. தம்முடைய குருமூர்த்திகளின் இராமேசுவர வழிபாடு குறித்து அவர்கள் திருவுள்ளப்படி நிகழ்த்துவித்த அனைத்தும் எண்ணஎண்ண மெய்சிலிர்க்கும். தனுஷ்கோடி தரிசனத்தை முடித்து அன்று இரவே திருப்பரங் குன்றம் வழிபாட்டுக்குப் பின்னர் திருநெல்வேலிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் எழுந்தருளினார்கள்.

## நலயாத்திரையில்...

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருக்குற்றாலமலை வழி பாட்டிற்கு எழுந்தருளுங்காலை வேள்விமலைக்கு எழுந்தருளி னார்கள். சுசீந்திரத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந் தருளியிருந்து, அனந்தபத்மநாபன், மருங்கூர் முருகன், நாகர் கோவில் நாகராஜா ஆகிய மூர்த்திகளை வழிபாடு ஆற்றினார்கள். அங்கு முருகன் வழிபாடு மிக்க சிறப்போடு நிகழ்ந்தது. இத் தலத்தில்தான் தருமையாதீன ஆறுவது குருமூர்த்திகளாகிய திருஞானசம்பந்த தேசிக சுவாமிகளுக்கு வள்ளியம்மை தலை நீட்டிக் காட்டிய அற்புதம் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகளுக்கு வழிபாட்டுக் காலத்தில் வள்ளியம்மையின் திருவுரு இலக்காகவில்லை. சுவாமிகள் ''வள்ளித்தாய் இங்கு இல்லையோ'' என்று கூறினார்கள். உடனே வள்ளி நாச்சியார்



'இதோ இருக்கிறேன்' எனத் திருமேனி வளைந்து காட்சி வழங் கினார். இந்நிகழ்ச்சியைச் சிதம்பர முனிவர் பாடிய

"உம்பர்பணி ஆரூரன் அருளினால் ஆனந்த
ஒளிவடிவம் ஆனகுரவன்
ஒருசெந்தி லம்பதியில் உன்அருளி னால்பாடும்
உயர்குமர குருபரமுனிக்கு
அம்புயத் தாள் சென்னி சூடினேன் எலிபூனை
அரவுபோத் துக்குயில்கிளி
அத்துவிதம் ஆகவே சத்திநிரு வாணம்எனும்
அருள்ஞான தீட்சைசெய்தோன்
எம்பவம் அகற்றினேன் எண்ணிலா அடியவரை
இன்பவா ரிதியில்வைத்தோன்
எழில்வேள்வி மலையிலோர் அம்மையெங் கேயென்று
இயம்பியே திருமுன்நிற்கும்
சம்பந்தனுக்குஅருள்செய் என்றுவள் ளிக்குஅருள்செய்
சைவநா யகன்வருகவே
தருமையம் பதிமுருக ஒருநாலு பாதமும்
தருகுமர குருவருகவே.

என்ற க்ஷேத்திரக் கோவை பிள்ளைத்தமிழ்ப் பாடலும்

"வள்ளியம்மை இல்லையோ என்ன அவள் சிரத்தை நீட்டி
வையம் அறிந்திட இருக்கின்றேன் என்ற மொழிகேட்டு
மகிழ்ந்து நின்ற
துய்யவனும் தருமைவரு திருஞானசம்பந்தன்"

என்ற தனிப்பாடற் பகுதியும் விளக்குகின்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இத்தலத்தே சிறந்த முறையில் வழிபாடியற்றியருளினார்கள்.

30—7—58 அன்று திருக்குற்றாலத்தில், ஆடிப்பௌர்ண மையை முன்னிட்டு, ஸ்ரீ பராசக்தி அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்துவிக்கப்பெற்றன. அன்பர்களுக்குத் திருக்குற்றாலத் தலத்திருப்பதிகங்கள் இலவச வெளியீடு வழங்கப்பட்டு வருகின்றன.

## மாயூரம் வள்ளலார்கோயிலில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்த மான உத்தர மாயூரம் வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவர

சுவாமி கோயிலில் ஸ்ரீ மேதாதக்ஷிணுமூர்த்திக்குக் குருவாரந் தோறும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் மிக்க சிறப்போடு நிகழ்கின்றன. அதையோட்டி தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் அருளப்பெறும் அருளுரைகள் சந்நிதியில் வாசிக்கப்பெற்று வழங்கப்பெறுகின்றன.

## ஆடிப்பூர விழா

**வேளூரில்**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்த மான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வாலாம்பிகை அம்பாளுக்கு ஆடிப்பூர விழா நிகழும் விளம்பி ஆண்டு ஆனித்திங்கள் 27 ஆம் நாள் (11—7—58) முதல் (20—7—58) முடிய உள்ள நாட்களில் சிறப்பாக நடை பெற்றது. ஆடிப்பூரவிழாவை யோட்டி சமயச் சொற்பொழிவுகள் நாள்தோறும் மாலை 6 மணிக்குத் தொடங்கி நடைபெற்றன.

11—7—58 வெள்ளிக்கிழமை. வித்துவான், திரு. ஆ. இராசதுரை (தமிழாசிரியர், ஆதீன உயர்பள்ளி, தருமபுரம்) " அம்மை அருள் " என்ற பொருளிலும், 12—7—58 சனிக் கிழமை. திரு. R. வேலாயுத ஓதுவார் (ஆசிரியர், ஆதீனத் தேவார பாடசாலை, தருமபுரம்) " கடைக்கண்ணருள் " என்ற பொருளிலும், 13—7—58 ஞாயிற்றுக்கிழமை. வித்துவான், திரு. R. கோவிந்தராசன் (தமிழாசிரியர், ஆதீன உயர்பள்ளி, தருமபுரம்) " மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ் " என்ற பொருளிலும், 14—7—58 திங்கட்கிழமை. வித்துவான், திரு. ச. தண்டபாணி (தமிழாசிரியர், ஆதீனத் தேவார பாடசாலை, தருமபுரம்) "அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்" என்ற பொருளிலும், 15-7-58 செவ்வாய்க்கிழமை. வித்துவான், திரு. வி.சா. குருசாமி தேசிகர் (தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்) " அஞ்சொல் நாயகி " என்ற பொருளிலும், 16—7—58 புதன்கிழமை. வித்துவான், திரு. ம. சிவசம்பு (தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்) " அறம்வளர்த்த அம்மை " என்ற பொருளிலும், 17—7—58 வியாழக்கிழமை. சித்தாந்த சிரோமணி, சித்தாந்த ரத்நாகரம், முதுபெரும் புலவர் மதுரகவி, தருமை ஆதீனப் புலவர், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்



(ஆதீனப் பல்கலைக்கல்லூரி பிரின்ஸிபால், தருமபுரம்) "சிவகாமவல்லி" என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

**சீகாழியில்**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்த மான சீகாழி ஸ்ரீ சட்டநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருநிலை நாயகி அம்பாளுக்கு ஆடிப்பூர விழா நிகழும் விளம்பி ஆண்டு ஆனித்திங்கள் 27 ஆம்நாள் (11—7—58) முதல் (20—7—58) முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்போடு நிகழ்ந்தது. சமயச் சொற்பொழிவுகள் மாலை 6 மணிக்கு ஒவ்வொரு நாளும் நிகழ்த்தப்பெற்றன.

11-7-58 வெள்ளிக்கிழமை. வித்துவான், திரு. சோ. சிங்கார வேலனார் (தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்) " அங்கயற்கண்ணி பிள்ளைத்தமிழ் " என்ற பொருளிலும், 12—7—58 சனிக்கிழமை. வித்துவான், திரு. நடராஜ தேசிகர் (திருவிடைமருதூர்) " காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் " என்ற பொருளிலும், 13—7—58 ஞாயிற்றுக்கிழமை. திரு. செ. வேங்கடராமச் செட்டியார் (ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்) " அமுதாம் பிகைப் பிள்ளைத்தமிழ் " என்ற பொருளிலும், 14—7—58 திங்கட்கிழமை. சித்தாந்த சிரோமணி, சித்தாந்த ரத்நாகரம், முதுபெரும் புலவர், மதுரகவி, தருமை ஆதீனப் புலவர், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் (ஆதீனப் பல்கலைக் கல்லூரி பிரின்ஸிபால், தருமபுரம்) " புவனம்பிகை கலைஞானதீபம் " என்ற பொருளிலும், 15-7-58 செவ்வாய்க்கிழமை. வித்துவான், திரு. சேதுசுப்ரமணியப் பிள்ளை (தலைமைத் தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்) " அபிராமி " என்ற பொருளிலும், 16—7—58 புதன்கிழமை. வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் (தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி , தருமபுரம்) " சகலகலாவல்லிமாலை " என்ற பொருளிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

**திருக்கடவூரில்**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்த மான திருக்கடவூர் ஸ்ரீஅமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

ஸ்ரீ அபிராமி அம்பிகைக்கு ஆடிப்பூர விழா நிகழும் விளம்பி ஆண்டு ஆனித்திங்கள் 27 ஆம் நாள் (11—7—58) முதல் (20—7—58) முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்போடு நடை பெற்றது. விழாவை முன்னிட்டு ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்குச் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

11—7—58 வெள்ளிக்கிழமை. சித்தாந்த சிரோமணி, சித்தாந்த ரத்நாகரம், முதுபெரும் புலவர், மதுரகவி, தருமை ஆதீனப் புலவர். வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் (ஆதீனப் பல்கலைக்கல்லூரி பிரின்ஸிபால், தருமபுரம்) "புவனாம்பிகை கலைஞானதீபம்" என்ற பொருளிலும், 12—7—58 சனிக்கிழமை. வித்துவான், திரு. வை. கல்யாண சுந்தரம் (தமிழாசிரியர் ஆதீன உயர்பள்ளி, தருமபுரம்) "மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை" என்ற பொருளிலும். 13-7-58 ஞாயிற்றுக்கிழமை. வித்துவான், திரு. வி. சா குருசாமி தேசிகர் (தமிழ்ப்பேராசிரியர். ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்) "சரசுவதியந்தாதி" என்ற பொருளிலும், 14-7-58 திங்கட்கிழமை. வித்துவான், திரு. சோ. சிங்காரவேலனார் (தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்) "அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ்" என்ற பொருளிலும், 15—7 58 செவ்வாய்க்கிழமை. வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் (தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்) 'மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ்" என்ற பொருளிலும் 16—7—58 புதன்கிழமை. வித்துவான், திரு. ம. சிவசம்பு (தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம் "சகலகலாவல்லி மாலை" என்ற பொருளிலும், 17—7—58 வியாழக்கிழமை. வித்துவான், திரு. சா ஞானப் பிரகாசம் (தமிழாசிரியர், ஆதீன உயர்பள்ளி, தருமபுரம்) "மீனாட்சியம்மைக்குறம்" என்ற பொருளிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

## சென்னை சமயப்பிரசார நிலையத்தில் சுந்தரர் திருநாள்

சென்னை, தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில், 24—7—1958-ல்



சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத் திருநாள் கொண்டாடப் பெற்றது. விழாவிற்குத் தலைமைவகித்த சித்தாந்தச்செல்வர் திரு. சேவு. மெய்யப்பச் செட்டியாரவர்கள் "சைவசமயாசாரியர் நால்வருள் சுந்தரர் யோகநெறி நின்று அதனை வற்புறுத்தியவர், சைவம் முப்பொருள் உண்மையையும் அவற்றது இயல்பையும் தெளிய உணர்த்தும் கொள்கையது மக்கள் சிவபூசனை செய்வ தாலும். திருமுறைகள் ஓதுவதாலும் இம்மையிலும், மறுமை யிலும் இன்பமாக வாழ்வதோடு வீடுபேறும் பெறலாம். இதற்குத் திருமுறைகளே தக்க சான்று. சமயாசாரியர் வாழ்வும் சிறந்த எடுத்துக்காட்டாகும். முறையாகச் சிவபூசை செய்வதால் சிவயோகநிலை கைகூடுகிறது. பலவகையான நோய்கள் நீங்கு கின்றன. இது என் அனுபவம் என உரைத்தார்கள்.

நிலயத்திருமுறை வகுப்பு மாணவர் திரு. சுவாமிநாதன் "சுந்தரர் வரலாற்றை" அகச்சான்றுடன் தெளிவாகப்பேசினார். தாம்பரம், கிறித்தவக்கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திரு. ஜி. வடிவேலாயுதம் அவர்கள், "சுந்தரர் செந்தமிழ்' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் தாசமார்க்கம், சத்புத்திரமார்க்கம். சகமார்க்கம், சன்மார்க்கம் என்ற நான்கு நெறிதனுள் சகமார்க்கத் தில் நின்று இறைவனைத் தோழராகப் பெற்றவர் என்றும், தோழரானதால் இறைவன் இவருக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் அவ்வப்போது கொடுத்து வந்தார் என்றும், ஒரு மணத்தைச் சிதைத்து இருமணம் செய்து வைத்தார் என்றும், பரவையாரது ஊடலையும் தீர்த்துவைத்தார் என்றும், இந்நிகழ்ச்சி சுந்தரரது தேவாரத்தால் நன்கு விளங்குகிறதென்றும், தோழ ரிடத்துப் பேசுவது போலவே சுந்தரர் இறைவனிடத்தில் இரு பொருள்படப் பாடியுள்ளார் என்றும், நயமாகப்பாடுவதிலும் வல்லவர் சுந்தரர் என்பது "நயத்திற்குச் சுந்தரனார்" என்பதால் அறியலாம் என்றும் கூறினார்.

வரவேற்புரையும் நன்றியுரையும் கூறுகையில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், தமிழகப்பண்பு 'நாயன் மார்கள் வாழ்வாலும், திருமுறைகளாலும் காக்கப்பெறுகிறது. நாயன்மார்களது வரலாறுகளை நமக்குத் திருத்தொண்டத்தொகை மூலம் விளக்கியவர் சுந்தரர் 'ஆதலால் இவரது விழாவைத்தமிழர் அனைவரும் நன்றியுணர்வுடன் கொண்டாட வேண்டுவது

அவசியம் இவரது வரலாற்றுலும் தேவாரத்தாலும் தமிழகத்துப் பண்பும் பெருமையும் விளங்குகிறது என்று கூறினுர்கள். நிலேயத்திருமுறை வகுப்பு மாணவியர் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினர்.

## திருநெடுங்களத் தேவாரத் திருப்பதிகக் கல்வெட்டுத் திறப்புவிழா

தருமையாதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணையின் வண்ணம் விளம்பியாண்டு ஆடித்திங்கள் 3-ம் நாள் 18—7—58 காலே 9மணிக்குத் திருநெடுங்களநாதர் திருக்கோயிலில் சலவைக் கல்லில் பொறிக்கப்பெற்ற திருஞானசம்பந்தர் திருப்பதிகக் கல்வெட்டுத் திறந்துவைக்கப்பெற்றது.

சென்னே மாநில அறநிலயப் பிரிவுகளின் ஆணேயர் உயர்திருவாளர் அ. உத்தண்டராமப்பிள்ளே அவர்கள் இக்கல் வெட்டினேத் திறந்துவைத்து இடர் களேயும் திருப்பதிகமாகிய இத்தேவாரப் பாடல்களே விளக்கிச் சிறப்புரை கூறினுர்கள். ஆதீனத்தில் இத்தகைய திருப்பணிகள் செய்துவருவதைப் பாராட்டி மக்கள் நல்லவண்ணம் இதனேப்படித்துப் பொருளுணர வேண்டும் என்றும் வற்புறுத்திஞர்கள்.

திருச்சிராப்பள்ளி அறநிலயப் பிரசாரகர் திரு. பஞ்சநதம் பிள்ளே அவர்கள் 'கல்வெட்டின் அவசியம்' பற்றிச் சொற்பொழி வாற்றினுர்கள். தருமையாதீன சமயப் பிரசாரகர் திரு. கோ. சிவஞானம் அவர்கள் 'திருப்பணி' என்னும் தலேப்பில் சொற்பொழிவாற்றினுர். சென்னே திருவாளர், பாலசுப்பிரமணியம் அவர்களும் உயர்திரு தேவநாயகம் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பளித்தனர். கிராமக்கூட்டம் திருப்பணிக் குழுவினரும் பணியிற் கலந்துகொண்டு திருந்தொண்டாற்றினர். ஆலய நிர்வாக அதிகாரி திரு. T. M. பேரியசாமி அவர்கள் நன்றி யுரையுடன் விழா சிறப்புடன் நிறைவுற்றது.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ கே. முத்துஜோதீடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(விளம்பிஞு ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய)
(17—8—58 முதல் 16—9—58 முடிய)

**1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷராசி சம்பந்தப்பட்ட, அசுவதி நான்கு பாதங்களும் பரணி முதல் பாதமும், சுபசோபனுதி மங்கல காரியங்களேயும் நஷ்டமான பொருள் வரத்தையும் தரும். பரணி 2, 3, 4 பாதங்கள் அமங்கலத்தையும், கீர்த்தி பங்கத்தையும் நஷ்டத் தையும் உண்டுபண்ணும். கார்த்திகை முதல் பாதம் வியாதி ஓங்கும். கடன் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்

**2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீரிஷம் ½**

விருஷபராசி 9 பாதங்களும் சுபமிராது. வரவுக்கு மிஞ்சின செலவுகள், கடன் தொல்லேகள், இடம் மாறல், பெரியோர் வருத்தம் முதலிய பலன்களேத் தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்கள் மிசிர பலனேத் தரும். வரவு செலவுகள் சமமாகும். அடிக்கடி சஞ்சாரம் ஏற்படும். திருவாதிரை நான்கு பாதங்களும், புத்தி மாந்தியத்தைத் தரும். அபஜயமாகும். ரோக சாந்தியும் ஏற்படும். சிரமத்தோடும் கவலேயோடும் காலம் நடக்கும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் அதிக விரயத்தின் பேரில் காரியசித்தியைத்தரும். சத்துருபலம் குறையும். தேய்வபலம் உண்டாகும். புதன், வியாழன் சுப மாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4-ம் பாதம் மங்கலமாய் நடக்கும். வித்யா விருத்தி உத்யோக லாபம் ஏற்படும். பூசம் நான்கு பாதங்களும் சில்லரையான பூசல்களையும் தொழிலாளர்கள் தொல்லைகளையும் தரும். ஆரோக்கியக் குறைவு ஏற்படும். மேலோர் அன்பும், கீர்த்தியும், ஐயமும் உண்டாகும். ஆயில்யம் நான்கு பாதங்களும், கௌரவபங்கத்தைக் கொடுக்கும். சொல் உறுதி மாறும். சதா பொய்பேசக் கற்றுக்கொடுக்கும். காரியம் வெற்றியடையும். புதன், சனி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும், கீர்த்தியைத் தரும். பெரியோர் அன்புகிட்டும். ஆரோக்கியமுண்டாகும். பூரம் நான்கு பாதங்களும் அதிக விரயங்கள் ஏற்படச்செய்யும். சிறு நஷ்டம் உண்டாகும். உத்திரம் முதல்பாதம் இடம் மாறச்செய்து லாபத்தைத்தரும், தொழில் ஓங்கும், விவசாயத்தில் அதிக லாபம் உண்டுபண்ணும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் நான்கு பாதங்களும் சந்தோஷத்தை உண்டு பண்ணும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். கீர்த்தி ஏற்படும். ஹஸ்தம் நான்கு பாதங்களும், ஸபாபூஜ்யதையையும், ராஜாங்க மைத்திரத்தையும், பிரதிஷ்டா பலன்களையும், சர்வ சித்திகளையும், விசேஷமான தான தர்ம பலன்களையும், மேலான பதவிகளையும் தரும். சித்திரை 1, 2 பாதங்கள், அசூயை, அகங்காரம், துர்புத்திகளைத்தந்து வாழ்க்கைத்தரம் குறையும். சதா கவலை உண்டுபண்ணும். சனி, செவ்வாய் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் தொழிலைக் கெடுக்கும். நஷ்டம் உண்டுபண்ணும். சுவாதி நான்கு பாதங்களும் இடம் மாறி



லாபம் உண்டுபண்ணும். விசேஷ கீர்த்தியும், ஸபாபூஜ்யத் துவமும் ஏற்படும். தொழில் ஓங்கும். தெய்வபலம் பிரகாசிக்கும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் கஷ்டநஷ்டங்களைத்தந்து கிலேசம் உண்டாக்கும். குடும்ப கலகம் ஏற்படும். தீட்டுக்காத்தல் ஏற்படும். தொழில் மந்தமாகும். கடன் ஓங்கும். தெய்வபல முள்ளவர்கள் ஜயிப்பார்கள். புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் நாலாம் பாதம் அவமானத்தைத்தரும். தொழில் நஷ்டம் ஏற்படும். அனுஷம் நான்கு பாதங்களும் இடம் மாறி மிசிர பலன்களைத்தரும். சதா அலைச்சலை உண்டுபண்ணும். கேட்டை நான்கு பாதங்களும் ஆடையாபரணச் சேர்க்கை களையும் மங்கல காரியங்களையும் உத்தியோக லாபத்தையும் தரும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் சுபாதிகளைத்தரும். கஷ்டத் தோடு சுகம் காட்டும். பூராடம் நான்கு பாதங்களும் விவசாயம் ஓங்கி, பலனைத்தரும். சத்துருமைத்திரம் ஏற்படும். கடன் நீங்கிச் சுகமுண்டாகும். புதன், வியாழன் சுபமுண்டாகும். உத்திராடம் 1ம் பாதம் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

உத்திராடம், 2, 3, 4 பாதங்கள் தூரப் பிரயாணத்தைத் தரும். விவாஹம் முதலிய மங்கல காரியங்களை உண்டு பண்ணும். திருவோணம் நான்கு பாதங்களும், உலக மதிப்பைத் தந்து பிரக்யாதியை உண்டு பண்ணும். உத்தியோகம் ஓங்கும். குடும்பத்தொல்லைகளும் ஓங்கச்செய்யும். அதிகமாகச் செல வினங்கள் ஏற்படும். ஆரோக்கியமுண்டாகும். சுகபோகாதி களும் பெரியோர்கள்அன்பும் ஏற்படும். அவிட்டம் 1, 2 பாதங்கள் வீண் செலவுகளும் துர்ப்புத்திகளும் ஏற்படச்செய்து பயத்தை யும் உண்டுபண்டும். சனி, செவ்வாய் சுபமாகும்.

**11. கும்பம். அவிட்டம் ½, சதயம் - பூரட்டாதி ¾**

அவிட்டம் 3, 4 பாதங்கள் தனதான்ய விருத்தியைத் தரும். தொழில் ஓங்கும். சதயம் நான்கு பாதங்களும் வீண் அலேச்சல் களையும் நஷ்டங்களையும் உண்டுபண்ணும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் பந்துமித்திராதிகளின் தொல்லேகளையும் வீண் செலவு களையும் குடும்பக் கவலேகளையும் உண்டுபண்ணும். சனி, வியாழன் சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி - ரேவதி.**

பூரட்டாதி நாலாம் பாதம் சுபமிராது. சதா அலேச்சலும் வீண் நஷ்டங்களும் உண்டாகும். உத்திரட்டாதி நான்கு பாதங் களும் சுப சந்தோஷங்களையும், பந்து மித்திராளுடைய சேர்க்கை களையும், குடும்ப விருத்தியையும் தரும். ரேவதி நான்கு பாதங் களும் ஆரோக்கியத்தையும், சுபாதிகளையும் தரும். தொழில் ஓங்கும். மேலோர், பெரியோர் அன்பு கிட்டும். தெய்வ பல முண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- ஷெ மாத கிரஹநிலே, உலகில் அமைதி குறைவு களையும் ஏழை மக்கள், நடுத்தர வகுப்பினர், ஸாது ஜனங்கள் இவர்களுக்கு வாழ்க்கைச் செலவுகள் அதிகமாகி தன தான்யம் குறைவுத்தட்டால் சிரமங்கள் உண்டுபண்ணும். ஷெ ஜனங்கள் ஆஸ்தீகத்தோடு கடவுளையே நம்பி வழிபட்டு வந்தால், துன்பம் நீங்கி சுபமுண்டாகும். சுபம்.

---

### பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்லப்ப முதலியார் பாடியது.

நெய்யிற் பெருத்த தீங்காமணக் கின்விதை நீட்சியுள்ள
செய்யிற் பெருத்தது வீராணத்தேரி சிரந் துடிக்கும்
வெய்யிற் பெருத்தது தையலிற் சூரியன் மேவுமதி
பொய்யிற் பெருத்தது சௌளி விற்குந்தொழில் பூதவத்தே. 22



### நவரத்தினங்கள்

திருவாவடுதுறை யாதீனத்தின் இலவச வெளியீடு. ஆசிரியர், திரு. T. S. வைத்தியநாதனுர் அவர்கள். சென்னே ஹைகோர்ட் ஜட்ஜ், உயர்திரு. N. சோமசுந்தரம் பிள்ளே அவர்களது முன்னுரை யுடன் கூடியது.

இதன் ஆசிரியர் வைத்தியநாதர். இவர் நவரத்நங்களின் ஆராய்ச்சியாளராக 'விளங்குவது பெரிதும் பாராட்டத்தக்கது. திருச்சிராப்பள்ளி வானெலிப் பேச்சிற்குத் தக்கதாகச் சித்தஞ் செய்தது இது. இச்சிறு நூல் தன் ஆசிரியரது பேரறிவைப் பெரிதும் எடுத்து விளக்குகின்றது. மேலும் பெரியதோரு நூலே அவர் உலகிற்கு வழங்குவாராயின் உலகம் அதற்கோரு கைம்மாறு செய்ய வல்லதாமோ? இதில் அரதனங்களின் தோற்றமும், வகையும், மதிப்பும், அவற்றின் கணித லட்சணமும், மருத்துவச் செய்ம்முறையும் பிற பற்பல புதிய கருத்துக்களும் தொகுத்து நிரல்படுத்திக் கோவையாக்கித் தமிழ்ப்பாவையை, ஒரு ரத்நமாலே யால் அணிசெய்து புகழ்பெற்றுர் அறிஞர் திரு. T. S. வைத்திய நாதனுர். யார் எவ்வளவு பெரிய நூலே ஆக்கினுலும், அதை அச்சிடுவித்து உலகிற்கு வழங்கினுல்தானே அதன் பயனே எய்த லாகும்? துறைசைக் குருமணியின் திருவுள்ளம் அதனே உலகிற்கு வழங்க இசைந்தருளியது. இந்த ரத்நமாலேயின் பெரு மதிப்பிற்குத் தனியே ஒரு மதிப்புண்டாக்கியது. மூன்று பேச்சாக உள்ள இது சிறந்த மும்மணியாக மதிக்கத்தக்க மாண்பு மிக்கது. அராபிய வணிகன் அலியான் முத்துக்குளித்தலே அறிந்து எழுதிய குறிப்பு முதலியவற்ருேடு இதன் ஆசிரியர் 32 நூல்களினின்றும் மேற்கோள் காட்டியிருப்பது பெரிதும் பாராட்டற்குரியது. இது பலரும் படிக்கத்தக்கது.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

---

### பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது

பீடுதரும் பெரியார் மொழி கேட்பது பேசரிய
வீடுதருங் குருவின் மொழி கேட்பது மேதினியிற்
பாடுதரும் பகையோர் மொழி கேட்பது பல்வகைக்குங்
கேடுதரும் கிளிநேர் மொழியார் மொழி கேட்பதுவே. 23

உ
சிவமயம்

# தருமபுர ஆதீன வெளியீடுகள்

தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. திருவாசகம் | ரூ. | 2—00 |
| பதிவு தபால் செலவு | ரூ. | 1—00 |
| 2. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் | | |
| முதல் திருமுறை (ராப்பர்) | ரூ. | 3—50 |
| பதிவு தபால் செலவு | ரூ. | 1—33 |
| இரண்டாந் திருமுறை (காலிகோ) | ரூ. | 5—00 |
| பதிவு தபால் செலவு | ரூ. | 1—54 |
| மூன்றாந் திருமுறை (காலிகோ) | ரூ. | 5—75 |
| பதிவு தபால் செலவு | ரூ. | 1—57 |
| 3. திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் | | |
| நாலாந் திருமுறை (காலிகோ) | ரூ. | 8—00 |
| பதிவு தபால் செலவு | ரூ. | 1—57 |

கிடைக்குமிடங்கள் :—

1. காஷியர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம். மாயூரம் போஸ்ட்.
2. மேனேஜர், ஸ்ரீ வேளூர் தேவஸ்தானம்,
   வைத்தீசுவரன்கோயில்.
3. காஷியர், ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம்,
   சீகாழி, தஞ்சாவூர் ஜில்லா.
4. காஷியர், ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம்,
   திருபுவனம், (திருவிடைமருதூர்).
5. காஷியர், ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானம்,
   திருப்பனந்தாள், கும்பகோணம் வழி.
6. காஷியர், ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானம்,
   திருக்கடவூர், தஞ்சாவூர் ஜில்லா.
7. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம்,
   41, உஸ்மான்ரோடு, தியாகராயநகர், சென்னை-17.
8. தருமபுரம் மடம் காரியம்,
   வீரராகவபுரம், திருநெல்வேலி சந்திப்பு, திருநெல்வேலி.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram) ...


05

# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

17 ] விளம்பி ஆண்டு ஆவணித்திங்கள் 10—9—58 [ இதழ்




உ
சிவமயம்

# " ஞானசம்பந்தம் "

## உட்பொருள்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஆவணி மூலத் திருநாள் | ... | 651 |
| 2. | ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளுரை | | 655 |
| 3. | சிற்றிலக்கியம் 1 | ... | 665 |
| 4. | குடகுமலைப் பெண் | ... | 670 |
| 5. | " அருமறையும் ஆகமங்களும் " | ... | 672 |
| 6. | வாயுறை வாழ்த்து | ... | 676 |
| 7. | ' அன்றும் இன்றும் ' | ... | 679 |
| 8. | முப்பொருள் விளக்கம் | ... | 683 |
| 9. | தருமபுர ஆதீன ஆவணி மூல நன்னாளில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளுரை | | 687 |
| 10. | தொண்டைநாட்டுத் தல வழிபாடு | ... | 698 |
| 11. | ஐந்திரவ்யாகரணம் | ... | 703 |
| 12. | செய்திகள் | ... | 706 |
| 13. | எதிர்காலம் | ... | 711 |


### அட்டைப்பட விளக்கம்

ஆவணி மூலத் திருநாளில், தருமபுர ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால், " செந்தமிழ்ச் செல்வி " என்ற பட்டம் பெற்ற வித்துவான், திரு. C. குழந்தையம்மாள் M. L. A. அவர்கள் சொற்பொழிவாற்றுதல்.

உ
குருபாதம்


# ஞானசம்பந்தம்

மலர் 17 | விளம்பி௵ ஆவணி௴ 10—9—58 | இதழ் 10



14 OCT 195
MADRAS


உ
திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் ! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினாய் ! கூடலால வாயிலாய் !
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## ஆவணி மூலத் திருநாள்

இவ்வாண்டிலே ஆவணி மூலத் திருநாள் எவ்வாண்டிலும் இவ்வாறு நிகழ்ந்ததில்லை என்னும் முறையில் மிக்க சிறப்புற நடைபெற்றது. எல்லாம் திருவருட் செயல். மதுரையில் நிகழுமாறு இத் திருநாளை வேறு சில இடங்களிலும் திருக்கோயிலில் நிகழ்த்துவது உண்டு. மதுரைப் பெருமான் திருப்பெயர் வாய்ந்த கோயிலாதல், மாணிக்க வாசகர் திருவடிக்கண் மிக்க அன்பாலாதல் இத் திருநாள் நிகழும். தருமையாதீனத்தில் நடைபெறுவதன் காரணம் யாவரும் அறிந்ததே ஆயினும், அறியாதிருப்பார் அறியும் பொருட்டு இதில் எழுதப்படுகின்றது.

இத் தருமைக் குருமுதல்வர் குருஞானசம்பந்தராவார். அவர்க்கு மதுரையில் பொற்றாமரைத் திருக்குளத்தில், திருவருள் அளித்த மூர்த்தியே, இவ்வாதீனத்துக் குருமணிகளின் ஆன்மார்த்த மூர்த்தியாய் எழுந்தருளியுள்ள சிவலிங்கம்.

அச் சிவலிங்கத்தின் திருப்பெயர் 'சொக்கநாதர்' என்பது. அச் சொக்கநாதரைத் திருவருள் நல்கப் பெற்றும் குருபதேசம் பெற்றும் ஆகம விதிப்படி நாள்தோறும் இனிது வழிபட்டு வந்த குருஞானசம்பந்தர். தோத்திரம் புரியும்போதெல்லாம் பற்பல பாடல்களைப் பாடிப் போற்றிவந்தார். அவற்றை அவ்வப்போது காப்பாற்றி வாராமையாலோ பெற்றுக் கைசோரவிட்டமையாலோ மற்றேதனாலோ, அவை முற்றும் பெற்று உணரப் புண்ணியஞ்செய்தோமில்லை. நூறு பாடலுக்குக் குறையாமல் கிடைக்கப்பெற்றதே பெரும் பேறாகும். அவற்றின் உண்மைச் சிறப்பை உணர,

'நித்தம் எழுந்தருளி நின்மலனே என்றனக்குப்
புத்தி மிகமிகவும் போதித்துச் — சித்தமயல்
போக்குவாய் இன்பசுக பூரணத்தி ரண்டறவே
ஆக்குவாய் சொக்கநாதா.' (16)

'உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
கணத்தும் உணரும்வகை காணேன் — உணர்த்திஎன்னுள்
பூண்டமலம் மாயைகன்மம் போக்கிச் சிவானந்தத்து
ஆண்டருள்வை சொக்கநாதா.' (26)

என்பவை எடுத்துக்காட்டாகக்கொள்க. இவற்றுள் முன்னதில் குறித்த, 'நித்தம் எழுந்தருளிப் போதித்த புத்தி' என்றது சிவஞான வளர்ச்சியைக் குறித்தது. இதனால் நித்தம் ஆன்மார்த்த (சிவ) பூஜையில் செய்த தோத்திரம் எனக் கொள்ள இடன் உண்டு.

'ஆலம் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் — பாலொளியாம்
மத்தனே கூடல் மதுரா புரியுமையாள்
அத்தனே ஆலவா யா.'



இதனால் நம் குருமுதல்வர் பூசித்த மூர்த்தி மதுரைச் சொக்கலிங்கம் ஆகிய சுயம்புலிங்கம் என்பது உறுதியாகும். இதில், பால் ஒளியாம் மத்தன் என்பது திருநீற்றொளியுடைய திருநெற்றியன் என்ற பொருள் தருவது. உமையாள் அத்தன் என்றது மங்கைபங்கினன் என்ற பொருள் உடையது. மத்தனே என்பதே மதுராபுரி என்பதோடு பொருந்தும் மோனையையுடைய முதற் சீராகும். ஈரடியிலும் அத்தனே எனக் கொள்ளல் ஏற்றதன்று. சொக்கநாதரை வழிபடு கடவுளாகக்கொண்டிருக்கும் இவ்வுண்மைகொண்டு, தருமையிலும் ஆவணி மூலத் திருநாளை, இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சியில் சாலச் சிறப்புடன் நடத்திவருகின்றனர்.

இவ்வாண்டிலே அச்சொக்கநாதரே நம் குருமணியாகிய தலைவரென எழுந்தருளி, உயிர்களைப் பண்டைப் பரிசே ஆட்கொண்டார். பல்கலைச்செல்வர், தெ. பொ. மீ. அவர்கள் மதுரை மீனாட்சிசுந்தரரென வந்து சொற்பொழிவாற்றினார்கள். அவர்கட்குக் காசுமீறு சால்வைப் பரிசு வழங்கப்பெற்றது. மதுரையர் மன்னன் மறுபிறப்போடக் குதிரையின்மேல் ஏறி வந்து கூடிடும் பாண்டிப்பிரான் மூலபண்டாரம் வழங்கத் தருமையில் எழுந்தருளியதால், பரிமேற்கொண்ட அச்சேவகனார் ஒருவரை அன்றி உருஅறியாத உள்ளம் உடைய பெருமானார் மாணிக்கவாசகருக்கும் கண்சுமந்த நெற்றிக்கடவுள் கலிமதுரை மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு புண்சுமந்த பொன்மேனி பாடிய பண்சுமந்த பாடற் பரிசு கிடைத்தது.

அன்புருவாய் நின்றழுத கௌரி என்பவளுக்காகச் சொக்கலிங்கப் பெருமானும், குமரகுருபர சுவாமிகள் பாடியருளிய அங்கயற்கண்ணியம்மை பிள்ளைத் தமிழைக் கேட்டு இன்புறுதற்காக மீனாட்சியம்மையும் குழந்தையாய் வந்த பழக்கமோ மற்று யாதோ அறிகிலோம். இந்த ஆவணி மூலத் திருநாளில், கொங்கச் செல்வியான ஒரு வித்துவக்

குழந்தை வந்து 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் பட்டம் பெற்றது. மீனாட்சிசுந்தரனார் மடியில் அமர்ந்து மங்கையர்க்கரசி என்ற ஒரு குழந்தை செவிச்செல்வம் உற்றது. அது வித்துவக் குழந்தைக்குக் குழந்தை. எல்லாம் திருவருட் செயல். மக்கள் முயற்சியால் ஏற்பட்டதன்று, திருவருட் செயலாதலின் எல்லோரும் பெரிதும் வியந்து போற்றிப் பாராட்டினர்.

குருமணியின் அருளுரையும் முன்னர் என்றும் இவ்வாறு இல்லை என்னும்படி கடல்மடைதிறந்தவெள்ளமாய்த் தங்கு தடையின்றிப் பொங்கிப் பெருகி, அவையை நோக்கி ஓடிச் சுவையைத் தேக்கியது.

பல்கலைக் கல்லூரி மாணவர்கள் மூன்று நாளும் நடித்த நாடகங்கள் கண்டோர் கண் காது அகங்களைக் களிப்பால் நிறைத்தன. வாழ்க தருமையாதீனம், வயங்குக திருநாள், வளர்க திருவருளும் குருவருளும் பக்தியும்

---

## 'ஞானசம்பந்தம்' பெறும் அன்பர்களுக்கு

மதிப்புரைகளிற் குறித்த நூல்களைப் பெற விரும்புவோர். கிடைக்கும் இடம் குறித்திருந்தும், ஆங்கு எழுதிப்பெற முயலாமல் 'ஞானசம்பந்தம்' செயலகத்துக்கு எழுதுகின்றனர். அது வீண் காலப்போக்கும் வீண் செலவும் பிறவும் விளைக்கின்றது. கிடைக்கும் இடம் முதலியன நேரிந்தால், மதிப்புரையில், எழுதப்பட்டிருக்கும், இருப்பின், அங்கே பெற முயல்க.

ஆசிரியர் விலாசத்துக்குக் கட்டுரை எழுதியனுப்பும் அன்பர், அதுபோல ஒருபடி எடுத்துக்கொண்டு, அனுப்புக, எக்காரணத்தாலும் அதைத் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

உ

குருபாதம்

திருக்கயிலாய பாம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

## அருளுரை - 6 (7—8—'58)

# சிவனுருவம்

அன்பும் சிவமும் ஒன்றே. அன்பு வேறு சிவம் வேறு அன்று. 'அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே' என்பது தமிழாகமம். சிந்தைக்கும் மொழிக்கும் எட்டாத சிவம் நினைப்பவர் மனமே கோயிலாகக் கொள்கிறது. அவ்வுள்ளமே பெருங் கோயில்; ஊனுடம்பே ஆலயம்; வாயே கோபுர வாயில்; சீவனே சிவலிங்கம்; கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்காக அமைகின்றன. சிவனருள் பெருக்கம் சிந்தை மொழிக்குக் கட்டுப்படாத பேரளவினதாதலின், திருஞானசம்பந்த சுவாமிகள் திருவெழு கூற்றிருக்கையில்,

"அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லைநீ ணிலத்தே"

என்று கூறியருளினார்கள். ஆயினும் நம் பெருமக்களாகிய சமயாசாரியர்களும் சந்தானாசாரியர்களும் சிவனுருவைக் கண்டு பேரின்ப வெள்ளத்தில் திளைத்தனர். அவ்வின்ப அநுபவத்தை நம்மனோர்க்கும் வாரி முழங்கினர். "நாவான் மறித்துளம்

---

இஃது (3-7-58) இந்நன்னாளில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்குத் தங்கக் கவசம் செய்விக்கவேண்டித் தங்கக் கட்டியைச் சந்நிதியில் வைத்து வழிபட்டு அன்பர்கட்கு வழங்கியது. இனி, குருவாரந் தோறும் என்னுறுபிரம் அருச்சனையும் உண்டியைத் திறக்கும்போது, இத்தகைய அருளுரை வெளியீடு வழங்கலும் நடைபெறும்.

செவியமுதாய் வார்த்தபிரான் '' — என்ற சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கும் இதனை வற்புறுத்துவதாகும். சிவனது உருவை - அன்புருவை - அருளுருவை அகவிழிகளாற் கண்டு இன்புற்றனர் என்பதனை, '' கண்ணால் யானும் கண்டேன் காண்க '' என்ற மாணிக்கவாசகர் திருவாக்கு உணர்த்தும். திருநாவுக்கரசுப் பெருமானார் திருப்பூவணத் திருத்தாண்டகத்தில்,

'' வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழும் திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே ''

என்பது முதலாகச் சிவனுருவைத் தாம் கண்டு இன்புற்றவாற்றை அருளியுள்ளார்கள். இங்குச் சைவசித்தாந்த அடிப்படையில் ஓர் உண்மையினை உணர்தல் வேண்டும்.

பரசிவம் எல்லா வடிவங்களையும் கடந்திருப்பினும், ஆன்மாக்களுக்குப் போகமும் யோகமும் வீடும் உதவுமுகத்தால் கருணை நிரம்பி அருட்டிருமேனி கொள்ளும் என்பது முடிந்த முடிபாகும். எண்ணிறந்த அருட்கோலங்களை யேற்றுச் சேதன அசேதன பிரபஞ்சங்களை இயக்கும். உருவம், அருவம், அருவுருவம் என்று மூன்று திருமேனிகளும் பரசிவம் கொள்ளும் என்பது நோக்கி உணர்ந்து மெய்ம்மை தெளிதல் கடனாகும்.

திருமுறையாசிரியர் அருளுரைகளுள் சிவனுருவம் பற்றித் திரட்டிய ஐந்து திருப்பதிகங்களை,

'' ஒருரு வரிய பானை வடிவே
மருவார் என்ற வண்டமிழ் ஐந்தும்
திருவார் மேனிச் செய்தியதாகும் ''

என்றதாற் குறிக்கொள்ளலாம். ' உயிராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக் கிழியின் ' சிவன் உருவை எழுத வேண்டும். அதுவே மனிதப்பிறவி யெடுத்ததன் மாண்புறு பயன் ஆகும்.

## அருளுரை - 7 (14—8—'58)

# திருவடி

நம் பரதகண்டத்தில் அளவில்லாத சமயங்களிருக்கின்றன. அவற்றுள் ' திருவடி அடைதல் ' ஆகிய முத்தியை உடையது சைவ சமயம். ' திருவடி ' தொழுதலை வேறு சமயங்களும் கொண்டிருப்பினும், அவற்றின் முத்தி நிலை, சைவ சமயத்தின் முடிபுக்கு வேறாயுள்ளது. சிவாலயத்தில் வந்து வழிபடும் அறிவுடைய அன்பர்களை நோக்கினால், ' திருவடி வழிபாடு ' நிகழ்த்தும் உண்மை விளங்கும். ' அடிகளது அடிதொழும் அறிவு அலது அறிவு அறியம் ' (201) என்றும், ' முத்திதரும் தாளிணைக்கே சரணம் புகுந்தேன் ' (5080) என்றும், ' அடிகேள் பிழைப்பன் ஆகிலும் திருவடிப்பிழையேன் ' (7774) ' பெட்டன் ஆகிலும் திருவடிப் பிழையேன் பிழைப்பன் ஆகிலும் திருவடிக்கு அடிமை ஒட்டினேன் ' (7775) ' வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும் நெஞ்சமும் வஞ்சம் ஒன்று இன்றி உய்த்தனன் தனக்கே திருவடிக்கு அடிமை ' (7358). ' சிவனடியார்க்கு அடியான் அடித் தொண்டன் ' (8025) ' நமன்தமர் நலியின் இவன் என் அடியான் என விலக்கும் சிந்தையால் வந்து உன் திருவடியடைந்தேன் ' (7284) என்றும், மூவரும் அருளியவற்றை நோக்கினால், சைவ சித்தாந்த முத்தி திருவடி அடைதல் என்பது தெளிவாகும். ' திருவடிக்கீழ்ச் சொல்லிய பாட்டு 'க்களே திருவாசகம். ' தில்லை மூதூர் ஆடிய திருவடி 'யை அடைந்த மாணிக்கவாசகர் ' அடியோம் அடிக்குடில் ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன் ' என்றார். வீடுபேற்ற பின்னும் முன்னும் ' அடியார்களுக்குத் திருவடியே வாழும் இடம் ஆதலின், ' அடியோம் அடிக்குடில் ' ஆயிற்று. ' ஆதியாம் பாதமலர், அந்தமாம் செந்தளிர்கள், எல்லா வுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம், போகம் ஆம்பூங்கழல்கள், ஈறும் இணையடிகள், யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள் ' என்றும் ' மலர்க்கழல்கள் காட்டிப் பிறவாமல் காத்தாட் கொண்டாய் ' என்றும் திருவாசகம் திருவடியைக் காட்டும் முறையைக் கண்டு பேரின்பம் அடைதல் வேண்டும். மாணிக்கவாசகரைக் காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம்காட்டித் தாள் தாமரை காட்டித் தன் கருணைத் தேன்காட்டிப் பரசிவன் ஆட்கொண்டான். அதனால், அவர், அந்த ஐயன்

அணிதில்லைவாணன் செய்ய திருவடியே பாடிப் பாடிச் சித்தமும் பித்தும் சிவனொடும் ஆடஆட நாத்தழும்பேற வாழ்த்தினர். ‘ இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன் ’ என்ற திருவாசகம் அநுபவம்ஆகும் காலத்தில் பேரின்பம் எய்தும். அத்திருவடியைப் பூஜை செய்து வந்தால் அதை நன்கு கண்டு அழியாத இன்பம் அடையலாம்.

‘ பூசனை உகந்து என் சிந்தையுள் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே ’

இதில் மணிவாசகம், திருவடியைப் பெறப் பூஜையே சாதனம் என்கின்றது. திருவள்ளுவரும் அடி சேர்தலே முத்தி என்றார்.

திருவடியைச் சேர்வதற்கு உரிய ஞானமே மெய்ஞ்ஞானம். அது குருவருளால்தான் கிடைக்கும். வேறு எதனாலும் அது வாராது. குருவருள் ஒன்றே சகல கலை ஞானங்களையும் தர வல்லது. ‘ மந்திரத்தால் மருந்துகளால் வாய்த்த வியோகத்தால் மணியிரத குளிகையினால் மற்றும் மற்றும தந்திரத்தே சொன்ன முறை செய்ய வேத சகலகலை ஞானங்கள் திரிகால ஞானம் அந்தம் இலா அணிமாதி ஞானங்கள் எல்லாம் அடைந்திடும், ஆசான் அருளால் அடிசேர் ஞானம் வந்திடும் மற்றொன்றாலும் வாராதாகும். மற்றவையும் அவன் அருளால் மருவும் அன்றே ’ ‘ அடியார் ’ என்பதே சைவத்தின் திருவடி முத்தியைக் குறிக்கும். சிவாலயங்களில் திருவடியிலிருந்து திருமுடி வரையிலும் நோக்கிப், பின் திருவடியில் முடிவதே சிவதரிசனம் ஆகும்.

வாழ்க திருவடி.

---

### பன்னெறி விளக்கம்

களமூர். பெருநாவலர். திரு. செ. செல்லப்ப முதலியார் பாடியது.

மன்னனை யெடுத்தலின் மாசுணவேந்தனை மன்னவன்கை
வன்னனப் பிரம்படி யேற்றலெ ளிசனை வல்விலங்கோ
டுன்னனடுங் கச்சிறை வைகலிற் கஞ்சனை யோப்பதிருற்
றின்னலிய கள்ளரைக் கிரேசரேன் றேப்படிச் செப்புவதே. 24

## அருளுரை - 8 ( 21—8—’58 )

# அருச்சனை

அருச்சனை இறைவன் திருவருளை எளிதில் பெறும் வழி. அருச்சனைகளில் இறைவன் பெருமைகளை இனிது எடுத்தியம்பி அவனை வணங்குகிறோம். ‘ அருச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக ’ என்றார் சுந்தரருக்குப் பெருமான். தமிழ்ப் பாடல்களை அருச்சனையாகவேண்டி ஏற்றுக் கொண்டான். ‘பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான் என்றும் ‘ஆயிரம் பேருகந்தானும்’ என்றும் திருமுறைகளில் வருவன இப்பொழுது நாம் செய்துவரும் ஆயிரம் திருநாமம் கூறி அருச்சிக்கின்றதை நினைவுபடுத்தும். மற்றும் தெய்வத் திருமுறைகளில் அருச்சனை செய்யும் முறைகளும், பயனும், அருச்சித்தற்கேற்ற பதிகங்களும் காணப்பெறுகின்றன. திருவாசகத்தில் போற்றித் திருவகவல் இறைவனை அருச்சித்தற்கு ஏற்றது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய கயிலாயத் திருத்தாண்டகமாகிய ‘வேற்றாகி விண்ணாகி’ என்று தொடங்கும் திருப்பதிகம் அருச்சனை அமைதிகள் பலவும் நிரம்பியது. இதனுள் போற்றி என்ற தொடர் ஒவ்வொரு வரிகளின் இறுதியிலும் வந்து முடிகின்றது. திருவாரூர்த் தாண்டகப் பதிகம் ஒன்று போற்றி போற்றி என்று முடிவுறுகிறது. இத் திருப்பதிகத்திற்கு ஒரு தனிச்சிறப்பு. இது அருச்சனை புரிதற்கேற்ற அமைப்போடு விளங்குகிறது. இதனுள் 108 முறை போற்றி என்று வருகிறது. திருக்கோயில்களில் வழங்கும் அஷ்டோத்தர சதம்போலச் சிறந்து விளங்குகிறது.

“ கற்றவர்களுண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி ”

என்று தொடங்குவது. அருச்சிக்க விரும்புவோர் இத்திருப்பதிகத்தை மேற்கொள்ளலாம். திருமுறைப் பகுதிகளைக் கூறி அருச்சித்தலும் பொருந்துவதொன்றே. எவ்வாறேனும் இறைவன் புகழ்கூறி மலரிட்டு வழிபடுவதெல்லாம் அன்பு காரணமாக அருச்சித்தலேயாகும். ஆன்மார்த்த பூசையில் மட்டுமன்றி இறைவன் திருக்கோயில்களில் நன்மைக்கெனப் பெயர் பிறந்தநாள் கூறி அருச்சித்தல் உயிர்ப்பயன் கருதியன்றோ ? பரார்த்த வழிபாட்டில் அருச்சனை செய்வோர்

அவ்வவர் நன்மைக்கே பெரும்பாலும் செய்கின்றனர். திருக்கோயில்களில் தேவார திருவாசகங்கள் முழங்கட்டும். இறைவனை அருச்சிப்போர் இதைக் கருதியேனும் திருமுறைகளைப் படிப்பர். திருமுறைகளை உணர்ந்து உய்வர்.

" செந்தமிழர் தெய்வமறை நாவர் செழுநற்கலை தெரிந்த அவரோடு
அந்தமில் குணத்தவர்கள் அருச்சனைகள் செய்யஅமர்கின்ற
அரன்ஊர் "

என்பது திருவீழிமிழலைத் திருப்பதிகம். வேதியர் விரும்பும் பதியாகிய வீழிமிழலையில் செந்தமிழர் அருச்சித்த அழகை நன்கு விளக்குகிறார் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தர் அருளிய திருப்பூந்தராய்த் திருப்பதிகமாகிய "பந்துசேர் விரலாள்" என்ற பதிகம் போற்றுதும் என்ற சொல் முடிபோடு அருச்சனைத் தலைப்பில் காணப்படுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய "வேற்றாகி விண்ணாகி" என்ற பதிகமும் போற்றி போற்றி என்ற சொல் முடிபோடு இடம்பெற்றுள்ளது. சுந்தரர் திருப்பதிகமாகிய "கொன்று செய்த" என்ற பதிகம் சென்று சென்று தொழுமின் திருக்கழுக்குன்றினை என்ற பொருளை ஒவ்வொரு பாடலிலும் உடையதாய்த் திகழ்கிறது. 'அருச்சனை, என்ற தலைப்பில் அகத்தியர் தேவாரத்திரட்டில் காணப்பெறுவனவற்றை அன்பர்கள் ஓதி உணர்ந்து பயன் பெறுக.

---

" ஞானசம்பந்தம் "

சமய விளக்கத் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. கடவுள் உணர்ச்சி ஊட்டும் கவிதை கட்டுரை கதைகள், இலக்கிய இலக்கண ஆராய்ச்சி விரிவுரைகள், அறிவியற் கட்டுரைகள், பிற மொழி பெயர்த்துத் தமிழாக்கந் தரும் கட்டுரைகள், எதிர்காலம் முதலியவற்றிற்கும் இருப்பிடம். சந்தாத் தொகையைக் கீழ்க்கண்டமுகவரிக்கே அனுப்பிவைக்கவும். ஆண்டுக்கையொப்பம்

உள்நாடு ரூ. 1—50 வெளிநாடு ரூ. 2—00

செயலாளர்,
" ஞானசம்பந்தம் " காரியாலயம்,
தருமபுர ஆதீனம், மாயூரம் அஞ்சல்.
தஞ்சை மாவட்டம்.

## அருளுரை - 9 (28—8—58)

# தொண்டு

'தொண்டு' என்னும் பெயர்க்குப் பொருள் என்ன? அப்பெயரால் எவை குறிக்கப்படுகின்றன? அவையெல்லாம் அதற்குப் பொருள் ஆகுமோ? இவை போன்ற கேள்விகள் இப்போது வேண்டாதன. ஆராய்ச்சிக்கே வேண்டுவன. ஆண்டவனுக்கும் அடியவர்க்கும் செய்யும் பணியே தொண்டு என்று யாவரும் அறிவர். தேசத் தொண்டு மக்கள் தொண்டு முதலிய எல்லாம் தெய்வத் தொண்டுகளில் ஒரு கூறாய் அடங்குவனவே. இங்கு நாம் சைவ சமயத்தின் தொண்டு குறித்துப் பேசுகின்றோம்.

சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடையவை உயிர்கள். உயிர் எப்பொருளைச் சார்ந்தாலும் அப்பொருளின் வண்ணமாகிவிடும். வீட்டைச் சார்ந்து மனைவி மக்களாகி மற்றைப் பொருள்களாகி இன்பத்துன்பமயமாவதும், கோயிலைச்சார்ந்து கடவுளும் கடவுள் நினைவும் கடவுளருளுமாகிப் பேரின்பமயமாவதும் அநுபவம். உண்ணும்போது உணவின் சுவைமயமாவதும் உறங்கும்போது உறக்கமாவதும் உலகச் சூழலிற் சிக்கி உலகமயமாவதும் உயிர்க்கு வழக்கமாயில்லையா? அதையே 'உயிர் சார்ந்ததன் வண்ணம் ஆகும் இயல்புடையது' என்று சைவ சித்தாந்தம் கூறுகின்றது.

வெவ்வேறு தொழில் செய்து இலௌகிகமயமாயிருந்த உயிர்கள், வள்ளலார்க்கு அருச்சனை, அபிஷேகம், தங்கக்கவசம் முதலியவை செய்யும் வைதிகத்தில் ஈடுபட்டு, வைதிகமயமாயிருக்கின்ற உண்மையும் அதனை நன்கு தெளிவிக்கும்.

அவ்வகையில், உயிர்கள் பாசப் பொருள்களைச் சார்ந்து பாசமாகாமல், பதிப்பொருளாகிய வள்ளலார் திருவடியைச் சார்ந்து, அதன் வழியினவாகி நிற்பதே தொண்டாகும். அதுவே தொண்டினது முடிந்த நிலை. அந்நிலையை அடையவேண்டிச் செய்து வரும் அடிப்படையான நிலைகளும் 'தொண்டு' என்று சொல்லப்படும்.

'உடம்பே நான்' என்று உள்ள உயிர்கள் அளவில்லாதன. 'உடம்பு வேறு நான் வேறு' என்று உணர்ந்த உயிர்களுள் பல, நான் வேறு, என்னை அடிமை கொண்டருளும் ஆண்டவன்

வேறு என்று அறியாமல், நானே கடவுள் என்னும் உயிர்களும் உள்ளன. உயிர் உடம்பும் அல்ல ; கடவுளும் அல்ல. உடம்பு முதலிய தொகுதியான பாசப்பொருள் வேறு. உயிர் வேறு. கடவுள் (பதி) வேறு. 'நான் பாசமும் அல்லேன். பதியும் அல்லேன்' என்று உண்மையை உணர்ந்து, பாசத்தை விட்டு நீங்கிக் கருடோகம்பாவனை போலச் சிவோகம்பாவனை செய்துவர வேண்டும். சூரியன் ஒளிபோல்வது கடவுள். கண்ணொளிபோல்வது உயிர். சூரியனது ஒளியும் கண்ணின் ஒளியும் சிறிதும் வேற்றுமை தோன்றாதபடி கலந்திருப்பதைப் பார்க்கிறோம். அப்படியே வியாபகமான சிவமும் அதில் வியாப்பியமான ஆன்மாவும் சிறிதும் வேற்றுமை தோன்றாதபடி கலந்து நின்று சிவோகம்பாவனை செய்துவந்தால், சார்ந்ததன் வண்ணம் ஆகும் இயல்புடையதாய்ச், சார்ந்த ஆன்மாவிற்குச் சாரப்பெற்ற சிவத்தின் வண்ணம் உண்டாய்விடும். அதுவே தொண்டுக்கு முடிவான பயன். அத்வைதம் என்பது இதுவே. இதற்குப் பலர் பலவகையான கருத்துக்களைக் கூறிவருகின்றனர். சைவ சித்தாந்தத்தில் கூறும் அத்வைதம் இதுவே.

'கண்ட இவை அல்லேன் நான் என்று அகன்று காணாக்
கழிபரமும் நான் அல்லேன் எனக்கருதிக் கசிந்த
தொண்டினொடும் உளத்து அலன்தான் நின்ற கலப்பாலே
சோகம்எனப் பாவிக்கத் தோன்றுவன் வேறு இன்றி
விண்டகலும் மலங்கள்எல்லாம் கருடதியானத்தால்
விடம்ஒழியும் அதுபோல விமலதையும் அடையும்
பண்டைமறைகளும் அது நான் ஆனேன் என்று
பாவிக்கச் சொல்லுவது இப் பாவகத்தைக் காணே'

என்னும் அருணந்திதேவநாயனார் அருளிய சிவஞானசித்தியாரில் தொண்டுகளுள் முடிவான ஒன்று குறிக்கப்பட்டிருக்கிறது.

அதன் உரையில் மாதவச் சிவஞான முனிவர், 'தொண்டாவது சார்ந்ததன் வண்ணம் ஆம் இயல்பு உடைய உயிர் கழிபரமும் (-சுட்டுணர்வு இறந்த நின்ற அப் பதிப் பொருளும்) நான் அல்லேன் எனக் கருதிய வழி, முன்போல முனைத்தல் இன்றி, ஒங்குணர்வினுள்ளடங்கி அதன் வழித்தாய் நிற்றல்' என்றும் 'முனைத்து நின்று செய்யும் உலகத்தொண்டின் நீக்குதற்குக் கசிந்த தொண்டு என விசேடித்தார்' என்றும் எழுதினார்.



உலகத் தொண்டுகளில் ஆன்மாவின் முனைப்பு இருக்கும். தெய்வத் தொண்டுகளில் அம் முனைப்பு அகன்று உள்ளம் உருகும். 'கசிந்த தொண்டு' என்றது அதுபற்றியே. அடியவர்க்குத் தொண்டு செய்யும் வழியால், தெய்வத்தின் அருளைப் பெறுவது எளிது. எவ்வுயிரிலும் கடவுள் இருப்பதால், உயிர்களிடத்தில் அன்பு வைத்து, அவற்றிற்கு உதவிசெய்வது கடவுளைச் சாரும். அடியவரிடத்தில் அன்பு இன்றிக் கடவுளிடத்தில் அன்புடையார்போல நடப்பது போலி வழிபாடே என்றார் அருணந்தி தேவர்.

'ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்'

என்கின்றது சித்தியார். உதவி, தொண்டு, அன்பு முதலியன ஒன்றல்ல.

சரியை, கிரியை, யோகம் ஞானம் என்னும் நாலு பாதத்திலும் நிகழும் கிரியை (செயல்) எல்லாம் ஆண்டவனது உண்மைப் பணி.

'ஞான யோகக் கிரியா சரியை நான்கும் நாதன்றன் பணி.'

என்பது சித்தியார். இந் நால்வகைத் தொழிலும் ஞானிகள் செய்தலே கடப்பாடு. உள்தொழில் செய்வார்க்குப் புறத்தொழில் செய்யும் உரிமையும் உண்டு. புறத்தொழில் செய்வார்க்கு உள்தொழில் செய்யும் உரிமை இல்லை. அதுபோல, ஞானிகளுக்கு உள்ள உரிமை மற்றவர்க்கு இல்லாவிடினும், அவரவர்க்கு உள்ள உரிமைக்கு ஏற்பத், தவறாமல் தொண்டு செய்துவரவேண்டும்.

நாதன்பணி, இறைபணி சிவத்தொண்டு முதலியவை எல்லாம் வேறுபட்டன அல்ல.

உலகியல் ஒழுக்கம் அன்பு, கருணையுடைமை, ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், தவம், தானம், பெரியோரை வழிபடல், அர்ச்சனை, வணக்கம், வாய்மை, அடக்கம், பற்றில்லாமை, பகுத்தறிதல் முதலிய நன்மைகள் தொண்டுள்ளத்தை வளர்க்கும் துணைகள்.

" நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமைக்
குன்றாத வுணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார் "

(சேக்கிழார்)

இதனால் தொண்டர்க்கு உரிய இலக்கணம் இனிது விளங்கும். நெஞ்சத்தைக் கடவுள் திருவடிக்கே இடம் ஆக்கிச், சொற்களைக் கடவுள் புகழுரையாக்கிச், செயலைத் தொண்டாக்கி வருவோரே திருவருளுக்கு உரிய தொண்டராவார்.

உலகில் உண்மைத் தொண்டும் அதற்குரிய மெய்யன்பும் வளர்ந்தோங்குக, வாழ்க உலகெலாம், வளர்க திருவருள்.


சிறந்த திங்கள் வெளியீடு → **குமரகுருபரன்**

ஆண்டுச் சந்தா 1 — 50

இவ் வெளியீடு 9 ஆண்டுகளாகத் தொண்டுபுரிகின்றது. சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றினை எளிய நடையில் தெளியக்கொண்டு உலவுகின்றது. தருமையாதீனத்து முனி புங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமர குருபர சுவாமிகளின் திருப்பெயர் கொண்டு வெளிவருவதால் அவர்கள் அருளிய நூல்களின் ஆராய்ச்சி விளக்கமும் ஏற்றுத்திகழ்கிறது. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் ஆணையின்வண்ணம் இவ்விதழ் சைவ மணம் வீசுகிறது. எல்லோரும் பாராட்டிவரும் இம்மணத்தை முகர்ந்து பயனடைக.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,
" குமரகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.


# சிற்றிலக்கியம் 1


திரு. மது. ச. விமலானந்தம் எம். ஏ.,
தமிழ்த்துறை, சரபோஜி அரசர் கல்லூரி, தஞ்சை.


" ஈண்டுநின் றோர்க்குந் தோன்றுஞ் சிறுவரை சென்றுநின் றோர்க்குந் தோன்று "வதாகிய மன்னனது மலையை வருணிக்கும் கவிஞர்கள் கற்பனைத் திறமும் தாமும்தான் என்னே! விண்ணை யிடிக்கும் ஒரு வெற்பு எனக் கூற விழைகின்றார் ஆசிரியர். விண்ணையிடிப்பதற்கும் ஓர் விளக்கம் தரவேண்டுமன்றோ? தன்னைவந்தடைந்தோர்க்குத் தேன் அளிப்பதோடு அமையாதாம் அம்மலை. அள்ளித்தரும் வள்ளல்கள் அடுத்தடுத்து அளிப்ப திலே ஆசைகொள்ளுமாப்போல, தேனோடு தேவரமுதளிக்கவும் ஆசைப்படுகின்றதாம். எனவேதான் விண்ணைத்தாக்குமளவிற்கு ஓங்கி உயர்ந்து விளங்குகின்றதாம். இதனைக் கவிஞன்,

" தேனளந்த கானவர்க்குத் தேவரமு தளக்க
வானளந்து நிற்கும் வராக கிரிவேந்தன் "

மலையையடுத்து மன்னனது மாளிகை, வாயிற் சிறப்பைக் கூறும் கவி நம் கண் முன்னேயே வாயிலைக் கொணர்ந்து நிறுத்து கின்றார் பாருங்கள்.

" பொன் னிலங்க வச்ரப் பொடியிலங்கப் பொற்கதவு
முன்னிலங்கப் பின்னிலங்க முத்திலங்கும் வாசலினான் "

இதன் கண் உண்மை நாடவேண்டுமே தவிர உயர்வு நவிற் சியில் அயர்ச்சியடைதல் கூடாது.

இனி நாடாள் வேந்தனின் வாய்மையைக் கண்டு வியக் கின்றான் கவிஞன். மறைமொழிகூட ஒரு வேளை பொய்த்துப் போகலாம். வற்றாத கடலும், வற்றக்கூடும். திங்களும் ஞாயிறும் தத்தம் நிலைபெயரக்கூடும். இவையனைத்தும் பொய்த்தாலும் நான் சொன்ன மொழி பொய்யாதான் - நின்ற சொல்லன் என்பதை,

" மாமறை நூல் பொய்த்தாலும் வாரிதிநீர் பொய்த்தாலும்
சேமரவி பொய்த்தாலும் சொன்னமொழி பொய்யாதான் "

வாய்மையைக் கூறியவர் வள்ளன்மையை விளக்குகின்றார் பாருங்கள்.

" அண்டர் தருவுக்கும், அருங்காம தேனுவுக்கும்
கொண்டல் தனக்கும். கொடைபயிற்றும் செங்கரத்தான் "

கேட்டதெல்லாம் தருவது கற்பகமரம். கரக்காது காப்பது காமதேனு. வரையாது பொழிவது மேகம். இவையனைத்தும் (எத்துணைச் சிறப்புற்றிருப்பினும்) இவனிடத்தேதான் கொடைப் பயிற்சி பெற்றனவேனின் இவனது ஈத்துவக்கும் இன்பத்தை என்னென்பது ?

கொடைநலம் கண்டநாம் படைப்பலம் காணவேண்டாமா ? யானைகள் மாற்றாரை ஆற்றாது அலரும்படி நிலத்திலே மோதி எழுப்பும் பேரொலியை அப்படியே கவியாகத் தீட்டுகின்றான் கவி.

" சண்டையிற் பெருங் கொடித்தலம் தகர்ந்து வஞ்சகரைக்
கொண்டெடுத் தறைந் துரப்பு கும்பஉக்ர குஞ்சரத்தான் "

இவ்விரண்டடியிலே யானையின் சினமும் களிறு தாக்கக்கதறு யமும் அலரலையும், ஆரவாரத்தையும் நேரில் கேட்பதுபோன் றில்லையா ? சொல்லடுக்கும், பாமிடுக்கும் சொல்வேகமுங் கொண்டு கருதியதைக் கவியாகத் தீட்டும் கவியின் திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது.

" உடைதிரைகள் குமுறுகடல் ஒலியுமுகில் இடியுமென
அடையலர்கள் செவிகுடைய அதிருமொலி மணிமுரசான் "

என்ற அடிகளில் மணிமுரசத்தில் அதிரொலியை அழகாகத் தீட்டுகின்றார் கவிராயர்.

தலைவனும் தலைவியும் கூடிப்பிரிகின்றனர். பிரிவாற்று மையால் கண்ணீர் வடிக்கின்றாள் தலைவி. இதனைக்,

" காலாயுதக் கொடியோன் கையாயுத விழியாள்
மாலாயுத மீன்ற மாமணியைத் தானுதிர்த்தாள் "

என்கின்றார். பொருள் புலப்படுகின்றதா ? உட்பொருளை ஊன்றிப் பார்த்தால்தான் உணரமுடியும். இங்கு, காலாயுதம் என்றது



காலையே ஆயுதமாகக்கொண்டு சண்டைசெய்யும் கோழியை. கோழியைக் கொடியாகக் கொண்டவன் முருகன். எனவே காலாயுதக் கொடியோன் என்றால் முருகனைக் குறிக்கும். அவனது கையாயுதம் ஒளிவீசும் வெற்றிவேல். மலர்விழியின் கூர்மைக்கு முருகனது வேலை உவமிக்கின்றார். கூர்மையான முருகனது வேலைப்போன்ற விழியுடையாள் என்க.

இனி மாலாயுதமீன்ற மாமணியைத் தானுதிர்த்தாள் (மால்+ஆயுதம்) மால்=திருமால். அவனது ஆயுதம் சங்கு. சங்கு தருவது முத்து. முத்துப்போல கண்ணீரை உதிர்த்தாள். எனவேதான் மாலாயுதமீன்ற மாமணியைத் தானுதிர்த்தாள் என்கிறார். காதலனைப் பிரிந்த காதலி முத்துமுத்தாகக் கண்ணீர் வடித்தாள் என்பதுதான் பொருள். இப்போது பாடலைப்பாருங்கள், பன்முறையும் படியுங்கள். முயன்று வருந்திப் பெறும் பயனிலேதான் முழு இன்பம் உண்டு ! இல்லையா ?

மலர்ச் சோலையிலே மங்கை, தனித்து மலர்கொய்து கொண்டிருக்கிறாள். இங்கனம் அவள் மலர் கொய்வது கண்டு கவிஞனுக்கு விந்தையாக இருக்கிறது. ஏன் ? ஏனு ? தன் னிடத்தேயே மலர்கள் நிறைந்து விளங்க, இரக்கச் செல்வது போன்று - வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலை வதுபோன்று சோலையிலே சென்று மலர் பறிப்பானேன் ? பெண்களின் கண், முகம், கன்னம் முதலியவற்றைத் தாமரை, காந்தள், போன்றவற்றிற்கு உவமை கூறுதல் புலவர் மரபு. இதனை எண்ணத்தில் வைத்தே கவியும் பூப்போன்ற உறுப் பெலாம் தன்னிடத்தே பூத்திருந்தும் அப்பூங்கொடியாள் என்ன செய்தாள் தெரியுமா ? என்கின்றார்.

" பூவெல்லாம் தன்னிடத்தே பூத்திருக்கப் பார்த்திருந்தும்
காவெல்லாம் சென்று சென்று கால் நோவப் பூவெடுத்தாள் "

காதலில் விளங்கும் உயரிய கண்களிலே ஒன்று.

தலைவியை எதிர்ப்பட்ட தலைவன் ஐயுற்று, பின் ஐயந் தெளிகின்றான். ' உனது ஊரேது ? பேரேது ? என்று பற்பல வாறு வினவினும் பதிலுரைத்தாளில்லை. தலைவனுக்கோ பேச வேண்டுமென்ற வேட்கை. எனவே சிறிது சினந்து

‘ வெள்ளரிக் காயா விரும்புமவரைக் காயா
உள்ளமிள காயா ஒரு பேய்ச் சுரைக்காயா ’’

இதில் எடுத்த எடுப்பில் ஏதோ வெள்ளரிக்காயும், அவரைக் காயும், மிளகாயும், சுரைக்காயும் தான் தோற்றமளிக்கின்றதே தவிர தெளிபொருளேதும் தென்பட்டிலது. இங்கு சிலேடை அமைக்கப்பட்டுள்ளது; வெள்+அரி ; விரும்பும்+அவரைக்+ காயா ’ உள்ளம்+இளகாயா ; பேச்சு+உரைக்காயா ! என்று கொண்டால் பொருள் இனிது விளங்கும். இப்போது பாருங்கள் வெண்ணிறத்தோடு ஒரு காலத்து விளங்கியவர் திருமால். அவரது அவதாரங்களில் தூணிலிருந்து தோன்றும் நரசிங்காவதாரமும் ஒன்றன்றோ ? எனவே தூண் திருமாலுக்குத் தாயாயிற்று. பேசாது நிற்கும் பாவை (திருமாலுக்குத் தாயாகிய) தூணு ? என்பதுதான் பெறப்படுவது. விரும்புகின்றவர்களைக் காயாத - கோபியாதமனமுடையவளாயிற்றே? என்பால் உள்ளம் இளகாயா ? ஒரு பேச்சாகிலும் உரைக்கலாகாதா ? என்ற சிலேடையில் அமைந்த சொற்களே இவை. இவற்றின் கண் அமைந்த நயம் எண்ணி எண்ணி மகிழ்தற்குரியது. இது ‘ முத்துசாமிப் பிள்ளைக் காதலில் ’ ஒரு கண்ணியாகும்.

தலைவனைக் காணாது தவித்தாள் தலைவி. பின் தலைவனது ஊருக்காகிலும் சொல்லலாமென்றெண்ணுகின்றாள். தலைவனது ஊர் ஒன்பதூர் என்று அவன் சொன்னது நினைவிற்கு வருகின்றது. உடனே கன்னிக்குக் கவலை எழுகின்றது ! ஏன் ? காரணம் கவியிலே !

‘‘ பேரூர் வழியே நாம் பின் தொடர்வோம் என்றாலும்
ஓர் ஊர் என்றானிலையே ஒன்பது ஊர் என்றானே ’’

என்பதுதான். தலைவனது ஊர் நவபுரி. இதனை ஒன்பதூர் என்று வைத்து அழகுபடுத்தியுள்ளார் ஆசிரியர். இதனையறியாததே தலைவின் தயக்கத்திற்கும் மயக்கத்திற்கும் காரணம் என்க. ‘ கன்னிவாடி ஜமீன்தார்காதலில் ’ இது போன்றதொரு காட்சி காணத் தக்கது.

‘‘ ஆடுமயில் வாகனமே ஆரணங்கே பூவைகன்னி
வாடி என்று சொன்னானே வாழுமூர் சொல்லலையே ’’



என்பதுதான் அது. கன்னி, வாடி என்று தானே சொன்னார். ஊரைச் சொல்லவில்லையே? என்று வருந்துகின்றாளாம் தலைவி. அவனது ஊரே கன்னிவாடி என்பதுதானே !

நாயக்கன் காதலிலே ஒரு கருத்துத் தென்படுகிறது ; மகளிர்க்கு இடக்கண் துடித்தல் நன்னிமித்தமாகும். இதனை,

‘‘ அன்று குணமாலை எனும் அன்பான பாங்கியைப் பார்த்து
இன்றெனது கண்ணின் இடக்கண் துடிக்கி தென்றாள்
கன்னியழியாத காரிகையே இன்றுனக்குச்
சொன்னேன் அதிக சுபசோபன முண்டாகுது என்றாள் ’’

என்ற அடிகளில் தெளிவாக்குகின்றார் கவிராயர்.

இங்ஙனம் சொற்சுவையும் பொருட்சுவையும் மிக்க காதலிலக்கியம் அளவிற்கு மிஞ்சிய சிருங்காரச் சுவையுடைதாய் விளங்கும் குறையினைச்சுட்டுவர். இது காலத்தின் குறையே தவிர காதல் காப்பியத்தின் குறையாகாது. தமிழருமையறியாத காலம். செல்வம் மிக்கோர் தெலுங்கையே தாய் மொழியாகக் கொண்டார்கள். சிற்றின்பத்திலே சிந்தை தோய்ந்தவர்கள். அவர்களை மகிழ்வித்துப் பரிசுபெறும் நோக்கோடு எழுந்தனவே. இக்காதற் பிரபந்தங்கள். எனவே அவர்களை மகிழ்வூட்டும் சிற்சில சித்திரங்களும் செய்யுட்களும் அமைக்கவேண்டியது அவசியமாயிற்று. எனவே குறையைக் காலக்குறையாகக் கொண்டு, நெல்லுக்கும் உமியுண்டு, நீருக்கும் நுரையுண்டு என்ற அளவிலே கொண்டு கவியின்பம் காண்பதே பெருந் தன்மையாகும்.

இத்தகைய சிந்தைக்கு விருந்தாகவும் செவிக்கு இன்பம் தருவதாகவும் அமைந்து சொல்லாலும் பொருளாலும் சுவை பல நல்கும் காதற் பிரபந்தங்களை - சிற்றிலக்கியங்களைத் தமிழர் விரும்புவதில் வியப்பில்லை - வெறுத்து விலக்குவதில் தான் வியப்பு !

# குடகுமலைப் பெண்

**வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர்**
தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

குடகுமலைப் பெண்ணொருத்தி ; குறுமுனிவன் ஈன்றெடுத்த
மடஅன்னம் ; கண்டோர் மனங்கவரும் எழிலுடையாள்.

கொஞ்சுமொழி சலசலப்பும் குறுநடையும் கண் டுவந்து
அஞ்சொல் இளங்கிளியை அன்போடு முனிவளர்த்தான்.

மலைமடியில் மங்கையவள் மயக்குமொழி பேசி ; எழில்
சிலையெனவே வளர்ந்துமணச் செவ்வியுற்றாள் பொன்பூத்தாள்.

கீழ்த்திசையில் ஒருவனுக்குக் கிழமுனிவன் அப்பெண்ணை
வாழ்த்தி மணம்முடித்து வழியனுப்பி வைக்கின்றான்.

விடைகொண்ட அவள்கணவன் வீட்டிற்கு விரைவதுபோல்
தடைகடந்தாள்மலையிறங்கித்தரைக்குவந்தாள்மனம்சிதைந்தாள்.

பொன்னைப்போல் மேனிதனில் பூநிரைத்த உடைஉடுத்தி
மின்னலென இடைநெளித்து மெதுவாகத் தானசைந்து ;

கயல்விழிகள் மயல்செய்யக் கருமணலாம் நெளிக்கூந்தல்
அயல்நின்றார் தமக்கெல்லாம் அழகுசெய இடைஒடித்து ;

முத்துப்பல் நகைகாட்டி முறுவலித்துக் கண்சிமிட்டி
மெத்தஅலைக் கைநீட்டி மெல்லிய லாள்நடந்தாள்.

எழில்காட்டி இளைஞர்க்கு இன்கனிவாய் நீருட்டிப்
பொழில்காட்டி விளையாடப் போதெனவே கைகாட்டிச் ;

செல்லுவாள் அவள்பின்னே செல்லுகின்றார் எண்ணற்றோர்
வெல்லுவாள் அவர்க்குஇன்ப விருந்தூட்டி வழியனுப்பி.



தனக்கு மற்றோர்காதலித்துத் தந்தநல்ல பரிசுகளாம்
மனக்கினிய மலர்மாலை மஞ்சள்குங் குமம்பெறுவாள்.

பாட்டாலே பாவலர்கள் பாராட்டிப் பாமாலை
சூட்டுவார் அத்தனையும் சுந்தரியாள் பெற்றிடுவாள்.

இப்படியே பல்லோர்க்கும் இன்பச் சுவையளித்து
மைப்படிந்து உடல்மெலிந்து மங்கையவள் மணவாளன்

வீட்டிற்குச் செல்லுவாள் வேதனையா லவள்கணவன்
காட்டாமல் கோபத்தைக் கைப்பிடிப்பான் கடலரசன்

பொன்னிஎனப் பெயர்பெற்ற பூவுலக அரம்பையவள்
கன்னல்நெல் கமுகுவளர் கரையுடைய காவிரிப்பெண்.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

இன்றையதினம் யான் என் குடும்பத்தாருடன் பெற்ற கடவுள் காட்சியை என்றுமே பெறவில்லை. கோயிலின் உட்பிராகாரங் களும், சந்நிதிகளும், மிகத் தூய்மையாக உள்ளன. அத்தகைய தூய்மையான சூழ்நிலையில் கடவுளைப்பற்றிய நினைப்பு தானாகவே வருவதில் ஆச்சரியமே இல்லை. இத்தகைய கோயில்களும் அவற்றைப் பராமரிக்க இத்தகைய ஆதீனங்களும் உள்ளவரை தமிழனின் சமயநெறி செவ்வனே விளங்குவதற்குத் தடை ஏது மில்லை. இக்கோயிலின் காட்சி மிகப் பெருங்காட்சி.

(Sd.) Y. M. பக்கிரிசங்கர்,
Dt Munsiff, Chidambaram.
10—8—58.

# "அருமறையும் ஆகமங்களும்"

திரு. ம. வே. மு. நாகராஜக் குருக்கள் அவர்கள்
சிறுதையூர், லால்குடி

(மலர் 17, இதழ் 6, பக்கம் 427 இன் தொடர்ச்சி)

நிருக்தம் என்று கூறப்படும் வேதாங்கம் வேதவாக்கியப் பொருளை உள்ளவாறு கூறுதற்கெழுந்ததாகும். வேதபுருஷனுக்கு நிருக்தம் காதுகளாம். சந்தர்ப்பங்களுக்கேற்ப அந்தந்தப் பதங்களின் பொருளைத் தக்க காரணங்களுடன் எடுத்துக் கூறும் நிருக்தத்தைத் தழுவிப் பெரியோர்கள் பல கோசகிரந்தங்களைச் செய்திருக்கிறார்கள். "அமரகோசம்" என்னும் சமஸ்கிருதநிகண்டு இன்றும் வடமொழி கற்றவர்க்கும் கற்பவர்க்கும் பயன்படுவதிலிருந்து நிருக்தநூலின் சிறப்பையுணரலாம்.

நிருக்தத்திற்கு அடுத்தபடியாகக் கூறவேண்டிய நூல் ஜோதிடம் என்பது. இந்நூல் அருமறையின் அங்கமாறில் கண்களாக எண்ணப்படும் சிறப்பு வாய்ந்தது. மக்களுக்கு, விநாடி, நாழிகை, முகூர்த்தம், ஜாமம், நாள், முதலான சிறுகால அளவையும், வாரம், பக்ஷம், மாதம், வருடம், மன்வந்தரம், யுகம், ஆகிய பெருங்கால அளவையும், கணக்கிட்டுக் கூறும் நூல் ஜோதிடமாகும். இச் ஜோதிட சாஸ்திரம், சித்தாந்தஸ்கந்தம், ஹோராஸ்கந்தம், சம்ஹிதாஸ்கந்தம், எனமுவகைப்படும். சூரியன் முதலிய கிரகங்கள், அவைகளின் கதிகள் இவைகளைக்கொண்டு கணக்கிட்ட கால அளவுகள் ஆகியவற்றோடு இன்னும் பல சிறந்த கருத்துக்களைச் சித்தாந்தஸ்கந்தம் கூறும். பிருதிவீ முதலிய பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன் மற்றக் கோள்கள் நிறைந்த இப்புறவுலகிற்கும், மனிதனுக்குமுரிய தொடர்புகளை யெடுத்துக்கொண்டு, பிறந்தது முதல் நிகழ்ந்து வருகின்ற செயல்களையும் - நிகழ இருப்பவைகளையும் - முன் பிறவிகளிற் செய்த, புண்ணிய - பாபப் பயன்கள் இப்பிறவியிலும் தொடர்புற்று வருதலால் அவ்வாறு வந்துள்ள மனிதன் அநுபவிக்கவேண்டிய இன்பத் துன்பங்களையும்-சிறந்த ஜோதிடநூல்களைப் பிரமாணமாகக்கொண்டு தெரிந்து



கொள்வதை ஜாதகம் பார்த்தல் என்று வழங்கிவருகிறோம். இவ்வாறுள்ள விஷயங்களெல்லாம் ஹோராஸ்கந்தத்திலடங்கும் சம்ஹிதாஸ்கந்தத்தில், சகுனம், நிமித்தம், முதலியவற்றைக் காணலாம். பூனை - நரி போன்ற இன்னும் சில மிருகங்களைக் கொண்டும், ஒரு சில பறவைகளைக் கொண்டும் மனிதவாழ்வில் நிகழ இருப்பனவாகிய சம்பவங்களைக் குறிப்பாக உணர்வது சகுனம் எனப்படும். காலதத்துவத்தினருமையை அறிந்தவர் ஜோதிடத்தின் பெருமையையுமுணர்வர். காலம் என்னும் தத்துவம் மண்ணிலிருந்து முப்பதாவது தத்துவமாகச் சித்தாந்த நூல்களிற் கணக்கிடப்பட்டிருக்கிறது. வடமொழியிலுள்ள "சித்தாந்த சாராவளி" என்னும் நூல் காலம் - நியதி இவ்விரண்டு தத்துவங்களினியல்பை ஒரு சுலோகத்திற் கூறுகின்றது. அச்சுலோகம் வருமாறு :—

कालो भूतभवद्भिभाविविकृतो जातः पुरावेशितुः
शक्त्याक्षिप्रचिरादिबोधकलनात् पुंसः क्षिपत्यादितः ।
भुक्तौ स्वार्जितकर्मणां नियतिरप्याज्ञेव राज्ञां नृणां
कृष्यादेश्च नियामकाख्यबलतश्शंभोर्नियन्त्री स्थिता ॥

இதன் பொருள் :— நியதி - காலவித்தை முதலிய தத்துவங்களுக்கு முன்னமே தோன்றியுள்ள காலம் என்னும் ஓர் தத்துவமானது இறைவனுடைய சக்தியால் அதிஷ்டிக்கப் பட்டதாய் இறந்த காலம் - நிகழ்காலம் - எதிர்காலம் என்று மூன்று விதமாய்ப் பரிணமித்து ஆன்மாவிற்குச் சீக்கிரம், சாவகாசம், முதலியவற்றைப் போதனை செய்வதால் சரீராதிகளைப் பரிணமித்து அழியச் செய்கிறது. பின்னும் இந்த ஆத்மாக்களுக்கு முற்காலத்தில் தான் சேகரித்த புண்ணிய பாபகர்மங்களைத் தான்தான் அநுபவிக்குமளவில் (அவரவர் செய்த பயிரின்பயனை அவரவர் அனுபவிக்க ஏற்பாடு செய்யும் அரசியற் சட்டம்போல) 'நியதி' என்னும் தத்துவமானது சிவபெருமானுடைய நியாமகம் என்று சொல்லப்படும் சக்தியின் பலத்தினாலே ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது.''

உயிர்கள் பெற்ற உடல்கள் குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், முதுமைப் பருவம், ஆகியவற்றைக் கடந்த

பிறகோ, அதற்கிடையிலோ, நீர்க்குமிழிபோல் தோன்றி மறைந்துவிடுவதைக் காலங்காட்டுகின்றது.

" நாளெனவொன்று போற்காட்டியுயிரீரும்
வாளதுணர்வார்ப் பெறின். "

என்று தமிழ் மறை மொழிகின்றது.

நினைந்து பார்த்தால் காலமென்பது ஒவ்வொரு நாளாகக் காட்டி உயிரை வாங்குகின்ற வாளென்பது விளங்கும். கால தத்துவம் கண்ணால் காணத்தக்கதோரு உருவப்பொருளில்லை. அறிவற்ற ஜடப்பொருள் அது. இருப்பினும் அதையும் உருவகப்படுத்திக் காலம் பிறந்ததென்றும், கடந்ததென்றுங் கூறிவருகின்றோம். நல்ல வழியில் செல்லவேண்டிய ஒருவன் வேறு திசையிற் சென்று குழப்பமடைவானேயாகில் ' வழி தவறிவிட்டது " என்பான். வழியிலுள்ள மலைகள், மரங்கள் முதலியனவெல்லாம், இருந்த இடங்களிலேயே நிலைபெற்றிருந்தும், தன்னிடமுள்ள அறியாமையை வழிமேற் சுமத்திக் கூறுவது மனித சுபாவம். இதைப்போல்தான் நாம் படும் இன்பத் துன்பங்களை யெல்லாம் காலத்தின் மேலேற்றி நல்ல **காலம் - கெட்டகாலம்** என்று கூறுகிறோம். ஒருவர் மரண மடைந்தால் காலமானார் என்கிறோம். பிறப்பதும், வளர்வதும், அழிவதும் இவ்வுடல்தான். இவ்வுடல் கருவிலோ, பிறந்தவுடனோ, வாலிபத்திலோ, நரை மூப்புடன் கூடிய கிழக் கோலத்திலோ அழிவது உறுதி. இருப்பினும் ஒருவர் பிறந்தது முதல் மறைவதற்குள் இடைப்பட்ட காலத்தைக் கணக்கிட்டுப் பார்க்குமளவில், அவர் செய்த நல்ல காரியங்களும், தீச் செயல்களும், மற்றவர்கள் மனக் கண்ணில் தோன்றுகின்றன. இந்நிலையில் காலத்தினருமை வெளிப்படாதிராது. பிறப்புண்டேல் மரணமுமுண்டு. அதற்குள்ளாக இவ்வுடலைப் போற்றிக் காப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் நாடோறும் ஒரு அரை நிமிஷ நேரமாவது சிவபெருமான் திருவுருவைத் தியானித்த வண்ணம் உள்ளமுருகி நிற்றல்வேண்டும்.

" பாலன் இளையன் விருத்தன் எனநின்ற
காலங்கழிவன கண்டும் அறிகிலார்



ஞாலங் கடந்து அண்டம் ஊடறுத்தானடி
மேலுங் கிடந்து விரும்புவன் நானே. "

— திருமந்திரமாலை.

நமது சமய நூல்களிலே தெய்வ சிந்தனை விலகாதிருக்கும் பொருட்டே பல விரதங்களும், அநுஷ்டானங்களும் விதிக்கப்பட்டுள்ளன. நித்யம் - நைமித்திகம் - காமியம் இம்மூவித வழிபாடுகளைச் செய்வதற்குரிய காலங்களை ஆகமங்கள் விதந்து கூறுகின்றன. உலகியல் வாழ்விற்கும், சமய வாழ்விற்கும் வேண்டிய காலக்கணக்குகளைக் கூறிவரும் நமது பண்டைய முதல் நூல் ஜோதிடம் என்னும் வேதாங்கமே யாகும்.

இனி, மக்கள் செய்யவேண்டிய தொழில் முறைகளையும், அந்தணர் - அரசர் - வணிகர் - வேளாளர், முதலிய ஜாதிப் பிரிவுகளையும், பிர்மசரியம் - கிருஹஸ்தம் - வானப்பிரஸ்தம் - சந்யாஸம் ஆகிய ஆசிரம நெறிகளையும், வர்ணாசிரம தாரதம்மியத்திற்குத் தக்கவாறு மந்திரம் - திரவியம் - தேவதை முதலியவற்றையும் கற்பிக்கின்ற அருமறையின் ஆறுவது அங்கம் " கல்பம் " என்பதாகும். கற்ப சூத்திரம் சிரௌதசூத்திரமென்றும் கிருஹ்ய சூத்திரமென்றும் இருவகைப்படும். சிரௌதமென்பதற்கு " வேத சாரங்கள் நிறைந்தது " என்று பொருள். श्रुतिसारमयः श्रौतो என சுருதிசாரமயமானது சிரௌத மென வாயு சம்ஹிதை கூறுகின்றது. கர்ப்பாதானத்திலிருந்து உயிரற்ற உடலை அக்கினியில் ஹோமம் செய்வதான அந்தியேஷ்டி வரையினதாகிய கிரியைகளைக் கிருஹ்ய சூத்திரம் கூறுகின்றது. இந்தக்கிருஹ்ய சூத்திரங்களை, இருக்காதி வேதங்களைப்பிரமாணமாகக்கொண்டு, வேதவிதிவத்தானகர்மங்களையும், ஆசிரம லக்ஷணங்களையும், ஜாதிபேதங்களையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு மஹரிஷிகள் பலர் கற்ப சூத்திரங்களை யியற்றியிருக்கின்றனர். இருக்குவேதத்திற்கு ஆஸ்வலாயனர் என்பாரும், சுக்ல யஜுர் வேதத்திற்குக் காத்யாயனரும், கிருஷ்ண யஜுர் வேதத்திற்குப் போதாயனர், ஆபஸ்தம்பர், வைகானஸர், சத்யாஷாடர், பரத்துவாசர், அக்னிவேசர், ஆகிய மஹரிஷிகளும், சாமவேதத்திற்குத் திராஹ்யாயணர், ஜைமினி இவ்விரு முனிவர்களும் கிருஹ்ய சூத்திரங்களைக் கற்பித்திருக்கின்றனர்.

(தொடரும்)

# வாயுறை வாழ்த்து

சித்தாந்தச்செல்வர்
திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தனுர்
திருவண்ணுமலை

**வாய்மையும் - விளக்கும்**

காரிருளைப் போக்குகின்ருன் காலைக் கதிரோன். மாலையில் கேளவிக்கோண்டு வரும் இருளைப் போக்குகின்றது விளக்கு. முழுநேரமும் இருள் அடர்ந்து இருந்தால் உலகியற் காரியங்கள் நடைபெரு. உயிர்களுக்குப் பாசமலத்தின் விளைவால் அறியாமை நிறைகின்றது. அதைப் போக்கக் கழுவாய் வேண்டுமல்லவா? அஃதேது? வாய்மை வாய்மையே! வாய்மை பெருகுகின்ற பொழுது மலமாயை தேய்கின்றது. அதன் விளைவாக இறை பணி நிற்க மனம் நாடுகின்றது. இறைபணி நிற்குங்கால் சிவம் என்னும் செவ்விய பொருள் அகத்தே விளக்கென ஒளிர்ந்து, அறியாமையையும் பிறவற்றையும் போக்குகின்றது.

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனுகி இறைபணி நிற்க
மலமாயை தன்ஞெடு வல்வினை இன்றே"

(சிவஞானபோதம் சூத்திரம் 10. பாசநீக்கம்).

அறிவை அறிவென்றறிவது இறைவனைக் காண்டலுக்கு ஒப்பாகும். "அறிவான தெய்வமே தேஜோமயா நந்தமே" என்கின்ருர் தாயுமான அடிகளார். நல்லறிவின் முதிர்ச்சியே ஞானம். ஞானத்தின் முதிர்ச்சியே இறையின்பம். இறையின் பத்தின் பெருக்கமே பாசமலநீக்கும். அதுவே அகவிருள் நீங்கிய பேரின்பம். இதை நான்காம் அதிகரணத்தில் உள்ள மூன்ரும் செய்யுளால் உணரலாம்.

"வினையால் அசத்து விளைதலான் ஞானம்
வினைதீரின் அன்றி விளையா—வினை தீர
ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்
ஆனத்தால் அன்பிற் றெமு"

புறத்திருளைப் போக்கும் உலகத்தாருடைய கதிரோன், திங்கள், நெருப்பு இவையெல்லாம் அறிவுடையாரது அகத்திருள்



போக்கும் விளக்குகளாகமாட்டா! பின் எது விளக்காகுமெனின் பொய் சொல்லாதிருத்தலாகிய (வாய்மை) ஒன்றே விளக்காகும் என்பதறிக!

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு" (குறள் 299 - அறம்)

**வாய்மையும் - பொய்யும்**

பொய் பேசுகின்ற வழக்கம் எல்லாரிடத்திலும் நிரம்ப உண்டு. நன்மை விளையும் செயல்களுக்குப் பொய் சொல்லலாம் என்பர். ஆனுல் தங்கள் நலத்தின் பொருட்டுப் பொய்யே பேசுகின்றவர்கள்தாம் அதிகம். ஒருவனுக்கு இப் பிறவியில் புகழ் வருவதற்குக் காரணம் பொய் சொல்லாதிருத்தலினுல்தான். மறுமையுலக இன்பத்தை அளிப்பதும் வாய்மையேயாகும்.

"பொய்யாமை யன்ன புகழில்லை பொய்யாமை
எல்லா அறமுந் தரும்" (குறள் 296 - அறம்)

ஒருவனுக்குக் குற்றம் நீங்கிய நன்மை பயக்குமேயாஞல் பொய் சொல்லலும் மெய்யின்பாற்படுவதாகும்.

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்" (குறள் 292 - அறம்)

**வாய்மையும் - தானமும்**

"தானமும் தவமும் தான் செய்தலரிது
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே" (தமிழ்ப் பாட்டி)

பேட்டகம் நிறையப் பணம் இருக்கலாம். அது யாருக்கும் பயன்படாமல் பையிலும் தூங்கலாம். சிலவிடங்களில் அந்தப் பணம் நல்லதற்கும் பயன்படாது! தீயதற்கும் பயன்படாது! அறச் செயல்களில் செலவு செய்ய மனம் வாராது! சிலரிடம் செல்வம் இருக்கும். ஆரவாரக் கொண்டாட்டங்களுக்குப் பயன் படும். குறைந்த அளவில் செலவு செய்து, ஆடம்பரவகையால் பெருகக் காட்டி இன்புறுநரும் உண்டு. இதனுல் அறம் வளர் வதைவிடப் பாபம்மேலிடும். இவற்றையெல்லாம் தவிர்த்து நல்ல

முறையில் பொருளீட்டி, நற்றவத் துறைகளில் செலவழித்து வாழ்கின்றவர்களைவிட, முன்பு செய்த புண்ணியத்தின் பயனாக இம்மையில் தவமியற்றும் யோகிகளையும்விடச் சிறந்தவன் யார்? ஒருவன்தன் மனத்தோடு பொருந்த உண்மையைச் சொல்பவனே!

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை" (குறள் 295 - அறம்)

**வாய்மையும் - உலகப் புகழுணரும்**

காற்று அடிக்கின்றது; கட்டுப்பாடில்லை! கடல் தன் அலையோசையை எழுப்பிக்கொண்டேயிருக்கின்றது; கட்டுப்பாடில்லை! வானவீதியில் மேகம் மெல்ல நகர்ந்துகொண்டே இருக்கின்றது; கட்டுப்பாடில்லை! வாய்ச்சொல் அப்படியிருக்கலாமா? இருக்கக்கூடாது! சொல்லிய சொல்லை நிலைக்க வைக்கின்றவன் வாழ்க்கை உயர்வடைகின்றது. ஆதலினால் தான் சொற்றிறமையுடன் வாய்மை பெற்று விளங்கும் சொல்லேருழவனுடன் பகைத்துக் கொள்ளாதே என்று விளம்பினார் மாதாநுபங்கி

"வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை" (குறள் 872 - பொருள்)

உலகப் பெரியார்கள் என மதிக்கத் தகுந்தவர்களெல்லாரும் பேரறிவுடன் விளங்கினார்கள் என்பதுபற்றி அவர்களின் பெயர்கள் நிலைத்த இடம் பெற்றுவிடவில்லை. பின் எதனால்? தாங்கள் பொய் பேசுவதினின்றும் அகன்று பிறரையும் தங்கள் வழிக்கு உட்படுத்தியமையேயாகும். எடுத்துக்காட்டாகத் திருவள்ளுவர், இளங்கோவடிகள், காந்தியடிகள் போன்றவர்கள் எல்லாருடைய உள்ளத்திலும் நிலைத்த இடத்தைப் பெற்றுள்ளனர். வாய்மையின் சிறப்பை வாய்விட்டு உரைக்க இயலுங்கொல்?

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்" (குறள் 294 - அறம்)

---

# 'அன்றும் இன்றும்'

பெருந்துறை மணிமொழியன்
முதலாண்டு, அரசர் கல்லூரி, திருவையாறு.

அன்பர்க்கன்பன் கழுமலவூரர்க்கு அம்பொன் ஆயிரம் கொடுத்த ஆவடு தண்டுறையில், அரும்பணிபுரியும் ஞான்று யான் உள்ளொளியிலாது உணர்வொளி மங்கியிருக்க, அறிவொளிகாண - உலகியல் காண என் உள்ளம் அவாவிக் கொண்டிருந்தது. அதன் முயற்சியால் பலநகர்கள் செல்லத் தலைப்பட்டேன், அல்ல, சீரலைவாய் அழைத்தது! அல்ல, குமரியலை கூவிற்று! இவையோ? பொருநை அழைத்தாள்! அல்ல வைகை வரவு கூர்ந்தாள்! ஏன்? கண்ணுக்குக்கலை, கருத்துக்கு விருந்து, செவிக்கு அமுது, உள்ளத்திற்கு அருள்! இவையெல்லாம் தருவதற்கே! செலவை எண்ணினேன். அதனால் இறும்பூது மெய்தினேன். கடமையிடம் விடைபெற்றவுடன் என் கால்கள் என் பொறியைக் கேளாமலே நடந்தன! துணையாக அன்பும் பண்பும் அடக்கமும் விழிப்புமே உருவெடுத்து என்னையொன்றிவந்தது! நரசிங்கம்பேட்டைப் புகைவண்டி நிலையத்தை அடைந்தேன். அன்று 1955 மார்ச்சு திங்கள் 2 ஆம் நாள்!

மாலை 6 மணி செங்கோட்டை வண்டி, கடமையினின்று கடக்கமாட்டேனென்று தன் சங்கால் ஒலித்துக்கொண்டு அவ்வளவிலே வந்துற்றது. வண்டியிலேறினேன், அது செல்லுமிடம் நோக்கிச் சென்றது. வண்டியிலே பல வண்ணமக்கள் தங்கள் மொழியாலும் நாகரிகத்தாலும் பண்பைக் காட்டி அமர்ந்திருந்தனர். அவர்களைக் கண்ட தனியனாகிய யான் அமைதியாக இருக்கவே சில அன்பர்கள் அன்பின் திறங்காட்டிப் பேசலுற்றார்கள் நண்பர்கள் போன்று யானும் செல்லுமிடமெல்லாம் வழிகளையறிந்தேன். மறுநாள் பகல் 12 மணிக்குத் திருநெல்வேலியை அடைந்தது வண்டி. அன்பர்களனைவரும் இறங்கிப் பிரியாவிடையோடு சென்றார்கள். யானும், அவர்களது அடைக்குந் தாழில்லா அன்பால் குழைந்து புன்கணீர் பூசலொடு பாண்டிநாட்டுப் பண்பையறிந்து சீரலைவாய் வண்டியில் ஏறி அவணடைந்தேன்.

சேந்திற்பதி புரக்கும் சேவ்வேலன் தனது கோபுரத்தால் என்னைக் கவர்ந்துவிட்டான்! கோபுரத்தின் கோடிகள் 'வருக' என்றழைத்தது. கோபுரமே தனது வடிவால் அவ்வாறே 'வருக' வேன்று கூறிற்று! சேன்றேன், அவன்பால் எனக்குள்ள வணக்கத்தால்! அதுகாலை, மாசிமகவிழவாம் அங்கு! பல்லாயிர மக்கள் தங்கள் பரிவு காட்டி அன்பு வேலனை வழிபட ஆராக்காதலின் மூழ்கியிருந்தனர். கண்ட யான் "தானே முத்தி தருகுவன் சிவனவன் அடியன் வாதவூரனைக் கடிவின் மனத்தால் கட்டவல்லார்க்கே" என்ற சிவப்பிரகாசரின் சேம்மோழியினைச் சிந்தித்து அன்னவர்களை முதலில் வந்தித்தேன். சீரலை ஓசையும் சேவ்வேளின் அழகுக்கலைகளும் அழைக்கவே சேன்றேன். கலைவாயிலிடம் சேல்வதற்குள் புகை வண்டியில் அன்பர்கள் கூறிய 'நாழிக்கிணற்றின் நினைப்பு வந்தது. அத்திசை நோக்கினேன். அடியவர்கள் அவண் நீராடிக்கோண்டிருந்தனர். ஆழியினின்றும் ஐம்பது அடி அளவில்தானிருக்கும் கிணறு. அதிலோ உப்பில்லாத் தூயநீரேன்றும் கூறினர். எனக்கு வியப்பை யளித்தது. ஆழிவாயிலுள்ள நீர் உப்பில்லை யேன்றால் வியப்பது இயற்கைதானே? அன்பர் கூட்டம் கிணற்றில் குளித்த தோடமையாது ஆழியிலும் ஆடினார்கள்! இது வழக்கம்போலுமேன்று சிந்திக்கும்போது, "புறந்தூய்மை நீரானமையும் அகந் தூய்மை வாய்மையாற் காணப்படும்" என்ற வள்ளுவர் வாக்கு வந்தது. புறத்தூய்மை, பிணிவாரா திருக்கவேண்டியதுதான். அதுநீரால் எளிதேசெய்ய முடியும். ஆனால், அகத்தூய்மை, காணப்படும் வாய்மையாலன்றோ வாய்க்குமேன்கிறார்கள்! வாய்மைபேற உள்ளம் ஒளிபேறவேண்டுமல்லவா? அதை, 'அவனடியினாற்றானே அடையவேண்டும்!' என்றேல்லாம் பேசிக்கோண்டே கிணற்றை அடைந்தேன். கிணற்றின் சுற்றளவே நாழிவாய்தான், அதன்நீர், தோட்டனைத் தூறும் மணற்கேணியாயினும் 'சேம்பு' கோண்டு எடுக்க எடுக்க பலவாயிர மக்கள் குளிக்கக் குளிக்க எல்லைக்கோட்டினின்றும் குறைவுபடாது இருந்தது விந்தையாகவேயிருந்தது. யானும் அதன் நீரிலும் ஆழியிலும் ஆடி உள்ளோளிவேண்டி "உணர்வோளி" யிடம் உள்ளே சேன்றேன். கண்வழியும் காட்சிதர அவ்வோளி போற்சிலையில் அழகு ஒழுக வீற்றிருந்தது. "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லால் வேறொன்றறியேன் பராபரமே" என்று ஓதி நேக்குருகி



வழிபட்டேன். மற்று, கலையோவியங்கள் கற்சிலைகள் எல்லாம் அன்புமுகங்காட்டி அழைத்து 'எங்கள் பயனையேல்லாம் கோள்ளை கோள்க' எனக் கோடுத்தன. பயனையேல்லாம் கண் எனும் மையால் சேலவுப் பயன் எனும் கைகோண்டு என் உள்ளத்திரையிலே தீட்டினேன். முருகனின் அழகிலே மூழ்கி இருமருங்கும் அணைந்திருக்கும் அரும்புமிளநகை ஆரணங்குகளின் வனப்பு சோல்லவோ ஒல்லும் என்னே காட்சி!

அழகும் அறிவோளியும் பேற்றயான், மாலை மணி 4 அளவில் ஆரலையின் திறங்காண அங்குச் சேன்றேன். அலைகள் தங்கள் முத்து வாயால் வேலவனின் அடியைக் கோஞ்சத் திட்டமிட்டு எவ்வியேவ்விச் சேன்ற நிலை, கற்புடைய கன்னியோருத்தி தன் கணவனை அன்புமோழியால் கோஞ்சுவது போல இருந்தது. கற்பனையிற் சேன்ற என்னை பகழிக்கூத்தரது பாட்டு அணையிட்டது. ஆதலின், அவர் பாட்டிற்கு அடி பணிந்து மீண்டேன். சோற்போழிவுமன்று, இசைமன்றேல்லாம் தங்கள் கருத்தடைவு இனிமைகளால் என்னுள்ளத்தைத் தோட்டன. அன்மினேன். நாவலரின் நல்லறிவுப் பேச்சும் பாவலரின் பண்ணமைந்த பாட்டும் போறியோன்றக்கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்தேன்! மணி 10 இருக்கும். சேவிக்குண வில்லாதபோது சற்று வயிற்றுக்கு ஈவோமே என்ற நினைப்பில் உண்டி விடுதியிலுண்டு உறங்கினேன். ஆனால், உறக்கம் வரவில்லை. உணர்வுதான் (கலை) கண்முன் காட்சியளித்தது; நாளைய நல்விழவின் சிந்தனைதான்!

மறுநாள் (4—3—55) "இன்று முதல் மூன்று நாட்கள் முருகவேளுக்கு முறையே பச்சை, சிவப்பு, வேள்ளை என்ற மூவண்ணங்களில் மலர், அணி, ஆடையேல்லாம் அணிவித்து முருகன் திருவுலா வருவான்" என்று கூறினார்கள். அதன் போருளை அறிவதுதான் பயனேனக்கருதி வினவினேன். "மூவண்ணங்களில் முறையே அணிவது, இறைவனுடைய விருப்பாற்றல், சேயலாற்றல், அறிவாற்றல்களை மக்கள் உணருவதற்காகும்" என்று சிலர் உருக்கமாகக் கூறினர். மற்றும் சிலர், "மூவண்ணமும், மக்களது உயிர்க்குணமாகிய 'தமோகுணம் - ரசோகுணம் - சத்துவகுணம்' என்ற மூன்றையும்

விளக்குவது; ஆதலின் அக்குணங்களை காட்சிக்கெளியதாய அவ்வண்ணங்கள் மூலம் இறைவனுக்கு அணிந்து விடுவ தாகும்'' என்று கூறினர். கேட்ட எனக்கு, கண்டறியாத காட்சியாதலால் வியப்பை யளித்தது. உள்ளப் பூசலால், ''குணமோரு மூன்று திருந்து சாத்திவிகமே யாகும்'' என்று அன்புச்சுவை நனிசொட்டப்பாடிய சேக்கிழார் கருத்து நினை வுக்கு வந்தது. ஆம்! இறைவன் குணமும் குறியுமில்லான்; அமைதி நிலையுடையான்! என்று சொல்லி உள்ளம் அமைந்தது.

அழகனுக்கு அணி செயும் மன்றம் போந்தேன். அன் புருவான அவனுக்கு பச்சை வண்ணத்தில் அனைத்தும் அணியப் பட்டு பன்னீரால் முழுக்காட்டியிருந்தது. தண்மையும் மணமும் அன்பர்கள் மனத்தையெல்லாம் தண்மைப்படுத்திற்று. இக் காட்சியைப்போல மறு இரு நாட்களும் இருவண்ணமும் சாத்தி நிகழ்ந்தது. அழகனும் அடியவரும் திருவுலாப் போந்தார்கள். தெருவெல்லாம் தமிழிசையின் முழக்கம்! அது, உள்ளம் நெக்குருகி மெய்ம்மயிர் பொடிப்பச்செய்தது. இன்னும் பல கருவிகள் இசை முழங்கின! இவையெல்லாம் நுகர்ந்த யான் கலையுணர்வு பெற்று - சீரலைவாயின் விடை பெற்றேன்.

(தொடரும்)

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil.

10—8—58 மாலை 6 மணிக்கு நான் கோவிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்ததில் கோவில் பூஜைகளும் நிர்வாகமும் முதல் திறமையாக நடந்துவருகிறதைப் பார்க்க மிக்க சந்தோஷப் படுகிறேன். கோவில் பூராவும் மிகவும் சுத்தமாக வைக்கப் பட்டிருக்கிறது.

(Sd.) லெ. சி. சுப்பராயப் பிள்ளை,
மானேஜிங் டிரஸ்டி
அனந்தீஸ்வரசுவாமி கோவில், சிதம்பரம்,
10—8—58.

# முப்பொருள் விளக்கம்

தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர், சித்தாந்தக் கலைமணி,
வித்துவான், திரு. கி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்
தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

(மலர் 16, இதழ் 9, பக்கம் 604 இன் தொடர்ச்சி)

மாணாக்கன்:

அற்றேல், இறை மெய்ப்பொருளாயும் அறிவுடைப் பொருளா யும் நிற்றல் எவ்வாறு துணியப்படுமோ? அதனை அருளிச் செய்தல் வேண்டும்.

ஆசிரியர்:

இறை, ஏனை உயிரும் உலகமும்போலக் கருவியறிவினாலும், உயிரறிவினாலும் அறியவாராமையானும், முயற்கோடு ஆகாயத் தாமரை முதலியனபோல எவ்வாற்றானும் அறியவாராதொழியாது. தனது அருளறிவினால் அறியவருதலானும் அவ்வாறு நிற்றல் (மெய்ப்பொருளாயும், அறிவுடைப் பொருளாயும் நிற்றல்) துணியப்படும்.

கருவியறிவு 'பாசஞானம்' எனவும், உயிரறிவு 'பசு ஞானம்' எனவும், அருளறிவு 'பதிஞானம்' எனவும் சொல்லப்படும்.

மாணாக்கன்:

அற்றேல், கருவியறிவாவது யாது? உயிரறிவாவது யாது? அவ்விருவகை யறிவானும் இறை அறிய வாராமை யாங்ஙனம்?

ஆசிரியர்:

கண் முதலிய புறக் கருவிகளானும், மனம் முதலிய அகக் கருவிகளானும், ''இஃது இன்னது'' எனவும், ''இதனை யான் அறிந்தேன்'' எனவும் நிகழும் அறிவு அக் கருவிகளான்

ஆவதாகலின், அது கருவியறிவு. இனி, '' கண் முதலிய புறக் கருவிகளும், மனம் முதலிய அகக் கருவிகளும் ஒன்றனை அறிதற்கண் கருவியாவனவல்லது, வினைமுதல் ஆகாமையின் அவை உயிரல்ல, '' எனவும், '' கண் முதலியவற்றைக் கருவி யாகக் கொண்டு அறிதலைச் செய்யும் வினை முதலாகிய உயிர் அக்கருவிகளின் வேறு '' எனவும் நிகழும் அறிவு அக்கருவி களானாகாது உயிரானே ஆவதாகலின், அது உயிரறிவு. இறை, ஏனை உலகப்பொருள்கள்போல, இவ்விருவகையறிவானும் அறியவாராது நிற்றல் உலகர் எல்லார்க்கும் அநுபவமாதல் காண்க.

மாணாக்கன் :

அற்றேல், '' குடம் உண்டு; குடஞ் சிறிது '' என்றாற்போல, '' இறை உண்டு; இறை எல்லாம் வல்லது '' என உலகரும் உரைப்பராகலின், '' இறை கருவியறிவு, உயிரறிவுகளான் அறியவாராதென்றல் எங்ஙனம் பொருந்தும்?

ஆசிரியர் :

அறியாது வினாயினாய்! என்னையெனின், அவர் '' குடம் உண்டு; குடஞ் சிறிது '' எனக் கூறுதலோடு, '' இறை உண்டு; இறை எல்லாம் வல்லது '' எனக் கூறுதலிடை வேற்றுமை தெரிந்திலை யாதலின்.

உலகர், குடமுதலியனவற்றைப் பற்றிக் கூறுகின்றுழி, அப்பொருள்கள் வெறுஞ்சொல்லளவினவாய் நில்லாது, தந்தம் உண்மை வடிவான அவர் உள்ளத்து விளங்கித் தோன்றுதலும், இறையைப்பற்றிக் கூறுகின்றுழி, அப்பொருள் அவர் உள்ளத்து அவ்வாறு விளங்கித் தோன்றாது, வெறுஞ் சொல்லளவிற்றாய் நிற்றலும் அநுபவமாகலின், அஃதுணராது, '' இறையும் ஏனைய பொருள்கள்போலக் கருவியறிவு உயிரறிவுகளான் அறிய வருவதேயாம் '' என்றல் எவ்வாறு? இங்ஙனமாகவே, உலகர் இறையைப்பற்றிக் கூறுவனவெல்லாம் அருளாளரது அருண் மொழிகளைக் கேட்டுச் சொல்லும் சொல்லுணர்வானேயன்றிப் பொருளுணர்வான் அன்றாகலின், இறை, கருவியறிவு உயிரறிவு களான் அறியவாராத பொருளேன்பது தேற்றெனை உணர்க.



மாணாக்கன் :

அற்றேல் வினை மாயை என்பவைதாமும் உலகரான் அறிய வாராது, அருளாளரானே அறியப்படுதலின் அவையும் மெய்ப் பொருளாம் போலும்!

ஆசிரியர் :

அற்றன்று; வினை, அறமும் மறமும் ஆகிய காரணநிலையின் உலகரான் அறியவாராதாயினும் கிழியீடு நேர்படுதல், கைப் பொருள் வீழ்த்துப்போதல் முதலிய பயன்களாகிய காரிய நிலையின் அறியவரும். மாயை, முதற்கருவியாய் நிற்கும் நுண்ணிலையின் அறியவாராதாயினும், உலகும் உடம்பும் முதலிய செயப்படு பொருள்களாகிய பருநிலையின் அறியவரும். அதனான், வினையும் மாயையும் கருவியறிவு உயிரறிவுகளான் அறியப்படுவனவேயாமாகலின், அவை மெய்ப்பொருளாதல் இல்லை என்க. இனி, '' இதனை யான் அறிந்தேன் '' என்றுணர்வு நிகழ்தல்போல, '' இதனை யான் அறிந்திலேன் '' என்றும் உணர்வு நிகழ்தலான், பேதைமையும் அவ்வாறு அறியப்படும் பொருளேயாதலறிக.

மாணாக்கன் :

அற்றேல், கருவியறிவு உயிரறிவுகளான் அறியவாராத இறையை, '' ஒருவாற்றானும் அறியவாராத பொருள் '' என்றலே பொருத்தமுடைத்தன்றோ?

ஆசிரியர் :

அன்று; என்னையெனின், முயற்கோடு ஆகாயத் தாமரை முதலியனவாகச் சொல்லப்படும் இல்பொருள்களும் ஒருவாற்றா னும் அறியவாராத பொருள்களேயாகலான், அவையிற்றின் வேறாய் ஒருவாற்றானும் அறியவாராத பொருள் ஒன்றுண்டு என்பதற்குச் சான்றின்மையான், இறையை, '' ஒருவாற்றானும் அறியவாராத பொருள் '' எனின், அதுவும் இல்பொருள்களில் ஒன்றாய்ப் போதலன்றி, உள்பொருளாமாறில்லை.

அன்றியும், நம்மால் ஒருவாற்றானும் அறியவாராத பொருளோடு நமக்கு ஒருவாற்றானும் இயைபுண்டாதலில்லை. இயைபில்லையாகவே, அதனான் நமக்கு ஒரு பயனும் உண்டாதல் இல்லையாம். இங்ஙனம் ஒருவாற்றானும் அறியப்படாமலும், ஒருவாற்றானும் இயைபுண்டாகாமலும், ஒருவாற்றானும் பயன்படாமலும் நிற்கும் ஒருபொருள் உண்டெனக்கொள்வதனான் நாம் அடையும் பயன் யாது? ஒன்றும் இல்லை ஆகலின் இறையை அத்தன்மைத்தாகக் கூறுதல் பொருந்தாதென்றுணர்க.

" உணராத பொருள்சத் தென்னின் ஒருபய னில்லை; தானும்
புணராது : நாமும் சென்று பொருந்துவ தின்றும் என்றும் ;
தணவாத கரும மொன்றும் தருவது மில்லை : வானத்
திணரார்பூந் தொடையும் யாமைக் கெழுமயிர்க் கயிறும் போலும் "

என்பது சிவஞான சித்தி. (சூத்திரம் சூ. ௮.)

மாணாக்கன் :

அற்றேல், " இறை, கருவியறிவு உயிரறிவுகளான் அறியவாராமையின் உள்பொருளுமன்று; சாந்தோக்கிய முதலிய சுருதிகளாற் 'சத்து' என மொழியப்படுதலின், இல்பொருளுமன்று ; மாறுபட்ட இருதன்மை ஒருபொருட்குக் கூடாமையின இரண்டுமாவது மன்று ; எனவே, இறை இன்னதெனச் சொல்லொணாத ஒரு பொருளாம் " எனக் கூறுதல் நன்றுபோலும் !

ஆசிரியர் :

அறியாது வினாயினாய்! உண்டென்றாயினும், இல்லையென்றாயினும் சொல்லொணாத பொருட்கும், இல்லை யென்று சொல்லப்படும் இல் பொருட்கும் நீ கண்ட வேற்றுமை யாது? இறைக்குப் பிற தன்மைகளைச் சொல்லாயாயினும், அஃது உண்டென்பதைத் தானும் சொல்லாயாயின், " அத்தகைய ஒரு பொருள் உண்டோ? இல்லையோ? " என வினவுவார்க்கு, எங்ஙனம் எதிர்மொழி கொடுப்பாய்? அதனாற், கருவி யறிவு உயிரறிவுகளான் அறிய வாராமைபற்றி, இறையை, 'உள் பொருளன்று' என்னாது, " பிறிதோராற்றான் அறியப்படும் உள்பொருள் " என்றே நீ கூறுவாயாக.

(தொடரும்)

தருமபுர ஆதீன ஆவணிமூல நன்னாளில்
ஆதீனக் கல்வி நிலயங்களின் ஆண்டு விழாத்
தலைமை விற்றிருந்து வழங்கிய

## ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

# அருளுரை

இந்த நாள் சிறந்த நல்ல நாள். இந்த நல்ல நாளிலே ஆண்டவன் அருளைப்பெற்றவரான மணிவாசகப் பெருமானைப்பற்றிச் சிந்திக்கும்பேறுபெற்றுள்ளோம். திருப்பெருந்துறையில், அரசனிடம் இருந்து பணம்பெற்று ஆலயம் எடுப்பித்தவர் மணிவாசகர். அவர் இல்லையானால் நமக்கு எட்டாந் திருமுறை கிடைத்திருக்காது. மணிவாசகப்பெருமான் அருளிச்செய்ததான திருவாசகம் ஓர் உயர்ந்தநூல். அந்தநூல் அருள்நெறியை உணர்த்துகிறது. மணிவாசகப்பெருமான் திருப்பெருந்துறையில் திருவருள் பெற்றவர். அந்தப்பெருமானுடைய நினைவுக்கு நன்னாள் இந்நாள்.

சமயாசாரியர்கள் நான்குபேரும் ஆண்டவனிடத்தே தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்தவர்கள். 'கங்காதரனே, ஜடாதரனே என்றெல்லாம் வழிபாடியற்றி அருள் பெற்றார்கள். ஆண்டவனை நினைந்து நினைந்து அவன்தாள் வணங்கிப் பக்குவம் அடைந்தார்கள்'.

" வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தா னின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே".

என்று இறைவன் திருக்காட்சி காண உடலெல்லாங் கண்ணாக எண்ணி உருகினார்.

நிலையாமையை நன்கு உணர்ந்தவர் குருஞானசம்பந்த உலகியற் பொருள்களில் ஆண்டவன் அருள்நெறி ஒன்றே

நித்தியமானது. உலகியலை விட்டு அருள்நெறி பெற்று இன்புற, இவ்வுலகில் உள்ள பலவேறு நாணயங்கள் துணையாகமாட்டா. நமக்குத் திருவருள் ஆகிய தெய்வ நாணயமே துணையாவது. அதுவே வேண்டும். அதைப்பெற்றால்தான் உய்யும் வழி உண்டு.

தமிழ் நாட்டில் சேர, சோழ, பாண்டியர்கள் சிறப்புற வாழ்ந்ததாகச் சரித்திரம் சொல்லுகிறது. அப்படி அவர்கள் சிறப்புற வாழ்ந்து, அருள்நெறியில் அரசாண்டமைக்குக் காரணம், அவர்கள் காலத்தில் வாழ்ந்த சமயாசாரியர்கள்தான். அச்சமயாசாரியர்கள்தான் அரசனை அறநெறிப்படுத்தி அருள் வாழ்வு தந்தனர். அதனால்தான் அரசர்கள் சிறப்புற்றனர். நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்; சேர, சோழ பாண்டியர்கள் சமயாசாரியர்களால் சிறப்புப்பெற்று வாழ்ந்தனர். சமயாசாரியர்கள் சேர, சோழ, பாண்டியர்களால் சிறப்புப் பெற வில்லை.

அப்பர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து மகேந்திரன் சிறப்புப் பெற்றான். மணிவாசகப் பெருந்தகை வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து அரிமர்த்தன பாண்டியன் சிறப்புப்பெற்றான். சுந்தரர் காலத்தில் சேரமான் பெருமாள் நாயனார் வாழ்ந்து சிறப்புப் பெற்றார்.

பஞ்சேந்திரியச் சுழலிலே சிக்கி ஆண்டவன் திருவருளைப் பெற முடியாது உழலுகிறது மனிதவர்க்கம். அப்படிப் பஞ்சேந் திரியங்களின் சுழலில் பட்டு உழலும் உயிரைக் குருநாதர் அவ்வுயிரின் உண்மை இயல்புணர்த்தி, மலமகற்றி வாழ் விக்கிறார்.

" ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே "

என்பது சிவஞானபோதம்.

ஓர் அரசன் மகன், தான் யார் என்று தெரியாமலே காட்டில் வேடரிடத்தே தங்கி வளர்ந்து வந்தான். ஒருநாள்



காட்டிற்குச் சென்று, அந்த அரசகுமாரனைக்கண்டு நீ என்னுடைய மகன் என்று கூறி உண்மையையுணர்த்தித் தானேயாக்கிக் கொண்டான் அரசன். அரசன் அங்கு மெய்மையை உணர்த் தியதுபோல, அரசனுக்குப் பதிலாக இங்கு ஆச்சாரியர்கள், ஐம்புலவேடரிடம் சிக்கி, துணைதெரியாது தவிக்கும் ஆன்மாவை, மலம் அகற்றித் தாளுக்கி மலரடிக்கீழ் வைக்கின்றார்கள்.

" மன்னவன்தன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்து அவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன் நீ என்றவரிற் பிரித்துப்
பெருமையோடுந் தானுக்கிப் பேணுமா போல்
துன்னிய ஐம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும்தொல் லுயிரை
மன்னும் அருட் குருவாகி வந்து அவரின் நீக்கி
மலம்அகற்றித் தாளுக்கி மலரடிக்கீழ் வைப்பன் "

இதுதான் சைவநெறியின் தலையாய மாண்பு. பிற சமயங்க ளெல்லாம் ஆண்டவன் உயிரைப் படைத்தான் என்று சொல்லு கிறது. சைவ சித்தாந்தநெறி உயிர்களை 'மன்னுயிர்' என்று சொல்லுகிறது. திருவள்ளுவர் அடிக்கடி சொல்லுகிறாரல்லவா, 'மன்னுயிர்' 'மன்னுயிர்' என்று? பதிநித்தியம் பசுநித்தியம் பாசநித்தியம் என்பார்கள். அந்த உயர்ந்த நன்னெறியையடைய ஆச்சாரியர் அனுக்ரஹம் வேண்டும்.

தெய்வநம்பிக்கை மனிதனுக்கு மிகமிக முக்கியம். தெய்வ நம்பிக்கை இருந்தால்தான் தொண்டாற்ற முடியும். திருக் குறளைப் படிப்பவன் ஒருவன் தெய்வநம்பிக்கையற்றவனாக இருந்தால் அவன் திருக்குறளை முழுதும் பயின்றவனாக எப்படிக் கருதமுடியும். திருவள்ளுவர் தெய்வநம்பிக்கையை வற்புறுத்தி யுள்ளார் என்பதை உணர்ந்தால்தான் திருக்குறளை நன்கு விளக்குபவனாக விளங்கமுடியும்.

அரசன் பவனி வருகிறான் யானையின்மீதேறி அப்பொழுது ஒரு வண்ணான் அழுக்குத் துணிகளைத் தோய்த்து வீதி வழியே வருகிறான். அவன்மீதுபட்ட உவர்மண் காய்ந்து திருநீறு போலக் காட்சியளித்தது. யானைமீது வந்த அரசனான சேரமான் பெருமாள் நாயனார், அந்த வண்ணானைக் கண்டதும், யானையி னின்றும் இழிந்து, வண்ணானை விழுந்து வணங்கினார். வண்ணான்

'ஐயோ அடியேன் அழுக்கு நீக்கும் வண்ணான் அல்லவா' என்று கூறி நடுங்கினான். உடனே சேரமான்பெருமாள் நாயனார் 'அடியேன் அடிச்சேரன்' என்று கூறினார். உங்கள்மீது பட்டுக் காய்ந்த உவர்மண் திருநீறாகக் காட்சியளித்தது. அடியவர் என்று வணங்கினேன் என்று சொன்னார்.

இது எதைக் காட்டுகிறது? அரசுரிமை ஏற்றிருந்தாலும் அவரது திருவருள் தோய்வை உணர்த்துகிறது. கிருஷ்ண மூர்த்திப்பிள்ளை என்பவரைக்காட்டி 'இதோ இவர்தான் கிருஷ்ண மூர்த்திப்பிள்ளை' என்று சொல்ல, 'அவர் நான் கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை அல்ல' என்று சொன்னால் நாம் 'சரி' என்று போய் விடுவோம். சேரமான்பெருமாள் நாயனார் அப்படிப்போகவும் இல்லை, அப்படிச் சொல்லவும் இல்லை. அடியேன் அடிச்சேரன் என்று சொன்னார். இது அரசருக்கு ஏற்பட்ட திருவருள் தோய்வின் மேன்மையை விளக்குகிறது.

திருவருள் அரசு வீற்றிருந்த நாள் அந்நாள். இப்பொழு தெல்லாம் மதச்சார்பற்ற அரசாங்கம் (Secular State) என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் சேர, சோழ, பாண்டியர்கள் இல்லாது இருந்திருந்தால் நம் மதமும் சமயமும் இந்நாள்வரை வாழ்ந்திருக்க முடியாது. நம் மதமும் நாடும் மொழியும் தெய்வத்தோடியைந்தன. அந்தப் பாண்டிய நாட்டுச் செந்தமிழ்ச் சொக்கன் திருநாள் இது. அப்பாண்டிய நாட்டின், கொங்கு நாட்டுச் செல்வி குழந்தை அம்மாள் அவர்கள் இன்று 'செந்தமிழ்ச் செல்வி' என்ற பட்டத்தைப் பெறுகிறார்கள்.

எதிர்பாராமல் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அதைத் தான் நாம் ஆண்டவன் அருள் என்கிறோம். இன்று இங்குப் பேராசிரியர் தே. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை வந்துள்ளார். நம் அறிவுக்கு உட்பட்டு ஆராய்ந்தே சென்றால் நமக்குப் புலப் படாது அணு என்ற ஒன்றிருக்கிறது. அது திருவருட்பெருமை. அந்தத் திருவருள்கூட்ட இங்கு வந்துள்ளார்.

அந்தத் திருவருளை முற்றப்பெற்றவர்கள் எங்கள் குருஞான சம்பந்தர். துறவிக்கு வாய்த்தது ஐந்தும் அவலம் என்பார்கள். 'உரன் என்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து' என்று வள்ளுவனார் சொன்னது



போல் ஐந்து இந்திரியங்களையும் மனத்தானடக்கி அருள் பெற்றவர்கள். சிற்றம்பலத்துள் "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள சுந்தரர் கடவுட் காட்சிகண்ட மன ஒருமையைப் பெற்ற வர்கள். அந்தத் திருமடத்தில் கொங்கு நாட்டுக்குழந்தை பட்டம் பெறுகின்றார்கள்.

அவர் சட்டசபையில் பேசும் பேச்சும், பொதுநலத் தோன்றும் மிகச் சிறப்பு வாய்ந்தன. அவருடைய இந்தப் பெருமை மங்கையர்க்கரசியாரையே சாரும்.

'ஆயிரமானாலும் மாயூரமாகாது' என்று ஒரு பழமொழி உண்டு. அந்த மாயூரத்தைச் சார்ந்த பொதுமக்கள் முன்னிலையில் அவர்கள் செந்தமிழ்ச் சொக்கேசன் அருளால் 'செந்தமிழ்ச் செல்வி' என்ற பட்டத்தையும் பெறுகிறார்கள்.

இந்த நல்ல நாளிலே நான் முன்பு குறிப்பிட்டதைப்போல், குருதரிசனத்தைக் கருதி வந்துள்ள பேராசிரியர் தே. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு இந்தக் காஷ்மீர் சால்வை ஒன்று உங்கள்முன் போர்த்தப்பெறுகிறது.

இங்கு இன்னொருவர் இருக்கிறார். நான்காம் திருமுறையை ஆய்ந்தவர். பார்த்தால் சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்த அகஸ்தியர் போல இருப்பார். நல்ல சைவ பரம்பரையில் வந்தவர். 'சித்தாந்தச் செல்வர்'. அவர்க்கும் காஷ்மீர் சால்வை போர்த்தப்பெறுகிறது.

## செந்தமிழ்ச் செல்வி,
## வித்துவான், திருமதி. சி. குழந்தையம்மாள் M. L. A.
## அவர்கள் சொற்பொழிவு.

சபையில் எழுந்தருளியிருக்கும் குருமகாசந்நிதானத்தின் திருவடிகளை வணங்கி, மதிப்பிற்குரிய என்னுடைய பேராசிரியர் திரு T. P. M. அவர்கள் முன்னிலையிலே, அறிஞர் பேரவையில், என்னையும் ஒரு பொருளாக மதித்துத் திருவருள் பாலித்து, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எனக்கு அளித்த இப் பெரும் பட்டத்தை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

இந்தச் சிறுவயதிலேயே எனக்குச் சைவகாப்பியங்களில் அறிவுபெற எனக்குத் திரு T. P. M. அவர்கள் பேராசிரியராக அமைந்தமையே காரணம். அவர்களிடம் நான் மாணவியாக இருந்து பயிலும் வாய்ப்புப் பெற்றவள். எனக்குத்தணிகைப் புராணம் நடத்தி அதில் தோயச் செய்தவர்கள். அவர்கள் முன்னிலையில் நான் இந்தப் பட்டத்தைப் பெற்று இறும்பூ தெய்துகிறேன். தான் பெற்ற குழந்தையின் வெற்றியையும் பெருமையையுங் கண்டு பெற்றோர்கள் பூரிப்பதுபோல் இன்று நான் அவர்கள் குழந்தையாக இருந்து பூரிக்கிறேன்.

இந்தச் சிறு வயதிலேயே, அரசியல் கடலிலே சிக்கித் தவிக்கும் என்னை, நாவாயாகத் திருவருள் எனக்குக்காட்ட, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருள்புரிந்திருப்பது என் வாழ்க்கையிலேயே எனக்குக் கிடைக்காத பெறும் பேறு.

ஆண்டவன் ஒருமுறை தோன்றி உங்கட்கு என்ன வேண்டு மென்று கேட்டாராம். நாம் என்ன சொல்லுவோம். எனக்கு வேண்டுவது ஒன்றே ஒன்று; அது உன் திருவருள் நோக்கம். அந்தத் திருவருள் நோக்கம் எனக்குக் குருவருள் நோக்கமாக வந்து என்னை ஆட்கொண்டிருக்கிறது. இது என் பரம்பரை செய்த புண்ணியம் என்றே கருதுகிறேன்.

'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யானொருவனன்றோ, என்றபடி பரம்பரைப் புண்ணியம் இன்று என்னையும், அடைந்திருக்கிறது. எனக்கு அந்தச் சிவஞானந் தைக் காட்டிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு என் நன்றி யறிதலைத் தெரிவித்துக்கொண்டு, இன்று நான் அரசியலிலும், இலக்கியத்திலும் கண்ட சில உண்மைகளை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம்முடைய ஆட்சியிலே சில திட்டங்களை வகுத்து, மக்களிடம் தந்துள்ளார்கள். நாமெல்லாம் அதில் பங்கு கொள் கிறோம்.

திருவிளையாடற் புராணத்தில் பிட்டுக்கு மண்சுமந்த பெருமானின் வரலாறு காணப்படுகிறது. வைகையாற்றின் கரை உடைப்பைச் சரியாக்க - அணையமைக்க வீட்டுக்கு ஒருவர் வரவேண்டும் என்பது மன்னனின் திட்டம். பிட்டு சுட்டு விற்கும்



வந்திக் கிழவியின் சார்பாகச் செல்லுவதற்கு ஆளில்லை. இக் குறைநீக்க - வந்தியின் வேண்டுதலை நிறைவேற்ற எம்பெரு மானே கூலியாளாக வந்தார். இது எதைக் காட்டுகிறது? ஆண்டவனிடத்தில் அன்பு செலுத்துகின்றவர்கள் அவர்கள் எவ்வளவு ஏழையானாலும் - பணக்காரர் ஆனாலும் - ஆணானாலும் பெண்ணானாலும் இறைவன் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேருகிறான் என்பதை மட்டுமின்றி, நாட்டு மக்களுக்காகச் செய்யப்படும் தொண்டிற்கு ஆண்டவனே வந்து உதவுகிறான் என்ற உயரியதத்துவத்தையும் காட்டுகிறது. இப்பொழுது 20ம் நூற்றாண்டில் நாம் எப்படித் திட்டங்களுக்கு எல்லோரும் உதவி புரிய வேண்டும் என்பதை 12-ம் நூற்றாண்டில் இறை வனே வந்து எடுத்துக்காட்டியதாகப் பரஞ்சோதி முனிவர் கூறியுள்ளார்கள். அந்தக் காலத்தில் திட்டத்தைப் பண்பாடு அமைத்துக் கொடுத்துப் பண்பாடு உதவி புரிந்தது. இன்னும் நம்முடைய திட்டங்களில் தேசிய அபிவிருத்தித் திட்டம், சமுதாய நலத் திட்டம் எனப் பல திட்டங்கள் உள்ளன. இவை யெல்லாம் 12-ம் நூற்றாண்டிலே எழுந்த திருவிளையாடற் புராணம் காட்டும் பிழிவே.

இன்னும் நாம் மத்தியான உணவு எலிமெண்டரி பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்று திட்டம் கொண்டு வந்துள்ளோம். காரைக்காலம்மையார் அப் படித்தான் உணவளித்தார்கள். மாணவர்களுக்கு - குழந்தை களுக்குஇப்பொழுது உணவுகறியமுதமாகஇருக்கக்கூடாதென்று திருவமுதமளித்ததாக இலக்கியம் கூறுகிறது.

'கறியமுதமுதவாதே திருவமுதங்கைகூட......' என்று கூறுகிறது.

இப்படி இன்னும் நாம் பல திட்டங்களை மேளுட்டு அறிஞர் களைக்கொண்டு பெறுவதாக எண்ணுகிறோம். அவையனைத்தும் சேக்கிழார், பரஞ்சோதியார் போன்றவர்கள் காட்டிய வழியே யாகும்.

வாழ்க்கை என்னும் ஆழமறியாப் பெருங்கடலில் நாமெல் லாம் சிக்கித் தவிக்கும் பொழுது தோன்றும் ஞானசாரியர்கள்,

மக்கள் உய்ய நல்வழிகளேயும், திட்டங்களேயும் காட்டிச் செல்கிறுர்கள். வாழ்க்கை என்னும் பெருங்கடலின் ஆழத்தை நாம் ஞாஞசாரியர்களே இன்றி அறிய முடியாது. மணிவாசகரும்,

' இன்று எனக்கருளி இருள் கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று -
நின்றநின் தன்மை நினேப்பற நினேந்தேன்
நீயலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்தேய்ந்து ஒன்றும்
திருப்பெருந்துறை யுறை சிவனே
ஒன்றுநீ யல்லேயன்றி யொன்றில்லே
யாருன்னே யறியகிற்பாரே,'

என்று வேண்டி வழிபட்டார்.

எல்லாப் பொருள்களுடனும் அந்தச் சூனியம் கலந்தே நிற்கிறது. அந்தச் சூனியம் கலந்தால்தான் மதிப்பு.

ஒன்ருேடு ஒரு சூனியம் சேர்ந்தால் 10. இரண்டு சேர்ந்தால் 100. மூன்று சேர்ந்தால் 1000.

இந்த உலகத்தில் உயிர்கள் பட்டத்தாலும் பதவியாலும் மறந்து நெறிதவறும் பொழுதுதான் ஞாஞசாரியர்கள் அவர்களேத் தடுத்தாட்கொள்கிருர்கள். அந்த நன்னெறியில் என்னேயும் ஒரு பொருட்டாய் மதித்து எனக்கும் திருவருள் பாலித்து, பட்டம் வழங்கிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளே வணங்கி என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

அண்ணுமலேப் பல்கலேக் கழகத் தமிழ்த்துறைத் தலேவர்
பல்கலேச்செல்வர், வித்துவான்,
திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரஞர் M. A., M. O. L.,
அவர்கள் சொற்பொழிவு

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிகட்கும், பெரியோர்கட்கும் என் நன்றி கலந்த வணக்கம். இந்த நல்ல நாளிலே, இங்கு நடைபெறும் இந்த விழாவில், நானும் கலந்து கொள்வேன் என்று நேற்றுவரை நினேக்கவேயில்லே. திருவருள் தான் எனக்கு இந்த வாய்ப்பைக் கூட்டித் தந்திருக்கின்றது.



என்வாழ்க்கையில் இதைப்போன்று திருவருளும் குருவருளுமாக எப்பொழுதும் தடுத்தாட்கொண்டே வந்திருக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்ஞல் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், என்னே யழைத்துப், 'பல்கலேச் செல்வன்' என்ற பட்டத்தைத் தந்தபோது எனக்கு ஒன்றுமே விளங்கவில்லே. சிலநாட்களுக்குப் பிறகுதான் நான் சென்னே மாநிலக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியராக ஆக்கப்பெற்றேன். அப்பொழுது - நான் பேராசிரியர் பணியை ஏற்றபொழுது தமிழ்த் தொண்டு செய்ய எனக்கு ஏற்பட்ட வாய்ப்பில், இந்த மடாலயத்தின் பெருங்குரவர் இயற்றிய சிவபோக சாரத்தைச் சென்னேவாழ் மாணுக்கர்களுக்குச் சொல்லும் பேற்றைப் பெற்றேன்.

நான் அந்தச் சிறந்த பணியை மேற்கொண்டு பாடஞ் சொல்லிக் கொடுக்கும்பொழுது, நான் எதிர்பாராதவிதமாக, இந்து மாணவர்கள் மட்டுமல்ல, பிறசமய, மதங்களேச் சார்ந்த இஸ்லாமிய, கிறிஸ்தவ மாணவர்களும் பங்குகொண்டு, கருத்தூன்றிக் கற்றனர். அதுமட்டுமல்ல, இந்தக் குருமடத்தின் சீடரான குமரகுருபர சுவாமிகள் பெயரால் விளங்கும் காசி மடப் பரிசை ஒரு முறை ஒரு இஸ்லாமிய மாணவரும், ஒருமுறை ஒரு கிறிஸ்தவ மாணவரும் போட்டியிட்டு அடைந்துள்ளனர். அப்பொழுதுதான் நான் மாணவச் சமுதாயத்தின் மீது நல்ல நம்பிக்கைகொண்டேன். இதைப்போன்று என் வாழ்க்கையில் பல சிறப்புக்களேக் காணவேண்டிய பேற்றை, அவ்வப்பொழுது குருவருள் என்னேத் தடுத்தாட்கொண்டு அருளியிருக்கிறது.

இந்த ஆண்டு குருபூசை விழாவில் என்னுல் கலந்துகொள்ள முடியவில்லே. அப்பொழுது மைசூரில் இருந்தேன். என்ஞல் வரமுடியாத வருத்தம் குறித்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குத் தந்தி கொடுத்தேன் என்று நினேக்கிறேன். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் எனக்குத் திருநீறு அருளிஞர்கள். அன்றுதான் நான் அண்ணுமலேப் பல்கலேக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் பதவி ஏற்கும் வாய்ப்புப்பெற்றேன். இப்படி, என் வாழ்வு முழுமையும், அவ்வப்பொழுது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் என்னேத் தடுத்தாட்கொண்டு வந்துள்ளது.

இன்றும் நான் இந்த விழாவிலே கலந்துகொள்வேன் என்று எதிர்பார்க்கவில்லை. இன்று எப்படியும் ஆவணி மூல நாளாயிற்றே சொக்கேசனையும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தையும் தரிசித்தே தீருவதென எண்ணிவந்தேன். திருவருளும் குருவருளும் கூட்டின.

இன்று காலையில் நான் இங்கு வந்த பிறகு சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்துடன் உரையாடும் பேறு பெற்றேன். அவர்கள் பேசினார்கள். நான் அந்தப் பேச்சில் மயங்கிக் கிடந்தேன். மடாலயங்கள் வளர வேண்டியதன் அவசியம், அவைகள் செய்யவேண்டிய செயல்கள் முதலியவைகள்பற்றிப் பேசினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் தெரிவித்த எண்ணங்களினின்றும், நாட்டுக்கு நல்லபேறு கிடைத்திருக்கிறது என்று அறிந்து பெருமைப் படுகிறேன். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறுவதில் எவ்வித ஐயமுமில்லை. உலகம் வாழவேண்டும் என்று அருளித் தாம் வாழ்பவர்கள்.

அடுத்து, இங்குப் பட்டம் பெற்ற அம்மையாரைக் கண்டு, நான் பெருமைப்பட்டேன். தம்முடைய மாணாக்கர் உலகின் புறத்தொண்டு செய்யும் சிறப்பைக் கண்டால் ஆசிரியர் பூரிப்பது இயற்கைதானே? அம்மையார் சொன்னதைப்போல், நான் அவர்களுக்குப் புலவர் தேர்வுக்காகத் 'தணிகைப் புராணம்' சொல்லிக் கொடுத்ததுண்டு.

நாமெல்லாம் அருள்பெறும் இந்நாள் நல்லநாள். ஆவணி மூல விழாவே ஞானத்தை உணர்த்தும் விழா. உலகில் மக்களுக்காக இயேசுநாதர் அடிபட்டார் எனக் கூறப்படுகிறது. அப்பொழுது இயேசுநாதர் மீது மட்டும்தான் அடிபட்டது. ஆனால் சிவபெருமான் மீது பட்ட அடி, அடியார்கள் மீது பிரபஞ்சப் பொருள்களின் மீதெல்லாம் பட்டது.

இந்த நாட்டுக்கு ஆண்டவன் மண்சுமந்த நிகழ்ச்சியை நம் தொழிலாளர் சமுதாயம் நன்கு கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். நாட்டுக்காகச் செய்யப்படுகின்ற பணி என்ற நிலை வந்தபோது ஆண்டவனே தொழிலாளியாகிவிட்டான்



ஆகவே தொழிலுக்குள்ள சிறந்த மதிப்பை நாம் அறியமுடிகிறது. தொழிலோடு சிவம் கலக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறது. தொழில் புரட்சி அருள் புரட்சியாகவேண்டும்.

இன்று பட்டம்பெறும் கொங்கு நாட்டு அம்மையார் செய்யும் தொண்டு உலகத்தொண்டாக மிளிரவேண்டும். இவ்வம்மையாரின் பணி உலகப் பணியாகவேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் - அதாவது அகத்தியர் என்று குறிப்பிட்டார்களே அவர்கள் பேச இருக்கிறார்கள். நான்காந் திருமுறையை நமக்குத் தந்தவர்கள், மிகச் சிறந்த சைவப் புலவர், முதுபெரும் புலவர், மதுரகவி, அவர்களுடைய பேச்சுக்கு நான் ஒரு தடைக் கல்லாக இருக்க விரும்பவில்லை.

---

## பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

இழிந்திடச் செய்யும் பயந்திடச் செய்யுமில் லாளின்கற்பும்
ஒழிந்திடச் செய்யு மொண்மக்களை யையம்புக் குண்ணச்செய்யுங்
கழிந்திடச் செய்யு மனைத்தையுங் கண்டவர் காரித்துப்பி
முழிந்திடச் செய்யுங் களவாடச் சற்று முயன்றவர்க்கே. 25

இச்சைப் படிசெய்திருத்தலி னாலிமை யோரை யோப்பான்
பச்சைத் திருநிற மாலொப்ப னுண்டுமிழ் பான்மையினாற்
பிச்சைக் கிளிவர நிற்றலினாற் பிஞ்ஞகனை யோப்பா
னச்சைப் பொரு மதுபானியு மானியிந் நானிலத்தே. 26

அஞ்சத்தை யோப்பவர் சத்துமசத்து மறிந்தவர்நற்
கஞ்சத்தை யோப்பவர் யெக்குலமாயினுங் கற்றுரைப்போர்
பஞ்சத்தை யோப்பவர் வஞ்சத்தையுள்ளவர் பாம்புதரு
நஞ்சத்தை யோப்பவர் கோளுரை கூறிடு நாவினரே. 27

தருமபுர ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்களது

# தொண்டைநாட்டுத் தல வழிபாடு

திரு. ஆர். வேலாயுத ஓதுவார்
தருமபுர ஆதீனம்.

உலகிடை மக்களின் வாழ்க்கையைப் பயனுறச்செய்வது இறைவழிபாடு. அவ்விறைவன் மகிழ்ந்து இருந்து அருளும் இடம் திருக்கோயில்கள். அவைகளின் சிறப்பினை அங்கை நெல்லிக்கனி ஒத்து உணரக்காட்டி அருள்வன திருமுறை முதலிய அருள்நூல்கள். அவைகளின்மூலம் நம்மை இறை வழிபாட்டில் ஆற்றுப் படுத்திப் பயனளிப்பவர்கள் மூவர் முதலிய ஆசாரியப் பெருமக்கள். அவர்களது அருட் சந்தானத்து நெறி வழியே திகழ்வது ஆதீன மடாலயத் திருவருட் பீடங்கள். அவ்வகையில் நமது தருமை ஆதீனம் 25-வது குருமூர்த்திகளாய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய மூர்த்திகள் அவர்களது அருளுள்ளமும் இங்கு எம்மனோர்களை வாழ்விப்பதாகித் திகழ்கிறது. அத்தகைய நம் குருமணி அவர்கள் தொண்டைநாட்டுத் தலங்கள் சிலவற்றை வழிபடத் திருவுள்ளம்கொண்டார்கள்.

28—8—58 குருவாரம் மாலை 7 மணிக்கு வழக்கம்போல் குருமூர்த்திகளை வழிபட்டு மாயூரம் ஸ்ரீ வள்ளலார் ஆலயம் சென்று ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தியை வழிபட்டார்கள். அருச்சனை அருட்பாபாராயணங்களும்சிறப்புற்றன. இரவுபத்துமணிக்குமேல் உந்தூர்தியில் எழுந்தருளினார்கள். ஊர்தியும் சென்னை இறைபணி மன்றத்தை அடைந்தது. வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் முதலிய நிலையத் தொண்டர்களும் மனங்களி சிறப்பப் பூசித்துப் போற்றிப் பெரும்பயனுற்றார்கள்.

## திருமயிலாப்பூர்

29—8—58 காலை. பெரும்புலர் காலை மூழ்கிப் பிரானடி சிந்தையுட்கொண்ட எம் குருமணி அவர்களது ஸ்ரீ சோக்கநாதப் பெருமானின் சிந்தனையோடு பாராயணங்களும் நிறைவுற்றன. பின், என்புக்கும் உயிரீந்த ஈசன் கரும்பினும் இனியாள் கற்பகவல்லி சமேதன் சிவனாரது கபாலீச்சரம் வழிபட அவர்களது அருளுள்ளம் விரைந்தது. அதனினும் விரைந்த உந்தூர்திகளும் ஆலயத்திருமுன் அவர்களோடு அடியேங்களையும் கொண்டுவந்து சேர்த்தன. பின் தலத்திருப்பதிகம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அபிராமி அந்தாதி பாராயணங்களுடன் ஸ்ரீகற்பகாம்பிகா சமேத ஸ்ரீகபாலீச்சுவரர்சந்நிதிகளில் அருச்சனை வழிபாடுகள் சிறப்புற்றன.



## திருஒற்றியூர்

காலை 9 மணி. இது சென்னை மாநகரின் வடகீழ்ப் பகுதியில் கடற்கரையிடத்துள்ளது. இறைவர் : படம்பக்கநாதர். இறைவி : வடிவுடை அம்பிகை. தவிர இங்குச் சுவாமி ஆலயத்துள் காளியும் மிக்க அநுக்ரகமூர்த்தி. வழிபட்டுப் பயனுற்ற பெருமக்கள் பலர். சுந்தரரும் சங்கிலியாரும் பட்டினத்தடிகள் முதலியோரும் வழிபட்டுப் பெறும் பேறெல்லாம் உற்றார்கள். "போய் மகிழ்க் கீழிரு என்று சொன்ன என்னைக் காணுமே சூளுறவு மகிழ்க் கிழே" எனச் சுந்தரர் போற்றும் மகிழ விருக்ஷமும் வடபால் பிராகாரத்துத் திகழ்கின்றது. இங்குச் சுவாமி, அம்பிகை, காளிச் சந்நிதிகளில் திருமுறைப் பாராயணங்களுடன் அருச்சனை வழிபாடுகள் சிறப்புற்றன. ஆலய நிர்வாகி அவர்களும் உட னிருந்து ஆவன செய்தருளினார்கள். அதுசமயம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் வெள்ளிக்கிழமைபற்றி வழிபாட்டிற்கெனத் திரளாக் கூடிஇருந்த மக்களின் பண்பாடு, பக்தி, முதலியன பற்றியும் தல விசேடங்கள் முதலியனவும் சுட்டி, நல்லன பலவும் உணர்விற்பெற உணர்த்தி அருளினார்கள்.

## திருக்கள்ளில்

மாலை 7 மணி. இது சென்னைக்கு வடமேற்கே 25 மைலில் கன்னிப்பேர் என்னும் ஊரை அடுத்து உள்ளது. பண்டுகள்ளிக் காடாக இருந்தமைபற்றி இப்பெயருடையதாயது. தற்போது இதனை திருக்கண்டலம் திருக்கணம் என்ற பெயர்கொண்டே மக்கள் வழங்குகிறார்கள். இறைவர்: சிவானந்தர். (கள்ளீஸ்வரர்)

இறைவி : ஆனந்தவல்லி அம்மை. ஆலயம் மிகப்பழையதும் சிறியதுமாகி மிகச் சீர்கேடாக இருக்கிறது. விநாயகர், காளத்திநாதர், முருகன் ஆய மூர்த்திகளும் மிக்க அழகுடன் திகழ்கின்றனர். சுவாமி அம்பிகை ஆலயம் நடுவே பால முருகன் கோயில் அமைப்பு ஒரு தனி உணர்வினை ஊட்டுகிறது. தல விருட்சமாக கள்ளிமரம் முன்னர் இருந்திருக்கிறது. கோயிலின்முன் தீர்த்தமும் இருக்கிறது. இங்கும் திருமுறைப் பாராயணத்தோடு வழிபாடு அருச்சனைகள் சிறப்புற்றன. குழுமிய அன்பர்களும் வழிபாட்டிற்கலந்து இன்புற்றார்கள்.

## திருக்காளத்தி

30—8—58 காலை மணி 9-30, திருக்காளத்தியில் வழி பாடு. இத்தலம் மிகத் தொன்மையானது. யானை சிலந்தி நாகம் வழிபட்ட சிறப்பினது கண்ணிடந்து அப்பிய அன் புருவக்கண்ணப்பர்க்கு அருளீந்த பெருமையது. இறைவர் காளத்திநாதர். மேற்குறித்தவாறு வழிபட்டோர்கள் தன் வடிவி லேயும் அருகிலேயும் அமைந்து திகழ மேற்கு நோக்கிக் காட்சி அளிக்கின்றார். இவர் திருமுன், பஞ்ச பூதத்தலங்களுள் வாயுஸ்தலம் இது என்பதனைக் கண்டோர் உணரும்படி ; ஒளி விடும் ஒரு தீபத்தின் இரு முகங்களில், ஒன்று ஆடாமலும் மற்றொன்று அசைந்து அசைந்து ஆடிக்கொண்டும் விளங்கு வது ஒரு அற்புதக் காட்சியாக இருக்கிறது. ஐந்தும் ஆறடக்கியுள்ளார். அருட்பெரும் சோதியாலும் மணிவிளக் கொளிகளாலும் இரவினைக் காணாத ஆங்குத் திகழ்கின்ற ஞானப் பூங்கோதை அன்னையாரும் காட்சிக்கினியராகிக் கிழக்குநோக்கி இருந்து கருணை புரிகின்றார். ஆலயமும் மந்தமார் பொழில் சூழ மாண்பெலாம் அளிப்பதாகித் திகழ்கின்றது. கண்ணப்பர் ஆலயம் என ஒன்று மலை உச்சியிலும் இருக்கிறது. தல விருட்சம் - மகிழமரம். எதிரில் ஓடும் பொன் முகலியும் திருமுன் உத்தரவாகினியாகித் திகழ்கின்றது. இங்குற்ற நமது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது அருச்சனை சிந்தனை திருமுறை வழிபாடு ஒரு தனிச் சிறப்புடையதாக அமைந்தது. என் கண்ணுளானே என அருளி நம் கருத்தினை அவன்பாற் செலவிடும், திருமுறைச் சொற்றொடர்களும், ஞானப் பூங்கோதையார்க்கும் நம் செந்தமிழ்ச் சொக்கர்க்கும் தொடர்பு



எத்தகையது தெரியுமா ? நக்கீரரது உபாசனைத் தெய்வம் அல்லவா ! எனச்சுட்டி உணர்த்திய நமது குருமகாசந்நிதானம் அவர்களின் உபதேச அருள்மொழிகளும் கேட்டார்களது செவி களையும் உள்ளங்களையும் பரவசமாக்கிப் பயனுறச்செய்தன,

## திருப்பதி

காலை மணி 11-30 இது இக்கலியுகத்திலே கண்டார் மனங்கவரும் காட்சியுடையதாகித் திகழ்கின்ற தெய்வ விளக்க முடைய திருப்பதி. ஏழுமலையான் கோவிந்தனே பெருமானே. என்று போற்றுவார் எவரேயாயினும் அவர்க்கு இன்பமெலாம் அளிப்பது. இராமநுஜர் பணிந்து போற்றியது. அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்படியாயிருந்து நின் பவளவாய் காண்பேன், என குலசேகரர் முதலியோர் போற்றும் பொற்பினது. இங்குத் திகழும் ஆலயம் பல திருக் கோபுரங்கள் திருமாளப் பத்திகளையுடைய பேரழகினது. உள்ளுறைந்தருளும் திருவேங்கடநாதன் தன்னைத் தாங்கிஉள்ள திருவாயில் கெர்ப்பக்கிருக விமானம் யாவும் தங்கமாகி ஒளி விட நீண்டுயர்ந்த குருமணிக் கிரீடம் திருமுடியில் திகழ, விலை உயர்ந்த பொன்மணி வயிரமணி மாலைகள் மேனியில் தவழ அபயவரத வயிரமணிப் பொற்கவச அஸ்தங்களுடன் கண்டு பணிந்தார்களைக் கண் குளிர உளங்குளிர நலம்திகழ இன்பம்பெற அருள்வாராய்த் திருவடிகாட்டி நம்மை உய் வித்திடும் குருமணி போலவே காட்சி அளிக்கின்றார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் பெருமாற்குப் பொன்னாடையும் பொற்காசுகளும் சாத்தி அன்புமிகுத்திடவழிபட்டார்கள். திரு முறைத்தோத்திரப்பாராயணம் அருச்சனைகள் சிறப்புற்றன. கண் டாரும்கேட்டாரும் மெய்ம்மறந்து பரவசமாயினர். இங்கு மலைமீது வழி நடைப்பாதைகள் நீண்டுயர்ந்த மலைச்சரிவுகள் நீர்ச் சுனைகள் நெடும் பாறைகள் வானளாவிய சோலைகள், பெயர் தெரியாப் பல்வகை மரங்கள் கொடிகள், மனங்கவரும் மாண்புடையன.

## திருத்தணி

மாலை மணி 6. இது முருகன் மகிழும் மலைகளுள் ஒன்று வள்ளிநாயகியாரை மணம் புரிந்து மகிழ்ந்த முருகன் திகழ்

திருமலை, அருணகிரி நாதர் முதலிய பலரும் போற்றிய பழம் பெரும் குன்றம். இம்மலைமிசைத் திருக்கோயிலுள் முருகன், தனது இரு மருங்கிலும் ஸ்ரீ வள்ளி தேவசேனை அம்மையுடன் காட்சி அளிக்கின்றார். திருமுன் மலைமீது நடுவே பிரம தீர்த்தமும் கீழே ஒரு பெரிய நீர் நிறைந்த திருக்குளமும் இருக்கிறது. சந்நிதித் திருமுன்னும் விநாயகர் திருமுன்னும் திருமுறை, கந்தர் அநுபூதி, பிள்ளைத் தமிழ் பாராயணங்களுடன் அருச்சனை வழிபாடுகள் சிறப்புற்றன. ஆலயத் தொண்டர்கட்கென திருக்கை வழக்கமாகப் பொற்காசுகளும் வழங்கப்பெற்றன.

### திருமாற்பேறு

மாலை மணி 7. இது திருமால் வணங்கிப் பேறுற்ற காரணம்பற்றி இப்பெயர் எய்தியது பாலாற்றின் தென்கரையில் திருமால்பூர் எனும் பெயருடன் திகழ்கிறது. இறைவர் அழகிய திருவடிவினர். மணிகண்டேசர் திருமுன் நந்திதேவர் ஸ்தானத்தில் திருக்கரங்கூப்பி வழிபடுவாராகித் திருமால் திகழ்கிறார். இறைவி கருணைநாயகி தெற்குநோக்கி விளங்குகின்றார். இங்குற்ற ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம்அவர்கள் உட்செல்லும்போதே "படியாய்க்கிடந்துன் பவளவாய்க் காண்பன்" என ஆழ்வார் போற்றும் திருமாலே இங்குற்று முன்னர் காட்சியளிக்கிறாரே என்றும் போற்றினார்கள். உட்சென்று, "ஒளி வண்ணம்திகழத் தீபங்களைஇட்டுப் பேணுவார்க்கு உலகெலாம்ஆளத் தந்திடுவோனாகிய சிவனை மெய்சிலிர்ப்ப வழிபட்டார்கள். தலப்பதிகங்களின் பாராயணத்தோடு அருச்சனை வழிபாடுகளும் சிறப்புற்றன. பின் அம்பிகைத் திருமுன் அருச்சனையும் நிறைவுற்றது. திருப்பதிகம் அருளும் கருத்துக்கள் பலவற்றையும் எடுத்துக்கூறி அகம்மிக மகிழ்ந்தார்கள். மறுதினம் பூசனைக் காலத்து விசேட நிவேதனம் பாலபிடேகம் அருச்சனை முதலியனசெய்யவும் பொற்காசுகள் பல தந்தருளி இரவு 10 மணிக்கு சென்னைக்கு எழுந்தருளினார்கள். அங்குக்கூடி இருந்த அன்பர்களும் அரகர முழக்கத்தோடு வழிபாட்டில் கலந்து வழிபட்டு மகிழ்ந்தார்கள்.

வாழ்க திருவடி !!

# ஐந்திர வ்யாகரணம்

நாவல்பாக்கம், வித்துவான், ஸ்ரீ தேவநாதாச்சாரியர் அவர்கள்
சரஸ்வதிமகால், தஞ்சாவூர்.

"ஐந்திரவ்யாகரணம்" என்னும் சொல், "இந்திரனால் செய்யப்பட்ட வியாகரணம்" எனப் பொருள்படும். "வியாகரணம்" எனும் சொல் மொழியின் இலக்கணத்தைக் குறிக்கும். ஆதலின், பண்டை நாட்களில் இந்திரன் ஒரு மொழிக்கு இலக்கணம் இயற்றியிருத்தல் வேண்டும். அதையே மேற்கூறிய சொல் உணர்த்துகின்றது என்று தோன்றுகின்றது. இந்த "இந்திரன்" யார்? அவர் எந்த மொழிக்கு வியாகரணம் இயற்றினார்? அந்த வியாகரணம் இப்பொழுது இருக்கின்றதா? என்பன போன்ற கேள்விகள் ஈண்டுத் தோன்றுகின்றன. இதைப் பற்றி எமக்குத் தெரிந்தவற்றை இக்கட்டுரையில் விளக்குவாம்.

'इदि परमैश्वर्ये' (இதி பரமைச்வர்யே) என்னும் தாதுவின் மேல் 'ऋज्रेन्द्राग्र...' (ருஜ்ரேந்த்ராக்ர......) என்னும் உணாதி ஸூத்திரத்தினால் 'रन्' (ரன்) என்னும் ப்ரத்யயம் விதிக்கப்பட்டு इन्द्रः (இந்திரன்) என்னும் சொல் உருவாகும். 'அளவுகடந்த ஐசுவரியமுடையவன்" என்பது இதன் பொருள். காண்பனவும் கேட்பனவுமாகிய எல்லாவற்றுக்கும் உடையவன் இறைவனொருவனே யாகலின், பரம்பொருளாகிய அவ்விறைவனொருவனே இச்சொல்லின் பொருள். [1] "மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவாவோ" [2] "இமையோர் தமக்கும் எல்லையிலாதன கூழ்ப்புச் செய்யும்" என்பன போன்ற அருள் பெற்ற அறிஞர்களின் அமுத வாக்குக்களும் மேற்கூறிய கருத்தையே உறுதிப்படுத்தும். மூவுலகுக்கும் அதிபதியானவனும், மழையைப் பொழியும் அதிகாரம் படைத்தவனும், எட்டு திக்கு பாலகர்களுள் கிழக்கு திக்குக்கு அதிபதியும், மலைகளின் சிறகுகளைத் துணித்தவனும், வஜ்ராயுதம் தாங்கியவனும், ஸோமரஸத்தைக் குடிப்பதில் மிகுந்த ஊற்றமுடையவனுமாக,

---

[1] திருவாய்மொழி 8-1-5.
[2] ,, ,, 8-2-6.

இப்படியெல்லாம் சிறப்பித்துக் கூறப்படும் தேவர்கள் தலைவனுக்கும் இச்சொல் வழங்கப்படுவதுண்டு. இறைவனது அம்சம் பெற்றிருத்தலின் அவ்வழக்கு 'பகவன்' என்னும் சொல்லிற் போல கௌணமென்றே கொள்ளத்தக்கதாகும். முக்கியமாகாது. [1] "இந்திரனுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்" [2] "இந்திரனையும் தானும்" என்றிப்படியும் அடியார்கள் பாடியுள்ளனர். "சிறந்தவன்" என்னும் கருத்தில் இச்சொல் பொதுவாகவும் வழங்கப்படுகின்றது. गजेन्द्रः (கஜேந்திர:) சிறந்த யானை, राजेन्द्रः (ராஜேந்திர:) அரசர்களுள் சிறந்தவன், मृगेन्द्रः (ம்ருகேந்த்ர:) மிருகங்களுள் உயர்ந்தது, नरेन्द्रः (நரேந்த்ர:) மனிதர்களுள் சிறந்தவன் என்பன போன்ற சொற்களைக் காண்க. தேவர்கள் தலைவன் - என்னும் கருத்தையே ஏற்று ஈண்டு ஆராய்ச்சியைத் தொடங்குவோம். [3] வேதங்களும் புராண நூல்களும் பெரும்பாலும் இக்கருத்திலேயே சென்றுள்ளன. சிலர், இவ்விந்திரனை (வியாகரணம் செய்தவரை)யும், பாணினி-காத்யாயனர் இவர்களைப்போன்ற வியாகரண கர்த்தாக்களான மானிடராகவே கருதுகின்றனர். ஆனால் அது பொருத்தமுடையதாக எமக்குத் தோன்றவில்லை. அதனால் அதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

व्याकरणं (வியாகரணம்) என்னும் சொல், वि + आ + करणं (வி+ஆ+கரணம்) என்னும் மூன்று சொற்களின் சேர்க்கையால் உருவாகியது. இதில் वि-आ (வி-ஆ) என்னும் சொற்களிரண்டும் उपसर्गः (உபஸர்கம்) எனப்படும். करणं (கரணம்) என்பது डुकृञ् करणे (டுக்ருஞ் கரணே) என்னும் தாதுவினின்றும் தோன்றிய சொல். "செய்தல்" என்பது இதன் பொருள். "சொற்களின் பகுதி விகுதிகளைப் பிரித்துச் சேர்க்கும் வழியை வகுத்தல்" என்பது व्याकरणं (வ்யாகரணம்) என்னும் சொல்லின் பொருள். மொழியிலக்கணம் என்று தேற்றம். ऐन्द्रव्याकरणं (ஐந்திர வ்யாகரணம்) என்னும் சொல், "இந்திரனால் செய்யப்பட்ட மொழியிலக்கணம்" எனப் பொருள்படும். இந்திரன் எந்த மொழிக்கு எப்பொழுது எவ்வாறு இலக்கணம் (வ்யாகரணம்)

[1] நாச்சியார் திருமொழி 6-3.

[2] திருப்பள்ளியெழுச்சி 7.

[3] தைத்திரீயப்ராம்மணம் 2-2-3; 2-2-10; 3-1-5.



செய்தான்? என்னும் கேள்விக்குக் கீழே தரப்படும் வேத வாக்கியம் பதிலளிக்கும்.

கிருஷ்ண யஜுர்வேதம் - தைத்திரீயஸம்ஹிதை 6-வது காண்டம் நான்காவது ப்ரச்னம் 7-வது அனுவாகத்தின் முடிவில் கீழ்க்கண்ட சொற்றொடர் காணப்படுகிறது :—

वाग्वै पराच्यव्याकृतावदत्ते देवा इन्द्रमब्रुवन्निमां नो वाचं व्याकुर्विति सोऽब्रवीद्वरं वृणैमह्यञ्चैवैष वायवे च सह गृह्याता इति तस्मादैन्द्रवायवस्सह गृह्यते तामिन्द्रो मध्यतोऽवक्रम्य व्याकरोत् तस्मादियं व्याकृता वागुद्यते तस्मात्सकृदिन्द्राय मध्यतो गृह्यते द्विर्वायवे द्वौ हि स वराववृणीत

(வாக்வை பராச்யவ்யாக்ருதாவதத் தே தேவா இந்த்ரமப்ருவந்நிமாம் நோ வாசம் வ்யாகுர்விதி ஸோऽப்ரவீத் வரம் வ்ருணை மஹ்யஞ்சைவைஷ வாயவே ச ஸஹ க்ருஹ்யாதா இதி தஸ்மாதைந்த்ரவாயவஸ்ஸஹ க்ருஹ்யதே தாமிந்த்ரோ மத்யதோऽவக்ரம்ய வ்யாகரோத் தஸ்மாதியம் வ்யாக்ருதா வாகுத்யதே தஸ்மாத் ஸக்ருதிந்த்ராய மத்யதோ க்ருஹ்யதே த்விர்வாயவே த்வௌ ஹி ஸ வராவவ்ருணீத) என்று.

(தொடரும்)

---

## பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

ஞான மிழப்பது மீன மளிப்பதும் நண்ணியதன்
தான மிழப்பது மூன மளிப்பதுந் தணணியநல்
வான மிழப்பதுந் தீனமளிப்பதும் மண்ணுலகின்
மான மிழப்பதுங் கட்குடி யாலன்றி மற்றில்லையே 28

கண்டேரியா திருகாதுஞ் செவிடு கரங்கண்முடம்
உண்டிடும் வாயுரை பேசாதலூமை யுயர்ந்தவரைக்
கண்டு மெழாவிரு கால்களுமொண்டி யிக்காரணத்தாற்
சண்டியை மேலெனலாம் பணட்பேயினுஞ் சத்தியமே. 29

# செய்திகள்

### தருமையில் ஆவணி மூல விழா

## ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா

ஆவணியும், வைகாசியும் ஆதீனத்திற்கு இரண்டு சிறந்த மாதங்களாகும். ஆவணி மாதம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு ஆன்மார்த்த மூர்த்தியாகத் தருமைத் திருமடத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்குச் சிறந்த திருவிழா நடைபெறும். வைகாசி மாதம் குருபூசைத் திருவிழா நடைபெறும். குரு, லிங்கம் என்ற இரண்டு வழிபாடுகள் தருமையில் இவ்விரு மாதங்களில் நடைபெறும். பெறவே ஆவணியும் வைகாசியும ஆதீனத்திற்கு உரியனவாகும்.

24—8—58 ஞாயிற்றுக்கிழமை ஆவணி மூலத் திருவிழா. இந்த நாளுக்கு முன்புள்ள ஒன்பது நாட்களிலும் செந்தமிழ்ச் சொக்கருக்கு அபிஷேக ஆராதனை முதலியன சிறந்த முறையில் நடைபெற்றன.

ஆவணி மூலத்தில்தான் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் வைகையின் வெள்ளத்தைத் தடுக்க வந்தியாளாக வந்து, மணிவாசகரின் பண்சுமந்த பாடலின் பரிசை வெளிப்படுத்தினுன். வந்தியின் தலை அன்பிற் கட்டுண்டு அவள் தந்த பிட்டுண்ட திருநாள். நரியைப் பரியாக்கி ஞாலமெலாம் நிகழ்வித்த பெருமான். மண் சுமந்து கூலிகொண்டு பாண்டியனின் பிரம்படிபட்டு மணிவாசகரின பெருமையை உலகுக்கு உணர்த்திய இந்த வரலாற்றுினேவே ஆண்டுதோறும் நடைபெறுகின்ற ஆவணிமூலத் திருவிழா.

## பெரியபுராணத் திருநாள்

22—8—58 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி முதல் வேதசிவாகம பாடசாலை ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்தொடக்கப் பள்ளிகளின் ஆண்டு விழா, சிறப்புற நிகழ்ந்தது.

முதல்நாளன்று திரு. கணபதி செட்டியார் B. A , L. T., (நகராட்சி உயர்பள்ளித் தலைமை ஆசிரியர், மாயூரம்) அவர்கள் முதற்கண் சொக்கலிங்கப் பெருமானையும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களையும் வணங்கி ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்



வருமாறு :- தொடக்க நிலையில் தலைமை ஆசிரியராக இருக்கும் நான் ஆவணிமூல விழாவின் தொடக்க நாளில் தொடக்கப் பள்ளியின் ஆண்டு விழாவில் பேசும் வாய்ப்புக் கிடைத்தற்கு மகிழ்கிறேன், 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றினைக் கொண்டு சைவத்தைப் பெருக்குதற்கே பெரிய புராணம் தோன்றியுள்ளது. தமிழை நன்கு போற்றுவோர் சைவத்தை அறியாதிருக்கிறார்கள். தமிழினின்றும் சைவத்தைப் பிரிக்கமுடியாது. எனவே சைவத்தையும் போற்றுதல்வேண்டும். எதிர்காலம் மாணவர்களை நம்பியிருக்கிறது. அவர்கள் தம் இளம் உள்ளங்களில் இறைப்பற்றை அமைத்துக் கடவுளை வழிபடுதற்குக் கோவிலுக்குச் சென்றுவருதல்வேண்டும். வழிபடும்போழுது "கண்ணப்பர்" இறைவனிடத்துகொண்ட மாசற்ற தூய அன்பினைப் பின்பற்றுதல் வேண்டும். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" எனக்கூறி விக்கிரக வழிபாட்டினைச் சிலர் வெறுத்து ஒதுக்குவர். அது தவருனது. மனம் பக்குவம் அடைந்தபின்னரே அந்த நிலை பொருந்துவதாகும். ஆகவே "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" உருவ வழிபாட்டாலேயே மனத்தை ஒருமைப்படுத்தமுடியும். ஆகவே ஆலயத்திற்குச்சென்று இறைவன் திருநாமத்தை எண்ணிப் பிள்ளையார் முதல் சிவன் முதலான கடவுளுருவங்களை வணங்குதல் இன்றியமையாததாகும்.

தமிழினின்றும் கன்னடம் மலையாளம் முதலான மொழிகள் தோன்றியும் நம் தாய்மொழி கன்னித்தமிழாகவே திகழ்தல்போன்று சைவத்தினின்றும் பல மதமும் தோன்றவும், இறுதியில் அவை அழியவும் சைவமதம் நிலைத்து நிற்கின்றது. நாம் சிவனையும் விஷ்ணுவையும் வணங்குகின்றோம். தில்லையில்கூட நடராஜாவும் கோவிந்தராஜப்பெருமாளும் அருகில் இருப்பதை அறிகின்றோம். இவ்வாறு நாம் எல்லா ஆலயங்களுக்கும் சென்று வணங்கும்போது போது நோக்கினைக்கொண்டுள்ளோம். ஏனெனில் "உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்" என்றும், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றும் பொதுமை பேசுகின்றன புராணங்கள்.

அரசன் அல்லலுற்ற பொழுது இறைவனே வந்து பல வகையில் மன்னர்கட்கு உதவியதைத் திருவிளையாடல் போன்ற புராணங்களில் காண்கின்றோம். இக்கருத்து அரசியலுக்கும் மதம் பயன்பட்டதை உணர்த்துகிறது.

பூசலார் புராணத்தில் குறிப்பிடப்பட்ட செய்தியைப்போன்ற தோன்று மேனாட்டாரின் (ஆங்கிலேயர்) மத நூலிலும் குறிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டு மன்னன் ஒருவன் ஆலயம் ஒன்றுகட்டி

அதன் முகப்பில் தன் பெயரை நாட்டினுன், ஆனுல் இறைவனுல் அப்பெயர் மாற்றப்பட்டு, கோவிலுக்குக் கல் இழுத்துச்செல்லும் மாட்டிற்குப் புல் கொடுத்துதவிய ஓர் விதவைப் பெண்ணின் பெயர் அமைக்கப்பட்டது. இறைவனிடத்தில் அன்பிற்கே முதலிடம் என்ற செய்தியை விளக்கும இக்கதையை மேனுட்டார் போன்னேபோல் போற்றவும் நாம பூசலார் போன்ருரின் புராணங்களைப் போற்ரு திருத்தல் இழிவாகும். ஆகவே சைவ நூல்களைப் போற்றிச் சைவத்தை உய்ரேன ஓம்புவோம். சைவம் வளரவே தமிழ் வளரும். தமிழ் வளரத் தமிழர் வாழ்வர். எனவே இறைவனை வணங்குவோம். கிறித்துவர்கள் ஞாயிற்றுக்கிழமையை மட்டிலும் இறைவனை வணங்க ஒதுக்குவதுபோல் ஒதுக்காமல் "இமைப் பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க" என்று காம எண ணும் பொழுதெல்லாம் இறைவனை எண்ணி மகிழ்வோம். ஆண்டவன் இல்லையேல் உலகிலலை. எனவே இவ்வாவணிமூல விழாவிலே கடவுள் பக்தியை உள்ளத்திலே கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் (கட்டளை விசாரணை, திருப்பனந்தாள் தேவஸ்தானம்.) "குருவழி பாடு" என்ற தலைப்பிலும், வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான சுவாமிகள (மாயூரம் குமரககட்டளை விசாரணை.) "சிவலிங்க வழிபாடு" என்ற தலைப்பிலும், சிவாகம வித்துவான், பிரமஸ்ரீ. S. சுவாமிநாத சிவாச்சாரியார் (தலைமையாசிரியர், ஆதீன வேத சிவாகம பாடசாலை, தருமபுரம்) "சுந்தரர்" என்ற தலைபபிலும், சிரோமணி, பிரமஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரியார் (வடமொழிப் பேராசிரியர். ஆதீனப் பஸ்கலைககல்லூரி, தருமபுரம்.) "போஜசம்பு" என்ற தலைப்பிலும சொற்பொழிவாற்றிஞர்கள். இரவு 9 மணிக்குக் கண்ணப்பர் என்ற நாடகத்தை ஆதீனக் கல்வி நிலைய மாண வாகள் சிறப்புற நடித்தார்கள்.

## கந்தபுராணத் திருநாள்

23—8—58 சனிக்கிழமை மாலை 5 மணி முதல் தேவாரப் பாடசாலை, உயர்நிலைப்பள்ளிகளின் ஆண்டுவிழா மிக்க சிறப்போடு நிகழ்ந்தது.

ஸ்ரீமத், முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் (கட்டளை விசாரணை, சீகாழி தேவஸ்தானம்) "முருகன் தோற்றம" என்ற தலைப்பிலும், ஸ்ரீமத். சட்டநாதத் தம்பிரான் சுவாமிகள் கட்டளை விசாரணை, (குறுக்கை தேவஸ்தானம்) "அரக்கர் ஆற்றல்" என்ற

தருமையாதீனத்தில் ஆவணி மூலத் திருநாளில்:-



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால்,
காஷ்மீர் சால்வை போர்த்தப்பெற்ற
பல்கலைச்செல்வர்,
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் M. A., M. L., M. O. L. அவர்களும்,
முதுபெரும்புலவர்,
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும்.



தலைப்பிலும், வித்துவான், திரு. ச. தண்டபாணி (தமிழாசிரியர், தேவாரப்பிரிவு, ஆதீனம் பாடசாலை, தருமபுரம்.) " முருகவேள் திருமணம் " என்ற தலைப்பிலும், வித்துவான், திரு. ஆ. இராசதுரை (தமிழ் ஆசிரியர், உயர்பள்ளி, தருமபுரம்) " கச்சியப்பர் " என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள். இரவு 9 மணிக்கு முருகன் என்ற நாடகத்தை ஆதீனக் கல்வி நிலைய மாணவர்கள் மெய்ப்பாடுவிளங்க நடித்தனர்.

## திருவிளையாடற்புராணத் திருநாள்

24—8—58ஞாயிற்றுக்கிழமை ஆவணிமூலத்திருநாள், அன்று ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்புற நிகழ்த்தப்பெற்றன. வழி பாட்டிற்குப் பல அன்பர்கள் வந்து வழிபட்டனர். தருமையாதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமி களால் அருளப்பெற்ற திருவருட்பாத்திரட்டு விழாமலராக வெளி யிடப்பெற்றது.

அன்று மாலை 6-30 மணிக்குத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் ஆதீனப் பல்கலைக் கல்லூரியின் ஆண்டுவிழா நடை பெற்றது. விழாவிற்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமையமர்ந்து அருளாசிகூறி, கோவை, நிர்மலா கல்லூரி, தமிழ் விரிவுரையாளர், வித்துவான், திருமதி. சி. குழந்தையம்மாள் M. L. A. அவர்களுக்கு " செந்தமிழ்ச்செல்வி " என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கியருளினார்கள்.

பின்னர் " செந்தமிழ்ச் செல்வி " திருமதி. சி. குழந்தையம்மாள் M. L. A. அவர்கள் நன்றியறிதலுரையாகப் பல அரிய கருத்துக் களைக் கூறினார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ்த்துறைத் தலைவர், பல்கலைச் செல்வர், திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை M. A., M. L., M. O. L. அவர்களும், தருமையாதீனப் புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் (ஆதீனப் பல்கலைக் கல்லூரி பிரின்ஸிபால், தருமபுரம்.) அவர்களும், சிறப்புரை வழங்கினார்கள். அவ்விருவருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காஷ்மீர் சால்வை போர்த்து வாழ்த்தியருளினார்கள். வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் (தமிழ்ப்பேராசிரியர் பல்கலைக் கல்லூரி, தருமபுரம) அவர்களும் " சொக்கர் திருவிளை யாடல்கள் " என்னும் பொருள்பற்றி அரிய கருத்துக்களை விளக்கிப் பேசினார்கள்.

இரவு 9 மணிக்கு ஆதீனக் கல்வி நிலைய ஆசிரியர்களும் மாணவர்களும் "பாணபத்திரன்" என்னும் நாடகத்தைத் திறம்பட நடித்தனர்.

விழாவின் நாட்களில் கல்வி நிலைய மாணவ மாணவிகள் கும்மி, கோலாட்டம், உரையாடல் முதலிய நிகழ்ச்சிகள் ஆர்வத்தோடு செய்தனர்.

## சீகாழியில் அபிஷேக ஆராதனை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிக்கு நிகழும் விளம்பி ஆண்டு ஆவணித்திங்கள் 13ஆம் நாள் (28—8—58) வெள்ளிக்கிழமை காலையில் ஸ்ரீ திருஞானசம்பந்தப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

மாலை 5 மணி முதல் திருமுறைப் பாராயணமும் சமயச் சொற்பொழிவுகளும் இரவு சுவாமி புறப்பாடும் நடைபெற்றன. அன்பர்கள் வந்து கண்டு உய்ந்தனர்.

அன்று மாலை 6 மணிக்கு திருஞானசம்பந்தர் ஆலயத்தில் தருமையாதீனப் புலவர் மதுரகவி, முதுபெரும்புலவர், முந்து சு. மாணிக்கவாசக முதலியார் (ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பிரின்சிபால்) அவர்கள் 'கற்ற நூற் கருத்து' என்னும் பொருள் பற்றிச் சிறந்த சொற்பெருக்காற்றினார்கள்.

### சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம்

## ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சென்னைப் பேட்டைகளில் சமயப் பிரசாரம்

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம் தொடங்கி 29—8—58 ஆம் தேதியோடு ஐந்தாண்டு நிறைவுறுகிறது. ஐந்தாவது ஆண்டு நிறைவினை செப்டம்பர் மாதம் முழுவதும் சென்னைப் பேட்டைகளில் பிரசாரம் செய்வதன் வாயிலாகக் கொண்டாடவேண்டுமென்பது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் திருவுள்ளம். அதற்கிணங்க 2—9—58 முதல் கோடம்பாக்கம் ஸ்ரீ வடபழனியாண்டவர் தேவஸ்தானம், மண்ணடி ஸ்ரீ சென்னை மல்லிகேசுவரர் தேவஸ்தானம், வில்லிவாக்கம்



சிங்காரம் பிள்ளை உயர்நிலைப்பள்ளி, இராயப்பேட்டை பால சுப்பிரமணிய பக்த ஜன சபை, புரசைப்பாக்கம் திருநெறிக் கழகம் முதலிய இடங்களில் சமயப் பிரசாரம் சிறப்பாக நடைபெற்றன. பிரசாரத்தில், வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், திரு. ச. சிவகுமாரன், கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியார், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. கி. சுப்பிரமணிய சர்மா, திரு. கண்ணன் முதலியோர் பங்கெடுத்துக்கொண்டனர்.

7—9—58 மாலை மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவரர் தேவஸ்தானத்தில் சென்னை விவசாயத்துறைத் துணைச் செயலாளர் திரு. நல். முருகேச முதலியார் தலைமையில் பிரசார விழாத் தொடங்கியது. புலவர், திருமதி. சி. குழந்தையம்மாள் எம். எல். ஏ. சிறப்புரை நிகழ்த்தினார்கள். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் முதலிய சமயாசாரியப் பெருமக்கள் வாழ்ந்து காட்டிய பாதையை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும். அந்நெறியே சமுதாயத்தையும் நாட்டையும் வாழவைக்க வல்லது. நாயன்மார்கள் கண்ட வழியைவிட இன்பம் பெருகும் வழியை நாம் காண இயலாது. இறைவனை வழிபட்டு ஆன்மீகத் தத்துவங்களைக் கூறியதோடு குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நாயன்மார்கள் சேவை செய்திருப்பதை அவர்களது வரலாற்றால் நன்கு அறியலாம். திருவீழிமிழலையில் பஞ்சம் வந்த போது ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் படிக்காசுபெற்றுப்பல்லாயிரக்கணக்கானமக்கட்கு உணவு கொடுத்தார்கள். ஐந்தாண்டுத் திட்டம் நாயன்மார்கள் காலத்திலேயே இருந்தது என்பதை அவர்களது வரலாற்றை நுணுகிக்காண்பார்க்குப் புரியவரும். வந்தியம்மைக்கு இறைவன் கூலியாளாக வந்து கரையடைத்த நிகழ்ச்சி திட்டமிட்டு வேலை செய்யும் தமிழ் மக்களின் பண்பை எடுத்துக்காட்டும். சமய வாழ்வில் ஈடுபட்டவர்களின் நாட்டுப் பற்றும் நன்கு விளங்கும் என்று கூறினார்கள். தருமையாதீனப்புலவர், திரு. க. வச்சிரவேல் முதலியார் பேசுகையில் அறிவு ஒன்றே மேம்பட்ட நாடுகள் அல்லற்படுகிறது. அறிவும் அன்பும் தெய்வ பக்தியும் கொண்ட நாடுதான் அந்நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக இலங்குகிறது. சமயத் தத்துவங்களை ஒவ்வொருவரும் உணர்தல்வேண்டும். அவற்றிற்காக ஒவ்வொருவரும் சில நேரம் வைத்துக் கொள்ளுதல் நமது கடமையாகும் என்று உரைத்தார்கள். திரு. ச. சிவகுமாரன் அவர்கள் ஒழுக்கமான வாழ்க்கை மக்க

ளிடையே மலரவேண்டுமானுல் சமய நம்பிக்கையும் கடவுட் பற்றும் ஒவ்வோரு மனிதனுக்கும் அவசியம் தேவை. என வற்புறுத்திஞர்கள்.

ஸ்ரீமத் சோமசுந்தாத் தம்பிரான் சுவாமிகள் நன்றி தெரி விக்கையில் தமிழ்ப் பண்பு சமயத்தில்தான் குடிகொண்டுள்ளது. பண்பாட்டை விரும்பும் மக்கள் சமயத்தைப் புறக்கணிக்க இய லாது. கலையை விரும்பும் மக்கள் கலையின் உறைவிடமான சம யத்தைப் புறக்கணித்தால் அஸ்திவாரத்தைப் பறித்தவர்கட்குத் தான் ஒப்பாவார்கள். நமது சமயத்தில் உள்ள தத்துவக் கருத் துக்களைப் பிற மதத்தவரும் போற்றுகின்றனர். ஆனல் நாம் அவர்கள் சமயப்பிரசாரம் செய்வதைப்போல் செய்ய அவர்களைப் பின்பற்றவேண்டும். சமயக் காணிக்கை செலுத்த ஒவ்வொரு வரும் முன் வருதல்வேண்டும். அப்பொழுது தான் ஒவ்வொரு வரும் சமயத்தைப் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். இப் பொழுதுள்ள சமய நிலையங்களின் பொருளாதார நிலையைக் கண்டு எல்லா இந்துக்களும் சமயத்தைஎளிதில் அறிந்துகொள்ள இயலுமெனத் தோன்றவில்லை. ஆகவே, ஒவ்வொரு இந்துவும் கடமை உணர்ச்சியுடன் தொண்டாற்ற முன்வருவார்களாக எனக் கூறிஞர்கள்.

பிரதி தினமும் பிரசாரம் தொடங்குமுன்னும் நிறைவிலும் சமயப்பிரசார நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியரும் மாணவர் களும் தேவாரப் பாடல்களைப் பண்ணேடு பாடி மகிழ்வித்தனர்.

---

### பன்னெறி விளக்கம்

களமூர். பெருநாவலர். திரு. செ. செல்லப்ப முதலியார் பாடியது.

இருளினுஞ் செல்லுவர் நேத்திரமுள்ளவ ரீமந்தன்னின்
மருளினுஞ் செல்லுவர் மந்திரந் தேர்ந்தவர் மாந்தர்மலப்
பொருளினுஞ் செல்லுவர் காசாசை கொண்டவர் போரிற்றலை
யுருளினுஞ் செல்லுவ ராத்திர முள்ளவ ரோண்டோடியே. 30

ஊக்க மிழப்பவர் நோய்க்கிடந் தந்தவ ருக்கமுடன்
றூக்க மிழப்பவர் சூதாடுகின்றவர் தூக்கமுடன்
ஆக்க மிழப்பவர் வேசைய ராசைய ராக்கமுடன்
மோக்க மிழப்பவர் தெய்வத்தை நிந்திக்கும் மூடர்களே. 31

# எதிர்காலம்

**ஜோதிஷார்ணவம், பிரம்ஸ்ரீ கே. முத்துஜோதிடர் அவர்கள்.**
திருவிடைமருதூர்.

(விளம்பிஞ புரட்டாசிமீ 1உ முதல் 30உ முடிய)
(17—9—58 முதல் 16—10—58 முடிய)

### 1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி நான்கு பாதங்களும், அதிக விரயத்தைத் தரும். இடம் மாறும். பரணி 1, 2 பாதங்கள் மிசிர பலன்களைதரும். இடம் மாறி சுப சோபனுதிகளையும் கிரஹ சுகத்தையும் தரும். பரணி 3, 4 பாதங்கள் மத மாத்ஸர்யாதி குணங்களை விருத்தி பண்ணி அதன் பலனையே உண்டுபண்ணும் கார்த்திகை முதல் பாதம் வியாதி பயத்தையும் நஷ்டத்தையும் காட்டும். குடும்பக் கலஹம் உண்டாகும். புதன் வியாழன் சுபமாகும்.

### 2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீரிஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் அடிக்கடி சஞ்சார பலனைத் தரும். தொழில் கவலை ஏற்படும். குடும்ப நிர்வாகம் துன்பத்தை உண்டுபண்ணும். ரோஹிணி நான்கு பாதங்களும் மன ஸஞ்சலத்தைத் தரும். ஆனுலும் தெய்வபலம் கிடைக்கும். தொழில் ஓங்கும். மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் குடும்பத் தொல்லைகளையும் அமைதிக்குப் பங்கத்தையும் நஷ்டங்களையும் காரிய விக்னத்தையும் தரும். சனி, புதன் சுபமாகும்.

### 3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் இடம் மாறச்செய்து லாபம் உண்டுபண்ணும். உத்தியோகம் ஓங்கும். விவசாய லாபம் கிடைக்கும். திருவாதிரை ஆரோக்கியத்தைத் தரும் பல சிக்கல் களினுல் கவலை உண்டுபண்ணும். வரவுக்கு மிஞ்சின செலவு ஏற்படும். அமைதி குறையும். பெரியோர் அன்பினுல் ஸ்வல்ப சுகம் காட்டும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் கலங்கச் செய்யும். வியவஹார பீதி ஏற்படும். சத்துருக்கள் ஓங்குவதைக் காட்டும்.

ஆரோக்கியக் குறைவும் உண்டாகும். தேய்வ பலத்தால் ஜயம் ஏற்படும். புதன் வியாழன் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4-ம் பாதம் ஜயத்தையும், கீர்த்தியையும் தரும். மனம் ஸந்தோஷமாகும். பூசம் நான்கு பாதங்களும் கலக்க கவே இருக்கச் செய்யும். எந்தக் காரியங்களும் நினைத்தபடி டவாது. தடங்கல்கள் ஏற்படும். ஊக்கமும் மனோவேகமும் முன்னின்று வெற்றியைக் காட்டும். ஆயில்யம் நான்கு பாதங்களும் அலைச்சலைத் தரும். மனம் குழப்பமாகவே இருக்கும். விவசாயத்தில் அதிக லாபம் ஏற்படச் செய்யும். காரியங்கள் தாமதமாகவும் செலவோடும் ஒடிக்கொண்டிருக்கும். தேய்வ பலம் கிடைக்கும் வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் உற்சாகத்தையும் லாபத்தையும் தரும். ஆனால் சேர்க்கைபலம் சரியாய் இராமல் தடுக்கும். உத்தியோக உயர்வும் நன்மதிப்பும் உண்டாகும். பூரம் நான்கு பாதங்களும் குடும்பத் தொல்லைகள் அதிகமாகும். வரவுக்கு மிஞ்சின செலவுகள் ஏற்படச் செய்யும். உத்திரம் முதல் பாதம் நன்மதிப்பையும் மேல் பதவிகளையும் தந்து சந்தோஷமுண்டாக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள், சுபமாகவே நடக்கச் செய்யும். உத்தியோக லாபமும் கீர்த்தி பத்திரமும் கிடைக்கச்செய்யும் ஹஸ்தம் முதல்பாதம் நன்மதிப்பைத்தரும். குடும்பத் தொல்லைகள் அதிகமாகும். வரவுக்கு மிஞ்சின செலவு காட்டும் ஹஸ்தம் 2, 3 பாதங்கள் வீண் அலைச்சல்களைத் தரும். எதிலும் தடங்கலும் அபவாதங்களும் உண்டாகும். ஹஸ்தம், நான்காம் பாதமும் சித்திரை 1, 2 பாதங்களும் வியாதி பயத்தையும் வீண் நஷ்டங்களையும் அபவாதங்களையும் உண்டாக்கி மனம் கலங்கச்செய்யும். சத்துருபாதைகளும் கலஹங்களும் உண்டாகும். தேய்வ பலமுள்ள நான்காம் பாதமுள்ளவர்கள் ஜயத்தையும் கீர்த்தியையும் அடைவார்கள். வெள்ளி, சனி சுபமாகும்.



7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் மிசிர பலன்களைத்தரும். அலைச்சலையும் விக்னத்தையும் உண்டுபண்ணும். சுவாதி நான்கு பாதங்களும் தேய்வ பலத்தால் பிரகாசிக்கச் செய்யும். தொழில் ஓங்கும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். உத்தியோகத்தில் உயர் பதவி ஏற்படும். கடன் நீங்கும். வியாதி சாந்தியாகும். குடும்பம் தழைக்கும். விவசாயத்தில் அதிக லாபம் உண்டாகும். விசாகம் 1, 2, 3 பாதங்களும் கலக்கத்தோடு ஓடும். அதிக விரயமும் எதிர்பாராத நஷ்டங்களும் அபஜயமும் காட்டும். தேய்வத்தை நம்பினால் துக்கம் விலகும். புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி ஒன்பது பாதங்களும் சுபாசுபம் கலந்து நடக்கச் செய்யும். அதிக உழைப்பும் சுகமும் உண்டாகும். குடும்ப சுகம் கிடைக்கும். மேலோர் பெரியோர் அன்பு உண்டாகும். எல்லாவிதமான தொழில் நடத்துபவர்களும் ஆரம்பத்தில் நஷ்டகரமாக நடத்திக்கொண்டு மாதம் பிற்பாதியில் லாபத்தை அடையக் கூடிய வசதிகள் அடைந்து சுகமடைவார்கள். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் சிரமத்தோடு காரியவெற்றியை அடையச் செய்யும். பெரியோர்கள் அன்பு கிடைக்கும். பூராடம் நான்கு பாதங்களும். சுபத்தைத் தரும். விவசாயம் ஓங்கும். லாபமுண்டாகும் கடன் நீங்கிச் சந்தோஷம் ஏற்படச் செய்யும். உத்தியோக லாபம் ஏற்படும். குடும்பம் ஓங்கும். புத்திராதிகளில் சந்தோஷம் உண்டு பண்ணும். உத்திராடம் முதல் பாதம் ஆரோக்கியத்தைத்தரும். தொழில் ஓங்கும். குடும்பம் மேன்மை அடையும். அதிக லாபத்தால் ஸந்தோஷமுண்டாகும். புதன் வியாழன் சுபமாகும்.

**10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$**

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் தொழில் பங்கத்தைத் தரும். இடம் மாறச்செய்யும். திருவோணம் நான்கு பாதங்களும் உயர் ...விகளைத்தந்து உலக மதிப்பையும், ராஜாங்க விருதுகளையும் ... சந்தோஷமுண்டுபண்ணும். அவிட்டம் 1, 2 பாதங்கள் ...கு நாளாக எதிர்பார்த்த காரியங்களில் ஐயம் தரும். உயர் ...தவி ஏற்படும். ஸ்திர ஜீவனமும் கீர்த்தியும் உண்டுபண்ணும். ...ணம் மாத்திரம் சதா ஸஞ்சலமாகவே இருக்கும். அடிக்கடி ...ராக பீடைகள் ஏற்பட்டு விலகும். வியாழன், சனி சுபமாகும்.

**11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$**

அவிட்டம் 3, 4 பாதங்களும் சதயம் நான்கு பாதங்களும் சரியாய் இராது. நாஸ்திகத்தைத் தந்து தங்களையும் தங்களைச் சேர்ந்தவர்களையும் துக்கத்தில் மூழ்கச் செய்யும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் சுகபோகங்களையும் ஆடையாபரணச் சேர்க்கைகளையும் தந்து சந்தோஷமுண்டுபண்ணும். சஞ்சாரத்தில் சுகமுண்டாகும். நஷ்டதனம் வந்து சேரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி**

பூரட்டாதி நான்கு பாதமும் கஷ்ட நஷ்டங்களைத்தரும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும் ஆடம்பர வாழ்க்கைகளையும், சேர்க்கைக் குறைவுகளையும் வீண் செலவுகளையும் உண்டு பண்ணும். ரேவதிநான்கு பாதங்களும் உத்தியோக லாபத்தையும் நன்மதிப்பையும் கடன் நீங்கி மனம் சந்தோஷமடைநிலையும் உண்டாக்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு:— ஷ மாதம் பயிர்களுக்கு வியாதி பயம். ஏற்பட்டு விவசாயிகளுக்குக் கவலை காட்டும். அமைதி குறைந்து உலகில் மத மாத்சரியங்கள் அதிகமாகும். ஸாதுக்களும் நடுத்தர வகுப்பாரும் விலைவாசிகளின் ஏற்றத்தால் சிரமப்படுவார்கள். கலிபலத்தால் தெய்வம் ஒதுங்கி நிற்கும். ஆனாலும் பக்தர்களின் சிரமத்தைப் பாராமல் அன்பர்களுக்குத் தெய்வபலம் கிடைக்கும். அவர்களால் உலகம் க்ஷேமமடையும் சுபம்.

<u>மதிப்புரை</u>

## சிவஞானசித்தியார் சுபக்கம்

### உரைகளுடன் (முதற்பகுதி)

இது, துறைசையாதீனத்து வெளியீடு. 800 பக்கம் உள்ளது. உயரியதாளில் அமைந்து கண்ணும் கருத்தும் கவரும் அழகிய பதிப்பு. சிவஞான சித்தியார்க்கு உள்ள அறுவர் உரையுள் அடங்கிய இருவர் உரைகள் இதில் முன் ஆறு சூத்திரங்கட்கும் அடங்கியிருக்கின்றன. ஆறும் தனித்தனியாக அமைந்து விரும்பிக் கற்போர்க்கு எளிதிற் பாகுபாடு காட்டுமாறு விளங்குகின்றன. மிகச் சிறந்து திகழும் முகவுரையும், நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறுகளும், ஆகம விளக்கமும், ஆட்சிபெற்ற நூற்பெயர்களும், அவை அமைந்த பக்கங்களும், விளங்கா மேற்கோள்களின் முதல்நினைப்பும் பக்கமும் முற்பால் பொருந்தியுள்ளன. சிவஞான சித்தியாரை விளங்கவுணர்தற்கு இவ்வுரை வெளியீடு பெருந்துணையாயிருக்கின்றது. பல இடங்களில், சொற்பொருளும் தொடர்ப்பொருளும் பிறவுரைகளால் விளங்கற்கரியனவும் நயமுடையனவுமாயுள்ளன. ஆதீன வித்துவான் திரு. சு. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் உழைப்பால், இவ்வெளியீடு, சுவடிகளிற்காணும் குறைகளைப் போக்கிச் சிறப்புடன் விளங்குகின்றது. திருவாவடுதுறை 21 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களது பெருங்கருணைத் திறத்தின் எழிலுருவங்களுள் ஒன்றாக உலகம் பெறக்கிடைத்த சிவஞானக் களஞ்சியமே இச் சுபக்கம். சைவர் எல்லோரும் செய்த முன்னைத் தவப்பயனே இவ் வெளியீடுகள் உரிய இடத்திலிருந்து உலகிற்குக் கிடைப்பதன் காரணம் ஆகும். அவர் வணக்கமெல்லாம் அக் குருமணியின் திருவடிக்கே சார்க.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

---

### பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

சனத்துக்குச் சேத மகமாரி சேர்வது சந்தநந்த
வனத்துக்குச் சேதங் குரங்குகள் சேர்வது வன்மையுள்ள
தனத்துக்குச் சேத மருமகன் சேர்வது தாயத்தினர்
இனத்துக்குச் சேத மம்மான் வந்துசேர்வ திலங்கிழையே. 32